# முத்தம்



வை. அஹ்மத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


FAYIQ
AHATTHIMURIPPU (39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்காடு

வை. அஹ்மத்



உயிர்ப்பைத் தேடும் வேர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | முக்காடு |
| விடயம் | : | சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | வை. அஹ்மத் |
| பதிப்பாசிரியர் | : | ஏ. பி. எம். இத்ரீஸ் |
| முதற்பதிப்பு | : | 2000 செப்டெம்பர் |
| வெளியீடு | : | உயிர்ப்பைத் தேடும் வேர்கள். வாழைச்சேனை. |
| கணணிப்பொறியமைப்பு | : | ஏ. பி. எம். இம்தாத் |
| அட்டைப்பட ஓவியம் | : | ரஷ்மி |
| அச்சு | : | புதிய கார்த்திகேயன் அச்சகம். கொழும்பு — 06. |
| விலை | : | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை. அஹ்மதின் வாரிசுகளான....

ஸாஹிரா பானு

பாத்திமா ஹானிம்

முஹம்மத் ஸியாத்

ஜமால் முஹியுத்தீன்

அப்துர் ரஹ்மான்

ஆகியோர்களுக்கு

இது

# சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை இலக்கியம் தொடர்பாக...

*1*

"நபியே! அவர்களுக்குக் கதைகளைச் சொல்வீராக. அவர்கள் சிந்திக்கக்கூடும்"

கதை அதன் கடைசிவார்த்தையோடு முடிந்து போவதல்ல. கேட்போனின் சிந்தனைக்குள்ளும் உணர்வுக்குள்ளும் அது ஊடுருவிச் செல்கின்றது. அதனால் அவன் சிந்திக்கின்றான். அதனுடன் உரையாடுகின்றான். அக்கதை அவனுக்குள்ளேயே கருக்கொண்டு அவனுக்குள்ளேயே வாழ்கின்றது. அவனைத் தொடர்ந்து அழைக்கின்றது. அந்த அழைப்பில் அவனை ஈடுபாடு கொள்ள வைக்கின்றது. அவனது கோட்பாடுகள் மீதும் வாழ்வின் அவனது அசைவியக்கத்தின் மீதும் அது தனது தாக்கத்தை அப்படியே விட்டுச் செல்கின்றது.

மற்றொரு வசனத்தில் இறைவன் இப்படிச் சொல்கின்றான்.

"நிச்சயமாக இவை சத்தியமான கதைகள். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அல்லாஹ் ஆற்றல் உள்ளவன். அவன் ஒரு ஞானி" (3:63)

அல்குர்ஆனின் கதைகள் 'சத்தியமான கதைகள்' என்று அல்லாஹ் கூறுகின்றான். அவற்றில் பொய்யோ திரிபோ கிடையாது. அவை எதார்த்தப் பண்பைக் கொண்ட கதைகளாகும். மனித வாழ்வை எதார்த்தப் பண்போடு சித்தரிப்பதில் அதற்கு அதுவே நிகராகும். கதைகள் பற்றிவரும் மற்றொரு வசனத்தில்,

"நபியே! இதற்கு முன் நீங்கள் கவனிப்பாரற்றவர்களில் ஒருவராயிருந்தாலும் உங்களுக்கு நாம் வஹியின் மூலம் மிகச் சிறந்த கதைகளைக் கூறுவோம்"

உள்ளத்தை உறுதிப்படுத்தல், அழகிய உபதேசங்களை முன்வைத்தல், உயர் இலட்சியங்களின் பால் அழைத்தல், நிலையான பெறுமானங்களை, வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகளை வலிறுத்தல், தூய நடத்தையைப் போதித்தல் சிந்தனை அடிமைத்துவங்களுக்கெதிராகப் போராடுதல், உள்ளத்தைத் தூய்மைப்படுத்தல் போன்றன அல்குர்ஆனின் கதைக்கருக்களுள் சிலவாகும்.

"உமது உள்ளத்தை உறுதிப்படுத்தக் கூடியவற்றை முன்னைய தூதர்களின் செய்திகளிலிருந்து நாம் உமக்குக் கதையாகக் கூறப்போகின்றோம். இக்கதைகளில் சத்தியம், உபதேசம், விசுவாசிகளுக்கு ஞாபகமூட்டலும் உள்ளன" (ஹூத்:120)

அல்குர்ஆன் கதை இலக்கியத்திற்கும் வழிகாட்டியிருக்கிறது என்பதற்காகவே மேலே சில ஆதாரங்களை நாம் குறிப்பிட்டோம். அல்குர்ஆனின் பிரதான மையக்கருத்துக்களில் ஒன்றாகவும் அல்குர்ஆனின் இலக்கிய அற்புதங்களில் ஒன்றாகவும் கதைகள் விளங்குகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனின் கதைகள் மெய்த்தன்மையும் அற்புத வெளிப்பாட்டு அழகும் உயிர்க்களை ததும்பும் வகையிலேயே அமைந்துள்ளன. இதற்கு அல்குர்ஆனின் எல்லாக் கதைகளுமே உதாரணம் எனலாம். உதாரணத்திற்கு பின்வரும் கதையைப் படிப்போம்.

"நபியே! இரு மனிதர்களின் கதையை அவர்களுக்கு உதாரணமாகச் சொல்வீராக. அவர்களில் ஒருவருக்கு இரு திராட்சைத் தோட்டங்களை நாம் கொடுத்திருந்தோம். அவ்விரண்டையும் சுற்றிப் பேரீச்சை மரங்களை நாட்டினோம். அவற்றிற்கிடையில் வேறுபல பயிர்களையும் வளர்த்தோம். அவ்விரு தோட்டங்களும் உணவுப் பொருளைக் கொடுத்துக் கொண்டே இருந்தன. விளைவைக் கொடுப்பதில் அவை எந்தக் குறைபாட்டையும் வைக்கவில்லை. அவற்றுக்கு மத்தியில் ஒரு நதியையும் ஓடச் செய்தோம். அவனுக்கு வேறுபல செல்வங்களும் இருந்தன.

"அவன் தன் நண்பனுடன் உரையாடும் போது 'நான் உன்னைவிட செல்வத்தாலும் ஆட்பலத்தாலும் கூடியவன்' என்று சொன்னான். தனக்குத்தானே அநீதி இழைத்துக் கொண்டு அவன் தனது தோட்டத்தில் நுழைந்தபோது 'இத்தோட்டம் அழியும் என்றும் நான் நினைக்கவில்லை. மறுமை நாள் வரும் என்றும் நான் எண்ணவில்லை. நான் என் இறைவனிடம் திரும்பக் கொண்டு செல்லப்பட்டாலும் இதைவிடச் சிறந்ததொன்றைப் பெற்றுக் கொள்வேன்' என்று கூறினான். அதற்கு அவனது நண்பன், 'முதலில் மண்ணிலிருந்தும் பின்னர் உயிரணுவிலிருந்தும் உன்னை சீரிய மனிதனாகப் படைத்தவனை நீ நிராகரித்து விட்டாயே?! ஆனால் அல்லாஹ்வே என் இறைவன். நான் என் இறைவனுக்கு எதனையும் இணைவைக்க மாட்டேன். நீ உன் தோட்டத்துக்குள் நுழைந்தபோது 'அல்லாஹ்வின் நாட்டம், அவனைத்தவிர சக்தியில்லை என்று நீ கூறியிருக்கக் கூடாதா?' நான் உன்னைவிட செல்வத்தாலும் ஆட்பலத்தாலும் மிகவும் குறைந்தவன் என நீ கருதினாலும் எனது இரட்சகன் உனது தோட்டத்தைவிடச் சிறந்த ஒன்றை எனக்குத் தரக்கூடும். அவன் வானத்திலிருந்து குறிப்பிட்ட தண்டனையை அத்தோட்டத்தின் மீது அனுப்பமுடியும். அப்போது தோட்டம் அழிந்து பொட்டல் வெளியாக மாறும். அதன் நீர் நிலத்திற்கடியில் சென்றுவிடும். நீ அதைப் பெற்றுக் கொள்ள முடியாது?'

"அப்போது அவனது தோட்டத்தை அழிவு சூழ்ந்து கொண்டது. அதற்கு செலவளித்ததற்காக அவன் தன் கைகளைப் பிசைந்து கொண்டான். அத்தோட்டம் பந்தல்களோடு சேர்ந்து விழுந்து கிடந்தது. அப்போது அவன் சொல்கிறான், 'எனது இறைவனுக்கு நான் எதனையும் இணைவைக்காமல் இருந்திருக்கக் கூடாதா?' அல்லாஹ்வைத் தவிர அவனுக்கு உதவி செய்ய எந்தக் குழுவும் இருக்கவில்லை. அவன் வெற்றி பெறவும் இல்லை. அங்கே உண்மையான அதிகாரம் அல்லாஹ்வுக்கே உண்டு. அவன் கூலிகொடுப்பதாலும் முடிவை வழங்குவதாலும் மிகச்சிறந்தவன்." (அல்-கஹ்ப்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவரிகளைக் கொண்ட இக்கதையில் ஒரு வாசகன் உயிரோட்டமான காட்சிகள், அசையும் உருவங்கள், நேரடி உரையாடல் என சடவாத அலைவீசும் உலகில் பிரவேசிக்கின்றான். அங்கே மதிமயக்கம், கர்வம், பெருமை, ஆட்சி செலுத்துகின்றன. ஈடற்ற இறையருளுக்கு எந்த நன்றியும் செலுத்த விரும்பாத சடவாத மோகம் கொண்ட ஒரு உள்ளத்தின் உணர்வுப் பிரதிபலிப்புகளைக் காணமுடியும். அதே நேரம் வாரிவழங்கும் அல்லாஹ்வின் வல்லமையை உறுதியாக நம்பும் ஓர் உண்மை விசுவாசியையும் இக்கதையில் ஒரு சேரக்காணமுடியும். நன்றி கொன்ற நிராகரிப்பாளன் இறுதியில் நிர்க்கதியற்றவனாக தனித்துவிடப்படுகின்றான். அவனுக்'கெந்த உறுதுணையும் உதவியாளனும் இல்லை. அல்லாஹ்வுக்கே முழு அதிகாரமும் உண்டு.

ஒருவன் இரண்டு வகையில் காபிராக முடியும். ஒன்று: இறை நம்பிக்கைக்கு மாற்றமான கோட்பாடுகளை நம்புவதால் காபிராக மாறுவது. மற்றது, அல்லாஹ் அல்லாதவற்றின் மீது அளவுக்குமீறிய பற்றுக் கொண்டு காபிராக மாறுவது. இவ்விரண்டாவது வகை மனிதனையே இக்கதை கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இவ்வத்தியாயத்தை விளக்க வந்த அஷ்ஷெய்க் அபுல் ஹஸன் அலி அந்நதவி அவர்கள், 'சடவாதத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையிலான போராட்ம்' என இதற்குத் தலைப்பிட்டுள்ளார்.

இக்கதையில் வரும் மனிதர்களின் பெயர்களையோ, இக்கதை நிகழ்ந்த காலத்தையோ அல்குர்ஆன் குறிப்பிடவில்லை. காரணம் இது எல்லாக் காலங்களிலும் எல்லா சமூகங்களிலும் நிதர்சனமாகக் காணக்கூடிய உதாரணங்கள். காலங்கள் மாறினாலும் சமூகங்கள் வேறுபட்டாலும் பௌதீக வாழ்வில் பற்றுக் கொண்டு அதன் சுகபோகங்களில் மூழ்கி படைத்த இறைவனை மறந்து போவது மனித சமூகத்தில் புரையோடிப் போன்று ஒரு நோயாகும். இதே போன்ற செல்வமும் செருக்குமிக்க காரூனின் வரலாற்றையும் அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.

இன்றைய உலகம் இதற்கு நல்ல உதாரணம். உலகத்தை அனுபவிப்பதில் ஒரு பயங்கரப் போட்டி நிலவுவதைக் காணலாம். இராட்சதப் பொருளாதார நிறுவனங்கள் விழுங்கி ஏப்பமிடப் பார்க்கின்றன. எல்லா சமூகங்களிலும் விக்ரக ஆராதனையோடு சேர்த்து செல்வத்தை ஆராதனை செய்வதும் இருந்து வந்திருக்கிறது. பணந்தான் அனைத்தும் எனக்கருதியவர்களின் இருப்பும் அந்தப் பணத்தின் இருப்பில்தான் அடகு வைக்கப்பட்டிருந்தது. பணம் போய்விட்டால் அவர்களும் போய்விடுவர்.

சிந்தனை, ஆய்வு, தேடல் என்பவற்றில் ஒரு நீண்ட யாத்திரையைத் தொடங்க வேண்டுமென்பதற்காக அல்குர்ஆன் மனித பகுத்தறிவுக்கு முன்னால் பல சிந்தனை உலகங்களைத் திறந்து விடுகின்றது. மனிதன் தன்னைச் சூழவுள்ள உலகின் மீது தனது புலன்களைத் திறந்து பார்க்குமாறு அழைப்பதே அல்குர்ஆனின் கதைகளாகும்.

மனிதனால் எழுதப்பட்ட கதை நூல்களின் உருவத்தையும் உள்ளடக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தையும் விஞ்சிய நிலையிலேயே அல்குர்ஆனின் கதைகள் அமைந்துள்ளன. நவீன இலக்கியம் இதுவரை கண்டுகொள்ளாத அல்லது கண்டுபிடிக்காத பலவகைக் கதைகள் அல்குர்ஆனில் விரவிக்கிடக்கின்றன. உறுதியான ஆதாரங்களைக் கொண்ட புலன்களுக்கப்பாற்பட்ட சூட்சும உலகின் நடப்புக்களைப் பற்றிக்கூட அல்குர்ஆன் தனது கதைகளில் மிகத்தத்ரூபமாக விபரித்துச் செல்கிறது.

"...உங்கள் மீது எனது வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்படவில்லையா? நீங்கள் அதைப் பொய்ப்படுத்திக் கொண்டிருந்தீர்கள். அப்போது அவர்கள் சொல்வர்; இறைவா! எமது துரதிஷ்டம் எம்மை மிகைத்துவிட்டது. நாம் வழிதவறிய சமூகமாக இருந்தோம். இறைவா! இதிலிருந்து எமக்கு விடுதலை அளிப்பாயாக. நாம் திரும்பிச் சென்றால் அநியாயக் காரர்களாகிவிடுவோம். 'நீங்கள் அதிலேயே இழிவடைந்து போங்கள். என்னோடு பேசாதீர்கள்' என்று கூறுவான். என் அடியார்களில் ஒரு குழு, இறைவா! நாம் விசுவாசித்தோம். எம்மை மன்னித்தருள். நீ இரக்கமுடையவர்களில் சிறந்தவன் என்று கூறுவர். நீங்கள் அவர்களை பரிகசித்தீர்கள். ஏளனமாகச் சிரித்தீர்கள். அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்ததற்காக இன்று நான் அவர்களுக்குக் கூலி கொடுத்துள்ளேன். அவர்கள் வெற்றியாளர்கள்..." (அல்-மு'.மினூன்)

நவீன கதை இலக்கியத்தில் கூறப்படும் கதை நிகழ்வு, அதன் கட்டுமானம், வெளிப்பாடு, பாத்திர வார்ப்பு, கரு, தலைப்பு போன்ற கதை இலக்கியத்தின் முக்கிய கூறுகள் அனைத்தையும் அல்குர்ஆனின் கதைகளும் பெற்றிருக்கின்றன. ஏனைய கதை இலக்கியக் கோட்பாடுகளுக்கும் அல்குர்ஆனுக்கும் இடையில் உள்ளடக்கத்தைத் தவிர வேறு எந்த முரண்பாடுகளும் கிடையாது.

அல்குர்ஆனின் கதைப் பண்புகள் தொடர்பாக ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் அஷ்-ஷஹீத் செய்யித் குத்ப் அவர்கள் தனது 'அல்குர்ஆனின் கலையழகு' என்ற நூலில் அவற்றைத் தெளிவாக விளக்கியுள்ளார். அல்குர்ஆனின் கதை வெளிப்பாட்டில் பல வழிமுறைகளைப் பின்பற்றுவதாக அவர் வேறுபடுத்தி விளக்கியுள்ளார். ஒன்று: வெளியீட்டு முறையில் பன்முகத்தன்மை. இதில் நான்கு முறைகளை அல்குர்ஆன் பின்பற்றியுள்ளது.

அ- முதலில் அல்குர்ஆன் கதைச் சுருக்கத்தைச் சொல்லும். பின்னர் அதன் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை படிப்படியாக விளக்கிச் செல்வதைக் காணலாம். இதற்கு மிகச்சிறந்த உதாரணம் குகைவாசிகள் பற்றிய கதையாகும்.

"அது ஒரு புறமிருக்க, குகையில் சிறிது காலம் வாழ்ந்தவர்களும் வரலாற்றுப் பதிவையுடையவர்களும் நம்முடைய அத்தாட்சிகளில் ஆச்சரியமானது என்று நபியே நீர் நினைக்கிறீரா? அந்த இளைஞர்கள் குகையை நோக்கி ஒதுங்கிய நேரத்தில் இறைவா! உம்முடைய அருளை எமக்குத்தருவாயாக. எமது விடயத்தில் சீரிய வழியை ஏற்படுத்துவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட ஆண்டுகள் அக்குகையில் அவர்களின் காதுகளில் சத்தம் விழாமல் தடுத்தோம். பின்னர் அவர்களில் நீண்டகாலம் தங்கியிருந்ததை மிகவும் கணிப்பிடக்கூடியவர் யாரென்பதை நாம் அறிவதற்காக அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டோம்" (18:9-12)

இது கதையின் சுருக்கமாகும். இதன்பின் கதையின் ஒவ்வொரு கட்டத்தையும் குர்ஆன் படிப்படியாக விளக்கிச் செல்வதைக் காணலாம். குகையில் நுழைவதற்கு முன்னால் நடந்த உரையாடல், நுழைந்த பின் அவர்களின் நிலை, அவர்களின் உறக்கம், விழித்தல், உணவு வாங்க ஒருவரை அனுப்புதல், நகரத்தில் அவர் அறியப்படல், அவரின் மீள்வருகை, அவர்களின் மரணம், அவர்களுக்காகக் கட்டப்பட்ட நினைவு மண்டபம், அவர்கள் விடையத்தில் மக்களின் கருத்துவேறுபாடுகள் என்று குர்ஆனின் கதை இலக்கியம் விரிவடைந்து கொண்டே செல்கிறது.

ஆ- சிலபோது அல்குர்ஆன் ஒரு கதையின் முடிவை மாத்திரம் ஆரம்பத்தில் குறிப்பிடும். பின்னர் அக்கதையின் ஆரம்பத்திலிருந்து கடைசிப் பகுதிவரை விளக்கிச் செல்லும்.

"அவை தெளிவான வேதத்தின் வசனங்கள். நாம் விசுவாசிகளுக்காக சத்தியத்தின் அடிப்படையில் மூஸா, பிர்அவ்ன் ஆகியோரின் செய்திகளை உன்மீது ஓதிக்காண்பிக்கின்றோம். பிர்அவ்ன் பூமியில் செல்வாக்குப் பெற்று வ்ரம்பு மீறி நடந்து கொண்டான். அவன் குடிமக்களைப் பல பிரிவுகளாக மாற்றினான். அவர்களில் ஒரு பிரிவை பலவீனப்படுத்தினான். அவர்களின் ஆண்மக்களைக் கொலை செய்தான். பெண்களை உயிரோடு வாழவிட்டான். அவன் சீர்கேடுகளைத் தோற்றுவித்தோரில் ஒருவன். நாம் பலவீனப்பட்டவர்கள் மீது அருள்பாலித்தோம். அவர்களைத் தலைவர்களாகவும் வாரிசுகளாகவும் ஆக்கினோம். அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்தோம்." (29:1-5)

இவ்வாறு மூஸாவின் கதை முடிவை குறிப்பிட்ட அல்குர்ஆன் அதன் பின் அவரது பிறப்பு, வளர்ப்பு, பாலூட்டல், வாலிபப்பருவம், அவரது கொலை நிகழ்ச்சி, வெளியேற்றம் என்று கதையின் தொடக்கம் வருவதைக் காணலாம்.

இ- சிலபோது அல்குர்ஆன் முன்னுரையோ, சுருக்கமோ எதுவுமின்றி கதையை நேரடியாகச் சொல்வதைக் காணலாம்.இதற்கு மரியம் (அலை) அவர்களின் கதை, ஈஸா (அலை) அவர்களின் பிறப்பு, சுலைமான் (அலை) ஆகியோர் தொடர்பான கதைகள் நேரடி உதாரணங்களாகும்.

ஈ- நாடகப் பாணியில் கதைகூறுவதும் குர்ஆனின் கதை இலக்கியப் பண்பாகும். சில சுருக்கமான வார்த்தைகளைக் குறிப்பிட்டு வார்த்தைகளுக்கு அப்பால் கதைவெளியொன்றை உருவாக்கிவிடுகிறது. வாசகனின் மனப்பெருவெளியில் கதை கொஞ்சம் கொஞ்சமாக விரியத் தொடங்கும். இதற்கு மிகச்சிறந்த உதாரணம் இப்றாஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் கதையாகும்.

"இப்றாஹீம் (அலை) அவர்களும் இஸ்மாயீல் (அலை) அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் அத்திவாரத்தை உயர்த்திய நேரத்தில் கூறியதை நினைத்துப் பாரும்."

இரண்டு: ஆச்சரியத்திலாழ்த்தும் கதைப்பண்பு.

அல்குர்ஆன் கதைகளில் வரும் கதாநாயகனை அல்லது அவனுடன் இணைந்து வரும் பிற கதை மாந்தரை மறைத்துக் கொண்டே வந்து இரண்டையும் ஒரு சேர வெளிப்படுத்தி கதையைப் படித்துக் கொண்டிருக்கும் வாசகனை ஆச்சரியத்திலும் திகிலிலும் ஆழ்த்திவிடும் பண்பு அதற்குண்டு. இதற்கான உதாரணத்தை மூஸா (அலை) அவர்களுடன் வரும் அந்த நல்லடியார் பற்றிய கதையில் தெளிவாகக் காணலாம்.

பாரசீகம், ரோம் ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள கடல்கள் இரண்டும் சந்திக்கும் இடத்தை அடையும் வரை மூஸா(அலை) அவர்கள் தனது சீடனுக்கு தான் யாரைச் சந்திக்கப் போகிறேன் என்பதை வெளியிட வில்லை. அதேபோல் அந்த நல்லடியாரைச் சந்தித்த பின் அவரது மாணவர் பற்றிய கதையை அல்குர்ஆன் குறிப்பிடவில்லை. அந்நல்லடியார் அதன் பின் செய்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையும் திகிலூட்டுவதாக இருக்கின்றது. கதையைப் படிக்கின்ற வாசகனின் மனம் வெகுஆவலுடன் அவர் யார்? என்ற வினாவை எழுப்பிக் கொண்டே ஒவ்வொரு கட்டத்திலும் செல்கின்றது. இப்படி வாசகனை ஆச்சரியத்திற்கு மேல்ஆச்சரியத்திலாழ்த்தி சுவாரஸ்யமாக அழகியலுடன் கதை சொல்லும் பாணி குர்ஆனுக்கே உரிய தனிச்சிறப்பம்சமாகும்.

இவ்வாறு அல்கலம், மரியம் போன்ற அத்தியாயங்களில் கூறப்படும் கதைகளில் பாத்திரங்களை மறைத்துக் கதையை நகர்த்திச் செல்வதைக் காணமுடியும்.

மூன்று: காட்சிகளுக்கிடையிலான இடைவெளியைப் பேணுதல்.

அல்குர்ஆன் கதையிடைவெளியைப் பேணிக் கதை சொல்லும் பண்பை அவதானிக்கவும் முடிகிறது. கதையில் வருகின்ற ஒவ்வொரு சம்பவத்திற்குமிடையில் அல்லது காட்சிகளுக்கிடையில் வேறு வசனங்களைக் கூறுவதன் மூலம் இவ்விடைவெளியைப் பேணுகிறது. இதனால் வாசகனின் கற்பனைப் பெருவெளியில் கதையின் பரிமாணம் விரிவடைந்து கொண்டே செல்கிறது. அக்கதையில் அவனது மனம் அவாவி நிற்குமளவுக்கு கதையிடைவெளி அவனது கற்பனா ஆற்றலைத் தட்டிவிடுகின்றது.

ஏறத்தாழ, அல்குர்ஆனின் எல்லாக் கதைகளிலுமே இப்பண்பைக் காணலாம். உதாரணமாக யூஸுப் என்ற அத்தியாயத்தில் மாத்திரம் 28 கதை இடைவெளிகள் காணப்படுகின்றன. அதாவது அக்கதையை அல்குர்ஆன் 28 பகுதிகளாகப் பிரித்துக் கூறியுள்ளது.

யூஸுப்(அலை) அவர்கள் எகிப்தின் அமைச்சராக இருக்கும் போது பஞ்சம் நிலவிய காலப்பிரிவில் அவரது சகோதரர்கள் அவரிடம் வருகின்ற காட்சியோடு இக்கதை ஆரம்பிக்கின்றது. அவர் அவர்களிடம் அங்கு சமூகமளிக்காத அவர்களின் சகோதரனைக் கொண்டு வருமாறு கோட்கிறார். அவர்கள் தந்தையின் வெறுப்புக்கு மத்தியில் அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவருகின்றனர். அவரது சரக்குப் பொதியில் அரசனின் நீரருந்தும் பாத்திரம் இருந்து கண்டுபிடிக்கப்பட்டு அவர் கைதுசெய்யப்படுகிறார். இதுவே முதற்காட்சியில் வரும் சம்பவங்கள்.

அடுத்த காட்சியில் அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி கைதுசெய்யப்பட்ட சகோதரன் தொடர்பாகவும் தந்தைக்களித்த வாக்குறுதி பற்றியும் கலந்துரையாடும் சம்பவம் வருகிறது.

அப்போது திரை மூடப்பட்டு திடீரென மூன்றாவது காட்சி வருகின்றது. அது எகிப்திலோ, திரும்பி வரும் வழியிலோ நிகழும் காட்சியல்ல. மாறாக அவர்களின் தந்தைக்கு முன்னால் அவர்கள் எகிப்தில் நிகழ்ந்தவற்றை எடுத்துக் கூறும் காட்சி. அதனைக் கேட்க விரும்பாததைப் போல் திரை திடீரென மூடித் திறக்கப்படுகின்றது.

அப்போது ய∴கூப் (அலை) மக்களை விழித்துப் பேசுகின்றார். பின்பும் திரை மூடப்படுகின்றது.

அங்கே ய∴கூபையும் அவரது பிள்ளைகளையும் காணலாம். இரு மக்களையும் பறிகொடுத்த ஆழ்ந்த கவலை காரணமாக ய∴கூபின் பார்வையிலேயே வெண்திரை விழுந்து பார்க்க முடியாமற் போன பரிதாபக் காட்சியைக் காணமுடிகிறது. இவ்வாறு கதையும் இடைவெளியுமாக யூஸுபின் கதை தொடர்ந்து செல்கிறது.

அல்குர்ஆன் கதை கூறுவதற்கு கையாளும் மொழிநடையோ மிகவும் தனித்துவமானது. வார்த்தைகளை மிகச்சிக்கனமாகப் பயன்படுத்துகிறது. சிலபோது ஒரேகதை வெவ்வேறு இடங்களில் கூறப்பட்டாலும் அவை இரண்டும் வெவ்வேறு கருத்துப் பரிமாணங்களை உள்ளடக்கியிருப்பதை நுணுக்கமாக அவதானிக்கும் போது கண்டு கொள்ள முடியும். மிக நுண்ணிய பல கருத்துக்களை உட்பொதிந்தவையாக அல்குர்ஆனின் மொழிநடை காணப்படுகின்றது. காட்சிகளுக்கிடையில் பொருத்தப்பாடும் ஒவ்வொரு பகுதியும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவையாக இருப்பதும் அல்குர்ஆனின் கதைஇலக்கியத்தின் தனிச்சிறப்பம்சமாகும்.

இவ்வாறு அல்குர்ஆனின் கதை இலக்கியத்தை விபரிக்கத் தொடங்கினால் அது நீண்டு போய்விடும். சுருங்கக் கூறுவதாயின் இஸ்லாமிய சட்ட அறிஞனுக்கு எப்படி குர்ஆனும் சுன்னாவும் சட்டமூலாதாரமோ அவ்வாறே இஸ்லாமியக் கதைஞனுக்கும் அந்தக் குர்ஆனும் சுன்னாவும்தான் மூலாதாரமாக அமையவேண்டும். இஸ்லாமிய கதை-இலக்கியக் கோட்பாடுகளை அல்லது அதற்கான அடிப்படை விதிகளை அவன் அதிலிருந்தே உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இஸ்லாமிய இலக்கியம் என்று அடையாளப்படுத்தக்கூடிய தனித்துவமிக்க இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்க முடியும். எல்லாவற்றையும்விட மேலாக இஸ்லாமிய த∴வாவுக்கு இலக்கியத்தின் மூலம் பெரும் பங்காற்ற முடியும் என்பதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வை'யின் உலகம்

## 2

ஈழத்து முஸ்லிம் சிறுகதைகளின் வளர்ச்சி குறித்து அதன் இஸ்லாமியத் தன்மை குறித்து அதன் பன்முகப் பாங்கில் விரிவான எந்த ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மரினா இல்யாஸ், எம்.எச்.எம் ஷம்ஸ், திக்வல்லைக் கமால் போன்றோர் தமது கட்டுரைகளில் ஓரளவு தொட்டுக்காட்டியதைத்தவிர அல்லது மல்லிகை முகங்களில் வெளிவந்த சில முஸ்லிம் முகங்களைத் தவிர வேறெந்த ஆய்வுகளும் ஆழமாக, உருப்படியாக மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

எமது முஸ்லிம் கதைஞர்களின் இலக்கியச் செழுமையை வெளிப்படுத்துவதற்கும் இஸ்லாமிய அடையாளத்தை நோக்கி இனிவரும் காலங்களில் அவற்றை ஆற்றுப்படுத்துவதற்கும் இந்தத் தேசத்தில் நமது இருப்புக்கான ஓர் இலக்கிய சாட்சியமாகவும் இருக்க வேண்டுமாயின் ஆய்வு மிகவும் முக்கியமாகும்.

ஒரு சிறுநிகழ்வின் விஸ்தாரம்தான் சிறுகதை. அந்நிகழ்வுதான் கதையின் மையப்புள்ளி. அப்புள்ளிக்கு உள்ளேதான் கதைஞனின் பேனை சுழலவேண்டும். நாவலில் எதையும் சேர்க்கலாம், நீக்கலாம். ஆனால் சிறுகதையில் சேர்த்தாலோ, நீக்கினாலோ கதை கெட்டுவிடும். ஒரு கவிதையைப் போல உணர்ச்சியும் நாடகத்தைப் போல வார்த்தைச் சிக்கனமும் இசையைப் போல சுருதி மாறாமலும் ஓவியத்தைப் போல அழகு கெடாமலும் இருக்க வேண்டுமென சிறுகதைக்குப் பலவாறான வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. இந்த வரைவிலக்கணங்கள் எதற்குள்ளும் 'வை'யின் கதைகள் அடங்காமல் விடவில்லை.

ஆனால் இன்றைய தகவல் தொழில் நுட்ப உலகில் ஏற்பட்டுவரும் எண்ணற்ற மாற்றங்கள் மனிதனின் அகம் பற்றிய உளவியல் ஆய்வுகள் தரும் தகவல்கள் சமூகப் பொருளாதார அரசியல் சிந்தனை மாற்றங்கள் நவீன கதைகளையும் பாதித்து வருகின்றன. போராட்ட வாழ்வு, அகதியாய் அலையும் அவலம், மனிதத்தின் தேடல், புதிய வாழ்வைத் தேடும் அவா, ஒவ்வொரு இனமும் தன் இருப்பை உறுதிப்படுத்த எடுக்கும் எத்தனங்கள் போன்ற பலதரப்பட்ட விடயங்கள் இன்றைய இளம் கதைஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன என்பது வேறு.

ஆக, ஒரு கதைஞனின் அல்லது விமர்சகனின் பார்வை, அவனது மதிப்பீடுகள் ஒரு காலத்தோடு மட்டும் சுருங்கிவிடக்கூடாது. அதேவேளை ஒரு கதைஞனை மதிப்பீடு செய்கின்ற போது அவன் வாழ்ந்த காலம், இடம், அவன் எதிர் நோக்கிய சவால்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டேயாக வேண்டும் என்பதில் இரு கருத்திற்கு இடமில்லை.

சமூகத்தில் புரையோடிப்போன மரபு ரீதியான விழுக்காடுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து சமூக நலன்பேணும் இலக்கியம் படைத்த அரிதானவர்களில் 'வை'யும் ஒருவர். எமது இலக்கிய கர்த்தாக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் முகாம்களுக்குள் அடைபட்டு முகம் தெரியாமல் போய்க்கொண்டிருந்த வேளையில் 'வை' எமக்கேயுரிய கலாசாரத் தனித்துவத்தோடு தன்னை முற்போக்காய் அடையாளம் காட்டியவர்.

சுரண்டல், அத்துமீறல், உரிமை மறுப்பு, ஆக்கிரமிப்பு, ஏமாற்றல் என்று எல்லாவகைச் சமூக அநீதிகளுக்குமெதிராக அவரது பேனை உரத்துப் பேசுகிறது. சமூக அநீதிகள் பொதுவாக மேல்மட்டதிலிருந்தே புறப்படுகின்றன. அவை அடிமட்டத்தில் வாழ்வோரைப் படிப்படியாகச் சென்றடைந்து அவர்களின் வாழ்வை நாசப்படுத்த ஆரம்பிக்கின்றது. சமூக அநீதிக்கெதிரான போராட்டங்கள் அடிமட்டங்களிலிருந்தே மேற்கிளம்புகின்றன. 'வை'யின் குடும்பப் பின்னணிக்கும் அவர் எதிர்நோக்கிய மேல்மட்ட ஆதிக்க வெறிபிடித்த வர்க்கத்திற்குமிடையில் அவரது கதைகள் பின்னப்பட்டிருக்கும் விதம் ஆழமாக நோக்க வேண்டிய ஒன்றாகும். சமூக அநீதிகளில் அரசியல் அராஜகமே மிகப்பயங்கரமானதாகும். மதுவை அருந்தியவன் தன்னை மாத்திரமே மறந்துவிடுகிறான். ஆனால் அதிகாரம் என்ற மதுவை அருந்தியவன் தன்னைத்தவிர மற்றெல்லோரையும் மறந்துவிடுகிறான் என்று யாரோ கூறியது எம் ஞாபகத்திற்கு வருகின்றது.

வையின் கதைகள் இரண்டு வகையான சமூக அநீதிகளை இனங்காட்டுகின்றன. ஒன்று, உள்ளே நிகழ்ந்து வரும் அநீதிகள். அடுத்தது புறத்தே இருந்து எம்மீது இழைக்கப்படும் அநீதிகள். 'ஒரு குடிசை அழிகிறது', 'பிறழ்வு' ஆகிய கதைகளில் முதலாளித்துவத்தின் அசல்வடிவத்தையும் பண பலத்துக்குப் பின்னால் நிற்கும் அடியாட்களையும் அதில் மனித நேயம் மரணித்துப் போவதையும் ஈற்றில் அது நடுத்தெருவுக்குத் தள்ளப்படுவதையும் பிரத்தியட்சமாகக் காணமுடிகிறது. 'நிறங்களில்' சமூகத்தின் பல வகுப்புகள் (Class) உள்ளதை அழகாக எடுத்துக் காட்டுகிறார். இருவேறு உலகங்கள் அங்கே சித்தரிக்கப்படுகின்றன. மனிதாபிமானமற்ற உழைப்பை உறுஞ்சி எடுக்கும் உலகம். மற்றது, தன்னலமற்ற உழைக்கும் வர்க்கத்தின் உலகம்.

புறத்தே நிகழும் அத்துமீறலுக்கு 'முள்வேலிகள்', 'இங்கேயும் ஒரு மனிதன்' ஏன் வையின் இழப்புக் கூட நல்ல உதாரணங்கள்தான். ஒரே கூரையின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்த நம் மீது சகோதர சமூகத்தின் போராளிகளால் பலவந்தமாகப் பிரிக்கப்பட்டு போடப்பட்ட இனத்துவேசத்தின் வேலிகளை 'முள்வேலி'யில் கதைஞர் நேர்மையோடு எடுத்துரைக்கின்றார்.

'வை'யின் கதையுலகில் வரும் மனிதர்கள் போராடும் இயல்பு படைத்தவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் அநீதிகளைக் கண்டு அடங்கி ஒடுங்கிப் போய் நிற்பவர்களாக அவர் சித்தரிக்கவில்லை. குறிப்பாக இக்கதைகளில் வரும் பெண்பாத்திரங்கள் உணர்ச்சிமிக்க, வாழ்க்கையை ஒரு சவாலாக ஏற்றுப் போராடும் மனிதர்களாகவும் அவர்கள் காட்டப்படுகின்றனர். அதேநேரம் பிறரின் சுகங்களில் மட்டு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்ல துயரங்களிலும் பங்கு கொண்டு பிறருக்கு உதவும் மனிதர்களாக வருகின்றனர். அப்பாஸ் கியாரொஸ்தமியின் And life goes on திரைக்கதையில் வரும் மனிதர்களைப் போல வையின் மனிதர்களும் வாழ்வை இயல்பானதாய் எதிர்கொள்கிறார்கள்.

நஜீப் அல் கைலானியின் கதைகளைப் படிக்கிற போது தமிழில் இப்படி இஸ்லாமிய இலக்கியம் படைப்பதற்கு யாரும் இல்லையே என்று நான் பல சந்தர்ப்பங்களில் ஏங்கியதுண்டு. அந்த ஏக்கத்தை குறைந்த பட்சம் வை நிறைவு செய்திருக்கிறார் என்றே தோன்றுகிறது. 'மனக்கோலம்', 'போராட்டம்', 'பிறைக்கொடி தாழாது' ஆகிய கதைகள் இஸ்லாமிய வரலாற்றுக் காலத்திற்கே போய்நின்று வரலாறு சிதையாமல் வரலாற்றுணர்வுடன் எழுதியிருப்பது குறைவாயினும் 'வை'யின் படைப்பாற்றலுக்கு சிறந்த சான்றாகும். அவற்றைப் படிக்கும் போது தமிழில் ஒரு நஜீப் கைலானியை இழந்துவிட்டோமே என்ற ஏக்கமே எஞ்சி நிற்கின்றது.

வையின் உலகத்தில் வளர்ந்த மனிதர்கள் மட்டுமல்ல, குழந்தைகளும் வருகிறார்கள். அவர்களும் சின்னஞ்சிறு மனிதர்கள்தானே. அவர்களுக்கும் பெரிய மனிதர்களைப் போல உணர்ச்சிகள், கோபதாபங்கள், மனப்போராட்டங்கள், வாழ்க்கைப் போராட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கும் போட்டி, பொறாமை, எரிச்சல், மனவெழுச்சி எல்லாம் இருக்கின்றன. ஆனால் அவை பெரியவர்களின் உலகத்தில் நீடிப்பதைப் போல் குழந்தைகளின் உலகத்தில் நீடித்து வாழ்வதில்லை. அதனால் அங்கே இருக்கும் மனிதர்கள் சிரித்துக்கொண்டே அழுகிறார்கள். அல்லது அழுதுகொண்டே சிரிக்கிறார்கள். ஆரத்தழுவுகின்றனர். அந்த நேரத்தில் புதிய மனிதர்கள் தோன்றுவதை வை, மிக நுட்பமாகத் தீட்டியுள்ளார். 'மனிதன் வந்தான்', 'மாணவம்', 'புனித பூமியில்' 'பெரிய மீனும் சின்னமீனும்' ஆகிய கதைகளில் இந்த சான்றுகளைக் காணலாம். குழந்தைகளின் மனவெழுச்சி அடிக்கடி மாறுவதைக் காட்டும் விதம் வை வெறும் கதைஞன் மட்டுமல்ல உளவியல் படித்த கதைஞன் என்பதை நன்கு புலப்படுத்துகிறது.

'வை'யின் கதைகளில் பெண்ணியத்திற்கான குரல்கள் ஓங்கி ஒலிப்பதை பரவலாக காணமுடிகிறது. 'உப்புக் கரித்தது', 'முக்காடு', 'வெறி', 'அடித்த கரங்கள்' போன்ற கதைகளில் இந்த மண்ணில் நிலவும் ஆண் மேலாதிக்கப் பண்புகளை இனங்காட்டுவதோடு, பாலியல் சுரண்டல்கள் எந்தளவு புரையோடிப் போய் இருந்துள்ளன என்பதற்கு இக்கதைகள் வரலாற்று ஆவணங்களாகும். பொதுவாக 'வை'யின் நாவல்களிலும் கூட பெண்பாத்திரங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து பேசப்பட்டிருக்கின்றனர். 'வை'யின் படைப்புக்களில் பெண்ணியம் என்பது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

'வை'யின் சிறுகதை இலக்கியத்தின் ஆளுமைப் பண்புகளாக பின்வரும் பண்புகளை எம்மால் இனங்காணக்கூடியதாக இருக்கிறது.

○ யதார்த்தவாத போக்கு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இஸ்லாமிய இலக்கியத்தின் மிக அடிப்படைப் பண்பு இதுவாகும். இஸ்லாமிய இலக்கியம் மனிதன், பிரபஞ்சம், வாழ்வு, நம்பிக்கைகள் என்பவற்றை முழுமையாக உள்ளடக்கி யதார்த்தமாக நோக்குகின்றது. வாழ்வின் நெழிவு சுழிவுகள், ஏற்ற இறக்கங்கள், நன்மை தீமைகள் என்பவற்றை அது முழுமையாக நோக்குகின்றது. வெறும் கற்பனாவாத உலகில் சஞ்சரிப்பதாக மனித வாழ்வை அது காண்பதில்லை. மனிதனை திருத்த முடியாத விலங்காகவோ குற்றமேயற்ற அமரத்துவம் உடையவனாகவோ கணிக்காமல் எதார்த்த மனிதனாக நோக்குகின்றது. இத்தகைய இஸ்லாமிய இலக்கிய ஆளுமையை வையின் கதைகளெங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. முக்காடு பற்றிய சிறுகதையில் ஆசிரியர் இக்கருத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.

❍ மனிதம் சார்ந்த பண்பு :

இதுவும் இஸ்லாமிய இலக்கிய பண்புக்கூறுகளில் ஒன்றாகும். மானுடப் பிரச்சினைகள், அது அவாவி நிற்கும் விடுதலை உணர்வு என்பவற்றை உள்ளிட்டதாகவே அது அமைந்திருக்கும். இலக்கியமும் மனித வாழ்வும் வேறுபட்டதல்ல. வாழ்வின் அடியாகவே இலக்கியம் பிறக்கின்றது. வையின் கதைகள் மனித உலகப் பிரச்சினைகளை அது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லாப் பாலினரையும் உள்ளடக்கியதாக இருப்பதைக் காணலாம்.

❍ ஒழுக்க மேம்பாடு சார்ந்த போக்கு :

இஸ்லாமிய இலக்கியம் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் நிறைந்த ஆபாசத்தையோ, ஒழுக்கக் கேடான விடயங்களை விபரிப்பவையாகவோ அது இருக்கக் கூடாது என்பது இதன் கருத்தல்ல. மனித வாழ்வில் எல்லாம் நடக்கக்கூடியவை. ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் முறையிலேயே இஸ்லாமிய இலக்கியம் சற்றுக் கூடுதல் கவனம் எடுக்கிறது. மனிதன் தனது நிலையை விட்டும் மிருகத்தின் நிலைக்கு இறங்கிச் செல்கின்ற போது அதை சித்தரிக்கக்கூடாது என்றும் இஸ்லாமிய இலக்கியம் சொல்லவில்லை. 'வெறி', 'முக்காடு', 'அடித்த கரங்கள்', 'கணை' ஆகிய கதைகளில் ஆசிரியரின் வெளிப்பாட்டுத் திறனை நன்குணர முடிகின்றது. உப்புக்கரித்தது என்ற கதையில் மணவறையில் ஒரு சமூகப் பிரச்சினையை வெளிக்கொணரும் அவரது ஆளுமை மெச்சத்தக்கது.

❍ சர்வதேசிய உம்மத்துடனான தொடர்பு :

வை இந்த மண்ணின் மைந்தர்கள் வேதனைகளோடு மட்டும் தன் கதைப் பரப்பை சுருக்கிக் கொள்ளாமல் சர்வதேச இஸ்லாமிய சமூகத்தின் ஓர் அங்கமான எம்மோடு 'புனித பூமி'யையும் அதை மீட்கப் போராடும் கல்வீசும் சிறார்களையும் தனது கதைகளில் ஒன்றாக இணைத்துக் கொண்டதன் மூலம் அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது.

வையின் கதைகளில் கையாண்டுள்ள மொழிநடை எல்லாவயதினருக்கும் ஏற்ற கவித்துவமிக்க இலக்கண வழுவில்லாத ஊளைச்சதைக-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளற்ற கதையின் ஓட்டத்தை கெடுக்கும் மிகை வர்ணனைகளோ, மிகை விபரிப்புக்களோ அற்ற மனித உடலின் தாளலயங்களை அடக்க வேண்டிய இடத்தில் அடக்கி வாசிக்கும் பிறமொழியொன்றுக்கு எழுதில் பெயர்க்கக் கூடிய அலாதியான நடையென்றால் மிகையான கூற்று அல்ல.

'வை'யின் கதைகளில் பல சர்வதேசத்தரம் வாய்ந்தவை என்று பயப்படாமல் கூறமுடியும். உப்புக்கரித்தது, மதியம் தப்புகிறது, தந்தையும் தாயும் பிள்ளைகளும் புனித பூமியில், முக்காடு, மனிதன் வந்தான் போன்றன என்னைக் கவர்ந்த கதைகளாகும். மாணவம், புன்னகை, தந்தையும் தாயும் பிள்ளைகள், ஓய்வு போன்ற கதைகளில் 'வை'யின் இளகிய மனத்தின் ஆழங்களை எட்டிப்பார்க்க முடிகின்றது. அத்தகைய மனித நேயம் கொண்ட ஒரு கதைஞனால்தான் இத்தகைய உன்னதக் கதைகளைப் படைக்க முடிந்திருக்கிறது என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

வாழ்க்கை இயல்பானதாய் யதார்த்தமானதாய் அமைதியாக நடை-பெற்றுக் கொண்டிருந்த வையின் உலகத்தில் இனவாதத்தீயும் மெதுவாக மெதுவாக எரியத் தொடங்குகின்றது. மொழியால் தேசத்தால் ஒன்றுபட்ட நிரபராதியான ஒரு சமூகத்தின் மீது சகோதரத்துவ இனம் வெறியோடு பாய்கிறது. தொடராக நடைபெற்ற அந்த வெறியாட்டங்களில் ஒன்றில் வைத்து வையின் உலகம் அழிகின்றது. உடலைவிட்டும் வையின் ஆத்மா பிரிகின்றது அல்லது, பலவந்தமாகப் பிரிக்கப்படுகின்றது. வையின் இழப்பு கலை உலகத்திற்கு மட்டுமல்ல. எமது மண்ணுக்கும் பேரிழப்பாகும். இன்னும் அரை நூற்றாண்டுக்கு எம்மை பின்னோக்கித் தள்ளிய பாரிய இழப்பு அது. அன்று எஸ்.எல்.எம் எழுதியது போல "அவர்களுக்குச் சொல்லத் தெரியாது, 'சுட'த்தான் தெரியும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியாக...

# 3

இலங்கையின் இலக்கியப் பரப்பில் வை. அஹ்மத், அறிமுகம் தேவையில்லாத மனிதர். 60களின் பிந்திய அரைப்பகுதியிலிருந்து 90களின் ஆரம்பம் வரை இலங்கையில் மட்டுமல்ல தமிழ்நாடுவரை அறியப்பட்டிருந்த ஒரு எழுத்தாளர்.

தந்தை யாஸீன் பரவாவுக்கும் தாய் சுலைஹா உம்மாவுக்கும் மகனாக 1945.04.29 ஆம் தேதி வாழைச்சேனையில் பிறந்தார். வாழைச்சேனை அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையிலும் பின், ஓட்டமாவடி சிரேஷ்ட பாடசாலையிலும் தன் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்ட அவர் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்று பேராதனைப் பல்கலைக்கழக கலைமானிப் பட்டத்தையும் பெற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பு கல்வி டிப்ளோ-மாவையும் பெற்றார்.

1964 முதல் ஆசிரியராய் நியமனம் பெற்று ஓட்டமாவடி, அந்நூர் மகா வித்தியாலயங்களின் அதிபராக இருந்து மூதூர் கோட்டக்கல்வி அலுவலக அதிகாரியாயும் பின் வாழைச்சேனை கோட்டக்கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் இறுதியில் மட்டு மாவட்ட அரச அதிபராகவும் கடமையாற்றினார், 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி மீயான்குளச் சந்தியில் வைத்து புலிகளால் மிகக்கொடுரமாக கொலைசெய்யப்பட்ட போது எம்மை-யெல்லாம் சொல்லொன்னாத் துயரிலும் நிரப்பமுடியாத வெற்றிடத்திலும் கதறக்கதற விட்டுவிட்டுச் சென்றார். அவருடன் சென்ற ஏனைய ஐவரும் அவரைப் போலவே எம்மைவிட்டுப் பிரிந்து இன்றுடன் ஆண்டு ஏழு.

மாணவப் பருவத்தோடு வையின் எழுத்துப் பணியும் ஆரம்பமாகியது. 1959 ஆம் ஆண்டு அகில இலங்கை சாகித்திய மண்டல விழாவையொட்டி நடைபெற்ற அகில இலங்கைக் கட்டுரைப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கனிஷ்ட பிரிவுக்கான முதல்பரிசு இவருக்கே கிடைத்தது. அதை அடுத்து இவரது எழுத்துப் பணி கிளைபரப்பியது. இலக்கியம், இஸ்லாம் பற்றிய பல கட்டுரைகளை எழுதினார். அவற்றையெல்லாம் அன்றைய ஊடகங்கள் ஆர்வத்துடன் வெளியிட்டு வந்தன.

1967 இல் 'அடித்த கரங்கள்' என்ற இளம் பிறையில் வெளிவந்த முதல் சிறுகதை மூலம் கதையுலகில் பிரவேசித்தார். அதையடுத்து அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் அவரது 'முக்காடு' என்ற கதைக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது.

வையின் மொத்த சிறுகதைகள் எத்தனை என்பதை இதுவரை தீர்மானிக்க முடியவில்லை. ஏறக்குறைய முப்பது இருக்கலாம் என்று ஒரு குறிப்புக் காணப்படுகிறது. மற்றொரு குறிப்பில் 25 இக்கும் மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் என்று வருகிறது. ஆனால் 30 இற்கும் மேற்பட்ட கதைகளை எழுதியிருக்க வேண்டும் என்பதுதான் எமது கணிப்பாகும். அதற்குப் பல காரணங்கள் ஒன்று அவரது டயரிக் குறிப்புகளிலிருந்து இதை அறியக்-கூடியதாக உள்ளது. மற்றது, வை. அஹ்மத் அவர்கள் ஒவ்வொரு சிறிய நிகழ்வையும் பதிவுசெய்யும் பண்புள்ளவராய் இருந்திருக்கிறார். எமது மண்ணில் நிகழ்ந்த ஒவ்வொரு அதிர்வும் அன்னாரின் இதயத்தை ஊடுருவிப் பேனையின் வழியே கவிதையாக, கட்டுரையாக, நாவலாக, நெடுங்கதையாக, சிறுகதையாக வெளிவந்திருப்பதைப் பார்க்கும் போது இதை உறுதிப்படுத்த முடிகிறது.

இத்தொகுப்பில் சுமார் 26 கதைகளை எம்மால் முடிந்தவரை தேடிச் சேர்த்து காலவரிசைப்படி தொகுத்துள்ளோம். விடுபட்ட கதைகளுள் மணிவிளக்கில் வெளிவந்த 'பிறைக்கொடி தாழாது' என்ற கதையையும் கறையான் அரித்துவிட்டவைகளையும் எம்மால் இத்தொகுப்பில் இணைக்க முடியாமல் போனதற்காக மிகுந்த மனவேதனைப்படுகிறோம்.

முக்காடு எப்போதோ வெளிவந்திருக்கவேண்டிய நூல். குறைந்தது 'வை'யின் மறைவை அடுத்தாவது வெளிவந்திருக்கலாம். 'என்ன செய்ய'? நமது தந்தையின் படைப்புக்களை அவரது மக்களாகிய நாம்-தான் வெளியிட வேண்டிய நிர்ப்பந்தநிலை. நாம் தவழ்ந்து பின் எழுந்து நடக்கப்பழகி வாலிபனாகி வயதுக்கு வந்து உலகைப் புரிய ஆரம்பிக்கும் போது நமது தந்தை 'வை' அஹ்மத் நம்மைவிட்டும் பலவந்தமாகப் பிரிக்கப்பட்டு விட்டார்.

இந்தக் கதைகளை மூன்று தடவைக்குமேல் வெளியிடுவதற்காக முயற்சித்துள்ளார். உம்மா, முள்வேலி, முக்காடு ஆகிய தலைப்-புக்களைச் சூட்டி அவர் தயாரித்திருந்த கையேடுகள் இதனைப்புலப்-படுத்துகின்றன. உரிய காலத்தில் வெளிவராததால் பல இலக்கிய உலக இழப்புக்களை அல்லது இருட்டடிப்புக்களை நாம் சந்தித்துள்ளோம்.

ஆயினும் 'வை'யின் படைப்புக்கள் வெளிவரவேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டிருந்த அன்புக்குரிய நண்பர் ஏ. ஜீ. எம். ஸதக்கா, மதிப்புக்குரிய ஆசிரியர் யூ. அஹ்மத் அவர்களுக்கும் இது விரைவில் வெளிவருவதற்கு காரணமயிருந்த சகோதரர் நூருத்தீன், இவற்றில் பெரும்பாலான கதைகளைப் பாதுகாத்து எம்மிடம் ஒப்படைத்த அவரது மகள் ஸாஹிரா பாணு பிர்தௌஸ், இதற்கான அட்டைப்படத்தை கீறித்-தந்த றஷ்மி, எஞ்சிய வேலைகளையும் சின்னத்தையும் வடிவமைத்த நண்பர் எஸ் கண்ணன் ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு நன்றி மீதம் உள்ளது. அது எப்-போதும் எனது பணிகளுக்கு உறுதுணையாய் இருந்துவரும் என் உடன் பிறப்புக்கள் இருவருக்கும் உரியது.

**அன்புடன்**

***மஹ்மூத் ஆலிம் வீதி,***<br>***வாழைச்சேனை-5.***

***ஏ. பி. எம். இத்ரீஸ்***<br>***1999-டிசம்பர்-26***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயிலில் நான்...

நான் எழுதியவைகளையும், எனது கடந்த காலத்தையும் பார்க்கின்றேன்.

அவ்வப்போது நான் கண்டவைகளையும், கேட்டவைகளையும் எனது அப்போதைய அறிவு முதிர்ச்சி அனுபவம் என்பவற்றினூடாக எழுத்தில் வடிக்க முனைந்திருக்கின்றேன்.

எப்போதுமே, வறுமை, அறியாமை இவற்றை ஒழிக்க வேண்டுமென்ற உணர்வு என்னுள் இருந்து வந்துள்ளது. மனித சமுதாயம் முழுவதையும் நேசிக்கும் மனப்பக்குவம் இருந்திருக்கிறது அநீதியை எதிர்த்துப் போராடத்து ணியும் குணம் என்னிடத்திலே வளர்ந்திருக்கிறது. உண்மையை நிலை நாட்ட எதிர்த்து வந்திருக்கின்றேன்.

மனிதனிடத்தில் குடி கொண்டிருக்கும் நீசத்தனம் என்னை வெறுப்படையச் செய்திருக்கிறது. பொய், ஏமாற்றுதல், கபடம், வஞ்சகம் என்பவற்றை என்னால் சகிக்க முடியாது. எப்போதும் உத்தமனாகவே வாழ வேண்டும் என விரும்பு கிறேன். அப்படி வாழ முடியாது என்பதும் எனக்குத் தெரியும். அதற்காக எல்லாரும் போகும் வழியிலேயே செல்ல வேண்டும் என்று நான் எண்ணவில்லை. அப்படி நானும் நீங்களும் எண்ணி நடந்தால், உண்மையான மனிதனை, ஒரு சான்றோனை -இந்த உலகம் காண முடியாது போகும், இது எனக்காக மட்டும், என்னைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அதனால் எனக்கு நான் தனி வழி அமைத்து நடக்கின்றேன். வெளியுலக விஷயங்கள் எனது உள்ளத்தை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. விஷயங்களை நான் அப்படியே நடக்கும் என்று ஒத்துக் கொள்கிறேன், அல்லது விட்டு விடுகிறேன். இது எல்லாராலும் சாத்தியமானதா?

உலகத்தின் உண்மை வடிவம் என்ன என்பதை நமது முன்னோர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய வழியைப் பார்த்து நாமும் நடந்து சென்றால் வெற்றியடையலாமா என்று பார்ப்பது நமது கடமையாகின்றது.

நவீன யுகத்தில் வாழும் நாம், நமக்கு உதவி செய்யும் கருவிகளைப் பெரிதும் நம்புகிறோம். இக்கருவிகளும் கூட, தன்னை உருவாக்கியவனையும், தன்னையும் ஒரு சேர அழிக்கும் தன்மை வாய்ந்தன. அவற்றிற்கு வழி காட்டும் சக்தி எதுவும் கிடையாது.

இந்த உலகத்தில் மனிதர்களாக நாம் வாழப் பழக வேண்டியது அவசியமா கின்றது. மனிதத்துவம், மனித நேயம் என்பனவற்றை வளர்க்க வேண்டியவர் களாக இருக்கின்றோம்.

அநீதியை எதிர்த்துப் போராடி வெற்றி பெறவேண்டும்.

ஆதிக்க உணர்வை அழிக்க வேண்டும்.

வறுமையை ஒழிக்க வேண்டும்.

அறிவை மலரச் செய்ய வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் எழுத்துப் பயன்படுமானால் அந்தப் பங்களிப்பு எனக்குத்திருப்தியை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கதைகளில் காதல் ரசனைகள் மிகவும் குறைவு என எனது வாசகி ஒருவர் குறைபட்டுக் கொண்டார். யதார்த்த வாழ்க்கையை எழுத்தில் வடிக்கும் ஒருவனிடம், வெறும் போலியான ஒன்றைப் பற்றி என்ன எழுத முடியும்? காதலும் வாழ்க்கையில் இல்லாத ஒன்றல்ல; காதலிப்பவர்கள் சந்தோஷமாகக் காதலிக்கட்டும். உண்மையான அன்பை மலரச் செய்யட்டும். அந்த அன்பு மனித நேயமாக இருக்கட்டும் என்பதே எனது ஆசை. அதைப்பற்றியும் நான் எழுதுவேன்.

எனது கதைகள் எங்கேயாவது ஏதாவதொரு உண்மையைத் தேடித்தான் செல்ல வேண்டும் என்பது எனது எண்ணம் அந்த உண்மைகள் உங்களுக்கும் தெரிகிறதா என்று பாருங்கள்.

அப்படியானால் அதுவே நான் எழுதுகோலைப் பிடிப்பதற்கு தகுதியாக்கும்.

எங்கேயோ அழைத்து வந்துவிட்டேன்; என்னோடு சேர்ந்து வந்தமைக்காக நன்றி கூறுகிறேன்.

வாழைச்சேனை வை. அஹ்மத்
*31.12.1988.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகங்கள்


| | |
|---|---|
| அடித்த கரங்கள் | 01 |
| உப்புக்கரித்தது | 04 |
| நிறங்கள் | 08 |
| பிறழ்வு | 13 |
| சின்ன மீனும் பெரிய மீனும் | 17 |
| வெறி | 22 |
| முக்காடு | 28 |
| ஓ! அதனாலென்ன...? | 33 |
| புன்னகை | 38 |
| கணை | 42 |
| போராட்டம் | 47 |
| மணக் கோலம் | 52 |
| மனிதன் வந்தான் | 54 |
| மதியம் தப்புகிறது | 60 |
| ஒரு குடிசை அழிகிறது | 65 |
| இந்தப் புயலுக்குப் பின்னும்... | 70 |
| ஒரு புதிய காலை மலர்கிறது | 73 |
| உம்மா | 80 |
| தண்ணீர்... தண்ணீர்... | 85 |
| புனித பூமியில் | 91 |
| ஓய்வு | 94 |
| மாறும் மனங்கள் | 99 |
| இங்கேயும் ஒரு மனிதன் | 105 |
| முள் வேலிகள் | 109 |
| மாணவம் | 113 |
| தந்தையும் தாயும் பிள்ளைகளும் | 118 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்த கரங்கள்

நண்பகல். நிலத்தை வறட்டும் வெயில். காக்கை குருவிகள் கூட நடமாடவில்லை. சொறி நாய்கூடத் தெருவில் இல்லை. ஆட்டுக் குட்டி ஒன்று அப்துல்லாக் கிழவனின் இளங் கன்று தென்னந் தோட்டத்துள் நுழைந்தது.

தளிர் எனுங் கரங்கள் நீட்டி, தலை நிமிர்ந்து நின்று செழிப்புக் காட்டின தென்னங் கன்றுகள். 'நறுக்' 'நறுக்' கென்று அவற்றின் தளிர் ஓலைகளைக் கடிக்கத் துவங்கியது ஆட்டுக் குட்டி. தோட்டக்கார அப்துல்லாக் கிழவனின் கண்ணில் அந்த ஆட்டுக்குட்டி பட்டுவிட்டது. அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. கையில் அகப்பட்ட ஒரு தடியை எடுத்துக்கொண்டு ஆட்டுக் குட்டியைத் துரத்த ஓடினான். ஓடும் போதே அவனுடைய வாய் கனல் கக்கியது. ''எந்தத் திமிலி வளர்க்கிற ஆடு இது? வளர்க்கத் தெரியாத மூதேவி. எண்ட தென்னங் கண்டுகள என்னபாடு படுத்திப் போட்டுது நாசமத்துப் போனது." அவன் தடியை எடுத்து ஆட்டுக் குட்டிக்கு வீசி அடித்தான்.

அது " ம்மா..." என்று கத்திக்கொண்டோடியது.

அப்துல்லாக் கிழவனின் அடுத்த வீட்டுக் காரியான பாத்துமா வளர்க்கும் ஆட்டுக் குட்டி அது. கிழவனுக்கு, அடுத்த வீட்டுப் பாத்தும்மாவோடு கோபம் கோபமாக வந்தது. வேலியோரத் துக்கு வந்து அவளைக் கிழவன் கூப்பிட்டான்.

"பிள்ளை பாத்தும்மா உண்ட ஆட்டுக் குட்டி செய்த அளுமதிய வந்துபாரு. எண்ட தென்னங் கண்டுகள என்ன பாடுபடுத்தியிருக்கு உண்ட ஆடுகளை கட்டிப் போட்டு தீனி போடு. இல்லாட்டி எண்டா இனி மேல், என்ன நடக்கும் எண்டு தெரியாது." கிழவன் சொல்லிவிட்டு அப்பால் நகர காலடி எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தான். அதற்குள் பாத்தும்மாவின் வக்கணை துவங்கியது.

"இந்தக் கிழவனுக்கு என்னோடு சறுகாட்டிப் பத்தியமில்லை. வேறார்ரையும் ஆடு வந்து திண்டது எண்டு சண்டைக்கு வாறது. எல்லாருக்கும் நான் ஒருத்திதான் கிடக்கிறன் அறுதாலி"

கிழவன் நின்று கேட்டான். பிறகு சொன்னான். "பிள்ளை நீ சொல்றது நியாயமில்ல; உண்ட ஆடுதான் திண்டிச்சுது எண்ட கண்ணால கண்டன்."

"என்ன பெரியப்பா நியாயமில்லை. எண்ட ஆடு பயிரைத் திண்டிச்சுது எண்டா கட்டிப் போட்டுட்டு, விதானையைக் கூட்டியாங்க,கூட்டிவந்து நியாயத்தப் பாருங்க. வீணா என்னோட சண்டைக்கு வராதீங்க."

"இவ்வளவு சொன்னதுக்கு பெரிசா கிளம்பிறியே; இனிமேல் உண்ட ஆடு எண்ட கடப்புக்குள்ள வரட்டும், நாலு காலையும் முறிச்சு எறியிறன்" கிழவனைக் கோபம் ஆட்டியது.

" முறிப்பீங்க, எண்ட ஆட்டில மயிரைப் புடுங்கிறவன் எவன் எண்டாலும் நான் ஒரு கைப் பார்ப்பன்... " பாத்திமாவின் கர்ச்சனை மேலும் தொடர்ந்தது. கிழவனின் கோப மிகுதியால் உடம்பு நடுக்கமெடுக்க: ஏதேதோ வார்த்தைகளைப் பறக்கவிட்டான். இருதரப்பிற்கு இடையேயும் சொற்போர் உக்கிரமடைந்தது.

இந்தச் சொற்போருக்கு, கிழவனின் ஆத்திரக் கரங்கள் வேலியைப் பிய்த்துக் கொண்டு போய், பாத்திமாவின் கன்னத்தில் 'படீர்' என்ற அறையுடன் அமைதி கொண்டன. பாத்திமா பெரிதாகக் கத்திக்கொண்டு நியாயம் தேடி கிராம விதானையாரின் வீடு நோக்கி ஓடினாள்.

பாத்திமா இளமையிலே புருஷனை இழந்த கைம் பெண். அவளுடைய கணவன், ஏதோ கார் விபத்தொன்றில் அகப்பட்டு இறந்துவிட்டான். வனப்பு மிகு எழிலோடு துலங்கிய அவளை எத்தனையோ பேர் விரும்பியும், கைம் பெண்ணாகவே அவள் காலம் கழித்தாள். பாய், தட்டுப் பெட்டிகள் என்பன இழைத்தும், ஆடு, கோழி என்பன வளர்த்தும் அவள் தன் நாட்களைக் கழித்துக்கொண்டிருந்தாள்.

அவளுக்கும் அப்துல்லாக் கிழவனுக்கும் எப்போதும் சண்டைதான். அடுத்த வீடு, பக்கத்துக் குடும்பம் என்று அவர்களிடையே என்றும் ஒற்றுமை நிலவியதில்லை. தொட்டாற் சிணுங்கி மாதிரி எடுத்ததற்கெல்லாம் கிழவனோடு சண்டையிட்டு வந்தாள் அவள். இன்று நடந்ததுபோல் என்றும் விவகாரம் அடிதடியில் முடிந்ததில்லை.

இந்த நிகழ்ச்சியை நினைத்தபடியே அப்துல்லாக் கிழவன் துக்கப் பட்டுக் கொண்டிருந்தான். "பாவம் பாத்திமாவுக்கு நாம் அடித்து விட்டோமே. அறுதாலியான அவளுக்கு ஏன் அடித்தோம்? நமக்கு ஏன் இந்தப் பொல்லாத கோபம் வந்தது" என்று வருந்திக் கொண்டிருந்தான் பகற் சாப்பாடு அவனுக்கு இறங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வந்தது. சரியாக ஐந்து மணி!

கிழவன் தன் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான். பாத்துமாவின் வீட்டு வேலியோரத்தால் அவன் செல்லும் பொழுது அவளுடைய வீட்டில் ஏதோ சத்தம் கேட்டது. அவன் வேலி யோரத்திலேயே ஒன்றி நின்றான்.

அடுத்த வீட்டில் கிராம விதானையார் வந்து டயறியோடு திண்ணையில் உட்கார்ந்திருந்தார். பாத்திமா வாசற்படியோரத்தில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தாள். விசாரணை முடிந்திருக்க வேண்டும். விதானை எழும்ப முயன்றார். பாத்திமா சொன்னாள். "இருங்க விதானையார், தேயிலை வைச்சுத்தாறன். குடிச்சிட்டுப் போகலாம்"

விதானையார் திரும்பவும் உட்கார்ந்துவிட்டார். பாத்திமா அடுப்படிப் பக்கம் சென்றாள்.

"கிழவனை பொலிஸிலதான் பிடிச்சிக் கொடுத்து இரண்டு நல்ல இடிவாங்கிக் குடுக்க வேணும்"

"ஓம் ; ஓம் விதானையார், அப்பதான் எண்ட மனம் ஆறும்" என்று சொல்லிக்கொண்டே பாத்திமா குனிந்து, தேனீரை விதானையாரிடம் நீட்டினாள். சட்டைக்குள் திமிறிக் கொண்டிருந்த பாத்திமாவின் கொள்ளை எழில் விதானையாரை எட்டிப் பார்த்துச் சிரித்தது! விதானையார் கிறங்கிவிட்டார்.

அவள் தேனீரைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தாளோ என்னவோ விதானையார் அவளின் தளிர்க் கரங்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சும் பாவனையில் நோக்கினார். பாத்திமா செய்வதறியாது திகைத்தாள்; திமிறினாள்.

"இதென்ன விதானையார்... சீ... விடுங்க கையை.."

"பிள்ளை பாத்திமா.." விதானையாரின் குரல் கெஞ்சியது.

பாத்திமாவின் முகம் கோவத்திற் சிவந்தது... "நீங்களும் ஒரு மனிசனெண்டு..." அவள் சொல்லுவதற்கிடையில், விதானையார் அவளைத் தன் கரங்களுக்குள் சிக்க வைத்தார். செய்வது அறியாத அந்த அபலை, வலையில் அகப்பட்ட சிறுமானெனப் பரிதவித்தாள்.

"எல்லாத்தையும் நானும் பார்த்துக்கிட்டுத்தான் விதானையார் நிக்கிறன். நியாயம் செய்ய வந்த நீங்க, தனிய இருக்கிற பெண்ணுக்கிட்ட இப்படிச் செய்யிற சரியல்ல..." கிழவன் வேலியைப் பிய்த்துக் கொண்டு பாத்துமாவின் வீட்டு வாசலுக்கு வந்தான்.

"பெரியப்பா... நல்லகாலம் நீங்க வந்தது. இல்லாட்டி எண்டா..." அவள் கிழவன் அருகே ஓடிச் சென்று கிழவனின் அடித்த கரங்களுக்கு இடையில் அடைக்கலம் அடைந்தாள்.

கிழவன் தன் பக்கத்தில் வாழும்வரை தன்னை எந்த ஆபத்தும் நெருங்க மாட்டாது என்ற நம்பிக்கை பாத்தும்மாவின் உள்ளத்திற் செழித்து வளர்ந்தது.

1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப்புக் கரித்தது!

"மச்சி எழும்புகா"

– கண்ணசந்துக்கிட்டுப் போன என்னை யாரோ எழுப்புறாப் போல அல்லவா கிடக்கு? 'இது ஆரு? இதென்ன ஊடு நிறைஞ்ச சனம்; உம்மாவையும் காணல்லய... சல்மா மச்சியா?'

"படுத்தது போதும் எழும்புகா! " – அவதான்; தெளிவு.

"ஏன் மச்சி இந்த நேரத்தில என்ன எழுப்புறாய்?" ஊரும் காலும் அடங்கின நேரம். பன்னிரண்டு மணி இருக்குமோ? பத்து மணிக்கு பேப்பர் பெட்டரியில விசில் ஊதினதுக்குப் பிறகுதானே படுத்தனான். ஓ... இப்பதான் ஞாபகம் வருகுது. வாப்பா, உம்மா, மாமி, சாச்சாவெல்லாரும் கதைச்சுக் கிட்டிருந்த விஷயம். சொல்லவும் வெக்கமாய் இருக்கு, நேத்து இராத்திரி வாப்பா என்னக்கூப்பிட்டு சொன்னாருதான்...

"என்னத்துக்கா? மாப்பிள்ளை வரப்போறாரு, குளிக்க வாங்க" - இதைச் சொல்லிப் போட்டு சல்மா மச்சி சிரிக்கிறா. அவசிரிச்சா வெண்டா அவட பல்லெல்லாம் அப்பாம் உடைச்ச தேங்காய்ப்பாதி மாதிரி, அவ்வளவு வெள்ள! எனக்கும் சிரிப்புவருகுது, எண்ட பல்லும் அப்படித்தானாம், மச்சான் ஒரு நாள் கண்ணாடியக் கொண்டாந்து காட்டினாரு, பாத்தன்.

"புள்ள சல்மா, அந்தப் புள்ளயக் கூட்டியாந்து குளிப்பாட்டுங்க கெதியா" – ஆயிஷா மாமிதான் சொல்லிப் போட்டு அங்கால போறா.

கூதலாவும் கிடக்கு, இந்த நேரத்தில என்னில தண்ணியை அள்ளி ஊத்தப் போகுதுகள். குளிக்கிற இடத்தில சும்மா விடவும் மாட்டுதுகள். எனக்கு இந்தக் கேலியெல்லாம் கொஞ்சமெண்டாலும் பிடிக்கிறதில்ல. சும்மா சதையைப் புடிச்சிப் பார்க்கிறதும், கிள்ளுறதும்: நல்லா இருக்காய், வடிவுதான் என்கிறதும். அவங்க கேலி பண்றாங்க எண்டு நாம கோவிக்கலாமா, எல்லாரும் மச்சிமாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் முந்தின கல்யாணம் முடிந்தபோதும், அந்தக் கல்யாணம் எனக்கும் அப்துஸ்ஸலாம் மச்சானுக்குந்தான் நடந்தது. அந்தக் கல்யாணத்தை நெனச்சுப்பாத்தா இப்பவும் இன்டைக் கெண்டாப்போலதான் இருக்கும். என்ன செய்யலாம் அந்த அல்லாடவேலை. கட்டின முதல் புருஷனோட காலமெல்லாம் கழிச்சுப் போடலாம் எண்டுதான் எண்ணியிருந்தன். அது தானே நல்ல சிறப்பு ஆனா அதெல்லாம் புள்ள வாழனும் எண்டா உம்மா வாப்பா ஒதுங்கிப் போயிடனும், தலையிடப் போடா. கொடுக்கிறதையும் கையோட கொடுத்திடனும், புருஷன் பொஞ்சாதியை ஏசுவான், அடிப்பான். என்னவெண்டாலும் செய்வான். அவனுக்கு கொடுக்கிறதக் கொடுத்திட்டு, எங்கயாச்சும் அக்கரையிலயாவது போய் குடில கிடில வைச்சுக்கிட்டு போயிடனும். அப்படியெண்டாத்தான் சலாமத்து. இந்தக் காலத்து மனுஷனுக்கு மனுஷன் தேவையில்ல; பணந்தான் வேணும்.

வாப்பாவும் அப்படித்தான். அவரும் சும்மா இருக்கிறதில்ல: ஒரே புறு புறு வெண்டு . யாருதான் பொறுப்பா.

அப்துஸ்ஸலாம் மச்சான் எண்டா நல்ல அழகு. என்னப் போலத்தான் சந்தன நிறமான வெள்ள. அவரைக் கல்யாணம் முடிக்கிறதுக்கு மூணு மாத்தைக்கு முந்தித்தான் நான் சாமத்தியப்பட்டது. அவரைக் கல்யாணம் பண்ணி அவரும் ஒரு வருஷத்துக்கு மேலே இருந்தாரு. மூணு மாத்தயால ஒரு கட்டி விழுந்து போச்சு. அதுக்கப்புறம் ஒண்டும் தரிக்கல்ல. மச்சான்தான் போயிட்டாரே.

மூணுமாத்தயால கட்டி விழுகுறத்துக்கு முன்ன எனக்கு ஒரு பிள்ள பெறப் போகுதெண்டு எவ்வளவு ஆசையாகத் தான் இருந்தது. பயமுந்தான். என்ன செய்யலாம் ஆண்டவன் 'கல்பி' க்கலயாக்கும்!

அப்துஸ்ஸலாம் மச்சான் எனக்கு கொஞ்சம் தூரத்து உறவுதான். வாழைச்சேனை கடதாசி பெக்டரியில கூலி வேலை செய்யிறவரு . மாதா மாதம் இல்லையெண்டு போனா நூத்திச் சொச்சம் ரூபா கொண்டருவாரு. அவருக்கு கஞ்சாக் குடிக்க இருபத்தைஞ்சு ரூபாவுக்கு மேலே போயிடும், ஏதோ 'கோபிறட்டி' யெண்டு சாமான் எடுத்து வருவாரு. அங்க மாதம் முப்பத்தைஞ்சு ரூபாய் எடுத்துக்கு வானுகள். இங்கேயும் சாலிச் சாச்சாட கடையில நாப்பது, ஐம்பது வரும். மிச்சம் ஒண்டுமில்ல. என்னவோ, 'ஓவடைம்' வேலை எண்டு சொல்லுவாரு. அதையிதைச் செய்தா மாதம் அஞ்சோ, பத்தோ மிஞ்சும். அதுக்குள்ள அறுதாலியாக இருக்கிற அவங்க உம்மாவுக்கும் என்னவும் குடுக்கணும்.

எங்க வாப்பா மீன் பிடிக்கப் போவாரு. ஒரு சின்னத் தோணியிருக்கு. காலையில சுபஹு தொழுதிட்டு வலையெடுத்துக் கொண்டு போனாரெண்டா பன்னிரண்டு மணிக்கிடையில வந்திடுவாரு. நாலஞ்சுரூவா கிடைக்கும். அதுக்குள்ளால அவங்கட கனாயத்துப்போகும். வாப்பாவுக்கு துணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமில்லை. எல்லாரும் அஞ்சு பொம்புளயளாய் பெத்துப் போட்டாரு. ஆசைக்கு ஒரு ஆம்புளப் புள்ளயுமில்ல. எனக்கு மூத்தவங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் முடிஞ்சிட்டு. அவங்களுக்கு வீடுமில்ல வளவுமில்ல. மூத்ததாத்தா குளனிக்குள்ள வளவெடுத்துக் கிட்டு ஒதுங்கிட்டா. வாப்பாக்கிட்ட வீடு வளவு கேட்டுச் சண்டை பிடிச்சுப் பாத்தா. வாப்பா தாறன் தாறன் எண்டு ஏமாத்திப் போட்டாரு. மூத்த மச்சான் நல்ல மனுஷன். அவரு ஒண்டும் பேசுறதில்ல. தாத்தாதான் வந்து சண்டை பிடிப்பா. இளைய மச்சான் திருக்குணாமலையில் என்னவோ வேலையாம்: அதனால் கல்யாணம் முடிச்சு மூணு மாசத்தால தாத்தாவ கொண்டு போயிட்டாரு. எப்பவெண்டாலும் நினைப்பு வந்தா வந்துட்டுப் போவாங்க.இந்தக் காலத்தில் போறவாற செலவைக் கணக்குப் பாத்தா ஒரு குமரக் கல்யாணம் பண்ணிப்போடலாம் எண்டு வாப்பாதான் சொல்லுவாரு. மூத்ததாத்தாவுக்கு இரண்டு பிள்ளையளும், இளையவுக்கு ஒண்டுமில்ல.

ஒரு வீட்டையும் வைச்சுக்கிட்டு இரண்டு பேரையும் கட்டிக் கொடுத்திட்டாரு வாப்பா. என்னையும் அப்படித்தான் செய்தாரு. ஆனா அப்துஸ்ஸலாம் மச்சான் வீடு வளவு வேணுமெண்டும், உம்மா, வாப்பா பிள்ளையள் எல்லாரும் எங்காச்சும் போகணும் எண்டும் ஒரு நாள் சொல்லிப் போட்டாரு. இதனால எனக்கு அடி. அவங்க என்ன செய்வாங்க, ஒண்டும் பேசல்ல. எனக்கு அடிச்சா வாப்பா புறு புறுப்பாரு. வேறு ஒண்டும் செய்ய முடியா அவராலே. ஒரு நாள் அவர் எனக்கு நல்லா அடிச்சுப் போட்டு மச்சான் அவர்ர சாமான்களைத் தூக்கிக் கொண்டு போயிட்டாரு, நானும் வாறனெண்டு குளறினன். "வீடுவளவு வாங்கிக்கிட்டு வா" எண்டு ஒரேயடியாகச் சொல்லிப் போட்டு போயிட்டாரு.

அதுக்குப் பிறகு நானும் உம்மாவும், உறவாகலாம் எண்டு அவங்க வீட்டபோனம். "இனிமே வரமாட்டன் " எண்டு ஒரேயடியாச் சொல்லிட்டாரு. அதுக்குப் புறகு வரல்ல. வாப்பாவும், "பிறகு வீடு வளவு தாறன் வாங்க" எண்டு சொன்னாரு. எனக்கு இந்த ஊட்டத் தந்தா அவங் எங்கால போற? இன்னும் இரண்டு குமருகள்...

மூணு, நாலு மாசமா மச்சான் வரல்ல அவருக்கு எங்கேயோ 'தொடுப்பாம்'. ஒரு நாள் வாப்பா கொடுத்த மோதிரமும், காசு இருபத்தைஞ்சு ரூபாவும், மகராம். அவங்க பெத்தா கொண்டு வந்தா. எனக்கு சரியான கோவம்: வெப்புசாரமுந்தான். "அவருட்ட கொடுத்திடுங்க" எண்டு சொல்லிப் போட்டன். அவ உம்மாக்கிட்ட போய் கொடுத்திட்டுப் போயிட்டா. எனக்கு அண்டு இரா முழுக்க நித்திர இல்ல. குளறிக் குளறி கண்ணில தண்ணியும் வத்திப் போச்சு.

புறகு கல்யாணம் முடிஞ்சுதாம் எண்டு கேள்விப்பட்டன். என்ன செய்யலாம் நம்மட தலையெழுத்து இப்படியாக்கும் எண்டு இருந்திட்டன். எனக்கெண்டா அவரு போனதுக்குப் புறகு ஒண்டு செய்ய மனமில்ல. உம்மா சொல்லுவா சரியான 'இட்டுமகாரி' யெண்டு. எனக்கு ஒண்டுக்கும் மனத்துக்கு ராகத்து இல்லய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பாவும் ஓடியாடித் திரிந்தாரு. எப்படியெண்டாலும் வேறுயார்ர கையிலயாவது ஒப்படச்சுப் போடனும் எண்டு துடிச்சாரு. கடைசியில யாரோ இரண்டு பொஞ்சாதிமாரப் பறி கொடுத்தவராம். நாலு பிள்ளையள் இருக்காம். என்னக் கல்யாணம் பண்ணிக்கிறேன் எண்டும், வீடுவளவு தேவையில்லை எண்டும் சொல்லிப் போட்டாராம். எங்கட ஊர்தான் அவரு. ஆள நல்லாத் தெரியாது. சின்னப் புள்ளையாக இருக்கக்குள கண்டிருப்பன். என்ன மனசோ இந்த ஆம்புளயளுக்கு, பொஞ்சாதி மவுத்தாகி இரண்டு மாசமும் போயிருக்காதாம். மத்தக் கல்யாணத்துக்கு விசளம் அனுப்புறாரு. அவருக்கு சோறு கறியாக்கத்தான் கல்யாணமாம்... வாப்பாவுக்கு நல்ல விருப்பம். உம்மாவும் ஓமெண்டு சொல்லிப் போட்டா... இப்ப எனக்குக் கல்யாணம்!

ஒரு மாதிரியாக குளிப்பாட்டு போட்டுதுகள். இவளுகள் படுத்தினபாடு: உம்மா!எனக்கு ஒண்டும் சுரணயில்ல எனக்குத்தான் நெனப்பெல்லாம் எங்கேயோ போயிட்டுதே. குளிரும் தெரியல்ல.

அவருதான் வாங்கி அனுப்பினதாம் புதுப்புடவை. நல்லாத்தான் இருக்கு. உடுக்கிறன். ஆண்டவனே! உம்மா வாறா. ஆயிஷா மாமி வாறா.

"ஊட்டுக்குள்ள கூட்டிக்கிட்டுப் போங்க" எண்டு மாமி சொல்றா. நான் நடக்கிறன். சல்மா பின்னால கைய வைச்சிருக்கா.

"வலது கால முன்னுக்கு வைச்சு ஊட்டுக்க நடந்துபோ புள்ள. இந்த வாழ்க்கையாவது ஆண்டவன் சிறப்பாக்கட்டும்." மாமி சொல்றா. "அல்லாவே!" நானும் மனத்துக்க நெனக்கிறன். வீட்டுக்குள்ள ஆயிஷா மாமிட வீட்டில கிடந்த கட்டில் வந்து கிடக்கு. கட்டில்ல பாயும் வெள்ளையும் விரிச்சுக் கிடக்கு. புதுத் தலவாணி. நான் கட்டில்கால் பக்கம் போய் நிக்கிறன். மாமி போன கல்யாணத்துக்கும் இந்தக் கட்டிலத்தான் தந்தா. அவ நல்லவ. புள்ளையளும் இல்ல. வாப்பாட தங்கச்சிதான். அவட புருஷனாரும் தங்கமான மனுஷன்தான்.

'லாயிலாஹ இல்லல்லாஹ்!' றோட்டில மாப்பிள்ள கூட்டியாற சத்தம் கேட்குது. அவரு எப்படி இருப்பாரோ, நெஞ்சு படக்கு படக்குணுது!

அந்தா... ஊட்டுக்குள்ள கூட்டியாறாங்க. அவரு கட்டில்ல வந்து இருக்காரு. எனக்குப் பார்க்க வெக்கமாய் இருக்கு.

"புள்ள இங்கால வாம்மா" மாமி கூப்பிடறா, கூப்பிட்டவ என்ன முன்னுக்கு இழுத்து விடறா. வாப்பா வாறாரு. 'அவரு' தாலிய கட்டுறாராக்கும் வாப்பா போயிட்டாரு என் கழுத்தில வெள்ளி மணிக் கோவையொண்டு மின்னுது. எல்லாம் முடிஞ்சு. எனக்கு கிட்டப் போகவும் வெக்கமாயிருக்கு.

அவரக் கடக்கண்ணால பாக்கிறன். தொப்பியக் கழற்றி கட்டில்ல வைக்கிறாரு. அட அல்லாஹ்! இந்த மனுஷனுக்கு தலையெல்லாம் நரைச்சுப் போச்சு. எனக்கு கண்ணால தண்ணி வருகுது, வந்து வாய்க்குள்ள போயிட்டு போல, உப்புக்கரிக்குது!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்கள்

"மாமா"

''யாரு'' என்று கேட்டுக் கொண்டே குரல் வந்த திசையை நோக்கினார் முஸ்தபா ஹாஜியார், எதிரே அவருடைய வயலில் வேலை செய்யும் முல்லைக்கார சின்னவன் நின்று கொண்டிருந்தான். அதிகாலையிலேயே அவன் அங்கு வருவான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. கிணற்றடியில் நின்று முகம் அலம்பிக் கொண்டிருந்த அவர் வாளியை ஒரு கையால் பிடித்துக்கொண்டே அவனைப் பார்த்துக் கேட்டார்.

''என்ன நீ வயலுக்க போகலியா? இரவு அங்க ஆரு. குத்து வெட்டுக்காலம். இப்படி விட்டுவிட்டு வரலாமா?''

அவருடைய கேள்வி அம்பு அவனை ஒரு கணம் திகைக்க வைத்தது.

''இல்ல மாமா, வயலுக்க எண்ட மூத்த மகன் நிண்டு வேலை செய்யுறான். எண்ட கைப்பிள்ளைக்குச் சுகமில்லையெண்டு விசளம் வந்தது, அதனால்தான் வந்தனான்...''

''ம்ஹ்...' என அனுங்கிக்கொண்ட ஹாஜியார், தோளில் கிடந்த சால்வையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டே திண்ணையை நோக்கி நடந்தார். சின்னவனும் அவருக்குப் பின்னால் தொடர்ந்தான்.

''இப்ப என்ன நீ வந்த?'' என்ற கேள்வியைக் கேட்ட முஸ்தபா ஹாஜியார் பாயில் உட்கார்ந்தார். அவருடைய மனைவி காலைத் தேனீரைக் கொண்டுவந்து வைத்தாள்.

''எண்ட பிள்ளைக்கு கடுமையான வருத்தம் மாமா, டாக்குத்தரிட்ட கொண்டுபோய்க் காட்டினம். மருந்து வாங்கிக் கொடுக்கச் சொல்லி ஒரு துண்டு எழுதித்தந்தாரு. அந்த மருந்துக் கடயில இருக்காம். ஒரு போத்தல் பத்துரூவாக்குக் கிட்டவருமாம். அதுக்கு எனக்கிட்ட காசியில்ல. அதனால்தான் விடிஞ்செழும்புன முகத்தோட ஓடிவந்தன். ஒரு பத்துரூவாத் தந்தீங்க எண்டா, கிழமைக் காசில கழிச்சிக்கலாம்.'' என்று சொல்லிவிட்டு திண்ணை ஓரத்தில் குந்தினான் சின்னவன்.

''என்ன காசா கேட்கிறாய்? எனக்கிட்ட இப்ப ஒரு சதமுமில்லையடா தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேத்து ராவுதான் எண்ட மச்சினன் நூரு ரூபா இருந்து வாங்கிட்டுப் போயிட்டான். நேத்து வயலுக்க வந்த எனக்கிட்ட சொல்லாமப் போயிட்டிய'' என அங்கலாய்த்தார் ஹாஜியார்.

''இப்படியெண்டு எனக்கென்ன மாமா தெரியும், ராவு ம.'.றிபுக்குத்தான் எண்ட மூத்த மகன் விசளம் கொண்டு ஓடிவந்தான்.''

ஹாஜியாரின் மனைவி சின்னவனுக்கும் தேனீர் கொண்டுவந்து கொடுத்தாள்.

''ஒண்ட கைப்பிள்ளைக்கா தம்பி சுகமில்ல'' என்று விசாரித்தாள். ''ஓம் மாமி, ஆறுமாதமா ஓயாத வயிற்றாலடி. நேத்தெல்லாம் ஒரம்'' என்று சொல்லிவிட்டு தேனீரைக் குடித்தான்.

''இப்ப என்ன செய்யிற'' என்று தலையைச் சொறிந்துகொண்ட ஹாஜியார், ''தம்பி கொஞ்சம் போய் அந்த மாடுகளுக்கு வைக்கல் கொஞ்சம் போட்டிட்டு வாவன். நான் மாமிக்கிட்ட கேட்டுப் பார்க்கிறன். இராத்தி முழுக்க தண்ணியுமில்லாம கிடக்குதுகள். கொஞ்சம் தண்ணியும் கொடு தம்பி.''

சின்னவன் மாட்டுத் தொழுவத்தை நோக்கி நடந்தான்.

முஸ்தபா ஹாஜியார் தன் மொட்டைத் தலையைத் தடவி பார்த்துவிட்டு, தொந்தி வயிற்றை சொறிந்துவிட்டார். தேனீர் குடித்த கையோடு காலை உணவும் வந்து சேர்ந்தது. 'தண்ணிச் சோறும், பழங்கறியும் அவருக்குப் பரம திருப்தி.' ஹாஜியார் சாப்பிடலானார். சின்னவனுக்கு என்ன மறுமொழி கொடுப்பது என்று அவருடைய மூளை சுழன்றது.

''இந்தா இங்கால வாவன்'' என்று தன் மனைவியை அழைத்தார் அவர். ''என்ன?'' என்று கேட்டுக்கொண்டே வாசல்படி அருகில் வந்துநின்றாள் அவரின் மனைவி.

''ஒண்டுமில்ல. இவன் சின்னவன் வந்து காசி கேட்கிறான். உனக்கிட்ட இல்லயா ஒரு பத்துரூவா.''

'' நீங்கஅள்ளித் தந்த பணம், நான் பேங்கிலகட்டிவச்சிருக்கன்'' என்று கடுகடுத்தாள் அவள். ''போடி பைத்தியகாரி, காசி கேட்டா பேங்கில கட்டி வச்சிருக்கன் என்கிறியே. பேங்கில கட்டாம சும்மாவா வைச்சிருப்பாங்க... ஓ மறந்து போச்சு எனக்கு சங்கத்தில இண்டைக்கு பத்து மணிக்கு காசி தாறன் எண்டு சொன்னவனுகள், அங்கபோய் பாத்திட்டுத்தான் வரணும் ' என்று சொல்லிக்கொண்டு வேகமாக அள்ளி உண்டார் உணவை. அவர் மனைவி திரும்பி வந்தாள்.

''இந்தாங்க'' என்று நீட்டினாள் ஒரு பத்து ரூபா நோட்டை.

''என்ன இது?'' என அண்ணார்ந்தார் ஹாஜியார்.

''காசி''

''காசி இல்லயெண்டு சொன்னிய.''

''என்ன செய்யிற நான் சேத்து வைச்சிருந்த காசி. அவனக் கூப்பிட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங்க.''

''இங்க தா, நான் சங்கத்துக்குப் போயிட்டு வாறன். வந்து குடுப்பம்'' காசை வாங்கி மடித்து வைத்துக்கொண்டார் அவர். சின்னவன் வேலை முடிந்து திரும்பிவந்து கொண்டிருந்தான்.

''சின்னவன் தம்பிக்குத் தண்ணிச் சோறு இருந்தாக் கொடன். திண்டுட்டு கொஞ்சம் கொள்ளி கொத்தித் தரட்டும். அதுவரைக்கும் நான் சங்கத்தடிக்குப் போயிட்டு வந்திருவன். காசி தாறனெண்டு சொன்னானுகள். எடுத்துக் கொடுத்திடலாம்'' என்று தன் மனைவியையும், சின்னவனையும் பார்த்துச் சொன்னார் ஹாஜியார்.

''என்ன தம்பி சோறுவைக்கட்டா'' என்று எழுந்தாள் ஹாஜியாரின் மனைவி.

''என்னத்துக்கு மாமி'' என்று மறுத்தான் சின்னவன். ''சரி சரி காலத்தால ஒன்றும் தின்னாம வந்திருப்பாய், சோத்த வாங்கித் தின்னு. மாமி சோறு போடுறதுக்கு இடயில, அட்டாளப் பக்கம் போய் கொஞ்சம் கூட்டிப் போட்டுவா தம்பி, சரியான குப்பையாகக் கிடக்கு.'' என்றார் ஹாஜியார். சின்னவன் எழுந்து சென்று அட்டாளைப் பக்கம் துப்பரவு செய்தான். குப்பை கணக்கில்லாமல் அடைந்து கிடந்தது. அவற்றை எடுத்துப் புரட்டி வெளியே எடுத்தான். ஏதோ சரசரவென்று வேலிக்கடியில் ஓடுவது தெரிந்தது. கூர்ந்து கவனித்தான். ஒரு பாம்பு! அவன் கண்களிலிருந்து அது தப்புமா? எவ்வளவு பாடுபட்டு கட்டி வைத்த பட்டறை. நாப்பது அவண நெல் அல்லவா அதனுள் இருக்கிறது.

பாம்பை அடித்த தடியிலேயே அதனைப் போட்டுகொண்டு உள்ளே வந்தான் சின்னவன்.

''மாமி இங்க பாருங்கவன் நம்மட அட்டாளைக்குள ஒரு புடையன்'' என்று ஹாஜியாரிடம் காட்டினான்.

''என்ன?'' என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தாள் ஹாஜியாரின் மனைவி.

''புடையன் பாம்பு மாமி, நம்மட அட்டாளைக்கு கீழ கிடந்த குப்பைக்குள்ள சுருண்டு கிடந்தது. நான் கண்டு அடிச்சுப் போட்டன். இல்லாட்டி எண்டா...'' என்று ஏதோ சொல்ல முனைந்தான் அவன்.

''இல்லாட்டி எண்டா என்ன?'' பரபரத்தாள் ஹாஜியாரின் மனைவி.

''இல்லாட்டி எண்டாஎன்ன, கடிச்சியிருக்கும். தம்பி சின்னவன், அதைக் கொண்டு போய் புறவளவுக்குள்ள புதைச்சுப் போட்டுவா'' என்றார் ஹாஜியார். சின்னவன் பாம்புடன் திரும்பினான்.

''இந்தா அவனுக்குச் சோத்தக் கொடுத்துட்டு கொள்ளியக் கொத்தி எடு. நான் சங்கத்துக்குப் போயிட்டு இங்கால, அவன் ஆறிப்போடியையும் போய்ப் பார்த்திட்டு வாறன். மூனு வருஷமாய்ப் போயிட்டுது. அவனும் ஒண்டும் கவனிக்கிறானில்ல. ஐஞ்சவண நெல்லுக் கொடுத்தது. என்ன வழக்குக் கிழக்குத்தான் போடனுமோ? நம்மட கையால போற ஒண்டும் திரும்புதில்ல. நம்மட காலம். ம்ஹ்.. இந்தா அந்தச் சால்வையை எடு' என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார் அவர். அவள் கொடியில் கிடந்த, மக்கத்து வெள்ளைச் சால்வையை எடுத்துக் கொடுத்தாள். சின்னவன் பாம்பைப் புதைத்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகால் கழுவிக்கொண்டு வந்தான். ''தம்பி சின்னவன் மாமிக்கிட்ட சோத்த வாங்கித் திண்டுட்டு கொஞ்சம் கொள்ளி கொத்திக் கொடு, நான் இந்தா வந்திட்டன்'' என்று கூறிவிட்டு நடையைக் கட்டினார் ஹாஜியார்.

''தம்பி இங்கால வா சோறுதாறன்'' என்று அழைத்தாள் ஹாஜியாரின் மனைவி.

சின்னவன் எழுந்து சென்றான். அவனுக்காகப் பழஞ் சோறு காத்திருந்தது. நன்றாக ஒரு 'பிடி' பிடித்தான். வயிற்றை நிறை செய்த மாமிக்கு கொள்ளி கொத்திக் கொடுப்பது அவனுக்கு அவ்வளவு பெரிய வேலையில்லை!

''மாமி கோடாலி எங்க!' என்று கேட்டான் ஈரம் படிந்திருந்த தன் கையைத் துடைத்துக் கொண்டே.

''அந்தப் பக்கத்தால பார் தம்பி, சுவர் ஓரத்தில சாத்தி வச்சிருக்கன்'' என்றாள் அவள்.

சின்னவன் போய்ப் பார்த்து எடுத்து வந்தான்.

உழைப்பின் இரகசியம் எங்கே தேங்கிக் கிடக்கிறது? அவனுடைய முறுக்கேறிய தசைத் திரட்சியிலேதான். விம்மும் தோள்கள்; பூரிக்கும் நெஞ்சு. விறகு குவியலாக உருவாகிவிட்டது. செத்து மடிந்து போன நியாயம் கொத்திக் களைத்த உடலிலிருந்து வியர்வையாகப் பீறிட்டுக் கொண்டிருந்தது.

அவன் நெற்றியில் முத்துக்கள் துளிர்த்தது: உடம்பு வெள்ளத்தில் கழுவப்பட்டது.

பத்தாண்டுகளாகச் சின்னவன் முஸ்தபா ஹாஜியாரிடத்தில் தான் வேலை பார்த்து வருகிறான். அவனுடைய தன்னலமற்ற சலியா உழைப்புத்தான், முஸ்தபாவை, ஹாஜியார் என்ற பட்டத்துக்கு உயர்த்தி வைத்திருக்கிறது.

பத்தாண்டுகளுக்குள் நான்கு குழந்தைகள் அவன் வாரிசாகி விட்டனர்? மூத்தவன் பத்து வயசுப் பாலகன்; அவன் தான் வயல் காவலும், வேலையாளும். பரம்பரை பரம்பரையாக உழைத்து உழைத்து உன்மத்தம் பிடித்துவிட்ட உடம்புகள், இளைய குழந்தை ஒன்றரை வயசு. பிறந்து... வளர்ந்து இறவா நோயும் உடம்புமாய்...

சின்னவன் நீண்ட நேரமாய் விறகுக் கட்டைகளைக் கொத்திப் பிளந்துகொண்டிருந்தான். என்றுமில்லாதவாறு அவன் உள்ளத்தில் வேகம் குடிகொண்டது. உயிருக்காகப் போராடும் கைக் குழந்தையின் நினைவு, ஹாஜியாரின் ஏமாற்று, எல்லாம் அவன் நெஞ்சை சற்று உசுப்பித்தான் விட்டன.

ஒரு முறை அவன் கொத்திய கொத்தொன்று விறகுக் கட்டையை வீசி அடித்தது., வேறு எங்குமில்லை: அவனுடைய காலில் தான்! கால் பெருவிரலில் இருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாமி'' என்று முணுமுணுத்தவாறு உட்கார்ந்தான் அவன்.

அவனுடைய இலேசான குரல் ஹாஜியாரின் மனைவியின் காதில் விழுந்திருக்க வேண்டும். ''என்ன தம்பி என்ன? '' என்று பதறிக்கொண்டு ஓடிவந்தாள்.

''ஒண்டுமில்ல மாமி, கால்ல கொள்ளிச் சிராய் ஏறிற்று'' என்றான் அவன்.

''இவ்வளவு நேரமும் கொள்ளி கொத்தணுமா, இந்தக் கும்பம் காணாத எனக்கு. என்னமா ரெத்தம் ஓடுது? '' என்று கூறிய அவள் தன் சேலைத் தலைப்பைக் கிழித்து இரத்தத்தை தடைபோட்டாள். ஏறியிருந்த சிராய்த் துண்டை இழுத்துவிட்டபோது பீறிட்ட இரத்தத்தைக் கண்ட ஹாஜியாரின் மனைவிக்கு மயக்கம் வருவதுபோல் இருந்தது.

''என்ன நடந்தது?'' என்று கேட்டுக்கொண்டே அப்போதுதான் முஸ்தபா ஹாஜியாரும் வந்து சேர்ந்தார்.

''ஒண்டுமில்ல மாமா, சின்னக் காயமொண்டு'' என்று என்று கூறிய சின்னவன் மெல்ல எழுந்து நிற்க முயன்றான்.

''வேற ஒண்டு மில்லய... இந்தா பத்துரூவா, மருந்து வாங்கிக் கொடுத்திட்டு வயலுக்குப் போ, நான் பின்னேரம் வாறன். வீட்ட போய் நின்றிடாத, பண்டிகள் போய் அழிச்சுப் போடும்'' என்றார் ஹாஜியார். செவ்விரத்தம் தோய்ந்த விரல்களிடையே பச்சை நோட்டு மாறிற்று. அவன் காசை வாங்கி மடித்துக்கொண்டே நிமிர்ந்தான். தூரத்தில் அவனுடைய இளைய மகன் ஓடிவருவது தெரிந்தது.

''என்ன மகன் என்ன? '' எனப் பரபரப்போடு வினவினான். அவன் நெஞ்சுக்குள் ஏதோ அடைத்தது.

''வாப்பா... வாப்பா, நம்மட சின்னத் தங்கச்சி மௌத்தாப் போயிட்டாம், உங்களக் கையோட உம்மா கூட்டிவரச் சென்னா'' என்று அவன் இளைத்து இளைத்துச் சொன்னான்.

''என்ன அட அல்லாஹ்!'' என்று அதிர்ந்த சின்னவன், காலில் பட்ட காயத்தையும் மறந்து ஓடினான். அவன் கையிலிருந்த பணம் பறந்ததோ? பின்னால் ஓடிச் சென்ற சிறுவன் எடுத்துக்கொண்டான்.

''அட, அல்லாஹ், எல்லாம் இந்த ஏழைகள் தலையிலதானா விடியனும் என்று அங்கலாய்த்தாள் ஹாஜியாரின் மனைவி. ஹாஜியாரின் தலையில் விடியக் கூடாதா என்று எண்ணமோ?

''அதெல்லாம் சரி, இவண்ட புள்ளையும் மௌத்தாப் போயிட்டு, வயலுக்க இந்த நாள்ல போகமாட்டான். அங்க சின்னப் பொடியன். அவன் என்ன செய்வான். நான் போறன், அந்தக் குட்டான் பெட்டிய எடு'' என்று நின்றார் ஹாஜியார். ஹாஜியாரின் மனைவிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அவளுடைய கண்களுக் கெதிரே கண்ணாம் பூச்சி விளையாடியது. பச்சை... சிவப்பு... சிவப்பு... பச்சை... இரத்தம்.

*19680412*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறழ்வு

அன்று வெள்ளிக் கிழமை.

ஜும்ஆத் தொழுகைக்குப் பிறகு, புதிதாகப் பட்டம் பெற்றுவந்த அப்துல் காதர் ஹாஜியாரின் மகன் ஆலிம் ஹதீது சொல்வதாக ஏற்பாடு. ஹாஜியாரின் வீட்டில் பெரிய வயிற்று மனிதர்களுக்கு விருந்துக் காக 'கிடாய்'கள் வெட்டப்பட்டன என்பது வேறுவிஷயம்.

புதிய ஆலிமின் கன்னிப் பேச்சைக் கேட்க குழுமியிருந்தவர்களுள் அப்துஸ்ஸமதும் ஒருவன். அவன், பேச்சைக் கேட்டதோடு, மனவேக்காட்டையும் கட்டிக் கொண்டான் என்பதுதான் உண்மை.

''நிச்சயமாக எதீம்களின் சொத்துக்களை அநியாயமாகத் தின்றால், அது அவர்களுக்கு நெருப்பாகவே இருக்கும். கண்டிப்பாக ஸஈர் என்ற கொடிய நெருப்பில் பிரவேசிப்பார்கள்'' *(4 : 10)*

''நீங்கள் அனாதைகளைக் கண்ணியம் செய்வதுமில்லை, ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டுவதுமில்லை. (பிறருக்குச் சேரவேண்டிய) பிதிரார்ஜிதப் பொருளை ஒரேயடியாகப் புசித்து விடுகிறீர்கள்!'' *(89:17,18)* என்ற அல்லாஹ்வின் அருள் மறைக்கு ஆலிம் கொடுத்த விளக்கமும், அவருடைய உருக்கமான பேச்சும் அனைவரது உள்ளத்தையும் கரைப்பதாக விருந்தது. அப்துஸ் ஸமதும் அந்தப் பிரசங்க மாரியில் இலயித்திருந்தான். ஹதீது முடிந்ததும் இலயிப்பு வேதனையாகவும் ரோஷத்தைக் கிளப்புவதாகவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்தது.

அவன் பள்ளிவாசலை விட்டு வெளியேறினான்.

"நமக்கென்ன தம்பி, இண்டைக்கே போவமே. அவன் வளவை விட்டு எழும்ப மாட்டான் என்று நீங்க எண்ணுனீங்க எண்டா நான் பொலிசுக்காரன் ஒருவனக் கையோட கூட்டியாறன்."

சிந்தனை வயப்பட்டவனாக கூட்டத்தோடு சென்று கொண்டிருந்த அப்துஸ்ஸமதின் செவிகளில் இந்த வார்த்தைகள் விழுந்து அவனைத் திடுக்கிட வைத்தன. நடுப்பள்ளிக்குள் வைத்து அப்துல் காதர் ஹாஜியார்தான் யாரோடோ பேசிக் கொண்டிருந்தார். "ஓம் ஓம் நீங்க கூட்டியாங்க போவம்" என்று மறுமொழி வந்த திக்கையும் அவன் நோக்கினான். ஹாஜியாரின் மகனை மாப்பிள்ளையாக வரிந்து கொள்ளத் துடியாய்த் துடிக்கும் உமறுப் போடியார் நின்று கொண்டிருந்தார்.

அப்துஸ் ஸமதின் நெஞ்சு பகீரென்று எரிந்தது. உள்ளே ஏதோ கொதித்துக் கொண்டிருந்தது. அவன் வேகமாக நடந்தான்.

பேச்சு தன்னைப் பற்றித்தான் என்பது அவனுக்குத் தெரியும். எப்போதோ அவன் மூத்தமகள் சொல்லிய வார்த்தைகளுக்கு அவன் கூறிய ஆக்ரோஷமான மறுமொழியும் அவன் நினைவில் நிழலாட்டம் போட்டது.

"இந்த அடப்புக்குள்ள அடியெடுத்து வைக்கிற எவனெண்டாலும் அவண்டகால வெட்டிப் போடுவன், வரட்டும்" என்று பக்கத்தில் கிடந்த வெட்டுக் கத்தியை கையில் ஏந்திக் கொண்டு கொக்கரித்தான் அவன்.

"வாப்பா நம்மட ஊடுவளவ, அப்துல் காதர் ஹாஜியார் அவர்ர சம்மந்தனுக்கு விற்றுப் போட்டாராம். அவரு நம்மள எழுப்பிப்போடு வாராம்" என்று அவன் மகள் சொன்ன போதுதான் இப்படிக் கொதித்தான் அவன்.

அப்போது அவனிடத்தில் இருந்த ஒரேயொரு சொத்து -

ரோஷம் ஒன்றுதான்!

நமது அப்துஸ் ஸமது ஏழை என்பதை எழுதிக்காட்டத் தேவையில்லை. அவன் பிறந்ததே வயல் காட்டில்தான். அவனுக்கு அவன் பெற்றார் விட்டுச் சென்ற பிதிரார்ஜிதமும் கூளாவடி வட்டைக்காணி நான்கு ஏக்கர் வானம் பார்த்த பூமி ஒன்றுதான்.

கல்யாணம் என்று அவன் கட்டிக் கொண்ட பாத்தும்மா இரண்டற மண்வீடும், பத்துப்பாக நீளம், எட்டுப் பாக அகலம் கொண்ட வெம்பு மணல் பூமியோடுந்தான். சீதனமாக வந்து, கல்யாண வயசை எட்டிப் பிடித்து, தாண்டியும் விட்ட இரு குமருகளை 'பிச்ச' எடுத்து வளர்த்து வைத்திருக்கிறாள். "அல்லாடபிச்சை, பிச்செடுத்துப் பிறந்ததுகள்" என்றுதான் அவள் அடிக்கடி சொல்வாள்.

அப்துஸ்ஸமது தன் காணியில் வேளாண்மை செய்வது, எந்த மாரி வந்தாலும் சரி, கோடை வந்தாலும் சரிதான். அதனால் அவன் சீதனச் சொத்து அப்துல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதர் ஹாஜியாரிடம் 'கிரயமாக' அடங்கிவிட்டது. ஆயிரம் ரூபாய் கடன் பழுவில் அது ஆழ்ந்துவிட்டது. எல்லாருடனும் விதைத்து, எல்லாருமே நெல்மூட்டைகளை அறுவடைப் பயனாகக் கொண்டு செல்கையில் அவன் மட்டும் தன் வண்டில் மாடுகளுக்கு வைக்கோலை சேமித்து வைத்துக் கொள்வான். அந்த வைக்கோலையும் கிணற்று நீரையும் வயிறு நிறைய செருகிக் கொண்டால்தான் அந்த மாடுகள் அவன் வாழ்க்கை வண்டியை ஓட்டிச்செல்ல உதவும் என்பது அவன் படித்துக் கொண்ட பாடம்.

இந்த வருஷம் வேளாண்மை செய்வதில்லை என்றுதான் அவன் எண்ணியிருந்தான். ஏனெனில் அவனை நம்பிக் கடன் கொடுப்பார் இல்லை என்ற ஒரேயொரு காரணத்தால்தான். ஆனால் அவன் மனைவி ஒருநாள் சொன்ன வார்த்தைகள் அவனுக்குப் புதிய தெம்பை அளித்தன.

''குமருப் பிள்ளையள சும்மா இப்படியே வைச்சுக்கிட்டு இருக்க இயலாது. ஒண்டையாவது வாற வருஷத்து ஹஜ்ஜு மாதத்தில கட்டிக் கொடுக்க ஒழுங்கு செய்யணும். அந்த முறை ஹாஜியார்ர கடனத் தீர்த்துப் போட்டு - வீடுவளவ எழுதி எடுத்துப் போடனும்'' என்று அவள் கூறிய போது ''எல்லாத்துக்கும் காசிக்கு எங்க போற? '' என்று அவன் கேட்டான். ''வேளாண்மை செய்ய சங்கத்தில கடன் கொடுக்கானுகளாம், போய்ப் பாருங்க. கிடைச்சா இந்த முறை வேளாண்மை செய்து கிடைக்கிறத்த அவருக்கு கொடுத்துப் போட்டு, பாடுபட்டு சங்கத்து கடன அடைக்கலாம்'' என்று அவள் வற்புறுத்தவே, அவன் சங்கத்துக்குப் போனான்.

சங்கத்து நிர்வாகம் எத்தனையோ உறுதி மொழிகளைக் கேட்டுக் கொண்டு கடன் கொடுத்தது. ஒருவாறு வயலில் விளைவும் கண்டது.

நெல்லுச் சங்கத்துக் கடனைப் பிறகு கொடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் கிடைத்தவற்றை கடனுக்கும் நயத்துக்குமாக அவன் ஏற்றிக் கொண்டு வந்தான். ஆனால் விதி சட்டமென்ற கொடிய கரத்துடன் நீண்டு அவற்றைப் பற்றிக் கொண்டது. வெள்ளம் ஒருவாறு அணைபோடப்பட்டது.

''சங்கத்துக் கடனத் தீர்த்துப் போட்டுத்தான், மிச்சத்த கொண்டுபோக ஏலும்'' என்று வண்டிலை வழிமறித்தான் மனேஜர். சங்கத்துத் தலைவரான அப்துல் காதர் ஹாஜியாரும் அவன் உறுதியுரைகளை ஞாபகப்படுத்தினார்.

''ஹாஜியார் சொல்லி விட்டாரே நம்மட நிலம தெரியுந்தானே'' என்று நினைத்தான் அவன்.

''இந்த முறையாவது நீ எண்ட கடன இறுத்திருவாய் எண்டுதான் எண்ணியிருந்தன். சங்கத்திலயும் ஏறுமாறாக் கடன வாங்கிப் போட்டாய் என்ன செய்யலாம். எனக்கிட்டக் கேட்டிருந்தா தந்திருப்பன், ஆதாயத்தையாவது இந்த வருஷம் தந்திருக்கலாம். அடுத்த முறை முதல் இறுக்க வழியாயிருந்திருக்கும். இப்ப நான் என்ன செய்யிற? '' என்று ஹாஜியார் அவனிடம் கேட்டார். அவன் மௌனமாக இருந்தான்.

''நான் அதை விற்கப் போறன்''

''இல்ல ஹாஜியார் கொஞ்சம் பொறுங்க, அது எண்ட குமருகளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்து'' என்று கெஞ்சினான் அப்துஸ்ஸமது. அவரா கேட்பார்?

அப்துஸ் ஸமது வாசலில் குந்தியிருந்தான். அவன் செவியில் குறள் பீடி ஒன்று செருகியிருந்தது.

அப்துல் காதர் ஹாஜியார் தன் பணப் பரிவாரங்களோடு அவன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். தியாகப் பூமியின் கர்மவீரர்களான ஊர்க்கிராம சேவகரும், ஒரு பொலிஸ்காரரும் அவருக்கு முன்னால் வந்து கொண்டிருந்தார்கள். உமறுப் போடியார் எல்லோருக்கும் பின்னால் வந்து கொண்டிருந்தார்.

அப்துஸ் ஸமதின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது.

''ஹாஜியார் எண்ட குமருகளுட முகத்தக் கொஞ்சம் பாருங்க'' என்று கதறினான் அவன்.

''அது எனக்குத் தெரியா. நீ எனக்குக் கிரயம் எழுதித் தந்தவளவ நான் போடியாருக்கு விற்றுப் போட்டன். இப்ப அவருக்கு வளவு வேனுமாம். நீ எழும்பனும்'' என்று எந்தவித உணர்ச்சியுமின்றிக் கூறினார் ஹாஜியார்.

''நீங்க எங்காவது எழும்பிடனும். நான் இரண்டாயிரத்துக்கு வாங்கிப்போட்டன். உங்கட சாமான்கள எடுத்துக்கிட்டு நாளைக்குள்ள அப்புறப்படுங்க. நான் நாளைக்கு இந்த ஊட்டக் கொத்தச் சொல்லப் போறன். எண்ட புள்ளைக்கு இதுக்குள்ள வீடு கட்டணும்'' என்று ஒரு போடு போட்டார் உமறுப் போடியார்.

''அது முடியாது, நான் விடமாட்டன். அடப்புக்குள்ள அடியெடுத்து வைச்சா கால வெட்டிப் போடுவன்'' என்று ஆத்திரத்தோடு கத்தினான் அப்துஸ்ஸமது.

''ஏய் மரியாதையாகப் பேசு. நாங்க இருக்கிறது உனக்குத் தெரியலியா, ஹாஜியார் இப்பவே நீங்க இவன எழுப்பனும்திமிரு பிடிச்சவன்'' என்று சொன்னான் பொலிஸ்காரன். ஹாஜியாரின் போத்தல் அவன் வாயில் நாற்றமடித்தது.

வீடு அமர்க்களப்பட்டது. உள்ளே ஒப்பாரிக் குரல்கள் அதிர்ந்து வெடித்தன.

கர்ம வீரர்கள் கடமையைச் செய்ய வீட்டுக்குள் கிடந்த அவர்களின் பொருட்கள் வாசலில் வந்து விழுந்தன.

*19680531*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மீனும் பெரிய மீனும்

''பார்த்தாயா எங்க வாப்பா புது வள்ளமொண்டு கொண்டுவந்திருக்கார்.''

''எங்கேடா இருக்கு நான் காணல்லயே?''

''பங்களாத் துறையில் இழுத்துக் கிடக்கு, என்னோடு வந்தாக் காட்டுவேன்.''

''சரி, போவோம். அங்கே போனால் பழைய ஆஸ்பத்திரி மாமரத்திலே மாங்காயும் ஆயலாம்''

உரையாடலுக்குப் பின் சிறுவர்கள் இருவரும் அந்தச் சிற்றொழுங்கையால், தமது 'சைக்கள் டயர்' வண்டியை, போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள். ஒருவன் முந்திச் செல்ல, மற்றவன் ''இதோ பார்!'' என்று அவனை முந்தி ஒருசமயம் இருவரும் ஒரேகோட்டில் ஓட, 'டயர்கள்' மோதிக் கீழே விழ, திரும்பவும் பழையநிலைக்கு எடுத்துக் கொண்டு ஓடி பங்களாத்துறையை அடைந்தார்கள்.

''இதுதான் பார்த்தாயா, புத்தப்புதிசு'' என்றான் முன்னே வந்தவன்.

மற்றச்சிறுவன் வள்ளத்தைச் சுற்றிப் பார்த்தான். பெரிய மரமொன்றைத் துளைத்து வள்ளமாக தோண்டியிருக்கிறார்கள். அவனுடைய உயரத்துக்கு மேலே படுத்துக்கிடந்தது வள்ளம். எட்டிப்பார்க்க முடியவில்லை. விளிம்பிலே கரங்களை வைத்து, ஏறி உள்ளே குதித்து அணியம் புறவம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபக்கங்களுக்குமிடையில் உள்ளே மாறிமாறி ஓடிப்பார்த்தான்.

''அடே, நீயும் வாவேன்டா, உள்ளே எந்தப் பெரிசு'' என்று ஓடிக்கொண்டே கத்தினான். மற்றவன் சற்று உயரமானவன். சட்டென உள்ளே குதித்தான். இருவரும் அருகருகே வந்தார்கள்.

''எப்படி வள்ளம், இனி நானும் எங்க வாப்பாவோட மீன்பிடிக்கப் போவேன்'' என்றான்.

''உங்க வாப்பாவோடையா...? உங்க வாப்பா எங்கட 'போட்டி'ல அல்லவா போகிறார்? '' முகத்தில் விழுந்த கேள்விச் சுருக்கங்கள் ஆச்சரியமாக விழித்துக்கிடந்தன.

''உனக்குத் தெரியாதா? உங்கவாப்பா இனிமே உங்கட போட்டில ஏறக்கூடாதெண்டிட்டார், வாப்பா இனிமே உங்கட போட்டில கால் வைக்கமாட்டார். சொந்த வள்ளத்திலே நயமாகச் சம்பாதிச்சு கல்லூடு கட்டனுமாம். உங்கட வாப்பாவைவிட பணக்காரனாகனுமாம், பாத்துக்க...''

''ஏன்டா பாத்துக்க, எங்க வாப்பாவைப் போல ஒருநாளும் பணக்காரனாக முடியாது. எங்கட்ட, றக்டர் மெஷின், வள்ளம், போட்டெல்லாம் இருக்கு, பெரிய கல்வீடு எல்லாம்...''

''இருக்கட்டுமே, எனக் கொன்ன, நானும் வாப்பாவும் கடலுக்குப் போய் கொள்ளயாய்ச் சம்பாதிப்போம்''

''நீங்களா...?''

''என்ன நீங்களா, நாங்கள்தான்... எங்கள என்ன செய்வீங்க... உங்க வாப்பாவால எங்கள ஒண்டும் கிழிக்க ஏலா?''

''இந்தா வாப்பாவை இழுக்காத...''

''என்ன செய்வியாம்...''

''அடே...'' பாய்ந்த சிறுவன் மற்றவன் முகத்தில் குத்திவிட்டு வெளியே குதித்துக் கொண்டு ஓடினான். ''நில்றா... அடே!'' என்று தடவிக் கொண்டு மற்றவனும் பாய்ந்து ஓடினான். பழைய ஆஸ்பத்திரி வளவில் நின்றிருந்த மாமரங்களிலிருந்து மாங்காய் எறிந்து கொண்டிருந்த சிறுவர்கள் இவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஓட்டப்பந்தயம் உக்கிரமடைந்தது.

கிழக்கிலே பிரசித்தி பெற்ற சுவன பூமி பாஸிக்குடாவுக்கு ஒன்றரை மைல் வடக்கில் வங்காள விரிகுடாக் கடலில் சங்கமிக்கின்ற மாதுறு ஓயா, வாழைச்சேனையின் வட,மேற்கெல்லையாக வளைந்து செல்கிறது. அழகே உருகி வழிந்தோடும் அமைதி நிறைந்த ஆறு, கிராமத்தின் அமைப்புக்கு அழகு செய்கிறது. இந்த ஆற்றின் மருங்கில் ஒரு காலத்தில் போக்குவரத்துக்கு உபயோகமான தபால்துறை, இன்று பங்களாத்துறை என்ற பெயரில் இயங்குகிறது. கிழக்கிலே பிடிக்கும் அதிகமான மீன்வகைகள் இந்தத் துறையில் இருந்துதான் நாட்டின் பல பாகங்களுக்கும் செல்கின்றன. மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், வள்ளங்களிலும், டீசல் போட்டுகளிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணிகளிலும் அதிகாலையில் இத்துறைக்கு வந்து தமது உழைப்பின் ஊதியத்தை முதலாளிகளுக்கும், மூலதனக் காரர்களுக்கும் கொடுத்துவிட்டுச் செல்லும் காட்சி அற்புதமானது. இதை அனுபவிக்கப் பலர் கூடுகிறார்கள்.

பங்களாத் துறையில் புதுவள்ளம் கொண்டு வந்து கரையேற்றிவைக்கப்பட்டிருந்தது. கால ஓட்டத்தின் துரித கதியோடு, புதுவள்ளத்தின் வெள்ளோட்டத்துக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி பெற்றன. அரசாங்க உதவியிலிருந்து, புதிய எஞ்சின். சொற்ப தொகையைக் கட்டி, 'பிச்சைக்குட்டி' பெற்றுக் கொண்டான். நைலோன் வலைகளை ஒரு முதலாளி, தனக்கு மீன்தரவேண்டுமென்ற ஒப்பந்தத்தில் வாங்கிக் கொடுத்தார்.

பிச்சைக் குட்டியின் வள்ளம், வெள்ளிக் கிழமை பின்னேரம். ஜும்ஆவுக்குப் பிறகு பள்ளிவாயல் பிரதம கதீபின் துஆப் பிரார்த்தயைுடன் வெள்ளோட்டம் விடப்பட்டது. அன்று அவனுக்கு மனத்தில் ஒரே சந்தோஷம். தன் வாழ்க்கையில் ஏற்படப் போகும் மறுமலர்ச்சியை எண்ணி மகிழ்ந்தான். தன்னோடு கூடவே, தன்னைப் போல கஷ்டத்திற்குள்ளான ஒருவனைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு கடலுக்குப் போனான். அவர்களுடைய புதிய வள்ளத்தில் நிறைய மீன்கள் கிடைத்தன. காலையில் மீன்களை வலைவாங்கக் கடன் கொடுத்த முதலாளியின் ஆள்வந்து பெற்றுக் கொண்டு பற்றுச் சீட்டுக் கொடுத்தான். பற்றுச்சீட்டைப் பிச்சைக் குட்டி வாங்கிக் கொண்டே, எதிரே ஆற்றோரம் கட்டியிருந்த சீமெந்துக் கட்டில் குந்தியிருந்த, புதுப்பணக்காரரான அவனுடைய பழைய முதலாளி சாய்வுப்பிள்ளையை கர்வத்தோடு பார்த்தான். அவனுடைய பார்வையின் ஊடே அவரைத்தாக்க அவருடைய முகம் மாறிக் கொண்டிருந்தது. சட்டென 'என்ஜினை ஸ்டாட்' செய்து வள்ளத்தை தன் வீட்டுத் துறையை நோக்கி ஓட்டினான் பிச்சைக் குட்டி. சாய்வுப்பிள்ளை தலையை ஆட்டி, மனத்தில் எதையோ கறுவிக் கொண்டார்.

சாய்வுப் பிள்ளை வருமானவரி இலாகாவினால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பிரமுகர். அரசாங்க உதவியும், அதிகாரிகள் தயவும் கொண்டு, மீன்பிடித் தொழிலின் நவீன சாதனங்களுடன் தனது பொருளாதாரத்தை உயர்த்திக் கொண்டு, அரசாங்கத்தின் வரி விதிப்புக்கு எரிச்சலான முணுமுணுப்புடன் கைச்சாத்திட்டவர். உதவி செய்த அரசாங்கத்திற்கு நன்றி பாராட்ட வேண்டுமென்ற பொதுநியதி இருந்தாலும் பணத்தின் மோகம் யாரைத்தான் விட்டது?

முதலில், பிச்சைக்குட்டியின் வாழ்க்கையை விட பொருளாதார ரீதியில் சாய்வுப்பிள்ளை தாழ்த்தப்பட்டுத்தான் இருந்தார். வெறுந்தோணியும், 12 முழ இறால்வலையும் அவருடைய தோள்வலியும்தான் அவரின் பெரிய குடும்பத்தைக் காத்துவந்தது. வைகறை புலருமுன்னே எழுந்து ஆற்றுக்குச் சென்று இறால், நெத்தலி, திரளி, கிழக்கன், கொய் இத்தியாதி மீன் வகைகளுடன், கரையேறி 'நனைந்த கச்சை' காயுமுன்னே சந்தைக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுபோய் விற்றுச் சில்லறைகளும் தாளுமான பணத்தை - குழந்தைகளுக்கு பகல் உணவுக்கு அரிசியாகவும் மற்றும் பொருட்களாகவும் கொண்டுவருவார். அப்படியான நாளாந்த நடைமுறையில் ஏற்படும் மாற்றம் சிலவேளை அன்றைய சாப்பாட்டிற்கே தட்டுப்பாட்டைக் கொண்டுவரும். அந்த நிலையில் இருந்தவரை, நவீன நைலோன் வலையும், அரசாங்கம் கொடுத்த கடனுதவியும் 'ஆளாப்பெயராக' ஆக்கிற்று. சில்லறைகளாக சிறுதாள்களாக வந்தேறிய பணம் கட்டுக்கட்டாக, வந்து குவிந்தது. தான் இனி மீன் பிடிக்கச் செல்வது தனது செல்வாக்கையும், கௌரவத்தையும் பாதிக்கும் என்ற எண்ணத்தில் கூலிக்கு ஆள்வைத்து தொழில் செய்தார். கிடைத்த மூலதனத்தில், வயல் நிலங்களையும் டிரக்டர் மெஷினையும் இன்னும் பல பொருட்களையும் சேர்த்து தன்னுடைய பிரமுகர் நிலையை உயர்த்திக் கொண்டார். இந்த உயர்வு அவரை சமூகத்தின் குருட்டுக் கண்களில் பட்டு, பல துறைகளிலும் பெரிய மனுஷனாக்கியது.

வழமையாக வரும் கிராமச்சபைத் தேர்தல் அவருடைய செல்வாக்குக்கு ஒரு சவால்விட்டது. கிராமத்திலுள்ள இளைஞர்கள் ஒன்று கூடி ஒரு இளைஞனை வட்டார அங்கத்தினனாகத் தெரிவு செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து அவரிடத்தில் ஆலோசனை கேட்கப் போய், கடைசியில் ''நீங்கள் எல்லாம் சின்னப் பிள்ளைகள், அங்கே போய் என்ன செய்யப் போகிறீர்கள். பெரிய மனிதர்களை அனுப்பினால்தான் நாட்டுக்கும் நமக்கும் நல்லது.'' என்ற பெரிய மனிதத் தோரணையில் துவக்கிய புத்திமதி, இளைஞர்களை கோபத்திற்குள்ளாக்கி, அவரையே தேர்தலில் குதிக்க வைத்தது.

தேர்தல் என்னவோ சாதாரணமாக ஆரம்பித்தாலும், தேர்தல் தினம் நெருங்க, நெருங்க இளைஞர்களின் ஆவேசமும் உணர்ச்சியும் எல்லார் மனதையும் உருக்கிற்று. சாய்வுப் பிள்ளையிடம் கூலிக்கு மீன்பிடியாளனாக இருந்த பிச்சைக்குட்டிக்கும் இந்த விஷயத்தில் இளைஞர்களிடத்தில் உடன்பாடு ஏற்பட்டதோடு, அவர்களையே ஆதரிக்கவும், அவர்களுக்காகத் தனது தோழர்களிடம் அனுதாபம் காட்டும்படி வேண்டிக் கொண்டான்.

தேர்தல் முடிவடைந்து வாக்குகள் எண்ணிப் பார்த்ததில் சாய்வுப் பிள்ளை படுதோல்வியடைந்தது யாவரையும் பிரமிக்கச் செய்தது. ஆனால் இளைஞர்களைப் பாராட்டவும் தவறவில்லை அவர்கள்.

எல்லாக் கோபமும் பிச்சைக் குட்டியின் மேல் திரும்ப, அவனைத் தன் போட்டில் ஏறக்கூடாது என்று தடைவிதித்து, 'இல்லாத பொல்லாத' தூஷணங்களையும் கூறி இருவருக்குமிடையில் வாய்த்தாக்குதல் மூண்டது.

''உள்ளுக்குள்ளயே இருந்து கழுத்தறுப்புச் செய்கிற கீழ்சாதிகள்'' என்று சாய்வுப்பிள்ளை குற்றஞ் சுமத்தினார்.

''ஓம், காக்கா நாம போட்ட தேர்தல் 'றிக்'செல்லாம் இஞ்ச ஆரோ கேட்டுக்கிட்டு இருந்து அவனுகளிட்ட சொல்லியிருக்கானுகள்'' என்று யாரோ ஒருவன் ஒத்து ஊதினான்.

''யாரெண்டு எனக்குத் தெரியாமலா இருந்தன், டேய் பிச்சைக் குட்டி நீ எண்ட போட்டில இனி ஏறப்படாது'' சம்பாஷணையின் போக்கை உன்னிப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்துக் கொண்டிருந்த பிச்சைக்குட்டி, தன்னை எதிர்நோக்கிவரும் சொல் அம்பைத்தடுத்து நிறுத்தத் தயாரானான்.

''உங்கட போட்டில்லாட்டி, நாங்க பிழைக்கமாட்டோமெண்டு நினைச்சுக்கிட்டீங்களாக்கும். உங்களுக்குத் தந்த அல்லாஹ் எங்களையும் பார்த்துக்குவான்''

''பொத்துடா வாயை, ஏலுமெண்டா நீயும் செய்து பாரேண்டா''

''நான் உன்னைப் போல முதலாளி ஆகிறேனா, இல்லையா பாரு?'' பிச்சைக் குட்டி வெளியே வந்தான். தன்னுடைய சபதத்தை நிறைவேற்றிக் கொள்ள அவன் சதா பாடுபட்டான். அவனுடைய பிடிவாதமான சிந்தனை, அவனுடைய சேமிப்பிலிருந்து முதலீடு பெற்றுக் கொண்டு, புதிய வள்ளத்துக்கு கிண்ணியாவுக்குச் சென்றான். கிண்ணியாவிலிருந்து புது வள்ளத்தோடு அவன் வந்தபோது சாய்வுப்பிள்ளை சற்று அசந்து போய்விட்டார்.

பிச்சைக் குட்டியின் வள்ளம் மீனை அள்ளிக் கொண்டுவந்து பணமாக மாற்றிக் கொண்டிருந்தது. அவனுடைய சபதம் நிறைவேறுவதில் அவன் மகிழ்ச்சி கொண்டிருந்தான். ஆனால் சாய்வுப்பிள்ளைக்கு இது பொறுக்க முடியவில்லை.

அன்று வழக்கம் போல கடலுக்கு அவன் சென்றான். நடுக்கடலில் அவனுடைய வள்ளத்தை எதிர்த்து வரும் பெரிய போட்டோடு மோதிவிடக்கூடாதே என்ற கவனத்தில் அவன் விழிப்பாகப் பாதையை மாற்றிக் கொண்டான். ஆனால் அந்த வள்ளத்தை நோக்கி போட் வந்து, போயிற்று. சற்று நிலை குலைந்து போன அவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றவே முடியாமல் போக நேரிடுமோ வென அஞ்சினார்கள். வள்ளம் கவிழ்ந்தது.

1968 ஒக்டோபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறி

வானத்தின் சரவிளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த அந்த நிசப்தமான இரவின் நடுப் பாதியிலே, இடியும் மின்னலும் கூடிய பேய் மழை பிடித்துக் கொண்டது.

இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு பூதகணங்கள் புழுங்கித் தாண்டவமாடின. இயற்கை அன்னையே வெறிகொண்டவளாய்ச் சீறிச் சினந்து கொண்டிருந்தாள்.

காமிலாவின் இதயமும் வெடித்து, தீப் பிழம்பை வீசிக் குமுறிக் கொண்டிருந்தது. அவளுடைய கண்களிலிருந்து செந்நீர் பாய்ந்தது.

அந்த அகால வேளையில் அந்தச் சூழ்நிலை, அவளுக்காக இயற்கையே இரங்கித் துடிப்பதுபோல இருந்தது.

அவள் இதயத்தை அழுத்திய சுமையால், பிறந்த, ஒரே சீரான கேவல் ஒலி, ஓரோர் சமயம் நெஞ்சைப் பிளந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. தன் கால்களிரண்டையும் குத்திட்டு, அவற்றிடையே முகத்தைப் புதைத்து, தலைவிரி கோலத்துடன் அந்த இளம் பெண் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தாள்.

காலம் மிகப் பொல்லாத சோதனையை அவள் மீது விதித்துவிட்டது. அந்தச் சோதனையின் வேதனை மிக்க அனுபவத்திலிருந்து அவளால் இனித் தப்ப முடியாது. அந்த எண்ணம் இதயத்தை அழுத்த, அவள் குரலும் படிப்படியே உயர: அவளருகில் குளிருக்கு இதமாகப் போர்த்திக் கொண்டு பாயோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியவளாகத் தன்னை மறந்த தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்த, அவள் தாய் - சுபைதாவை எழுப்பிவிட்டது.

திடீரெனப் பிளந்த விம்மல் ஒலி சற்றே அடங்க, இருட்டிலே தாயின் உருவத்தை நோக்கினாள் காமிலா.

"என்ன காமிலா! நீ இன்னும் தூங்கவில்லை?" என்று தாய் கேட்டது காமிலாவின் உள்ளத்தைக் குடைந் தெடுத்து விட்டது.

"உம்மா!" என்று தாயின் தோள் மீது சாய்ந்தாள்.

"என்ன, சொல் மகளே!" - மகளை இறுக அணைத்துக் கொண்டு, குரல் தழு தழுக்கக் கேட்டாள் சுபைதா.

"உம்மா, என்னை மன்னித்திடும்மா, எனக்கு இனி வாழவே பிடிக்கல்ல, அந்தத் தகுதியில்லாத வளாயிட்டேனும்மா..." என்று காமிலா விம்மலிடையே கூறி முடிக்கு முன்பே "என்ன, என்ன?" எனப் பரபரப்படைந்தாள் சுபைதா.

"என்ன நடந்து விட்டது உனக்கு?"

சுபைதா, தன் அருமை மகளின் முகத்தை மின்னல் ஒளியில் கூர்ந்து நோக்கினாள். முகம் சோபை இழந்து வெளிறிக் கிடந்தது.

"ஒன்றுமில்லை, என் மனம் நிம்மதி இழந்து தவிக்கிறதே, நான் எப்படி வாழுவேன்."

"என்ன நடந்தது என்றுதான் சொல்லேன் காமிலா" என்று அவளை உலுக்கினாள் சுபைதா. காமிலா மௌனமே உருவானாள்.

நேரம் சென்று கொண்டிருந்தது. மழை பொழிந்து கொண்டே இருந்தது. வானம் முழங்கிக் கொண்டிருந்தது. மின்னல் உமிழ்ந்து கொண்டிருந்தது.

ஆழ்ந்த அமைதிக்குப் பிறகு காமிலாவின் மௌனமும் கலைந்தது. அவள் அதரங்களிலிருந்து, அந்தக் கொடுமையான சம்பவத்தை விபரிக்கக்கூடிய வார்த்தைகள் பிறந்தன. சுபைதாவின் இதயத்தை அப்படியே கிழித்து கசக்கி எறிந்தன. அவள் அதிர்ச்சியடைந்து போனாள் -

தாயும் மகளும் ஒருவரையொருவர் கட்டி அணைத்தவாறு விடியா இரவுடன் போராடி, ஈற்றில் வெகு வெகு நேரத்துக்குப் பின்பே, ஆதரவான வார்த்தைகள் எதுவும் கூறமுடியாத நிலையில் சற்றுக் கண்ணயர்ந்து போனார்கள். அவர்கள் கண்ணயரும் போது மழை நின்றுவிட்டது. கிழக்கு வானில் விடிவெள்ளி சுடர் அள்ளி வீசிற்று!

## 2

அன்று காலைப்பொழுது மிக மிகச் சோகத்துடன் கிழக்குவானில் எழுந்தது. இரவு முழுவதும் பெய்த மழையின் கருமேக மூட்டங்கள் வானை விட்டும் நீங்காமல் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன.

இரவு முழுவதும் பெய்த மழை, வைகறையில் மலர்ந்து மணம் வீசக் காத்துக் கொண்டிருந்த வண்ண மலர்த் தோட்டத்திலே பேரழிவைக் கொண்டு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது.

மலர்களின் இதழ்கள் சொரிந்து பூமித்தாயின் மடியிலே, சேற்றில் புதையுண்டு கிடந்தன. காமிலா என்னும் அந்த வண்ண மலரும், இதழ் சொரிந்து அழிந்து கிடந்தது.

ஆம், காமிலா கிணற்றில் விழுந்து தற்கொலை புரிந்து கொண்டாள்.

இளஞ் சூரியனின் ஒளியிலே இதமான தென்றலின் மதமதப்பிலே, பறந்து ஆனந்திக்கும் சிட்டாகப் பறந்து திரிந்த பாவை அவள். பல இளம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் பேரழகுடன், பருவத்தின் பூரிப்பில் வண்ணப் பூச்சியாக பறந்தாள் காமிலா.

அவள் இந்த வயதில் இப்படியான ஒரு முடிவைத் தேடிக் கொண்டது ஆச்சரியமான விஷயம்.

அவளுடைய தாய் - சுபைதாவை உலகம் பார்த்த பார்வையே வேறு. அவளுடைய நடத்தையின் 'கண்ணியமே' அந்த ஊர் மக்களின் அசூசையான பார்வையில் விழுந்த ஒன்று.

அவள் நடத்தை கெட்டவள் என்று ஊரால் ஒதுக்கப்பட்டவள். அனாதையாக வாழ்ந்தவள். அப்படி வாழ்ந்த சுபைதா, தனக்கு ஏற்பட்டது போன்ற அவப் பெயர் தன் மகளுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்றுதான் பாதுகாத்து வந்தாள். கோழி தன் குஞ்சை இறகுக்குள் மூடிப் பாதுகாத்துக் கொள்வது போல.

காமிலா தற்கொலை புரிந்து கொண்டாள் என்பதை எண்ணிப் பார்க்கவே அவளால் முடியவில்லை. இதயத்தைப் பிழிந்தெடுத்த அந்த உண்மையை அவளால் ஒப்பவே முடியவில்லை.

காமிலாவுக்கும், அவள் வாழ்விலே நடந்தது போன்று துர்ப்பாக்கியமான அசம்பாவிதங்கள் நேரும் என்று அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அப்படி நேர்ந்துவிடக்கூடாதே என்றுதான் அவள் இத்தனை காலமும் இறைவனை வேண்டிக் கொண்டிருந்தாள். ஆனால்...

அந்தக் கொடிய, இருள் படிந்த இடியும் மின்னலும் கூடிய மழை இரவில் காமிலா கூறிய கடைசி வார்த்தைகள் மட்டும் இன்னும் அவள் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது.

காமிலா சொன்னாள்,

''முதலாளி வந்தாரும்மா... அவரு... அவரு...'' அவள் மேலே பேசாமல் வார்த்தைகளை உள்ளே விழுங்கி விட்டாள்.

அவன் வந்தானா? அப்படி நடந்து விட்டதா?

சுபைதா தன் இருள் படிந்த வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்தாள்.

## 3

நடத்தை கெட்டவள் என்று அவளை உலகம் தூற்றியது. உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அப்படி இழிவாக நடந்து கொண்டதே, தற்செயலாக ஏற்பட்ட விபத்து என்று தான் சொல்ல வேண்டும். காமிலாவின் பிறப்பின் கதை அப்படித்தான் நடந்தது.

சுபைதா, தாய் தந்தையற்ற அனாதையாக கடைத் தெருவில் சுற்றித் திரிந்த பருவம் அது. பச்சைப் பசளிப் பூண்டுபோல, அவள் பருவப் பூரிப்பில் மதாளித்துக் கிடந்தாள். அப்போதெல்லாம் அவளுக்கு வீடு வாசலில்லை. உண்ண உணவு கூடக் கிடைப்பதில்லை. பிச்சை எடுத்து உண்பதோடு, கடைத் திண்ணைகளில் தன் இரவுப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் இரவு அந்தச் சம்பவம் நடந்தது. இரவுப் பொழுதைக் கழிக்க, வழமையான கடைத் திண்ணையை அடைந்து தன் பழஞ்சீலையை விரித்துவிட்டுத் தூங்கிப் போனாள் சுபைதா. இரவு வெகு நேரத்துக்குப் பிறகு அவள் திடீரென விழித்தெழுந்த போது அவள் உடலோடு இன்னொரு உடலின் உராய்வு அவள் உணர்ச்சிகளை அப்படியே மலர்த்திக் கொண்டிருந்தது...

விழித்தவுடனேயே பெருங் கூக்குரல் போட்டு அழ வேண்டும்போல் பதறினாள்! ஆனால் அவளால் அழ முடியவில்லை. அவள் அந்தக் கணப்பொழுதின் சுகானுபவத்தில் மயங்கி...

பின்னர் அவள் எழுந்து தன் உடையைச் சரி செய்து கொண்டு அவனைப் பார்த்தாள்.

அந்தக் கடையின் சின்ன முதலாளி சமது நின்று கொண்டிருந்தான். இரவில் கடைக் காவலுக்கு வருபவன்.

''முதலாளி இது என்ன வேலை...'' என்று சுபைதா கேட்டாள்.

''சுபைதா, சுபைதா... பயப்படாதே. உன்னை நான் காப்பாத்துகிறேன். இந்தா இதைப்பிடி...'' என்று அவள் கையைப் பிடித்துக் கொஞ்சியதோடு, அவளுடைய கையில் ஒரு பச்சைப் பத்து ரூபா நோட்டைத் திணித்துவிட்டு மறைந்தான். சுபைதா மலைத்துப் போய் நின்றாள்.

இளமையின் முறுவல் அவள் உள்ளத்தில் அரும்ப, அவள் இரவுகளின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அன்றிரவோடு இன்னும் பல இரவுகள் அவளுக்கு அந்த இன்பசுகம் கிடைத்தது.

அந்த அனுபவத்தோடு அந்தச் சுமையும் ஏறும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. திருமணமாகாத ஓரிளம் பெண்ணின் வயிறு இப்படி உப்பி வருவது ஊராருக்குப் பிடிக்கவில்லை. அந்தக் கடைத்தெரு பெரிய மனிதர்கள் சிலர் அவளுக்குப் பிச்சை கொடுக்க மறுத்ததோடு, அவளை ஊரை விட்டே விரட்டி அடித்தார்கள்.

சுபைதா சொந்த ஊரைவிட்டுப் பக்கத்திலுள்ள பட்டணத்துக்குக் குடிபெயர்ந்தாள். பட்டணத்து தர்ம ஆஸ்பத்திரியில் காமிலாவைப் பெற்றெடுத்துக் கொண்டு, இந்தப் பதினாறு வருடங்களும், அவள் பட்ட துன்பங்களும் துயரங்களும் வசைவுகளும் கொஞ்ச நஞ்சமல்ல. பணக்கார வீடுகளின் பணிவிடைகளில் ஒன்றி காமிலாவை வளர்த்தாள். பட்டணத்து நாகரிகம் காமிலாவின் வாழ்வைப் பாழாக்கி விடுமோ என்ற பயத்தில் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த ஊரை நாடி வந்தாள்.

பருவப் பூரிப்பில் மலர்ந்து கொண்டிருந்த காமிலாவுடன் ஊர் திரும்பிய போது பழைய சம்பவங்கள் எல்லாம் மறக்கப்பட்டு ஊர் புதுமையாகக் காட்சி தந்தது. ஆனால் அந்தப் பழைய சுருட்டுக் கடை அப்படியே அங்கே இருந்தது. அந்தக் கடையின் சின்ன முதலாளி, சுபைதாவின் வயதின் ஓட்டத்துடன் வளர்ந்து சமது முதலாளியாக வீற்றிருந்தான்..

சுபைதா முதன் முதலில் அவனுடைய கடைக்குத்தான் சென்றாள். அவளைக் கண்டபோது அவனுக்கு உதறல் எடுத்துவிட்டது.

"சுபைதா. சுபைதா..." என்றுதடுமாறினான்.

"இத்தனை காலத்துக்குப் பிறகு நான் உன்னை எதிர்பார்க்கவே இல்லை சுபைதா..."

கடையை விட்டுப் படியிறங்கி வந்து அவளுடன் பேசினான். அவளுடைய தலையிலே இடையிடையே இழையோடி இருந்த நரை மயிரை அவனுடைய பார்வை நோக்கிக் கொண்டிருந்தது.

"என் சாவில் அவ்வளவு நம்பிக்கையா?" என்று 'பட்' டெனக் கேட்டாள் சுபைதா.

"இல்லை... இல்லை..." என்று தடுமாறியவன், சுபைதாவின் பக்கத்தில் பதினாறு வருடங்களுக்கு முன் அவன் கண்ட இன்னொரு சுபைதாவைக் கண்டு "இதுயார்?" என்று கேட்டுச் சமாளித்தான்.

"இவள் என் மகள் " என்று கூறிவிட்டு சுபைதா அவனைப் பார்க்கப் பிடிக்காதவள் போல மகளுடன் நடந்தாள்.

..................................

............................. சுபைதா அந்தக் கேள்விக்கு விடை பகரவில்லை.

அன்றிரவு அவர்கள் கடைத்திண்ணை ஒன்றில் குந்திக் கொண்டிருந்த போது அவன் அவர்களைச் சந்தித்தான். சுபைதா அவனுடைய சந்திப்பையே விரும்பாதவளாக வெறுப்புடன் பேசினாள். கடைசியில் அவனுடைய ஆதரவான, விடாப்பிடியான ஆலோசனையின் பேரில், அவனுடைய தோட்டத்தில் குடியிருப்பதென, தாயும் மகளும் ஏற்றுக் கொண்டார்கள்.

அதன் பின்பு அவன் அவர்களைப் பார்க்க தோட்டம் பார்க்கும் சாக்கில் வந்துபோனான்.

## 4

காமிலா தற்கொலை புரிந்து கொண்ட செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டது. தன் தோட்டத்தில் சுபைதாவின் மகள் திடீரென தற்கொலை புரிந்துவிட்டதை அறிந்து சமது முதலாளி வந்தான்.

தற்கொலைக்குரிய காரணங்களை ஆராய்வதில் விசாரணைக்கு வந்த அதிகாரி நேரத்தை எடுத்துவிட்டார். கடைசியில் காரணமெதுவும் சரிவரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமலே 'தற்கொலை' எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு 'மையத்து' அடக்கஞ் செய்யப்பட்டது.

சுபைதாவிடம் அனுதாபம் தெரிவிக்கப் பலரும் வந்து போனார்கள்.

சுபைதா ஆராத்துயருடன் கன்னத்தில் கரங்களை ஊன்றிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

சமது முதலாளி, அவள் துயரைப் போக்க எண்ணியவன் போல் அவள் அருகில் வந்து அவளுடைய கைகளை ஆதரவாகப் பற்றிக் கொண்டே "சுபைதா... சுபைதா..." என அழைத்தான்.

சுபைதா அவனுடைய கைகளை உதறிவிட்டு வெடுக்கென எழுந்து அவனை வெறியோடு பார்த்தாள். அவளுடைய கண்கள் தீப்பிழம்பாக எரிந்து கொண்டிருந்தன.

"முதலாளி... நீ... நீ நேற்று நானில்லாத போது இங்க வந்தாயா?"

அவன் பேசவில்லை.

"வந்தாயா... என் மகள் சொன்னாள்" என்று அவள் அறியத் துடித்த போது.

"சுபைதா... சுபைதா... அவள் உன் மகள்தானே" என்று அவன் தடுமாறினான்.

அவள், "தூ..." வெனக் காறி உமிழ்ந்தாள்.

"சீ! நீயும் ஒரு மனிதனா? என்னோடு சேர்த்து என் மகளையும் அப்படியா நினைத்து விட்டாய்... அவள் உன் மகள்டா, உன் மகள்..." என்று அவள் பதறினாள்.

அவளுடைய வார்த்தைகள் அவனுடைய இதயத்தில் ஏறி அம்பெனப் பாய்ந்து கொண்டிருந்தன.

*1969*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்காடு

தெருவில் ஓரே ஜனத்திரள். முக்காட்டை முன்னுக்கு இழுத்துவிட்டுக் கொண்டு, பொலிஸ் ஸ்டேஷனை விட்டு வெளியேறுகிறாள் அவள். உச்சந்தலை தொடக்கம் உள்ளங் கால் வரை சேலை மிக அமரிக்கையாகப் போர்த்தப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் அவள் உள்ளத்தில் உந்தப் பட்ட உள்ளுணர்வினால் கூனிக் குறுகி, அவள் நடை பயில்கிறாள்.

தனக்கு ஏற்பட்ட களங்கத்தை மூடிமறைக்க முயல்பவளைப் போல், தலையிலிருந்து நழுவி விழப்பார்க்கும் சேலையை இழுத்து இழுத்துப் போர்த்திக் கொண்டு நடக்கிறாள்...

அந்தக் கிராமம் முழுவதுமே விஷயம் வெட்ட வெளிச்சமாகி, பொலிஸ் ஸ்டேஷனுக்குள்ளும் புகுந்து வெளிப்பட்டுவிட்டது. கிராமத்து மக்களின் குசு குசுப்புப் பெரிதாகி, எல்லையைக் கடந்து வெடிக்கிறது...

"பெத்த புள்ளய புதச்சிப் போட்டா எண்டு பொலிஸ் பிடிச்சு வந்ததாம்..."

சல்ஹா தடித்திருந்தாலும் உடலிலே ஓர் இறுக்கம் - அழகு மெருகூட்டியது. இரட்டை நாடியான அவள் உடலில் கைதேர்ந்த சிற்பியின் லாவகமான கைவண்ணம் மிளிர்வதைப் போல் அழகு வழிந்தது. உடல் அழகுக்கும் குண அழகுக்கும் வெகுதூரம் போலும். அவள் அங்காடிவியாபாரியையும் விட ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி முன்னேறிய வாயாடி. அவளிடம் யாரும் மாட்டிக்கொண்டால் எளிதில் தப்பிவிட முடியாது என்பார்கள்.

இளமை இழக்காத கைம் பெண், சல்ஹா.

புருஷனைத்தான் அவள் இழந்துவிட்டாள், அவளுடைய இளமை, பொலிவு இழக்கவில்லை. வயதின் ஓட்டத்திலே இளமை பெறுவதைப் போன்ற ஓர் உடல்வாகு அவளுக்கு.

சல்ஹாவின் கணவன் இறக்க முன்பு குடும்பம் சீரும் சிறப்புமாகத்தான் நடந்தது. வீடு நிறையத் தட்டுமுட்டுச் சாமான்கள். சல்ஹாவின் கையிலும் கழுத்திலும் வெள்ளியும் தங்கமும் பூத்துக் கிடந்தன. அவள் கணவன் மீராசாஹிபு, மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஏதோ அறுவைச் சிகிச்சைக்குப் போய் இரத்தப் பெருக்கினால் உயிரைவிட, டாக்டரால் அதைப் பிடிக்க முடியாமல் போக, அதனோடு தொடர்ந்த செலவு, 'ஈரா' வரையும் வந்து ஆஸ்தி எல்லாம் கரைந்துவிட்டது.

மீராசாஹிபு பக்கத்து வீட்டு அப்துல் காதர் ஹாஜியாருடைய வயலில்தான் வேலை செய்தான். நிறைய வருமானம். வருஷ வேளாண்மை வேலைக்குப் பத்து 'அவண' நெல், அத்துடன் வாரா வாரம் செலவுக்குப் பணம். புருஷனும் மனைவியும் தானே!

அப்துல் காதர் ஹாஜியார் ஊரிலே பெரிய மனுஷன். செல்வாக்கும் உள்ளவர். வெறும் அப்துல் காதர், ஹாஜியாரானதற்குப் பிறகு ஊர்ப் பொதுவிஷயங்கள் எல்லாம் அவர் தலைமையை நாடி வந்தன.

இரும்புக் கடைக்கு முதலாளி. சூழாவடிவட்டையிலே நூறு ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் காணி. பட்டிக் கணக்கிலே ஆடு மாடுகள். இத்தியாதி நிலையில் அவர் செல்வச் சீமானாக வாழ்ந்து வருகிறார்.

மீராசாஹிபு காலமானதற்குப் பிறகு அவனுடைய மனைவி சல்ஹாவை ஹாஜியார்தான் கவனித்து வருகிறார். சல்ஹாவும் வண்ணப் பாய் களை இழைத்து விற்பனை செய்யும் நேரம் போக, பொழுதெல்லாம் ஹாஜியார் வீட்டில் கழித்து, எடுபிடி ஆளாக மாறிவந்தாள்.

ஹாஜியாரின் இரும்பு நெஞ்சைக் கலக்கி விட்டாளாம் அவள். இப்படிக் கொஞ்சகாலமாகக் கதை அடிபடுகிறது. இந்தக் குசு குசுக் கதையை வாயைத் திறந்து கேட்க யாருக்குத் துணிவு வரும்?

சல்ஹாவின் கட்டுடலில் ஏற்பட்ட மாற்றத்தைத் தான் அவர்களால் கண்காணிக்க முடிந்தது. இடையில் ஒரு நாள் அவளுடைய அந்த 'மாற்றம்' நிவர்த்தியாக என்ன நடந்தது என்று புரியாமல் திகைத்தார்கள் அடுத்த வீட்டுப் பெண்கள். அந்தத் திகைப்பு கிராம விதானையாரிடம் போய், அது சல்ஹாவை பொலிஸ் ஸ்டேஷன் வரை கொண்டுவந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்ஹா பிள்ளையைப் பெற்றுப் புதைத்து விட்டாள் என்றுதான் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். கிராம சேவையாளர் பொலிஸாருடன் வந்து விசாரணை நடத்திப் பார்த்தார். சரியானதகவல்களோ, துப்புக்களோ கிடைக்கவில்லை. உடனே அவளைப் பொலிஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்தார்கள்.

விசாரணைக்காக யாரோ ஒரு கிழவியின் துணையுடன் சல்ஹா அன்றிரவு பொலிஸ் ஸ்டேஷனில் தங்க வேண்டி இருந்தது. நடுநிசியைத் தாண்டு முன்பே அக்கிழவி பேயுறக்கத்தில் ஆழ்ந்து போனாள். அவளும் பொலிஸ் நிலையமும் 'ரிசேர்வ்' வில் இருந்த காவலனுமாக இரவின் பிற்பகுதி ஆக்கினை இரவாக நீண்டது.

அவளுக்கு " ரிசேர்வ் " பொலிஸ்காரன் கொடுத்த வாக்குறுதியில் அங்கு வந்த இன்ஸ் பெக்டரிடம் அவன் ஏதோ பேச அவளுக்கு விடுதலை கிடைத்தது.

அவள் நன்றியறிதலைத் தெரிவிப்பதற்குத் தானும் இன்ஸ்பெக்டரையோ, பொலிஸ் காரனையோ நிமிர்ந்து பார்க்கவில்லை.

இந்தப் 'பேரம்' தெருவுக்குத் தெரியாமலா போகும்?

அதே குனிந்த தலையும் சோர்ந்த நடையுமாக, இதோ வீடு நோக்கித் தனியே சல்ஹா நடந்துகொண்டிருக்கிறாள்.

நிலவின் இங்கிதமான வெண்ணொளி, பேய்க் கோலம் பூண்டிருந்த மரங்களுக்கு மேலாகப் பீறிட்டு விழித்துக் கொண்டிருந்தது. ஏழாம் நாள் பிறை பின் முடிவு நேரம் அது.

சல்ஹா எதையோ யோசித்துக் கொண்டு திண்ணையில் குந்தியிருந்தாள். பக்கத்தில் ஒரு சின்னக் குப்பி விளக்கு அவளுடைய அழகில் வெளிப்பட்டுக்கொண்டிருந்த தசைத் திரட்சியில் மயங்கிப் போய், மங்கிக்கொண்டிருந்தது., துன்பமும் துக்கமும் சல்ஹாவின் நெஞ்சைப் பட்பட்டெனத் தெறித்துப் பிடுங்கின.

தூரத்தில் நாயொன்று ஊளை இடுவது போன்று குரைத்துக்கொண்டே இருந்தது.

சல்ஹா முன்னுக்குச் சரிந்து, முந்தானையைப் பிடித்துக்கொண்டு வாசலை எட்டிப் பார்த்தாள். அவள் வீட்டுப் படலையைத் தள்ளியவாறு, உள்ளே ஓர் உருவம் நுழைவதோடு, கவனமாகப் படலையைச் சாத்துவதும் தெரிந்தது. வாரிச் சுருட்டி எழுந்த சல்ஹா பாயொன்றை எடுத்து திண்ணையிலே போட்டாள். வந்த உருவம் பாயில் அமர்ந்தது. முன்னுக்குத் தள்ளிய வயிறு அலங்கோலமாகச் சரிந்து கிடக்க, மொட்டைத் தலையைத் தடவி விட்டுக் கொள்கிறது அந்த உருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருப்பவர் ஹாஜியார். சல்ஹாவைப் பார்க்கிறார் அவர். அவள் பயத்தால் நடுங்கி ஒடுங்கி நிற்கிறாள். அப்துல் காதர் ஹாஜியார் தொண்டையைச் சிறிது செருமுகிறார்.

"ஸ்டேஷனில என்ன புள்ள கேட்டாங்க?" அவருடைய கேள்வி மிக அமைதியாக ஊடுருவுகிறது.

"புள்ளய எங்க புதைச்சாய், ஏன் புதைச்சாய்? எண்டு கேட்டாங்க மாமா..." அவளுடைய குரவளையில் ஏதோ அடைத்துக் கொண்டது.

"வேற ஒண்டுமில்லயே?" ஹாஜியாருடைய இயல்பான கேள்வி, சல்ஹாவின் உள்ளத்தில் 'சுருக்' கெனத் தைத்தது. கண்கள் இலேசாகப் பனித்தன. அதை ஹாஜியார் கவனிக்காது சமாளித்துக் கொண்டு, "இல்லை..." என்று உணர்ச்சி எதுவுமற்ற குரலிலே கூறினாள்.

" இவனுகளுக்கென்ன, நீ பெத்தா என்ன, புதைச்சா என்ன? நான் கடையில இருந்து ஒரு பேச்சுப் பேசினேனெண்டா இந்த ஊரில என்னதான் நடக்காது? என்னை யாரெண்டு தெரியாமப் பேசுறாங்கள்..."

சல்ஹாவின் உள்ளம் பதறியது. அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

" புள்ள..." என்று இழுத்த ஹாஜியார் சல்ஹாவை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார்.

" உண்மையைச் சொல்லு. என்னிடம் பொய் சொல்லாத. உனக்காக வேண்டி ஊர்ப் பேச்சையும் கேட்டுக் கொண்டிருக்கிறன். எனக்கு இதனால என்ன கெட்ட பெயர் வந்தாலும் ஒண்டுமில்ல; என்னிடம் மட்டும் மறைக்காத.. உண்மையைச் சொல்லு.."

சல்ஹாவின் உடல் சற்றுக் குலுங்கி அதிர்ந்தது. இலேசான விம்மல் ஒலியும் நெஞ்சில் இருந்து வெளிப்பட்டது.

"ஹாஜியார் மாமா... என்னை மன்னிச்சிடுங்க... எனக்குப் பிள்ளை பிறக்கல... ஆனா..."

"ஆனா என்ன பிள்ள... உண்மையைச் சொல்லு, உனக்கு ஒண்டும் வராம நான் பாத்துக்கிறன்."

''எனக்கு அஞ்சி மாத்தயால கரு அழிஞ்சு போச்சு. அதப் புதைச்சுப் போட்டன் மாமா..." என்று அவள் கூறும்போது அவளின் கண்களில் நீர் முட்டிக் கொண்டிருந்தது.

"என்ன...?" ஆச்சரியம் தாங்க முடியாமல் கேட்டார்.

ஹாஜியார் அந்தக் கேள்வியை அவளிடம் கேட்கத் தயங்குவதுபோல இருந்தது. அவருடைய குரலின் இழுப்பு, அவர் தலையைக் குனிந்துகொண்டு தரையைப் பார்த்தார்.

"யாருக்கு...?"

"உங்கட வயல்ல வேலை செய்யிற ஆதம் லெவ்வைக்குத் தான்..." என்று வார்த்தைகளை விழுங்கிக்கொண்டு கூறினாள் சல்ஹா.

".. ம்.. !" ஹாஜியார் யோசனையில் ஆழ்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரம் அங்கு அமைதி நிலவிற்று.

நிலவும் மறைந்து இருள் கவ்விற்று.

"இருபத்தைந்து வயதைக் கூட எட்டாத ஆதம் லெவ்வையா?" என்று ஹாஜியாரின் உள்ளம் மறுகிற்று.

"புள்ள நான் ஒன்று கேட்கிறன். ஒமெண்டு சொல்லுவியா...? என்று மிகுந்த யோசனைக்குப் பிறகு கேட்டவர், சல்ஹாவைக் கூர்ந்து நோக்கினார்.

"என்ன எண்டாலும் சொல்லுங்க மாமா கேட்கிறன்..." என்று பயத்துடன் பதிலிறுத்தாள் சல்ஹா.

" புள்ள சல்ஹா! எல்லார்ர மானத்தையும் போக்காட்டாம, ஆண்டவனுக்காக எண்ட சொல்லக் கொஞ்சம் கேளு, நான் ஊரில பெரிய மனுஷன். ஆண்டவனுக்குப் பயந்து நடக்க வேணுமென்று அங்கலாய்க்கிறன். உன்னையும் எண்ட வீட்டில வேலைக்கு வைச்சிருக்கிறன். மக்கத்துக்குப் போறதுக்கு முன்னால, ஏதாவது கெட்ட நடத்தையில நான் ஈடுபட்டிருப்பன். அது எண்ட குத்தமில்ல எண்டுதான் சொல்வன். எத்தனையோ பேரு எண்ட பணத்துக்காகத்தான் வந்தாங்க. ஆனா இப்ப இல்ல. அதுக்கு இடம் கொடுக்கிறதில்ல. அந்த அல்லாட பெரிய இடத்தைப் பார்த்த கண்ணால, இதுகளப் பார்க்கவும் கூசுது. அதனால பயந்து வாழ்றன். என்னையும் உன்னையும் சேர்த்து ஊருலகம் கதைக்குது. இப்ப வந்து இந்தப் புத்திமதிய நான் சொல்றத யாராவது கண்டாலும் என்னை நாளைக்கு றோட்டில இழுத்துப் பேசத்தான் செய்வான். இப்ப உலகத்துக்குப் பயமில்ல..." என்று பிரசங்கத் தோரணையில் பேசிய ஹாஜியார், " புள்ள... " என்று கனிவுடன் அழைத்து நிறுத்தினார்.

"நீங்க எதைச் சொன்னாலும் இனி அப்படியே கேட்டு நடப்பன் மாமா... அல்லாஹ்வுக் காக..." என்று அவள் கூறும் போது அழுது விட்டாள்.

"நீ ஆதத்தைக் கட்டாயம் கல்யாணம் செய்துக்க. அவனும் ஒண்டுமில்லாமத்தான் இருக்கிறான். அவனிட்ட நான் பேசிச் சம்மதிக்கச் செய்யிறன்."

ஹாஜியாருடைய வார்த்தைகள் அவளுடைய செவியில் விழுந்தாலும் அவளுடைய மனம் நேற்றைய இரவின் நிழலில் நீண்டது.

பொலிஸ் ஸ்டேஷனில்...

" என்ன புள்ள நான், சொல்றன்... நீ பேசாம நிக்கிறாய்?" என்று ஹாஜியார் கேட்டார். அவளுடைய மௌனம் நீண்டது.

வெளியே, அவளுடைய வீட்டு வேலியோரத்தில் நாய் ஒன்று குரைத்துவிட்டு எங்கோ தலைதெறிக்க ஓடியது.

விழித்துக் கொண்ட உலகம் ஆதத்தை 'அப்பாவி' ஆக்கிற்று.

*1969 ஏப்ரல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ! அதனாலென்ன...?

குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தாள் சல்மா. அழகுச் சிற்பம் போலத் தாயின் மடியில் கிடந்த குழந்தையையும், தாயையும் மாறி மாறிப் பார்த்து அதிசயித்தவாறு குந்தியிருந்தான் ஸெய்யது.

மனைவியின் வலது விலாவை ஒட்டினாற்போல,

மிக நெருக்கமாக- அந்த நெருக்கத்தில் தன் நினைவையே இழந்த சுகானுபவத்தில்- கால்களிரண்டையும் முட்டுக்கொடுத்து, இடக்கையால் வளைத்துப் பிடித்தவாறு, வலது கையின் ஆட்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்குமிடையே புகைந்து கொண்டிருந்த குறள் பீடியை'தம் 'இழுத்துவிட்டான் அவன். அப்போதைய சூழ்நிலையில், அவனுடைய சிந்தனை, வெயில் காலத்தில் ஏற்பட்ட மழைப் புழுக்கம் போல , ஆசுவாசப்படுத்த முடியாத தவிப்பில் நிலைகுலைந்திருந்தது. அப்படியொரு புதுமையான தவிப்பு அவனைச் சூழ்ந்திருந்தது.

அவனுடைய மனோநிலையைப் புரிந்துகொண்டு, அதனை நெகிழச் செய்து தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள வேண்டு மென்ற துறுதுறுப்பு அவளிடம் முளையிட்டது. அவளுக்கு வலப் பக்கத்தில், மடியில் கிடக்கும் குழந்தையை இழுத்துவிட முனையும் ஒன்றரை வயது மதிக்கத்தக்க மற்றொரு குழந்தையைச் சீண்டி விடுவதன் மூலம் தனது எண்ணத்தைச் சாதிக்க முனைந்தாள், சல்மா.

"கொஞ்சம் தள்ளித்தான் நில்லன்"என்றவள், அவனைத் தள்ளி ஓர் அறையும் வைத்தாள். குழந்தை அலறித் துடித்தான்.

"பேசாத மகன், உம்மாவுக்கு அடிப்பம்." என்று அவன் குழந்தையைத் தன்பால் இழுத்து அரவணைக்க, அவள் மெல்லப் புன்னகைத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குள்ளே மகிழ்ந்தாள். அதேசமயம்,

"உம்மா பசிக்குது." - என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். மூன்று வயதுப் பெண் குழந்தை ஒருத்தி, அவளுடைய இரண்டாவது பெண், பரட்டைத் தலை முடி அங்குமிங்கும் அலைய ஓடிவந்து தாயின் கழுத்தைக் கட்டிப்பிடித்தாள்.

"பொறுங்க, தம்பிக்குப் பால் கொடுத்திட்டு தண்ணிச்சோறு எடுத்துத்தாறன்..." என்று அவளை அரவணைத்துக் கொஞ்சினாள், சல்மா,

குழந்தையை அவன் மடியில் கிடத்தி விட்டு எழுந்தாள். நேரே, அடுப்படிக்குச் சென்று, அடுப்படியில் குந்தியிருந்து, ஈர விறகுக் குச்சிகளுடன் போராடிக் கொண்டிருந்த மூத்த பெண்ணை விலக்கி விட்டு நெருப்பை ஊதிக் கனிய வைத்தாள்.

" இவ்வளவு நேரமாகக் காத்துக்கிட்டு இருக்கன், தேத் தண்ணியுமில்லை..." என்று அவன் குற்றஞ் சாட்டினான்.

"கொஞ்சம் பொறுங்க, இப்பதான் நெருப்புப் பத்துது..." என்று பதில் தந்த சல்மா, தண்ணீர்ச் சோற்றை வழித்தெடுத்து, நீரும் உப்பும் இட்டுப் பிசைந்து, மூன்று குழந்தைகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தாள். மீதிப் பருக்கையுடன் கிடந்த கலங்கல் நீரைத் தானும் குடித்துத் திருப்தி அடைந்தாள்.

இவ்வளவையும் அவன் அவதானித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கையில் தன் சிறிய உடலைக் கிடத்தி, பொக்கை வாயால் புன்சிரிப்புடன் கையையும் காலையும் ஆட்டிக் கொண்டிருந்தது குழந்தை. அவர்களுடைய நான்காவது குழந்தை இது. கடைக் குட்டி, அவனுக்கு இன்று நாற்பதாம் நாள்!

அவள் அதிகாலையிலேயே எழுந்து மஞ்சள் தேய்த்து, வெந்நீரில் முழுகி தன்னைத் தூய்மைப் படுத்திக் கொண்டாள். குழந்தையின் தலை முடியையும் இறக்கி புது உலகை அறிமுகஞ் செய்துவிட்டாள்.

அது, ஒரு குதூகலமான நாள்தான்! எண்ணத்தில், செயலில் எல்லாருக்கும்... ஆனால், வாழ்க்கையின் நிஷ்டூரமான பிடிக்குள் சிக்கித் தவிக்கும் அவர்களுக்கு? ஆறு அங்கத்தினரைக் கொண்டு, பொருளாதாரத் தத்துவக் கோட்பாட்டையே தகர்த்து விட்டிருக்கும் அந்தக் குடும்பத்துக்கு அது நன்னாளாய் இல்லை.

தேனீர்க் கோப்பையுடன் வந்த சல்மா, ஸெய்யதிடம் அழுது கொண்டிருந்த குழந்தை யை எடுத்துக் கொண்டு, " குடிங்க... " என, கோப்பையை அவனிடம் நகர்த்தினாள் . அவன் தேனீரை மடமடவெனப் பருகிவிட்டுக் கோப்பையைக் கீழே வைத்தான். அவனுடைய பசியின் கொடுமையை உணர்ந்த அவள், அவனை அனுதாபம் பொங்கப் பார்த்தாள்.

"ஏன் இப்படிப் பார்க்கிறாய்...?" என்று அவளைக் கேட்டான் ஸெய்யது. "சும்மா" என்றவள் சற்று நேர மௌன இடைவெளிக்குப் பின், பின் வருமாறு கூறினாள்.

" ஒங்கட பசிக்கு ஒண்டுமில்ல... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்ன செய்யிற..."

"இப்படியே இருந்தா பகலைக்கும் பட்டினி கிடக்கத்தான் வேணும்.." அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவளுடைய குரலில் திடீரென ஏற்பட்ட மாற்றமும், குத்தலான வார்த்தைகளும் அவனுடைய நெஞ்சைக் குடைந்தன. அவள் ஏன் இவ்வாறு நினைப்பூட்டுகிறாள்?,

இன்றைக்குத் தான் வெளியே செல்வதில்லை என்று தான் ஸெய்யது நினைத்திருந்தான். எந்த நாளுந்தான் உழைக்கிறோமே, ஒரு நாளாவது ஓய்வு எடுத்துக் கொண்டால் என்ன? அத்தோடு கடைக் குட்டியின் நாப்பதாம் நாள், வீட்டில் தங்கி இருப்பது அவளுக்குச் சந்தோஷம் தரும் என்றுதான் அவன் எண்ணினான்.

"ஒரு நாளைக்கு வேலைக்குப் போகாட்டி பட்டினி, உனக்கு எப்பவும் இந்தப் பஞ்சப் பாட்டுத்தான்." என்றான் அவன். " அதுக்கு நான் என்ன செய்யட்டும்? இஞ்சப் பாருங்க நான் உடுத்தி இருக்கிற புடவை கூடக் கிழிஞ்சிருக்கு. பெருநாள் வந்தா வாங்கித் தருவீங்க. இந்தப் பெருநாளும் நமக்கு இல்ல. பிள்ளட நாற்பதுக்காவது கிடைக்கும் எண்டு எண்ணி இருந்தன். ஒண்டுமில்ல. நமக்குத்தான் இல்லாட்டியும் இந்தப் பச்ச மண்ணுக்காவது...'' அவள் மூக்கைச் சீறினாள். அவள் தன்னை இவ்வாறு கொடுமையான, குரூரமான வார்த்தைகளால் பேசுவது, அவனுக்கு நெஞ்சில் முட்களுடன் கூடிய மிலாற்றால் அறைவது போல வலி எடுத்தது.

"கொஞ்சங்கூட மனுஷிண்ட பொறுப்பு உனக்குத் தெரியா.. எனக்கு ஒரு நாளாவது நிம்மதியில்ல..." எரிச்சலும், பச்சாதாபமும் ஒருங்கிசைந்த வேகத்தில் வார்த்தைகள் ஜனித்தன.

"உங்களுக்கு சொன்னாக் கோபம் வருகுது. எனக்கு மானத்தை மறைக்கத் துணியில்லை..."

அவள் தன் பிடியைத் தளரவிடாமல் பேசினாள்.

"காசி இருந்தா, வாங்கித்தராமல் விடுவனா?"

என்று கேட்கையில் அவனுடைய குரலில் இரக்க உணர்ச்சி இழைந்தது.

"காசி இருக்கிற நேரத்தில எத்தனை தரம் சொல்லி இருக்கன். காசி கையில வந்தா ஒண்டுக்கும் நினைப்பு வராது. சுருட்டுக் கட்டும்..." என்று அவள் மேலே தொடரவில்லை, ஸெய்ய துக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

"சுருட்டும் குடிப்பன், சாராயமும் குடிப்பன் உன்னைக் கேட்கச் சொல்லல்ல..." என்று அவன் சீறினான். அவனுக்கு ஏற்பட்ட ஆத்திர உணர்ச்சியில். அவளை அடிக்கவும் கையை ஓங்கினான்; ஓய்ந்தான்.

கையில் காசு கனக்கும் வேளையில், யாழ்ப்பானத்துத் திறம் சுருட்டு ஒன்றை வாங்கி மேலே இருக்கும் தோலை உரித்தெடுத்து, 'சொத்தியன்' கடையில் பின் வழிப் படிக்கட்டில் அவன் ஒளித்து வைத்திருக்கும் கஞ்சாக் கட்டை. யாரும் கவனிக்காத நேரம் பார்த்து வாங்கி, விதைகளை நீக்கி சுருட்டாகச் சுற்றிப் பற்றவைத்து ஒரு 'தம்' இழுத்துவிட்டால். அன்றைய சோர்வும், உழைப்பினால் ஏற்படும் நோவும் எத்தகைய மாறுதல் அடையும்? அதன் சுகம் அவளுக்குத் தெரிய நியாயமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொன்னாக் கோபம் வருகுது. எப்படியெண்டாலும் போங்க. ஐஞ்சு உசுருகள் உங்களை நம்பிக் கிடக்கு. அத ஞாபகத்தில வைங்க...'' என்று சற்று உறைப்பாகச் சொன்னாள் சல்மா. தன்னை மீறி வரும் துக்கத்தை அடக்க மாட்டாமல், கண்ணீர் வடித்துக் குலுங்கினாள்.

"இவளுக்கு மனுஷண்ட நிலம ஒண்டும் தெரியா மூதேவி..." என்று சொல்லிக்கொண்டு பொருமும் நெஞ்சோடு, எழுந்து நடந்தான், அவன்.

ஸெய்யதுக்கு இன்றைக்கு எந்த வேலையும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. கடைத் தெருவில்,கொழும்பிலிருந்து சாமான் ஏற்றிக் கொண்டுவரும் லொறிகள் எதுவும் வரவில்லை. அதனால் மூட்டைகளைத் தூக்கிக் கூலி பெறும் வாய்ப்பும் இல்லை. 'எல்லாம் அவளோடு சண்டை போட்டுக் கொண்டுவந்த முழுத்தம்' என நினைத்துக் கொண்டு முஸ்லிம் ஹோட்டல் பக்கம் நடந்தான்,

வயிற்றுக்குள் சிறுகுடலைப் பெருங்குடல் நெருக்கிற்று. கையிலிருந்த ஐந்து சத நாணயத்தைக் கொடுத்து 'பிளேண்டி' த் தண்ணீரை ஊற்றிக்கொள்ள உள்ளே நுழைந்தவனை, முதலாளி கூப்பிட்டார்.

"பிளேண்டியைக் குடிச்சிட்டு, வேலை இல்லாட்டி கொஞ்சம் விறகு வெட்டிக் கொடுத்துட்டுப் போ, ஸெய்யது" என்று அவர் சொன்னபோது ஸெய்யது பெரும் திருப்தியோடு ஒப்புக் கொண்டான்.

வேலை முடிந்து வீட்டுக்குப் புறப்பட்டவனுக்கு ஐந்து ரூபா கிடைத்தது. கடையில் ஒரு ரூபாவைக் கொடுத்து ஒருறாத்தல் வட்டர் பாணும், மிகுதிக்கு வாழைப்பழமும் வாங்கிக் கொண்டான். கடையை விட்டு வெளியே கால் வைத்தபோது மாலை ஐந்து மணியாகி விட்டிருந்தது.

'மத்தியானப் பொழுது என்ன ஆயிற்றோ, அவளும் பகலைக்குப் பட்டினி கிடக்க வேண்டுமென்றுதானே குற்றஞ் சுமத்தினாள். இரவைக்காவது ஏதாவது வாங்கிக் கொண்டு போவோமா' என எண்ணியவன், மீதி நான்கு ரூபாவையும், சூடை மீனுக்கும். மரவள்ளிக் கிழங்கு. அரிசி முதலியவற்றிற்குமாகக் கரைத்தான்.

பொதிச் சுமையுடன் வீட்டை அடைந்தவனை, சல்மா வந்து வரவேற்பாள் என்று எண்ணியிருந்தது. ஏமாற்றமாகிவிடவே, பொருட்களை மூத்த மகளைக் கூப்பிட்டுக் கொடுத்துவிட்டு, திண்ணையில் போய் அமர்ந்தான்.

அவளுடைய கோபம் ஆறிவிடவில்லை என்பது அவனுக்கு விளங்கிற்று. அவள் பேரில் மிகுந்த நியாயமுண்டு என்பதை அவன் உணர்ந்தான். பீடியை உதட்டில் பொருத்தி 'தம்' இழுத்துவிட்டு, ஆழ்ந்த சிந்தனையில் தன்னை மறந்திருந்தான், ஸெய்யது.

"இந்தா மகள், இதை வாப்பாக்கிட்டக் கொடு" என்று ஒரு தேனீர்க் கோப்பையையும் வாழைப் பழமும் பாண் துண்டும் வைத்த தட்டொன்றையும் மகளிடம் கொடுத்தாள் சல்மா.

குழந்தைகள் தங்கள் வயிற்றின் கொடுமையைத் தீர்க்க மீதிப் பாண், பழங்களுடன் போராடினார்கள். அவன் தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பப்பட்டிருந்தவற்றிலிருந்து சிறிது எடுத்துக்கொண்டு, ''உம்மாவிடம் கொடு'' என மீதியைக் கொடுத்தான்.

சல்மா அவன் கொடுத்தனுப்பிய பாண் துண்டையும், பழத்தையும் மென்று, ருசித்துச் சாப்பிட்டாள்.

ஸெய்யதுக்குக் குடலுக்குள் என்னவோ செய்தது.

அன்றிரவு கணவனும்,மனைவியும் பேச்சில்லாமல்தான் தூங்கிப் போனார்கள்.

ஸெய்யதுக்கு நடுச் சாமத்தில் விழிப்பு ஏற்பட்டு விட்டது. சல்மாவும் குழந்தைக்குப் பால் கொடுக்க எழுந்துவிட்டாள். முழங்காலைக் கட்டிப்பிடித்துக் குந்தியிருந்தவாறு பீடியைப் பற்றவைத்துக் கொண்டிருந்த ஸெய்யதைப் பார்த்தபோது, அவளுக்கு இரக்க உணர்ச்சி மேலிட்டு விட்டது.

"என்ன நீங்க இன்னும் தூங்கலியா?" என்று கேட்டாள்.

"தூக்கம் வரல்ல: எப்படி வரும்?"

"ஏன்.. ..?"

"பிள்ளைக்குப் பாலைக் கொடுத்துட்டு வா சொல்றன்,"

அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள். அவன் என்ன சொல்வானோ என அவள் பயந்தான்.

குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு மெல்ல நகர்ந்து அவன் தோள்களைத் தன் மென் கரங்களால் தழுவினாள்.

"ஏன் தூக்கம் வரலியாம்?" அவள் அஞ்சுக மொழியில் கொஞ்சினாள்.அவன் அப்படியே தன்னை மறந்துவிட்டான்.

"நீதான் சொல்லணும்?"

"நான் சொல்லணுமா? " என்று கேட்டவள், சிறிது யோசனையில் ஆழ்ந்தாள். இருட்டில் அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அவனுடைய நிலைமை புரிந்தது.

"உங்களுக்கிட்டச் சொன்னால் கோபம் வருமோ தெரியாது. நான் இந்தப் புள்ளப் பொறுவுக்கு ஆஸ்பத்திரியில் இருக்கக்குள்ள, நர்ஸம்மா ஒரு விஷயம் சொன்னா..."

"என்ன விஷயம"

"நாலு பிள்ளைப் பெத்தவங்களுக்கு புள்ளைப் பொறாம இருக்கிறதுக்கு ஆஸ்பத்திரியில் குளிசை கொடுப்பாங்களாம். பிள்ளைட நாப்பதுக்குப்புறவு போடச் சொன்னா. நல்லமாம். ஒரு பக்கட்டு எழுபத்தைந்து சதம்..."

" ஆஸ்பத்திரி எண்டா சும்மதானே..."

" இந்தக் குளிசைக்கு மட்டும் காசாம்..."

" அப்ப, காசு வரட்டும் வாங்குவம்..."

"ஓ! அதனாலென்ன...?" என்று அவள் அவன் காதுக்குள் கிசு கிசுத்தாள்.

19700301



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை

அது கோடை காலத்தின் வெப்பம் மிகுந்த நாட்களில் ஒன்று. வியர்வையும் புழுக்கமும் சகிக்க முடியவில்லை. புளி மூட்டைகளைப் போல் அடுக்கப்பட்டிருந்த சனநெரிசலில் - அதுவும் இ.போ.ச பஸ்ஸில் பிரயாணஞ் செய்வது நரக வேதனையை நிதர்சனமாக அனுபவிப்பது போலத்தான் எனக்குத் தோன்றிற்று. உட்கார இல்லாவிட்டாலும் சரியாக நிமிர்ந்து நிற்கக்கூட முடியாத நிலையில், மின்சாரக்கம்பியில், தலை கீழாகத் தொங்கும் வௌவாலாக, முன்னுக்கும், பின்னுக்கும் தள்ளும் சக பிரயாணிகளின் தொந்தரவையும் பொறுத்துக் கொண்டவனாய், பள்ளிக்கூடத்தில் தேகப் பயிற்சியாசிரியர் சொல்லித்தந்த, 'நிமிர்ந்து நில்' என்ற பயிற்சியை மனத்தில் நினைவு படுத்திக் கொண்டு 'புடலங்காய் பயில்வானாய்' தொங்கிக் கொண்டிருந்தேன். இடக்கையில் இருந்த 'பார்சலை' மார்போடு அணைத்துக் கொண்டேன். 'றைவர்' 'பிறேக்கை' அழுத்தும் போதெல்லாம், தேகப் பயிற்சியாசிரியரின் 'கவனி' என்ற எச்சரிக்கை என் ஞாபகத்திற்கு வந்து உசார் படுத்தியது!

பஸ் எங்கெங்கெல்லாமோ நின்று, இறங்குவோரை இறக்கி விட்டும் ஏறுவோரை ஏற்றிக் கொண்டும் சென்று கொண்டிருந்தது. பஸ் நின்று ஒவ்வொரு 'ஹோல்டின் பிளேஸிலும்' கண்டக்டரின் குரல் சன்னமாக ஒலித்தது.

''முன்னுக்குப் போங்க!''

''அந்தப் பக்கமா இறங்கு!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏறுவதெண்டால் இங்கால வாங்க படிச்சவங்களாம்! ஒண்டும் தெரியுதில்ல.''

''ஏ மனுஷி கொஞ்சம் பொறு. டிக்கட் தராமலா விடுவன்''

அவனது கண்டனத்திலிருந்து பிறந்த ஒவ்வொரு சொல்லும் ஆணித்தரமாக என் காதில் விழுந்து கொண்டிருந்தது -

ஏதோ ஓர் ஊரின் மத்தியில் பெரிய உறுமலுடன் பஸ் நின்றது. சிலர் ஏறினர். கூடவே ஒரு கிழவியும் ஏறுவது தெரிந்தது. அவளுக்கு வயது ஐம்பதிற்குள்ளாகத்தான் இருக்கும். எனினும் தலைமுடி பஞ்சுப் பொதியாகக் காட்சி தந்தது. வரண்டு, சுருங்கிப் போன அவளது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''ஆச்சி டிக்கட் எடுத்ததா?'' கண்டக்டர் கேட்டது என் காதிலும் விழுந்தது. கிழவிக்குக் கேட்டதோ, என்னவோ, பஸ்ஸில் ஏறியதும் ஒரு சீட்டில் இருந்தவர்களை அப்படியே ஒதுக்கிவிட்டு உட்கார்ந்தாள். பக்கத்தில் இருந்து கொண்டிருந்த கால் சட்டை வாலிபரின் பார்வை அவளை எதுவும் செய்துவிடவில்லை. அவருக்கு, அவளின் அழுக்குப் படிந்த சீலையும், வெற்றிலைக் காவியேறிய கொடுப்பால் வழிந்து கொண்டிருந்த வெற்றிலைச் சாறும், காற்றில் பறந்து கொண்டிருந்த பஞ்சு முடியும் அருவருப் பூட்டியிருக்க வேண்டும். மரியாதையாக எழுந்து நின்று விட்டார். கண்டக்டர் தொடர்ந்து வந்து கேட்டான்.

''ஆச்சி டிக்கட் எடுத்ததா?''

ஆச்சிக்குக் கேட்கவில்லை போலும். அவள் யாரையும் கவனித்ததாகவும் தெரியவில்லை. வாயால் வழிந்த வெற்றிலைச் சாற்றை தன் முந்தானையால் இழுத்துத் துடைத்தாள்.

''ஆச்சி ஏன் பேசாம இருக்காய்... டிக்கட் எடுத்ததா?''

அவளுக்குக் கேட்டிருக்க வேண்டும், நிமிர்ந்து கண்டக்டரைப் பார்த்தாள். உலர்ந்து போன தக்காளிப் பழமாகச் சுருங்கித் தொங்கிய முகச்சதைகள் அவனிடம் எதையோ கேட்கவிரிந்தன.

''ஆச்சி இது அரசாங்க பஸ், இதில ஓசியில போக ஏலாது. டிக்கட் எடுக்காட்டி காசைத்தா''

''என்னிட்ட காசில்ல மகன்'' கிழவி சொல்லிவிட்டு தன் பொக்கு வாயால் சிரித்தாள்.

''என்ன காசியில்லயா, இதில சும்மா போறதில்ல. காசியில்லாட்டி கீழ இறங்கு!'' கண்டக்டரின் கண்டிப்பான வார்த்தை இது.

''மகன்...!'' அப்பாவிக் கிழவியின் தாபம் நிறைந்த குரல் இது.

''இந்தா மகன் கிகன் எல்லாம் பிறகு பாப்பம். டிக்கட் எடுக்க, காசில்லாட்டி கீழே இறங்கு. இப்பவே ஓவர் லோட்டு. இடையில செக்கிங் இன்ஸ்பெக்டர் வந்தா... பிறகு கரைச்சல்!''

கிழவி அமைதியாக இருந்தாள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன தம்பி டைம் ஆவுது!'' றைவரைத் திரும்பிப் பார்த்துவிட்டுக் கூறினான், ''கொஞ்சம் பொறுங்கண்ணே. ஏய் கிழவி கீழ இறங்கு இல்லாட்டி பொலிசில பிடிச்சிக் கொடுத்திடுவன்''

கண்டக்டரின் எச்சரிக்கை கிழவியை உலுப்பிவிட்டது. அவனைப் பார்த்து விழித்த கிழவி, சீட்டின் கம்பியைப் பிடித்துக் கொண்டு எழுந்து நிற்க முயன்றாள்.

''இறங்கு'' என்று கண்டக்டர் கிழவியின் தளர்ந்து போன கையைப் பிடித்து தன் 'சாண்டோ' தனத்தைக் காட்டினான். கிழவியொன்றும் பேசாது அவனுக்குப் பின்னாலேயே சென்று கீழே இறங்கினாள். என் நெஞ்சம் துணுக்குற்றது. நான் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகவே பஸ் உறுமிக் கிளம்பிற்று.

'நாமாவது கிழவிக்கு உதவாமல் விட்டுவிட்டோமே. ச்சா... என்ன செய்வது காலங் கடந்த யோசனை, இனிப்பயன் தராது.' நான் அமைதியானேன்.

''இந்தச் சனங்களுக்கு ஒன்டும் தெரியிறதில்ல. அரசாங்க பஸ்ஸில ஓசில போய் பிடிபட்டா தெண்டம் கட்டணும், இல்லாட்டி கண்டக்டர்ர வயிற்றில அடிவிழும் எண்ட தெல்லாம் தெரியிறல்ல. இதுகளுக் கென்னத்துக்கு பஸ். மாட்டு வண்டிதான் நல்லம்'' கண்டக்டர்தான் யாருடனோ பேசினான். சிலர் அந்தப் பேச்சை இரசித்து சிரிக்கவும் செய்தார்கள். 'இல்லாவிட்டால் தங்களையும் பிறடியில் பிடித்துத் தள்ளிவிடுவானோ' என்ற பயமோ என்னவோ?

வேகமாக ஓடிக் கொண்டிருந்த பஸ் இடையில் திடீரென நின்றது. வெளியே உற்றுப் பார்த்த போதுதான் 'சும்மா' நிற்கவில்லை என்பது தெரிந்தது.

வெண்ணிற யூனிபோம் அணிந்த அழகிய யுவதி ஒருவள் நின்றிருந்தாள். பாடசாலையிலிருந்து வந்திருக்க வேண்டும். புத்தகக்கட்டை மார்போடு அணைத்திருந்த அவள், கண்டக்டரைப் பார்த்துப் புன்னகை யொன்றைப் படரவிட்டுக் கொண்டே பஸ்ஸில் ஏறலானாள். கன்னங்கள் செம்மாம் பழமாயின. அவளை உற்று நோக்கிய கண்டக்டரின் இதழ்களில் அவன் உதட்டின் மேலே அரும்பி நின்ற அரும்பு மீசை போன்று இளநகையொன்று மலர்ந்தது. கண்டக்டர் உள்ளே எட்டிப் பார்த்தான். ''லேடிஸ் சீட்டில இருக்கிறவங்களெல்லாம் எழும்புங்க'' என்று கூறிக் கொண்டே, 'பெண்கள் மட்டும்' சீட்டில் இருந்த ஆண்களிடம் வந்தான். கண்டக்டரை முறைத்துப் பார்த்த பிரயாணி அவன் சுட்டிக் காட்டிய எழுத்துக்களைக் கண்டதும் அசடு வழிய எழுந்து நின்றான். கல்லூரி மாணவி தன் யூனிபோமை கையால் ஒதுக்கிக் கொண்டே சீட்டில் அமர்ந்தாள். கருநாகம் போன்று நெளிந்த சடையை முன்னுக்கு இழுத்துவிட்டுக் கொண்டே கண்டக்டரைக் கடைக் கண்ணால் நோக்கினாள்.

பஸ் புறப்பட்டது.

''இந்தாங்க டிக்கட்'' என்று கூறிக் கொண்டே, மிதி பலகையில் நின்றிருந்த கண்டக்டர் டிக்கட்டை நீட்டினான். அவள் டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு தனது அழகிய கைக்குட்டையில் மடித்து வைத்திருந்த இரண்டு ரூபாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோட்டை எடுத்து நீட்டினாள். கண்டக்டர் அதனைக் கவனிக்காதவன் போல தனது டிக்கட் புத்தகத்தில் கணக்குப் பார்க்க ஆரம்பித்து விட்டான். அவள் அவனைப் பார்ப்பதும், ரூபாய் நோட்டைப் பார்ப்பதுமாய் இருந்தாள்.

பஸ் எங்கெங்கெல்லாமோ நின்று ஏறுபவர்களை ஏற்றிக் கொண்டும் இறங்குவோரை இறக்கி விட்டும் சென்று கொண்டிருந்தது. பதினைந்து நிமிடங்கள் கழிந்தன. அவளும் இறங்க வேண்டிய இடம் வந்திருக்க வேண்டும். எழுந்து மணியடித்துவிட்டு, சீட்டின் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றாள். பஸ் நின்றது. அமைதியாக இறங்கிய அந்த அழகிய மாணவி,வழிவிட்டுக் கொடுத்த கண்டக்டரிடம், டிக்கட்டுக்குரிய பணத்தைக் கொடுப்பதற்காக நோட்டை நீட்டினாள்.

"சில்லற இல்லய... பரவாயில்ல வைச்சுக்குங்க மணி" என்றான் கண்டக்டர். மணியின் கண்கள் மின்னி ஒளிர்ந்தன. முகத்தில் செம்மை திரண்டது. அழகிய செவ்விதழ்களில் புன்னகையொன்றை மலரச் செய்து கொண்டே கீழே இறங்கிய அவள் புத்தகக் கட்டை மார்போடு இறுக்கி அணைத்துக் கொண்டு நடந்தாள்.

ஆகா எவ்வளவு அழகிய புன்னகை!

பஸ் புழுதியைக் கிளப்பிவிட்டுக் கிளம்பிற்று. கண்டக்டரின் இடக்கரம் மெல்ல அசைந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணை

பஞ்சபாணன் எய்த கணையிலே மல்லிகையின் சுகந்த மணம் பரவியது. அந்த மணத்தைச் சுகிக்க விழைந்தவனுக்கு எதிராக விதி கணை ஒன்று தொடுத்தது; முடிவு?

அந்த இயந்திரத்தின் ஒரே சீரான இயக்கம், 'டக்கு', 'டக்கு', 'டக்கு' என்று சுருதி கூட்டுகின்றது. அதன் ஓசைலயத்தில் தன்னை மறந்து இலயிப்பவன் போலத் தலையை ஆட்டி, கரங்களை அசைத்து அவன் அபிநயம் பிடிக்கிறான். அப்படிப் பாவனையில் இறங்கி விடுவது அவனுடைய பொழுது போக்கு...

பொழுது போக்கு என்றா சொன்னேன்?

அதன் இயக்கம், அதனுடைய இரைச்சல் அவனோடு தொடர்பான அவலம்... அவனுடைய ஜீவகளையை மிகவும் சிதறடித்து... வாழ்க்கையையே முழியாக்கி, அவனுடைய சகல இயக்கங்களையும் கொன்று, பொழுது போக்காகச் செய்துவிட்டது.

நீண்ட பட்டி, பெரிய சக்கரத்தில் சுழற்சி வேகத்தில் அங்குமிங்குமாய்ச் சுழல, எண்ணை சக்தியாகி, மிச்சில் புகையாகி, ' குப் குப் ' பென வெளிவர அது இயங்கும். வாயை அகட்டி விரிந்து கிடக்கும் வழியூடாக, நெல் மணிகளை வாளி வாளியாகக் கொட்ட, மற்றொரு வழியால் அரிசியும், தவிடும் உமியுமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னா பின்னாப் படுத்தப்பட்டு வெளியே வர அது ...

உழைப்பின் இயந்திரமான அதனோடு, உழைக்கும் இயந்திரமான அவன் இயங்கி இருக்கிறான்.

அந்த இயந்திரத்தின் ஆறுதற் கருவியாக அவள் வருவாள். அவனுக்கான உணவு 'முடிச்சி' அவள் கையில் இருக்கும். உள்ளம் பூரிக்க அவன் இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்துவான்.

அவள் அந்த 'மில்' முதலாளியின் வீட்டில் வேலை செய்தாள்.

அங்கிருந்து அவனுக்கு உணவு கொண்டுவருவது அவளுடைய பொறுப்பு. பாலியப் பருவம் தொடங்கிய வேளை, காலம் அவள் மேனியில் யௌவனக் கோலத்தை இழைத்துப் பணணி விட்ட போதும் அது தொடர்ந்தது...

அவள் நாணம் கலந்த பாவனையோடு பார்த்தாள்.

''ஜஸ்மின் இனி உன்னை மல்லிகை என்றே அழைக்கப் போகிறேன்'' என்று வேடிக்கையாகக் கூறினான் தஸ்லீம்.

''என்னவோ... போ...!'' என்று சொன்னவள், மல்லிகைக் கொத்தை அவன் மீது வீசி அடித்தாள்.

அவன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவள் பாத்திரத்துடன் தண்ணீர் எடுத்துவரக் கிணற்றடிக்குப் போனாள். அவன் வாய், ''மல்லிகை'' என்று முணுமுணுக்க, கண்கள் அவளின் உருவத்தில் மொய்த்திருந்தன.

இன்னொரு தடவை...

காலை உணவுடன் அவள் வந்தாள்.

''மல்லிகை'' என்று அவளை அழைத்து நெருங்கினான்.

''இனி அப்படிக் கூப்பிட்டா எனக்குக் கோபம் வரும்'' என்று பொய்க் கோபத்துடன் அவன் நெஞ்சில் கையை வைத்து ஊன்றித் தள்ளினாள் ஜஸ்மின். அவன் தடுமாறி நின்றான்.

''ஏன் அப்படி...?''

''அப்படித்தான்!'' என்று கடு கடுத்தாள்.

''ஜஸ்மின்...''

''ம்...''

''ஜஸ்மின்!'' அவன் சற்று அதட்டினான்.

''தஸ்லீம்!'' பதிலுக்கு அவளும் அதட்டினாள்.

''ம்...'' அவன்

''தஸ்லீம் நீ, என்னை ஏமாத்தப் பார்க்கிறாய்.''

உண்மையான கவலை அவள் முகத்திலே படிந்தது.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்''

அவள் ; ஜஸ்மின். ஓ! எவ்வளவு இனிமையான பெயர்.

அந்த இனிமையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் கொடுங்கரங்கள் இணைந்து செயற்பட்டுவிட்டனவே!

''இன்றைக்கு மல்லிகையின் மணம் கம கமக்கிறதே'' என்று பீடிகையுடன் ஒரு தடவை அவளை வரவேற்றான் தஸ்லீம்.

''என்ன, மல்லிகையா? எங்கே பூத்துக் கிடக்கு? எனக்கு மல்லிகை என்றால் பிடிக்குமே'' என்று அடுக்கிக்கொண்டே உணவுடன் வந்து சேர்ந்தாள். அவளுடைய கையில் இருந்த உணவு முடிச்சைப் பெற்றுக்கொண்டே, ''இதோ'' என்று அவளைச் சுட்டினான்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''மல்லிகைப் பெண் என்றால் மல்லிகை பிடிக்கும்தானே? '' என்று சொல்லிக் கொண்டு, அவன் எஞ்சின் அறைக்குச் சென்றான். அதனை நிறுத்தினான்.

''என்ன புதுமையான கதை?'' என்று கேட்டவாறு அவனுக்குப் பின்னால் வந்து நின்றாள்.

''அப்படி யொன்றும் புதுமையில்லை, இதோ பார். உனக்காக நான் மல்லிகை கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறித்தான் எடுத்து வைத்திருந்த மல்லிகைக் கொத்தை நீட்டினான்.

அவள் தயங்கினாள்.

''என்னது?''

''இதுவா.... ஜஸ்மின்...''

''பைத்தியம், மல்லிகைப்பூ!'' என்று கல கலவெனச் சிரித்தாள்.

''ஓ! ஜஸ்மின் என்றால் மல்லிகைதான். ''

''வேடிக்கையாயிருக்குதே யார் சொன்னார்கள்? '' என்று கூறிவிட்டு மல்லிகைக் கொத்தைப் பெற்று மோந்தாள்.

''மௌலவியிடம் ஜஸ்மின் என்ற அறபுச் சொல்லுக்கு என்ன அர்த்தமென்று கேட்டேன். அவர் மல்லிகை என்றார்... அதுதான் மல்லிகை - ஜஸ்மின்."

''எனக்கு வீட்டில இருக்கப் பிடிக்கல்ல... உன்னையே நினைச்சு நினைச்சு தூங்கிப் போயிடறதால, இராத்திரி முழுக்க நீதான் கனவில வந்துக்கிட்டிருக்கிறாய். உன்னால பெரிய தொல்லையாய்ப் போயிட்டுது. இனி, உன்னோடய இருந்துடப் போறன்..."

''இருந்திடன்..."

''இருந்திடன் என்று சும்மா சொன்னாப் போதுமா?"

''அப்போ என்ன சொல்லணும்..."

''ம்..."

''உன்னை நான் கல்யாணம் கட்டிக்கிறதாக முடிவுபண்ணியிருக்கிறன், போதுமா...?''

அவள் அவனை ஏறிட்டு நோக்கினாள். அவளுடைய உதடுகளில் புன்னகை மின்னலெனப் பூத்து மறைய அவள் தலை குனிந்தாள்.

''நீ மட்டும் முடிவெடுத்தாப் போதுமா?"

''இல்லை... நீயும் முடிவெடுத்துக் கொள்ளன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் அவங்கிட்ட கேட்டுத்தான் சொல்வேன்.''

"எவங்கிட்ட"

'' அதுதான் முதலாளிக்கிட்ட...''

'' ஓ ! என்று விளித்தவன் அவளுடைய கன்னத்தில் ஒரு கிள்ளு வைத்தான்.

''போக்கிரி " என்று கூறி, அவன் கையைத் தட்டிவிட்டுத் துள்ளி ஓடி மறைந்தாள்.

திருமண முடிவோடுதான் அவள் வருவாள் எனக் காத்திருந்தான். சில நாள்களாக அவள் வரவேயில்லை. ஏதோ ஒரு சாட்டில் அவள் ஒரு பையனிடம் அவனுக்குச் சாப்பாடு அனுப்பி வைத்தாள்.

ஜஸ்மின் என்று அவள் பெயரை செபித்துக் கொண்டிருக்கையில் திடீரென ஒரு நாள், அவள் வந்தாள்.

அவன் 'மெசி' னை இயக்கிக் கொண்டிருக்கும் போது, 'எஞ்சின்' அறைக்குள் அவள் நுழைந்தாள். அவனுக்கு மல்லிகையின் மணம்; மனத்திலே குறு குறுப்பு.

இயந்திரத்தை முடுக்கிவிட்டு, அப்படியே தாவி, அவளைப் பிடித்து அவள் இதழோடு இதழ் பொருத்தி...

அந்தக் கணத்தில் அவள் தடுமாறிப் போக, அவளை அப்படியே விட்டு விட்டு அவன் வெளியே வந்து விட்டான். அவளுக்குப் பொத்துக் கொண்டு வரும் கோபத்தைப் பார்க்க விரும்பவில்லை, அவன்.

ஜஸ்மின் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எழும்புவதற்குள், அவளுடைய சேலைத் தலைப்பு மெசின் சிலிண்டரில் கொழுவிக்கொண்டது. அதன் சுழற்சி வேகத்திலே சேலை உரிய, கையைப் போட்டு இழுக்க முனைந்தாள், அவள்.

விதியின் கொடுங்கரங்கள் அவளை அந்த இயந்திரத்தோடு இணைத்து விட்டது. அவளுடைய போராட்டம் ஓய்ந்தது.

"தஸ்லீம்..." என்று அவள் அலறிய போது, அவன் தன் நினைவே இழந்தவனாக, அங்கே ஓடி வந்தான். இயந்திரம் "டக்... டக்கு... டக்கு..." என்று இயங்கிக் கொண்டிருந்தது. அதன் ஓலம் அவன் செவியை அடைத்து விட்டது.

அவன் 'மெசின்' இயக்கத்தை நிற்பாட்டி முடிக்கு முன்னே ஒரு கை திருகுப்பட்டு முறிந்து, கிழிந்த நிலையில் அவள் தரையில் வீழ்ந்தாள்...

அவனை அந்தக் காட்சி உலுக்கிப் பிழிந்தது.

"ஜஸ்மின்" என்று அவன் போட்ட பேய்க் கூச்சல் அந்த வட்டாரத்தையே உலுக்கி விட்டது.

அதன் பிறகு தஸ்லீம் அந்த இயந்திரத்தை இயக்கவில்லை, அவனும் இயங்கவில்லை... அவனுடைய உள்ளம் உடைந்து, உடல் சோர்ந்து, நினைவுகள் அழிந்து அவன் நடைப்பிணமானான்.

அந்த இயந்திரத்தின் ஓசை மட்டும், எப்போதும் அவன் காதுகளில் ஒலித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறது.

"டக்... டக்கு.. டக்கு.." என்ற ஒரே சீரான ஓசை.

கை நிறையப் பனி நிறைந்த மல்லிகைக் கொத்து. காலையிளம் வெயில் பட்டு மினுமினுக்கிறது. அவளையே சுமந்து செல்வதான எண்ணம் அவனுக்கு. அதைச் சுமந்து செல்லும் போது அவனுடைய ஆத்மா அமைதியுறுகிறது.

சம்பிரதாயமான அமைதியில் ஆழ்ந்து, பயங்கரமாகக் கிடக்கிற, அந்த மையவாடியின் மையக் குழியொன்றில் அவனுடைய நடை தடைப்படுகின்றது.

மையக் குழியின் மேலே குவிந்து கிடந்த மண் மேட்டில் காட்டு மல்லிகைச் செடிகள் பூத்துச் சிரித்த வண்ணம் அவனை வரவேற்றன. வெண்மையும், தூய்மையும், இளஞ்சிவப்பும், செழுமையும் ஆன வண்ணக் கலவைகள்...

அந்த அழகிய வண்ண மலர்ச் செடிகளின் கீழே தான் அவனுடைய மல்லிகையும் புதையுண்டு கிடக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்

பொழுது சாயச்சாய முன்ஸிரின் நெஞ்சம் அமைதி இழந்து தவித்தது. ஒட்டகங்களை மேய்ச்சலுக்காகக் கொண்டு வந்த நேரந் தொட்டு அவர் எதையோ எண்ணிக் கலங்கினார். அவருடைய வழமையான உற்சாகமான பேச்சும், சிரிப்பும் இன்று எங்கோ மறைந்து விட்டதை, உமர் பின் உமையா கவனித்தார்.

"இன்று உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது?" என்று தமது ஆதங்கத்தை வெளியிட்டார் உமர்.

"நமது தோழர்களை விட்டுப் பிரிந்து வந்தது முதல் என் மனம் சரியாய் இல்லை நண்பரே! ஏனோ நான் சஞ்சலமடைந்தவனாக இருக்கிறேன், அங்கே என்ன நடக்கிறதோ தெரியவில்லையே?" இப்படிக் கவலையோடு கூறினார் முன்ஸிர்.

"அப்படி என்ன நடக்கக்கூடும்? நாம் சமாதானப் பணிக்காகத் தானே வந்திருக்கின்றோம்!"

"ஆமாம், அது உண்மைதான். ஆனாலும் எனக்கு மனது நிம்மதியாயில்லையே நாம் இப்போதே புறப்பட்டு பி்ஃருமஊனாவுக்குப் போய்விடுவோம்."

"ஒட்டகங்களின் மேய்ச்சல்...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவற்றிற்கு இன்றையத் தீனி போதும். உமரே புறப்படுங்கள்!"

ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள். புல்வெளியைக் கடந்து, ஈச்சந்தோட்டங்களிடையில் நுழைந்து, மணல் வெளியை அடைந்து, துரிதமாக நடந்தார்கள்.

பி∴ருமஊனா. ஆமாம் மாபெரும் போராட்டக்களம். புனிதப் பணிக்காகத் தூது வந்த அந்த வீரச் செம்மல் களின் இன்னுயிர்களைப் பலி கொண்ட இடம்.

அது, பி∴ருமஊனா, அமைதியில் ஆழ்ந்து கிடந்தது.

நஜ்த் நாட்டுத் தலைவன் ஆமிர் பின்துபைலின் அவைக்குத் தூது சென்ற மூவரும், தோழர்களின் ஒட்டகங்களை மேய்ச்சலுக்காக ஓட்டிச் சென்ற முன்ஸிர், உமர் இருவரும் தவிர மற்று அறுபத்தைந்து முஸ்லிம் தோழர்களும், இறைதியானத்தில் தங்களை மறந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொழுது மேற்கே சரிந்துகொண்டிருந்தாலும், வெய்யிலின் கடுமை வெளியே தலைநீட்ட முடியவில்லை. கூடாரத்தில் யாவரும் அடைபட்டுக் கிடந்தார்கள். மணல் வெளியில் பட்டு, காற்றும் அனலாக வீசிக்கொண்டிருந்தது.

நபிபெருமானார் (ஸல்) அவர்களின் எழுபது தோழர்களை அவர்களின் அனுமதியுடன் அபூபர்ரா∴ என்பவன், நஜ்த் நாட்டுக்கு, இஸ்லாமியப் பிரசாரம் செய்யும் பொருட்டு அழைத்து வந்திருந்தான். மதீனாவில் இருந்து புறப்பட்டுவந்த அந்த எழுபது தோழர்களும் நஜ்த் நாட்டின் எல்லையில் கஸ்வது பி∴ருமஊனா என்ற வெளியில் பாடி அமைத்து இரவைக் கழித்தார்கள். அவர்களுக்குத் தலைமை தாங்கிவந்த ஹராமும், அபூபர்ரா∴வும் அடுத்த நாட் காலையில் நஜ்த் நாட்டுத் தலைவன் ஆமிர் பின் துபைலைச் சந்திக்கச் சென்றார்கள். ஹராம் தம்முடன் துணைக்கு இரு நண்பர்களை அழைத்துச் சென்றார்.

அங்கு சென்றவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை.

தூது சென்ற தோழர்களின் வருகையைச் சிலர் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் தொழுகையிலும், குர்ஆன் ஓதுவதிலும் ஈடுபட்டிருந்தார்கள். அங்கிருந்தவர்கள் அனைவரும் குர்ஆனை மனனம் செய்தவர்களே. இஸ்லாமிய சன்மார்க்க ஞானம் நிறையப் பெற்றவர்களே.

நஜ்த் நாட்டு அதிபனைக் காணச் சென்ற தோழர்களின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் எதையோ கண்டு வியந்து தம் நண்பர்களைக் கூவியழைத்தார்.

"இதென்ன தூசிப்படலம்...!" என்று அவர் உரக்கக் கூவினார். எல்லோரது கண்களும் தூரத்தே எழும்பி வானை முட்டவரும் தூசிப்படலத்தை நோக்கி நிலைத்தன. தூசிப் படலத்தூடே அபாயமிக்க ஆயுதங்களுடன், வெறியாட்டத்துடன் தங்களை நோக்கி ஒரு கூட்டம் வருவதை அவர்கள் அவதானித்தார்கள். கூட்டம் அண்மிக்க, அண்மிக்க கூச்சலும் ஆரவாரமும் வானோக்கி எதிரொலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஹம்மதின் தோழர்களே! உங்களுக்கு அழிவு நெருங்கி விட்டது! இஸ்லாமியப் பிரசாரம் செய்யவா வந்தீர்கள்! அழிந்தீர்கள்" இப்படியான கோஷங்கள் நிலைமையைத் தெளிவு படுத்திவிட்டன. தூதுப் பணிக்காகச் சென்றவர்களைக் கொன்றுவிட்டு, முஸ்லிம்களுடன் வலுச்சண்டைக்கு நஜ்த் நாட்டு அதிபனும் குடிகளும் கிளம்பிவிட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை.

முஸ்லிம்களிடையே சிறிது சலசலப்பேற்பட்டது. உணர்ச்சி நரம்புகள் கொப்பளிக்கத் தொடங்கின. முக்கியமானவர்களிடையே சற்றுநேர ஆலோசனை நீடித்தது.நிராயுதபாணிகளான தாம் அந்தக் கொடிய எதிரிகளை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்ற சிந்தனை... அவர்களை எதிர்த்துப் போராடுவது தவிர வேறு வழி அவர்களுக்கு இருக்கவில்லை.

" நண்பர்களே! இது அல்லாஹ்வின் சோதனை. சத்தியம் என்றும் அழிந்ததில்லை. உண்மை ஒழிந்ததில்லை. இந்த உண்மையை உண்மையாக்க உலகில் எத்தனையோ போராட்டங்கள் - தியாகங்கள் நடைபெற்றிருக்கின்றன. அவையாவும் வீண்போனதில்லை. இதோ உண்மையின் பக்கத்திலிருந்து ஓரழைப்பு எம்மை நெருங்கி வருகிறது. நண்பர்களே, போராடத் தயாராகுங்கள்! தியாகத்துக்கு ஆயத்தமாகுங்கள்! அங்கே நித்தியமான - ஜெயமான வாழ்வு உங்களையும், என்னையும் அழைக்கும் குரல் கேட்கிறது!" என்று ஒருவர் வீறான வார்த்தைகளை அள்ளிச் சொரிந்து, உணர்ச்சியூட்டினார்.

அல்லாஹ் என்ற மந்திர சக்தி எல்லாரையும் பிணைத்து நின்றது. அவர் தம் நெஞ்சங்கள் இன்னுயிரைப் பெரிதெனப் போற்றவில்லை. இறைவழி, இறைநேசம் என்ற உன்னதமான எண்ணம் எல்லாரையும் ஊக்கிற்று. அறுபத்தி ஐந்து பேரையும் கொண்ட அந்தக் குழு சிறுபடையாக அணிவகுத்து நின்றது.

"அல்லாஹு அக்பர்!" என்ற பேரொலி, எதிரிகளின் நெஞ்சங்களில் புகுந்து கலக்கிற்று, அவர்களும் பதிலுக்கு கூச்சல் இட்டார்கள்.

நஜ்த் நாட்டின் வெறிபிடித்த கூட்டமோ நூறாய் ஆயிரமாய் வந்து குவிந்த வண்ணமிருந்தது. அவர்களிடம் கொடிய ஆயுதங்கள் நிறைந்து காணப்பட்டன.

அந்திப்பொழுது மேற்குக் கடலை நோக்கி விரைவாக விழுந்துகொண்டிருந்தது. வானத்தில் செம்மை படர்ந்து அங்கு நிகழப் போகும் இரத்தப் பெருக்கைச் சுட்டிக்கொண்டிருந்தது.

ஒட்டகங்கள் பின் தொடர, முன்ஸிரும், உமரும் மணல் வெளியிலே ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தனர். அந்த மாலை மயங்கும் வேளையிலும் எங்கிருந்தோ பறந்துவந்த கழுகு ஒன்று முன்ஸிரின் தலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உராஞ்சினாற்போல 'உய்ய் !' என்ற இரைச்சலுடன் கிழக்கு நோக்கிப் பறந்தது. அதனைத் தொடர்ந்து பல கழுகுகளும் பருந்துகளும் வானில் வட்டமிட்டபடி பறந்தன.

"உமரே, நான் எண்ணியபடி ஏதோ நடந்துவிட்டது." என்று தொண்டை கரகரக்கக் கூறினார் முன்ஸிர்.

"என்ன நடந்துவிட்டது? ஏன் கழுகுகள் அங்கே வட்டமிடுகின்றன" என்று அவரைத் திருப்பிக் கேட்டார் உமர்.

"அந்த வஞ்சக நெஞ்சன் அபூ பர்ராஃ! நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, நஜ்த் நாட்டுக்கு ஒரு பிரசாரக் குழு அனுப்பிவையுங்கள், அதன் பாதுகாப்பு என்னுடைய பொறுப்பு என்று பன்னிப் பன்னிக் கூறிய போதே நான் நினைத்தேன் : ஏதோ ஒரு சூழ்ச்சித் திட்டம், அவனுடைய நயவஞ்சகச் செயல் உண்டு என்று, நான் நினைத்தபடியே நடந்துவிட்டது நண்பரே! அந்தக் கொடியவர்கள் நம் தோழர்களைக் கொன்று குவித்துவிட்டார்கள் போலும்!" என்று ஆறுதலாகவும் அமைதியுடனும் பேசிக்கொண்டு வந்த முன்ஸிர், ஏதோ ஒரு வேகம் முன்னூன்ற முன்னே ஓடினார். ஒட்டகங்கள் அனாதைகள் போல அவர்களைத் தொடர்ந்து ஓடின.

தங்கள் தோழர்கள் பாடி அமைத்திருந்த பிஃருமஊனா இரத்தக் காடாகிக் கிடப்பதை முன்ஸிர் கண்டார். பீறிட்டு வந்த அழுகையை அவரால் அடக்க முடியவில்லை. துன்பத்தின் அழுத்தத்தால் இதயமே வெடித்துவிடும் போல அவர் துடித்தார்.

" யா அல்லாஹ்! இது உன் சோதனையா?" என்று பிரலாபித்தார்.

ஒருயிர் கூட ஊசலாடவில்லையே. நடந்த நிகழ்ச்சியைக் கூற ஒருவராவது இல்லையே, என்ன நடந்தது?

முன்ஸிர் ஒவ்வொரு உடலாகத் தூக்கிப் புரட்டி , அணைத்து நிறுத்தி அசைத்து அசைத்து கதை கேட்டார். குறையுயிராக ஒருவர்கூட இல்லையே!

"இறைவனே, எங்கள் பணியைப் புனிதமடையச் செய்... இறைவா" என்று விட்டு விட்டுக் கேட்டது ஒரு முணுமுணுப்பு.

"ஆஹா! ...எங்கே அது?" என்றவாறு அங்கே பாய்ந்து சென்றார் முன்ஸிர். குரல் கொடுத்த அந்த உருவத்தை அடையாளம் கண்டு மடிமீது தூக்கி வைத்தார் முன்ஸிர்.

"என்ன, என்ன நடந்தது நண்பரே...?" என்று தம்மையும் மறந்த நிலையில் உலுக்கிக் கேட்டார்.

"நாம் ஜெயமடைந்து விட்டோம் இறைவன் எம்மை ஏற்றுக்கொண்டான். யா அல்லாஹ்!" அந்த உருவத்தின் கண்கள் செருகிக் கொண்டன. குரல் அரிந்து ஓய்ந்தது. மடிமீது கிடந்த தலை ஜீவனற்றுச் சாய்ந்துவிட்டதை முன்ஸிர் உணர்ந்தார்.

"என்ன நீங்களுமா, இல்லை! இறைவா... உனக்கே புகழ் அனைத்தும்." என்று உரக்கக் கூவினார் முன்ஸிர். உடலைத் தரைமீது வைத்தார். அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகம் கப்பிய முகத்துடன் நின்றிருந்த தனது நண்பரை நோக்கி வீரம் செறிந்த வார்த்தைகளை வெளியிடலானார்.

"உமர் பின் உமையாவே! இதோ பாரும். நமது நண்பர்கள் யாவருமே தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துவிட்டார்கள். நாம் இருவர் மட்டும் உயிரோடு இருந்து எதனைக் காண்போம்? அறுபத்தெட்டு ஜீவன்கள் இங்கே புனிதமடைந்துவிட்டனர். நமது தூதுப் பணியும் புனிதமடைந்து விட்டது. புறப்படும், அங்கே அவர்களை அழித்துவிடுவோம்!" என்று ஆவேசமாகக் கூறினார்.

"என்ன சொல்கிறீர்கள்? இந்த நமது தோழர்களால் சாதிக்க முடியாமல் போன காரியத்தையா, நாம் சாதித்துவிடப் போகிறோம். நாம் மதீனாவுக்குத் திரும்பிச் சென்று, நபி(ஸல்) அவர்களிடம் நடந்துவிட்ட நிகழ்ச்சியை எடுத்துச் சொல்வோம்.! என்றார் உமர்.

"என்ன சொன்னீர்! உலகத் தூதரா இதனை அறியாமல் இருப்பார்கள்? வானவர் இங்கு நடந்ததை அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்க மாட்டார்களா? நாம் அங்கு போகத் தேவையில்லை. நமது பணி அங்கு யாதொன்றுமில்லை. உமரே, புறப்படும்" என்று அவர் கூறிய வீர வார்த்தைகள் உமரை ஊக்கிற்று.

இருவரும் அங்கு சிதறிக் கிடந்த ஆயுதங்களில் சிலவற்றைச் சேகரித்துக் கொண்டு வீரா வேசத்துடன் ஊர்ப் புறம் நோக்கிப் பாய்ந்து சென்றார்கள்.

அந்தோ!

அந்த வஞ்சகக் கூட்டத்திடை இவ்விருவர் எம்மட்டு?

பி:ருமஊனாவில் இன்னும் பிணந் தின்னிக் கழுகுகளின் பேய்க் கூச்சல் ஓயவில்லையே!

1971



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணக் கோலம்!

அது யுத்த வேளை.

ஹன்லலாவுக்குப் புதுமண நாள்.

உஹுத் களத்தில் போர் ஆரம்பித்து, உக்கிரமான கட்டத்தை அடைந்து கொண்டிருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்களின் அணிவகுப்பு முறையைப் படையினர் சிலர் மீறியதால், இஸ்லாமியப் படை எதிரிகளால் சூழப்பட்டுச் சின்னாபின்னப்பட்டது. தன்னிலையிழந்து தவித்த படையினரிடையே ஒரே கூச்சல் மயம்.

முஸ்லிம்கள் தோல்வியின் பக்கம் நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்தனர். எனினும் வீரத்துடனும் அஞ்சா உறுதியுடனும் அவர்கள் பின்வாங்காது போராடினர்.

போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் போர்க்களத்தில் எதிரிகளால் பொய்யும் புனைகதைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன.

போர்க்களத்தில் மட்டுமா?

மதீனா நகர் முழுவதுமே பொய்ச் செய்திகள் பரவி மக்கள் பீதியடையலாயினர்.

மணமேடையில் புதுப் பெண்ணுடன் வீற்றிருந்த மணமகன் ஹன்லலாவின் செவியிலும் இந்தச் செய்திகள் விழுந்தன.

அவர் பதறிப் போய்விட்டார். ''முஸ்லிம்களுக்குத் தோல்வியா? இனி இஸ்லாம் வாழ வழியே அற்றுப் போகுமா?, யாஅல்லாஹ்!'' அவரை அறியாமலே நெஞ்சில் திரண்டுவந்த காற்று பெருமூச்சாக வெளிப்பட்டது.

தங்கக்கடைசலிட்டு, தந்தத்தால் வார்த்த சிலையென அருகில் இன்பக் கனவுகளில் மூழ்கியிருந்த தம் அருமை மனைவியை ஏறிட்டு நோக்கினார் அவர். அவளுடைய கன்னங்களில் செந்தாமரை தழும்பேறிற்று. இதயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்பிய இன்பத்தாலும் உடலில் நெளிந்த நாணத்தாலும் அவள் நெஞ்சம் அலைந்தது. குறுகுறுத்த கருவிழிகளைச் சாய்த்து ஓரமாகப் பார்த்து முறுவலித்தாள்...

ஒரேயொரு இரவு: அந்த இன்ப இரவும் கனவாகிக் கழியப்போவதை அவள் உணரவில்லை. ஹன்லலா எண்ணினார்:

''எனது சகோதரர்கள் போர்க்களத்தில் தோல்வியைத் தழுவும் போது நான் மட்டும் இங்கு இந்தப் பூங்கொடியாள் பொன்மேனியைத் தழுவுவதா?'' அவருடைய உள்ளம் வெதும்பிற்று. எப்படியும் எதிரிகளுடன் போராடியே தீர்வது என்று மனத்தில் உறுதி பூண்டார். எழுந்தார். அலைபாய்ந்த நெஞ்சைக் கட்டுப்படுத்துவதற்காக தம்மனைவியைச் சற்று உற்று நோக்கி நின்றார். அவளோ இன்னும் சிறு குழந்தையாக நிலத்தில் காலால் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். அவருடைய தீச்சண்யமான பார்வையைத் தாங்கொண்ணாது அவள் தலைகுனிந்தாள்.

காலை மலர்ந்தது. குளிப்பதற்காக நீர்த் தொட்டி அண்டை அவர் சென்றார். அவருடைய மனம் நிறையவில்லை. அன்று கேள்வியுற்ற செய்திகளில் மனம் இலயித்து மருகிற்று. உஹத் களத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளே அவர் மனக்கண்முன் நிழலாடின. எண்ணங்கள் சிதறிஓட அவர் நீர்த்தொட்டியை விட்டு வெளியே வந்தார். தலையில் இருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக வடிந்தது. குருதி நாளங்கள் உணர்ச்சியால் புடைத்தெழுந்தன. உறைவாளைத் தேடி எடுத்துக் கொண்டு உஹத் களம் நோக்கி ஓடினார் ஹன்லலா.

போர்க்களம் அணி குலைந்து கிடந்தது. எதிரிப்படை முஸ்லிம்களைச் சூழ்ந்துவிட்டது மட்டும் அவருக்குப் புரிந்தது. எதிரிகளிடத்தில் சிம்ம ஏறு எனப்பாய்ந்தார். அவருடைய வேகமான தாக்குதலால் உடல்கள் பல மண்ணில் சரிந்தன. மனித உறுப்புக்கள் பல சிதறின. வெட்டிவெட்டி உதைத்துத் திமிறி எதிரிகளைக் கலங்கடித்தார். வேகவேகமாக அவர் வீசிய வீச்சுகள் எதிரிகளை நிலை குலையச் செய்தன. ஹன்லலா ஆக்ரோஷமாகப் போராடினார். அவருடைய போராட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்தது. அவர் சோர்வுற்றுக் களைத்துப் போனார். அந்தச் சந்தர்ப்பத்தைப் பார்த்துக் காத்திருந்த எதிரியின் தாக்குதலை அவர் சமாளிக்கத் தவறிவிட்டார்.

மணக் கோலம் பிணக்கோலமாயிற்று. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''மணக் கோலத்துடன் போர்க்களம் வந்து புனிதமடைந்துவிட்ட ஹன்லலாவின் பூதஉடல் அல்லாஹ்வின் அமரர்களால் குளிப்பாட்டப்படுகின்றது...''

ஆமாம் சிரசிலிருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக வடிய பிணக்கோலம் புது மணக்கோலமாக ஹன்லலா புறப்பட்டு விட்டார், சுவர்க்கத்தின் பூங்காவை நோக்கி.

*1971 நவம்பர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் வந்தான்

''டேய் காதர், என்னோட போட்டிக்கு வளையம் உருட்டவாறியாடா?'' சலீம் கேட்டான்.

''என்ட வளையம் ஊட்ட இருக்கு, எடுத்துக்கிட்டு ஓடியாறன் நில்லு!'' காதர் கூறிவிட்டு வீட்டுக்கு ஓடிச்சென்று சிறிது நேரத்தில் 'சைக்கிள் றிம்' ஒன்றுடன் வந்தான்.

''சலீம் நீ ஓடி வெல்லனும் டா!'' என்று அங்கிருந்தவர்களில் ஒருவன் வாழ்த்துரைத்தான்.

''பொறுத்துக்கடா, நான் ஓடி வெல்றன்!'' சலீம் தன் சற்றுப் பெருத்த உடலை அசைத்துக்கொண்டே சொன்னான். காதர் சிரித்தான்

''அந்தா பாருங்க, இரண்டுபேரும் இந்தக் கிறவல் றோட்டால போய், வங்காளத்துறையடியில் நிற்கிற பெரிய நெருப்பு வாகையை ஒரு தரம் சுற்றிப் போட்டுத் திரும்பவும் இங்க வரணும், ஆர் முந்தி வாறதெண்டு பார்ப்பம்!'' என்று ஓட்டத்துக்கான நிபந்தனையை விதித்து விளக்கினான் கூட்டத்தில் நின்ற ஒருவன். இருவரும் ஏற்றுக்கொண்டனர்.

''ரைட்டோ?'' நிபந்தனை விதித்தவன் கேட்டான்.

''ரைட்!'' இருவரும் ஒன்றாய்க் கூறினர்.

நிபந்தனைக்காரன் தன் காற் பெருவிரலால் ஒரு கோடு கிழித்தான், இருவரும் தத்தம் சைக்கிள் வளையங்களைக் கோட்டில் வைத்து ஆயத்தமாயினர். இருவர் கையிலும் வளையம் உருட்டும் தடியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியாளர்களின் முகங்களில் வெற்றி பெற வேண்டும் என்ற 'ஆவல்' பொங்கி வழிந்தது. பார்வைகள் போகும் திக்கில் குறியாய் நிலைத்து நின்றன. யார் வெல்வது?

"ஒண்ணயமார்க்!"

"கெற் செற்!"

"கோ!"

வளையங்கள் காற்றாய்ப் பறந்தன. ஒரே நேர்கோட்டில், சற்று முன் பின் என்றில்லாமல் கொஞ்ச நேரம் இருவரும் ஓடிக்கொண்டிருந்தனர். கொஞ்ச நேரம் தான், காதரின் வளையம் சிறிது முன்னேறியது. சலீம் அவனைத் துரத்தி முன்னேற... இருவரும் ஒருவரையொருவர் முன்னே செல்லவிடாது ஓடிக்கொண்டிருந்தனர்.

அந்த வட்டாரத்துச் சிறுவர்களின் பிரபல்யமான விளையாட்டுக்களில் வளையம் உருட்டுவதும் ஒன்று. அவ்விளையாட்டில் காதரும் சலீமும் வீரர்களாய்த் திகழ்ந்தனர். அவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பர்கள். ஒரே பாடசாலையில் ஐந்தாம் வகுப்பில் படிக்கின்றனர். விளையாட்டிலும், படிப்பிலும் அவ்விருவருக்குமிடையே ஒரே போட்டிதான்!

அவர்களுடைய வளையங்கள் உருண்டு வரும் ஒலி 'கார்...' ஒன்று ஒலித்துவர ஆங்காங்கே விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் வீதியின் இருபக்கங்களிலும் கூடி ஆரவாரித்தனர்.

"கமோன் காதர்!"

"கமோன் சலீம்!"

ரசிகர்களின் வாழ்த்தும், உற்சாக உரைகளும் மேலும் வேகத்தைக் கூட்டி வைத்தன. சிறுவர்களில் பலர் "கமோன்! கமோன்!" எனக் கத்திக் கொண்டே அவர்களுக்குப் பின்னால் மூச்சு இரைக்க, இரைக்க ஓடி வந்தார்கள். காதரும், சலீமும் திரும்பிப் பாராமலே முன்னேறினர்.

காதர் தன் வேகத்தில் இன்னும் கொஞ்சம் கவனம் எடுத்தான். ஓரடி, இரண்டடி என்று கூடி வந்தது இடைவெளி. சலீமுக்கு அவனது உடம்பு இடந்தரமறுக்கத் தொடங்கியது. மேல் மூச்சு கீழ் மூச்சு என இரைந்தது. அவன் விடாமல் ஓடிக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் காதரின் வளையம் முன்னேறி விட்டது என்பதை அவனால் உணர முடிந்தது.

நிபந்தனையின் படி பங்காளத்துறைக்குச் சென்று பெரிய நெருப்பு வாகையைச் சுற்றி காதர் திரும்பிக்கொண்டிருந்த போது தான் சலீம் வந்தான். காதர் வெற்றிப் பெருமிதத்தால் மீண்டும் தன் ஓட்டத்தின் வேகத்தைக் கூட்டினான்.

"கமோன் காதர்!" இப்போது காதருக்கு மட்டுமே உற்சாகமூட்டும் வாழ்த்துரைகள் கிடைத்தன. அவனுக்குப் பின்னால் சிறுவர் கூட்டம் ஓடி வந்தது.

சலீம் மரத்தைச் சுற்றி விட்டு வந்தான். அவனுக்குப் பின்னால் உற்சாகமூட்ட யாரும் இருக்கவில்லை. அவனுக்குப் பெருத்த கவலையாய் இருந்தது. உடம்பில் எங்கோ வலி எடுத்தது. வீட்டுக்கு ஓடிப்போய் விடலாமா என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்தான். அப்படி ஓடினால் அவன் அவர்கள் முகத்தில் விழிப்பதில்லையா?

அவன் பல்லைக் கடித்துக் கொண்டு ஓடினான்.

இதற்கிடையில் காதர் பழைய இடத்துக்கு மீண்டும் விட்டான். சிறுவர் கூட்டம் அவனைச் சூழ்ந்துகொண்டு கெக்கரித்தது.

''அந்தா வாறாண்டா சலீம்... ஹே!... ஹே!'' யாரோ கேலியாகச் சொல்லிவிட்டுச் சிரித்தான். சலீமுக்கு அழுகை வரும் போலிருந்தது. அவனுக்கு அங்கு நின்றிருந்த சிறுவர்கள் மீது கோபம் கோபமாக வந்தது. அவன் கத்தினான்.

''சரி'டா அவரு வெத்தி எண்டா, எண்ட வளையத்தை மோதி உடைக்கட்டும்!''

காதரின் வெற்றியை ஏற்றுக் கொள்ள முடியாத சலீமின் ஆற்றாமை குரலில் தொனித்தது. தான் பட்ட அவமானத்தை புதிய நிபந்தனை ஒன்றின் மூலமாய்த் துடைக்க அவன் முயன்றான்.

''எனக்கேலாடா, என்னத்துக்குடா நமக்குள்ள போட்டி!'' காதர் இப்படிச் சொன்னான். தான் தோற்று விடுவேன் என்பதனால் அவன் அப்படிச் சொல்லவில்லை. சலீமுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும் என எண்ணினான். சலீமின் ஆற்றாமையைப் பற்றி அவனுக்குத் தெரியும். சலீமுக்குத் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தெரியாது. எப்படியாவது ஒரு வழியில் வெற்றியை அடையவே முயற்சிப்பான். பரீட்சையில், கணக்கில் குறைவாகப் பெற்று விட்டால் சோர்ந்து இருப்பான். தமிழில் கூடப்பெற்ற புள்ளிகளால் தன் வெற்றியை நிறைவு செய்வான். அவன் குணம் அப்படி.

''பெரிசா ஓடிக் கிழிச்சுப் போட்டாயே எண்ட வளையத்த உண்ட வளையத்தால் மோதி உடை பாப்பம்!, அப்ப தான் நீ வெற்றி!'' சலீம் தன் குணத்தை வார்த்தைகளில் காட்டினான். புதிய சவாலை மற்றவன் ஏற்க வேண்டி வந்தது.

''அது சரிடா அவன் சொல்ற மாதிரிச் செய்டா பாப்பம்!'' யாரோ ஒருவன் சலீமுக்கு ஆதரவாகக் கூறினான்.

காதர் சம்மதித்தான்.

இருவருக்கும் இரு எல்லைக் கோடுகள் வரையப்பட்டன. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி எதிரும் புதிருமாய் நின்றனர். இருவருக்குமிடையில் ஏறக்குறைய நானூறு யார் தூரம் இடைவெளி இருந்தது. பாதித்தூரத்தில் இடைநடுவே ஆரம்பிப்பாளன் உயர்த்திப் பிடித்த கைலேஞ்சு ஒன்றுடன் ஆயத்தமானான்.

அவர்களுக்கிடையில் அங்கு வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்த சிறுவர்கள் சரி பாதியாகப் பிரிந்து ஆதரவாய் நின்றனர்.

ஓட்டத்தை ஆரம்பிப்பதற்கான சமிக்ஞையை இடைவெளியில் நின்றிருந்தவன் கைலேஞ்சியை சற்று மேலும் கீழுமாய் அசைத்துக் காட்டினான். வளையங்கள் வேகமாக உருண்டு வந்தன... போர்க்காளைகளைப் போல அவற்றை ஓட்டி வந்த சாரதிகள் மூர்க்கமாகக் காட்சி தந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையங்கள் வேகமாக... இன்னும் வேகமாக... படுவேகமாக... ஒரே நேர்கோட்டில் ...

''டமார்''

வளையங்கள் வந்து மோதிய வேகத்தில் பலத்த ஓசையுடன் சிதறி விழுந்தன. வளையங்களைப் பார்க்க மத்தியஸ்தர்கள் ஓடினர். காதரும் சலீமும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு சிரிக்காமல் நின்றிருந்தனர்.

''வளையம் உடையல்ல, இன்னொரு தரம் விடுங்கடா!'' யாரோ ஒருவன் சொன்னான். திரும்பவும் பழைய எல்லைக் கோட்டுக்கு அவர்கள் மீண்டனர்.

பழையபடி வளையங்கள் உருண்டன, மோதின, வேகம் போதவில்லை, வளையம் எதுவும் உடையவில்லை!

மூன்றாவது தடவையாக கைலேஞ்சு மேலெழுந்து சரிந்தது. வளையங்கள் முன்பைப் பார்க்கிலும் படுவேகமாக, மூர்க்கமாக ஒன்றையொன்று எதிர்த்து வந்தன. சலீமுக்கு இனம் புரியாத ஆவேசம் வந்து விட்டது! காதருக்கும் அப்படியே. இந்த முறை வளையங்களை உடைக்க வேண்டும். இருவரும் மனதுக்குள் வைராக்கியம் கொண்டனர்.

வளையங்கள் உருண்டன. ''டமார்...!'' பலத்த ஒலி தான். ஒரு வளையம் இரண்டாக வெடித்து நொண்டியடித்து உருண்டது.

காதர் சிரித்தான். வளையம் உருண்டு போய்க்கிடந்த திசையில் வெறித்த பார்வையுடன் சலீம் நின்றான்.

''சலீம் வளையம் உடைஞ்சுட்டுடா!''

''காதருக்கு வெத்தி!''

''காதருக்கு ஜே!'' பல குரல்கள், ஒரே கோஷம். சலீமுக்குத் தாங்கவில்லை. அவன் அவமானத்தால் குன்றிப் போனான். அவனுக்கு என்ன நடந்தது என்றே புரியவில்லை. அவன் கண்களில் கண்ணீர் திரண்டு வந்தது. அவன் நெஞ்சு விம்மிற்று. அவன் அழுகையோடு மற்றவர்களின் மீது அடங்காத கோபம் கொண்டு குமைந்தான்!

''சலீம் அழுறான்டா!''

''ஹே! ஹே!'' கெக்கலிப்புகள்.

சிரித்துக்கொண்டிருந்த காதர் சலீமைத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு சலீமைத் தேற்ற வேண்டும் போலிருந்தது. சற்று முன்னர் அவன் மனத்தில் குடியிருந்த வெற்றிப் பெருமிதம் எல்லாம் எங்கோ மறைந்து விட்டது. காதர் சலீமை நோக்கினான். அவன் தோள் மீது ஆதரவாக அனுதாபத்துடன் கை வைத்தான்.

''போடா போ!'' நெஞ்சில் வைத்துத் தள்ளினான் சலீம்.

''இதை எடுத்துக்கடா உண்ட வளையம் உடைஞ்சு போச்சு!'' காதர் தன் வளையத்தை அவனிடம் கொடுத்தான்.

''எனக்குத் தேவையில்லை''

அவனுக்குக் கோபம் வந்தது. கையை ஓங்கினான். காதர் விலகிக்கொண்டான். அவனுக்குக் கவலையாக இருந்தது. வளையம் உடைந்து விட்டதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் சலீமின் தந்தை வருவது தெரிந்தது. காதருக்கு இருந்த கவலை பயமாக மாறிற்று. ஏதோ குற்றம் புரிந்து விட்ட மனநிலை அவனுக்கு. அவன் தன் வளையத்தை எடுத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் வீட்டை நோக்கி ஓடினான்.

யாரோ ஒரு பையன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திநடந்ததைத் திரித்து, செய்தி கூறினான்.

சலீமின் தந்தை மகனையும் வளையத்தையும் பார்த்தார்.

''சலீம்ட வளையத்தை உடைச்சுப் போட்டான்!''

''அந்தா ஓடுறான்!''

அவருக்கு நடந்தது புரியவில்லை. அவர்கள் கூறியதுதான் தெரிந்தது. அவர் காதர் மீது ஆத்திரப்பட்டார். அவமானத்தாலும் வேதனையாலும் குன்றிப்போய் நின்றிருந்த சலீம் ஒன்றுமே பேச முடியாமல் திணறிப்போனான். அவனுக்குத் தன் தந்தையிடம் வளையம் உடைந்தவிதத்தை எப்படிச் சொல்வது என விளங்கவில்லை.

''உனக்கு ரோஷமில்லயடா!'' சலீமின் தந்தையின் கண்டிப்பு. சலீமுக்கு வேதனை தாழவில்லை. அவர் சலீமை அழைத்துக் கொண்டு, உடைந்த வளையத்தைப் பிடித்தபடி காதரின் வீட்டை நோக்கி நடந்தார். தந்தைக்கும் மகனுக்கும் பின்னால் சிறுவர் கூட்டம் ஓடிற்று.

''இஞ்ச பாருங்க, உங்கட மகன் எண்ட புள்ளட வளையத்தை உடைச்சுப்போட்டு ஓடியாறான்!'' என்று சலீமின் தந்தை அங்கு ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காதரின் தந்தையிடம் கூறினான். காதர் மூச்சு இரைக்க ஓடி வந்து உள்ளே நுழைந்து விட்டதை கண்டிருந்த அவர் உடனே உள்ளே சென்று காதரின் கையில் பிடித்து இழுத்து வந்தார். மற்றக் கையில் வளையம் இருந்தது.

சலீமின் வளையத்தைப் பார்த்தார். மகன் மீது அவருக்குக் கோபம் வந்தது. பளீரென ஓர் அறையை அவன் முதுகில் விட்டார். காதர் நடுங்கிப் போனான். கையிலிருந்த வளையத்தை சலீமிடம் கொடுத்தார் அவர்.

''இந்தா மகன் உனக்குப் புது வளையம்...!'' சலீமுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவன் தாபம், கோபம் எல்லாம் பறந்து விட்டன. அவன் கண்களில் கண்ணீர் வரவில்லை. அவன் கவலை அடைந்தான். வருத்தப்பட்டான். ''வேணாம்!'' என்று கூறிவிட அவன் உதடுகள் துடித்தன. அவன் தன் தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

அப்பார்வையை அவனால் எதிர்கொள்ள முடியவில்லை. சலீம் பேசாமல் வளையத்தை வாங்கினான்.

தந்தையும் மகனும் போனார்கள். காதரின் முதுகில் திரும்பவும் ஓரடி விழுந்தது. அவன் உடலெல்லாம் குலுங்கி அழவில்லை! உள்ளுக்குள் விம்மினான்.

அன்றிரவு சுமார் எட்டு மணியளவில் காதரின் வீட்டுத் திண்ணையில் ஒரு சிறிய உருவம் தயங்கிக் கொண்டு ஏறிற்று. கையில் ஒரு வளையம் இருந்தது.

''காதர் டேய்!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாரு? சலீமாடா, வாடா உள்ள! இதென்னடா நீ அழறே கண்ணைத் துடைச்சுக்கடா! வாப்பா அடிச்சாராடா''

''இல்லை.... எனக்கு உண்ட வளையம் வேணாம்டா, இதைப் பிடிடா''

''ஏண்டா... இது கூடாதா எனக்கிட்ட வேற வளையம் இல்லடா...''

''இது உண்ட வளையம்.... நீ இதை எடுத்துக்கிட்டாத் தான் உன்னோட பேசுவேன் இனி!''

''ஏண்டா? உண்ட வளையத்தை நான் உடைச்சுப் போட்டனடா... உள்ள வாடா இருந்து கதைப்பம்''

''நீ வாங்கிக் கிட்டாத் தான் உள்ளவருவன். உன்னோட கதைப்பன். எங்க வாப்பா உனக்கு வீணா அடி வாங்கித் தந்திட்டாருடா... என்ன மன்னிச்சுக்கடா...''

அவன் கண்களில் கண்ணீர் கரைந்தது.

''ம்...'' என்று கூட்டினான் காதர்.

''இதைப் பிடிடா!''

''நீ வைச்சுக்க...''

''நான் தானடா வலிய உன்னை விளையாடக் கூப்பிட்டன். நீ வெத்தி தான்!''

''ம்... இந்தா உண்ட வளையம் இதை எடு, கோபமில்லயெண்டு சொல்லுடா...''

உரையாடலை உள்ளே இருந்து கேட்டுக் கொண்டிருந்த காதரின் தந்தையின் குரல் ஒலித்தது.

''சொல்லுடா...''

''கோபமில்லை...'' எனறு பரபரப்போடு காதர் சொன்னான்.

''பிடிடா...'' வளையத்தை நீட்டிக்கொண்டு அவன் அழத்தொடங்கி விட்டான்.

காதர் அங்கே ஒரு புதிய மனிதனைக் கண்டு பெருமிதம் அடைந்தான்.

*19751109*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியம் தப்புகிறது

வாப்பாவுக்கு நீஞ்சத் தெரியும்; எனக்கும் நீஞ்சத் தெரியும். சின்ன வயசில், நானும் வாப்பாவும், பொழுது பட்டதுக்குப் புறவு, அத்தாங்கும் கனவா லாம்பும் எடுத்துக்கிட்டு இறால் பிடிக்க ஆத்துக்குப் போவம். கருவண்டன் இறால் கொள்ளை கொள்ளையாக, ஆத்தில முழங்கால்ளவுத் தண்ணியில பூமியோட பட்டாப்போல பதுங்கிக்கிட்டுக் கிடக்கும். நெருப்புக் கண்ணும் துடிக்கிற மீசையுமாக, அதுகள் பதுங்கிக் கிடக்கிறத்த லாம்பு வெளிச்சத்தில வாப்பா கண்டிடுவாரு. நான் லாம்பைப் பிடிச்சிக்கிட்டுப் போவன். எனக்கிட்ட புடிக்கிற இறாலைப் போட்டுக் கொள்ள, குட்டிச் சாக்கு ஆயத்தமாக இருக்கும். வாப்பா அப்படியே அத்தாங்கை, இறாலுக்கு மேலே குப்புற போட்டிடுவாரு. இறால் படபடவெனத் துடிக்கும். வாப்பாட வலது கை அப்படியே இறாலை அப்பிக்கும். குட்டிச் சாக்கில திரும்பவும் படபடப்புக் கேட்கும். இறால் துடிக்கிறத்த நான் உணர்வன்.

அப்பவெல்லாம் எனக்கு நீஞ்சத் தெரியாது.

வாப்பாதாற பத்துச் சதக் காசிக்காக, நான் ஒவ்வொரு நாளும் லாம்பு பிடிச்சிக்கிட்டு போவன். ஆனா... நான் பள்ளிக்கூடத்தில இரண்டாம் வகுப்பு முட வாத்தியாருக்கிட்டப் படிச்சு, அவருக்கு ஏசிப்போட்டு வந்ததுக்குப்புறவு பள்ளிய விட்டிட்டன். அதுக்குப்புறகு நான் வாப்பாவோட தொழிலுக்குப் போகத் துடங்கிட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் வாப்பாவும் விடியறதுக்கு ஒரு சாமத்துக்கு முன்னதாக எழும்பிடுவம். வாப்பா பதினெட்டு முழ வலையை தோளில போட்டுக்கிட்டு நடப்பாரு. நானும் கண்ணக் கசக்கிக் கசக்கி, நித்திரையை விட்டுக்கிட்டு பின்னால நடப்பன். ஆத்தங்கரையில எங்கட தோணி இருக்கும். நான் தோணி தொடுப்பன். நெத்தலி, சூடை, மணலை, மீன் பாட்டம் ஆத்தில கருமையடிச்சிட்டு கிடக்கும். வாப்பா தோணியில நிண்டுக்கிட்டு, முன்னங்கையில, ஈயக்குண்டு கட்டிய வலையை விரிச்சாப்போல ஆயத்தமாக இருப்பாரு. சடாரென வட்டம் போட்டு வலை மேலே எழும்பி விரிந்து தண்ணியில விழும் சலாரென. வலைக்குள்ள அகப்பட்டதைத் தவிர, மற்ற மீன்கள் துள்ளி ஓடும். வாப்பா வலைய மெதுவாக, ஆறுதலாக மேலே மேலே தூக்கி எடுப்பாரு. நான் சவளைத் தோணியோட இணைச்சு, அணைச்சு பின்னுக்கு, வலையின் இழுவைக்குத்தக்க வலிப்பன்.

ஒவ்வொரு பாட்ட வீச்சுக்கும், நாலஞ்சு கயல் மீன்கள், ஏழெட்டுச் சூடைகள், கொஞ்சம் இறால், சில்லறை மீன்கள் இப்படித் தோணிக்குள்ள விழும். சரியாக ஏழு மணிக்கு, சூரியன் எழுவானில ஒரு பாக உயரத்துக்கு எழும்பின பிறவு, தோணியைத் துறைக்கு விடுவம். எங்கட தோணியில குறைஞ்சது பத்து ரூபாவுக்கெண்டாலும் மீன் கிடக்கும். எங்கட மீனை வாங்கிப் போக மீன் யாவாரி இஸ்மான் குட்டி விடியச்சாமமே வந்து காத்துக்கிட்டு இருப்பாரு. எல்லா மீனையும் அள்ளிப்போட்டுக் கொண்டு இஸ்மான் குட்டி பறந்திடுவாரு.

நாங்க வீட்ட போய், தண்ணிச் சோத்தில, இலும்மிச்சம் புளியும் உப்பும் ஊத்தி ஒரு பிடி பிடிப்பம். எனக்குக் கரைச்சுக் குடிக்கிறதுக்கு முந்தி, பழய கறியோட, ஒரு பீங்கான் சோத்த உள்ளபோட்டாத்தான் பசி அடங்கும். புறவு பகல் கறிப்பாட்டுக்கு எங்கட துறையில ஒரு பாட்டம் வீசுவம். சில நேரத்தில நான் மட்டும் போவன்; இல்லாட்டி வாப்பா மட்டும் போவார்...

இதெல்லாம் பழைய கதை. நான் நீஞ்சப்பழகின கதைக்கு வர, இதெல்லாம் ஞாபகத்துக்கு வருகுது...

விடியச் சாமத்தில எழும்புற பழக்கம் எனக்கு முந்தியில்ல. பள்ளியில படிக்கக்குள்ள, ஏழு மணிக்குத்தான் எழும்புவன். வலை வீசப் போய்வாற வாப்பாதான் வந்து, இரண்டு 'போட்டு' எழுப்புவாரு. ஆனா... வாப்பாவோட தொழிலுக்கு போகத் தொடங்கிய காலமாக விடியச் சாமத்திலேயே எழும்ப வேண்டுமாகப் போயிட்டு...

ஒரு நாள் வாப்பா என்னை எழுப்பிப் போட்டுத் துறைக்குப் போயிட்டாரு. நான் கண்ணக் கசக்கிக்கிட்டுப் பின்னால் ஓடிப் போனன். தோணியில ஏறி, சவளைப் போட்டு வலிச்சு, ஒரு பாட்டம் வாப்பா வீசிப் போட்டாரு. நான் மெதுவாகப் பின்னால் வலிச்சிக்கிட்டு இருந்தன். என்னையறியாமலே எனக்குக் கண் மூடிப்போச்சு... அப்படியே கையிலிருந்த சவள் விழ நானும் திடீரெண்டாப் போல கண்ணை முழிச்சுப் பார்த்தன். எனக்கு ஒண்டும் விளங்கல்ல. சவள விட்டத்த வாப்பா கண்டு ஏசுவாரு எண்ட பயத்தில, அவசரமாகக் கையைத் தண்ணியில போட்டன். நான் நினைச்சதுக்கு மாறாகத் தண்ணியில குப்புற விழுந்திட்டன். வாப்பா காணாட்டி நான் அண்டைக்குப் போயிருப்பன். வாப்பா வலையை ஒரே இழுவையாக இழுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு, பாஞ்சு வந்து என்னைத் தோணியில தூக்கிப் போட்டிட்டாரு...

"என்னடா அசனா, நீ இப்படியா அசந்து இருக்கிற?" எண்டு வாப்பா கேட்டது என் காதில விழுந்தது. எண்டாலும் எனக்குக் குளிர் புடிச்சதால நடுங்கிப் போனன்.

"நித்திரை வந்துட்டுது... கண்ணசந்திட்டன், சவள் விழுந்துட்டுது... எடுக்கலாம் எண்டு குனிஞ்சன் தவறிட்டு..." என்று நான் சொன்னன்.

"உனக்கு நீஞ்சத் தெரியணும். பாத்தியா காலம நீ தண்ணியில மூழ்கிடப் போனாய். நம்மட உசிர தண்ணியிலிருந்து காத்துக்கிறதாயிருந்தா நீஞ்சத் தெரியனும்." அண்டு சாயந்த்ரம் வாப்பா சொன்னார். சொன்ன கையோட ஆத்துக்குக் கூட்டிப் போய் நீஞ்சப் பழக்கினாரு. முதலைக் குட்டிக்கு நீஞ்சப் பழக்கணுமா? நான் நீஞ்சப் பழகினன்.

அதுக்குப் புறவு, விளையாட்டுப் போட்டியில வைச்ச நீச்சல் போட்டியில, நானும் போட்டி போட்டு பதினைஞ்சு பேரைத் தோக்கடிச்சு முதல் பிறஸ் எடுத்தன். அது எல்லாம் அந்தக் காலம்... பழைய கதையாகின காலம். அப்ப கூறைப் பாய் வள்ளமும், ஒறுவையுந்தான் கடலுக்குப் போகும். தூண்டல், ஈயக்குண்டு, எறிகவுறு, கம்பான் கயிறு, கணவா லாம்பு; ஊரி இல்லாட்டி இறால் இரை. இதுகள்தான் எங்கட மீன்பிடிக்கிற ஆயுதங்கள். நடுச்சாமம் புறப்பட்டா பொலுபொலுவென விடியிறதுக்குள்ள பத்துப் பண்னெண்டு பாக ஆழக் கடலில் கிடப்பம். தாண்ட கப்பலடி இல்லாட்டி, கருஞ்சேரி முனை இல்லாட்டி ஆணைக்கல்லு எண்டு மதிப்பு வைச்சுக் கிடந்தா, லீவு இல்ல ஒரே இழுவதான். இரண்டொரு மணித்தியாலத்தில் இரையும் முடியும். சரியா உச்சி வெய்யில் நேரத்துக்கு பிழைப்பு முப்பது, நாப்பது.

இப்ப இரண்டாயிரம், மூவாயிரம் தான். அதுக்குக் கொஞ்சக் கஷ்டப்பட வேண்டி கிடக்கும்.

ஆழிக் கடல்ல, கண்ணுக்குத் தெரியாத துலையில, நைலோன் வலையைப் போடணும். 'பெண்டா மெஷின்' இல்லாட்டி இம்மாத்திரம் துலைக்கு வர முடியுமா? பழைய வீச்சு, இறால் பிடி இதெல்லாம் இப்ப சாதாரணம். மாயவலையில மீன் பிடிக்கிற இந்த வேலை வெள்ளைக்கார வேலைதான். கவண்மெண்டு உத்தியோகத்த விட பதினாறாயிரம் மடங்கு பெரிசு. கட்டுப்பாடில்ல. நினைச்ச நேரத்தில், நினைச்ச மாதிரித் தொழில்... காசு.

சுளை சுளையாகக் காசு கிடைக்குதுதான். மனுஷன்ட மூளையில கண்ட கருவிக்ளைத் துணையாகக் கொண்டு மசவுக் கடலுக்கு உசிரப்பயணம் வைச்சுப் போறம். வானத்தில தெரியிற வெள்ளிகளும், சுழிச்சு வீசுகிற காத்தும் எங்கேயோ தூரத்தில இருந்து வார மண்ட மணமும் எங்களுக்கு வழிகாட்டுகிற அந்தத் துணிச்சல், அதனால் தான் பிரயாணப்பட்டுப் போறம்.

கூறப்பாயும், ஒறுவை வள்ளமும் இருந்த காலத்தில கடலில நீண்ட தூரம் போகப் பயம். 'காத்'திருந்தா எப்படியும் மத்தியானம் கரை தட்டிடலாம். 'காத்'தில்லாட்டி, வலி வலியெண்டு வலிச்சு, கையும் மீனும் நொந்து போகிற நேரத்தில கரைக்கு வரணும். இரவையில, விடிவெள்ளி கிளம்புற நேரத்துல புறப்பட்டுப்போனா கடலுக்க பூந்த உடன... கரையில இருக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களெல்லாம் அப்படியே பூமியில பாயும். அப்ப மதியம் இல்லாமல் போயிடும் எண்டு எங்கட பயணத்தை நிறுத்துவம். குடும்பி மலை உச்சிதான் எங்கட மதியம். அது தப்பினா எங்கட உயிரும் தப்பும். இப்படி வாப்பா அடிக்கடி சொல்லுவாரு. குடும்பி மலை, குடும்பி மலை - அது உயிர வைச்சுக்கிற மலை, அது எங்கேயோ இருக்கு. கரைக்குப் போனா அதக் கண்ணால பார்க்க ஏலா. கண்ணால பார்க்காட்டி என்ன, எப்பாவாச்சும் கண்டுக்கத்தான போறம்.

இப்ப குடும்பி மலையும் தெரியாது. பூமியும் தெரியாது. இதையெல்லாம் கவனிக்க இந்தப் பெண்டா மெஷின் தான் விடுதா... வள்ளம் கடலில ஓடிக் கொண்டிருக்கையிலேயே காடு ஓடிமறையிது. குடும்பி மலையும் மேலே எழும்பிக் குதித்துக் குதித்து மறைந்து போகுது. அதுக்குப் புறவு ஆகாயமும் கடலும் ஒண்டாகி உலகமே கடலாகவே மாறி வட்டவடிவமாயிடுகுது. விடியச் சாமத்தில வலையப் பிடிச்சு, வெள்ளி நட்சத்திரங்களின் போக்குப் படி நிலவு போற திக்கில வள்ளம் திரும்பும். எண்டாலும் ஓடு, ஓடு எண்டு ஓடி குடும்பிமலை உச்சி கண்ணில பட்டாத்தான் உயிரு வரும். குடும்பிமலை எங்கடசீவியத்தோடேயே வருகுது.

எனக்குப் பெண்டாமெஷினோட சொந்த வள்ளம், வலையெல்லாம் இருக்கு. எப்படியோ கஷ்டப்பட்டு தேடிப்போட்டன். கடனக்கிடனப் பட்டு இத வைச்சத்தால நானும் இந்த வெட்டையில மனுஷனாக மதிக்கப்பட்டு, நாலு பேரால கதைக்கப்படுறன். ஒரு வீடும் கட்டிப் போட்டன். பச்சைப் பசலி மாதிரி எண்ட குமரும் வளந்துட்டுது. நபீஸா வீவிக்கு வாற வருஷத்தில கல்யாணம் செய்து வைக்க வேணும். அவளும் குமராயி ஒரு வருஷமாயிட்டுது. வீட்டில குமரு ஒண்டு கல்யாணம் ஆகாம காத்துக்கிட்டு இருக்கிறது நல்லதில்லையெண்டு சொல்லுவாங்க; ஒரு குமரு விடுற பெரு மூச்சு அல்லாஹ்ட அர்ஷத்தாக்குமாம் எண்டு நம்மட அப்பன் ஆச்சிமார் சொல்றதைக் கேட்டிருக்கிறன்... ஆனா ஒரு... குமரைக் கரை சேர்க்கிற தெண்டா சும்மாவா?

நபீஸா எங்கட உம்மாவைப் போல, செக்கச் செவேலெண்ட மேனி, அவளைக் கல்யாணம் கட்டிக்க எத்தனையோ பேருக்கு ஆசை. மம்முத் தம்பி முதலாளியும் கேட்டுக் கேட்டு விசளம் அனுப்பிக்கிட்டே இருக்காரு. எண்ட பெஞ்சாதிக்கு அவட காக்காட மகன் சின்னவனை எடுத்து முடிக்கத்தான் விருப்பம். சின்னவனுக்கிட்ட என்னதான் இருக்கு?

எண்ட மூத்த பொடியன் பிறந்த நேரத்தில எனக்குச் சரியான கஷ்டம். நபீஸா வீவீ புறந்ததுக்குப் புறகுதான் நாங்க நல்லா உடுக்கிறதும், தின்றதும். அவள் மூணாம் கால். மூணாம் கால் பொம்புளைப் புள்ள அதிஷ்டம் எண்டு சொல்லுவாங்களே. இப்ப நாங்க வாப்பா மக்கள் மூண்டு பேரும் தான் கடலுக்குப் போறம். எண்ட மூத்த மகன் சேகு எப்படியெண்டாலும் ஒரு போட்டு எடுக்கணும் எண்டு சொல்லிக்கொண்டு இருக்கான். ஆண்டவன் அவன்ட எண்ணத்த நிறைவேற்றுவான். இன்னும் கொஞ்சக் காசி சேத்துக்கிட்டோமெண்டால் போட்டுத் தான். இந்த வள்ளத்தில தூரப் பயணம் நம்பிப்போக ஏலாது. அது இண்டைக்கு நல்லாத் தெரியுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைக்கெண்டு இருந்தாப் போல இந்தக் காத்து இவ்வளவு வேகமா வீசணுமா? சோளக் காத்து வாடை கச்சானாக மாறிப் பேய் பிடிச்சவன் மாதிரி வள்ளத்தைப் போட்டு ஆட்டுது. மலையைப் போல அலையும் எழும்புது. புள்ளையள் பயந்துபோவானுகள். இவன்கள் கடலுக்கு வந்த காலத்தில இப்படியான ஒரு கஷ்டத்தை அனுபவிச்சிருக்க மாட்டானுகள். இப்ப இந்த வள்ளத்தில இருக்கிற மூண்டு பேரில எனக்கு மட்டுந்தான் நீஞ்சத் தெரியும். நீஞ்சத் தெரிஞ்சு என்ன புண்ணியம். வாப்பா சொன்னது ஞாபகமாக இருக்குத்தான். கரைகிட்டவாகவா இருக்கு?

அல்லாஹ்வே, எங்களைக் காப்பாத்து! இந்தக் கஷ்டத்துல இருந்து தப்பி எங்கட புள்ள குட்டிகள்ர முகத்தைப் பார்க்கணும். யா அல்லாஹ்வே! எனக்கு ஒண்டு செய்ய ஏலாப் போல உடம்பெல்லாம் சவுக்குது. "ஷேகு மகன் மெஷின இஸ்டார்ட் பண்ணுடா." எண்டா, "மெஷின் வேலை செய்யல்ல வாப்பா" எண்டுட்டானே.

எனக்கு இடுப்புக் களண்டுப் போச்சே. இப்ப எப்படி கரைக்குப் போற, சவளுமில்லய வலிக்கிறதுக்கு. சவள் இருந்தா வலிச்சி வலிச்சிப் போகலாம்தான். கொஞ்சத் தூரமா?

வாப்பா சொன்ன குடும்பி மலையை விட்டுட்டு இப்படிப் பணத்தாசை பிடிச்சு வந்துட்டோம். இதனால்தான் எங்கட உசிர இப்ப எப்படி எதைக் கொண்டு காத்துக்கிறது எண்டு தெரியல்ல.

அப்படியும் இப்படியுமாக ஒருநாள் கழிஞ்சுட்டுதே. எங்களக் காப்பாத்த யாரும் வரமாட்டாங்களோ! அவன் மம்முத்தம்பி முதலாளிக்கிட்ட 'போட்' இருக்குது தானே. அவனாச்சும் வரப்படாதா! எனக்கு கைகால் சாவுது. என்னால எழுந்து நிண்டு கடலை சுத்தியாச்சும் பார்க்க ஏலாமல் இருக்குதே.

வாப்பா... வாப்பா... யாரோ 'போட்' டொண்டு எடுத்துக்கிட்டு வாராங்க. "உங்கட சால்வையை தூக்கிக் காட்டுங்க..." எண்டு மகன் சொன்னதைக் கேட்டதும் தான் எனக்கு உசிர் வந்துவிட்டது போல இருந்தது. நான் எழும்புறதுக்குள்ள 'போட்' எங்களுக்குக் கிட்ட வந்துவிட்டது.

ஆ... ஆ... தம்பியா... ஆண்டவன் தான் தம்பி உங்கள அனுப்பியிருக்கான்... இந்தக் கடல் அலைகள் போடுற சத்தத்துல இது கேட்கவா போவுது.

"மாமா, மம்முத்தம்பி முதலாளிக்கிட்ட போய் உங்களத் தேடிப் பார்க்கலாம் எண்டு 'போட்'டுக் கேட்டேன். அவர்ர மெஷின் பழுதாயிட்டுது எண்டு சொல்லிப் போட்டு இரவு கடலுக்கு 'போட்'ட அனுப்பிட்டாரு. அதனால வரமுடியல்ல. நம்மட தம்பி லெவ்வையிட 'போட்'ட எடுத்துக்கிட்டு நான் தனிய வாறன்." பட்டும் படாமலும் சின்னவன் தம்பியின் குரல் கேக்குது. அவன் அவட காக்காட மகன்.

19760509



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குடிசை அழிகிறது

அவனுடைய பொறிகள் கலங்கின.

சற்று நேரத்துக்கு முன்னால் காவன்னா மூனாக் கடைக் கணக்குப்பிள்ளை வந்து சொல்லி விட்டுப்போன செய்தியால் அவன் நிலைகுலைந்து விட்டான்.

அவனுடைய இயக்கங்கள் அனைத்தும் ஒடுங்கி, அவன் அசந்து அந்தத் திண்ணையில் குந்தினான்.

பொறிகளில் மெல்ல மெல்ல உணர்வுகள் மீட்சி பெற்றபோது, தான் குந்தியிருக்கும் அந்தக் குடிசையும், அது அமைந்திருக்கும் வளவும், நாளையோ, மறுநாளோ காவன்னா மூனாவுக்குச் சொந்தமாகப் போகின்றது என்ற உண்மை மூளையின் எங்கோ ஒரு மூலையில் உறைக்கத் தொடங்குகையில், அவனுடைய உடலெங்கும் ஒரு விறைப்புத் தன்மை பரவிற்று.

அந்த உண்மையை நிதானிக்கையில்அவனுக்கு நெஞ்சு முட்டவேதனை எழுந்து, பெரு மூச்சாய் வெளியேறியது...

அவனுடைய பார்வை அங்கே அவன் இழக்கப் போகும் ஒவ்வொன்றிலும் நிலைத்து மீண்டது. அவன் தன் கைப்பட நாட்டி நீரூற்றி வளர்த்த, தென்னங்கன்றுகளிலும், மாமரங்களிலும், முருங்கை மரங்களிலும்,பப்பாசிகளிலும் ஏக்கத்துடன் தன் பார்வையைச் செலுத்தினான். அவற்றின் பயனை அனுபவிக்க முடியாமலே, அவன் அவற்றிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைபெறத்தான் வேண்டுமா?...

அவனுடைய இதயம் அழத் தொடங்கியது.

வாசலில் அந்தக் குடிசையின் கூரையை ஒட்டினாற்போல நின்றிருந்த முருங்கை மரத்தில் அவனுடைய பார்வை நிலைக்கையில்; மாலையாய்க் கோர்த்துக் கிடக்கும் நீண்ட காய்களும், செழிப்பான இலைகளும்... ஒரு காற்றடித்தால் 'மளாக்' என்று உடைந்து விடுகிறது. எவ்வளவு தான் உயரமாக செழிப்பாக வளர்ந்தாலும் ஒரு சிறு காற்றுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத பலவீனம்... தன்னுடைய வாழ்க்கையும் இந்த முருங்கை மரத்தைப் போன்றது தானா? என யோசித்தான்.

வெறுமனே பூட்டிக் கிடக்கும் அந்தக் குடிசையின் உட்புறம் அவன் மன வெளியில் உருக் கொள்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னால் 'லொக்', 'லொக்' என்று இருமிக் கொண்டு, எந்த வைத்தியத்திற்குமே கட்டுக்கடங்க மாட்டேன் என்று, மீறிவிட்ட நோயுடன் அவள் படுத்த படுக்கையாய்க் கிடந்த அந்த மூலை இன்று வெறுமையாகி விட்டது.

அவளுடைய தீராத நோயைத் தீர்ப்பதற்காகவும், தன்னைக் கழுத்து நெருக்கிக் கொல்ல முயன்ற வறுமைப் பேயைவிரட்டிடவுமே அவன் காவன்னாமூனாவிடம் சிறுகச் சிறுக, கொஞ்சம் கொஞ்சமாக கடன்படத் தொடங்கினான். காவன்னா மூனா முதலில் எவ்வளவு கருணையோடு அந்தக் கடனை அவனுக்குக் கொடுத்தார் அது இன்று எவ்வளவு பெரிய பூதாகரமாக உருக் கொண்டு விட்டது. அவளுக்காகக் கடன்பட்டான், அவள்கூடப் பிழைத்துக்கொள்ளவில்லை. அவளோடு இந்த இல்லிடமுமல்லவா பறிபோகப் போகிறது? அவன் பார்வை திடீரென்று அடுப்படியில், புகையும் விறகுடன் போராடிக் கொண்டிருக்கும் மகளின் மீது திரும்பியது. அட ஆண்டவனே! நானும் இந்தக் குமரும் நாளைக்கு எந்தக் குளனிக் காட்டுக்குப் போவது! அவள் பிறந்து வளர்ந்த இந்த மண் அவளுக்குச் சொந்தமாகும் என்று எண்ணியிருந்தேனே, அவள் வாழ்க்கையில் மண் வைத்துவிட்டேனே! என்று அவன் எண்ணுகையில் அவன் இதயம் வெடிக்குமாப்போல அடித்துக் கொண்டது.

அவன் காவன்னா மூனாவின் வீட்டிலிருந்து அந்தக் கடனைப் பெறுகையில் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தான். அவனுடைய நினைவுகள் தடம் புரளத் தொடங்கின...

'ஹாஜியார்'

எப்படியோ அவனுடைய வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்தன. மறுபடியும் கூப்பிடுவதா எனத் தயங்கினான். அந்த விடியற் கால வேளையில் தன் அவல நிலையை அவரிடம் எப்படிச் சொல்வது என்று அவனுக்குப் புரியவில்லை. என்ன சொல்வாரோ என்று தயங்கினான்.

காவன்னாமூனா ஹாஜியார் தன்னுடைய பக்கத்து வீட்டுக் கடிதாய் வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு, அந்த வீட்டுக்கு இரண்டாவது தடவையாக அவன் படியேறியிருக்கிறான். அந்தப் பெரிய வீட்டின் கட்டுமான வேலைகள் நடைபெற்றபோது, அவன் அங்கே கூலிவேலை செய்தான். வீடு கட்டி முடிக்கப்பட்டு, அங்கு ஊரெல்லாம் திரண்டு புது மனை புகு விழா நடைபெற்றபோது எடுபிடி ஆளாக வேலை செய்கையில் அவன் அந்த வீட்டின் மூலைமுடுக்குகளெல்லாம் ஏறி இறங்கியிருக்கிறான். சின்ன வீடா அது? ஊரிலேயே ஒருமனதாகப் போற்றிப் புகழப்பட்ட பெரிய வீடல்லவா அது? அந்த வீட்டைப் போல இன்னொரு வீடு இனி யார் கட்டப்போகிறார்கள். இன்னும் கட்டுவதானால் காவன்னா மூனா தான் கட்டவேணும்.. எத்தனை பெரிய வீடு. எவ்வளவு அறைகள்.. குளியலறை,கக்கூசி, குசினி, எல்லாம் வீட்டுக்குள்.. மெத்தையிலும் எல்லாம்... சட்டென்று அவனுக்குத் தன் குடிசையைப் பற்றிச் சிந்தனை திரும்பியது. காவன்னாமூனாவின் இந்த வீட்டுக் குசினிச் சாமான்களைக் கூட போட இடம் காணாது. அவனுடைய சீக்குப்பிடித்த அவளும், அவன் மகளும் எவ்வளவு கஷ்டப்பட்டு இரவிலே ஒடுங்க வேண்டியிருக்கிறது... இந்தப் பெரிய வீட்டுக்குப் பக்கத்தில் அவனுடைய குடிசை பெரிய அசிங்கம்... என நினைத்தான்.

''ஹாஜியார்''

மீண்டும் அவன் கதவில் தட்டிக்கொண்டே அழைத்தான்.

உள்ளே தாழ்ப்பாள் இழுபடும் ஓசை கேட்டது. ''யாரு? '' வேலைக்காரியாகத்தான் இருக்கவேணும்

''ஹாஜியார் இருக்காங்களா?''

''ஓம் பொறுங்க...'' அவள் உள்ளே சென்று சற்று நேரத்துக்கெல்லாம், ஹாஜியார் தன்னுடைய பெரிய வயிற்றைத் தடவி விட்டுக்கொண்டு, கையில் கொண்டுவந்த மக்கத்துத் தொப்பியை தலையில் மாட்டிவிட்டார்.

''என்ன சுலைமா லெவ்வை... இந்த நேரத்தில்...? அவருடைய கனிவான பேச்சு அவன் காதுகளில் இனிமை பாய்ச்சியது...

''ஒண்டுமில்ல...'' என்று தயங்கினான்.

''என்ன வேணும்... ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய், உண்ட முகத்திலே ஏதோ கவலை போலக் கிடக்கு... சொல்லு... ''

''ஒண்டுமில்ல ஹாஜியார். எண்ட பொண்சாதிக்குச் சுகமில்லை, அவவ மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் போகிறேன். அதுக்கு ஒரு நூறு ரூவாக் காசு வேணும்... அதுக்குத்தான் வந்தநான்... ''

''அதுக்குத்தானா இப்படி யோசிக்கிறாய். நாங்க எல்லாம் மனுஷன் இல்லையா, பக்கத்து வீட்டுக் காரனைக் கவனிக்க வேணும் எண்டு நாயகம் ஸல்லல்லாஹு' அலைஹி வஸல்லம் சொல்லியிருக்கிறாங்க...'' என்று சொன்னவர், வீட்டுக்குள் நுழைந்து ஒரு நூறு ரூபாய்த் தாளுடன் வெளிவந்தார். காசுத்தாள் கைமாறியது. அவனுக்கு மகிழ்ச்சி தாழவில்லை. மனைவி குணமடைந்ததுபோல சந்தோஷமாக இருந்தது.

ஹாஜியார் எந்த விதத் தாக்கலும் இல்லாமல், சுணக்கமும் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காசைத் தந்துவிட்டாரே என்பதில் அவரைப் பற்றிய எண்ணம் அவன் மனத்தில் உயர்ந்தது...

இப்படி, இப்படியாகத்தான் அவன் அடிக்கடி அவரிடத்திலே காசு வாங்கினான். அவரும் எந்தவிதத் தயக்கமுமின்றி அவனுக்கு காசை அள்ளிக் கொடுத்து உதவினார்.

சுலைமா லெவ்வையின் மனைவி மட்டக்களப்பு வைத்திய மனையில் செய்து கொண்ட வைத்தியத்திற்கும் சுகமேற்படாதபோது, அவனைக் கூப்பிட்டு, அவனுடைய மனைவியை பதுளையில் இருக்கும் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு ஆலோசனை கூறியதுடன் நின்றுவிடாமல் மேலும் ஐந்நூறு ரூபாய்களை தாராள மனதுடன் அவனுக்குக் கொடுத்துதவினார் ஹாஜியார். ஆனால். அவளுக்கு பதுளை ஆஸ்பத்திரியும் எவ்விதத்திலும் உதவ முடியவில்லை. கையிலிருந்த காசு கரைய அவளை அவன் ஊருக்கு அழைத்து வந்து, நிரந்தரமாகப் படுக்கையில் சாய்த்துவிட்டான். அவள் அதற்குப் பிறகு எழும்புவது அவ்வளவு இலேசான காரியமாகப் படவில்லை... அவனுக்கு...

ஹாஜியாரும் கடன் கொடுப்பதற்கு யோசிக்கத் தொடங்கினார் போல் இருந்தது. ஒரு நாள் அவனைக் கூப்பிட்டு, அவனுடைய கணக்கிலுள்ள தொகையைக் கூட்டி அவர் மொத்தமாகச் சொன்னபோது அவனுக்கு மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது. அந்தத் தொகைக்கு அவனுடைய வீடுவளவை தாக்கல் எழுதித் தருமாறு அவர் கேட்டபோது, அவனுக்கு மறுக்க முடியவில்லை.

அவர் நல்ல மனுஷன், நாம் எப்படியும் உழைத்துக் கொடுத்து வளவை மீட்டுவிடலாம் என்று நம்பி கையெழுத்திட்டான்...

காலம் ஓடிவிட்டது.

இப்போதும் நினைக்கையில் அவருடைய நல்லெண்ணம் தான் அவனுக்குப் பெரிதாகத் தெரிந்தது. கணக்குப் பிள்ளை வந்து சென்றதிலிருந்து அவரின் சூழ்ச்சியான திட்டத்தை அவனுடைய மூளை புரிந்துகொள்ளக் கஷ்டப்பட்டது...

ஹாஜியார் அப்படிச் செய்வார் என்று அவன் நினைக்கவில்லை.

பொழுது விடிந்தது.

'வீட்டை விட்டு எழும்ப மாட்டேன்' என்று ஹாஜியாரின் கணக்குப் பிள்ளைக்கு அவன் சொல்லி அனுப்பிவிட்டான். ஆனால் அவன் தான் அப்படிச் சொன்னது நியாயமில்லை யென்பது இப்போது புரிகிறது. அவனுடைய நல்லெண்ணம் அவனை மனிதனாக்கிக் கொண்டிருக்கையில், அவன் வீட்டை விட்டு வெளியேறிவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டிருக்கையில்தான்...

காவன்னாமூனாவின் பண பலம் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.

அந்த விடியற் காலையிலேயே அங்கு அவன் போட்டிருந்த வேலி மள மள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென உடையும் சப்தம் கேட்டு, அவனுடைய மகள் அவனை எழுப்பிச் சொன்னாள்.

அவனுக்கு ஆத்திரம் தாழ முடியவில்லை.

''யாரடா அது...?'' என்று அவன் ஆவேசத்துடன் பாய்ந்து சென்று, வேலியை உடைத்துக் கொண்டிருந்தவனை தள்ளிவிட்டான்...

''ஏய்... நீதான் ஹாஜியாரின் வளவைவிட்டுப் போக முடியாது எண்டு சொன்னவன். ஓய், உண்ட சாமான்களை எடுத்துக்கொண்டு வெளியே போ!'' என்று அவனை அதிகாரத்துடன் அதட்டிய குரலுக்குரிய ஒரு மனிதன் பிடித்துக்கொண்டான். நாட்டின் சட்டத்தின் பாதுகாவலன் அவன்...

அவன் சிந்தனை அடியோடு மரத்துப் போயிற்று. அப்படி அவன் இருக்கையிலேயே அவனுடைய வீட்டிலிருந்த சாமான்கள் அவன் மகளின் ஒப்பாரிக்கிடையில் வெளியே அள்ளி வீசப்பட, அவனுடைய குடிசை அழியத் தொடங்கியது...

1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் புயலுக்குப் பின்னும்...

மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அப்துல் சத்தார் அவர்களுக்கு காதுக் கெட்டிய செய்தி அவ்வளவு சந்தோஷமானதாய் இல்லை. எப்படிப்பட்ட செய்தி வந்த போதிலும் அவர் அசந்துவிடமாட்டார். எந்தக் கந்தோரிலும் சிற்றூழியர் தொடங்கி, பெரிய அதிகாரிகள் வரை அவருடைய பேச்சுக்கு அடங்கிச் சேவை செய்வார்கள். 'ஐயா' இருக்கும் வரை அதற்குப் பயமில்லை.

ஆனால் இந்தப் பொலிசுக்காரனுகள் இப்போது புதிய ஓஐசி வந்த பிறகு உசாரடைந்துவிட்டார்கள். அவர்களைக் கவனிக்கலாம் என்றாலோ, அதுவும் இலேசாக இல்லை.

எதற்கும் தான் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்துவிட்டார்.

தன்னுடைய நீண்டநாள் கூட்டாளியும், உதவியாளராகவும் இருந்த, உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பெரிய கிளாக்கராக வேலை செய்த - இராச சுந்தரம் கிளாக்கர் பொலிசு வலையில் சிக்கிவிட்டார் என்ற செய்தி வந்ததிலிருந்து அவருக்கு உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது...

இராச சுந்தரம் கிளாக்கர் புயல் நிவாரணப் பொருட்கள் வினியோகத்துக்குப் பொறுப்பாக இருந்தார். கந்தோரில் இருக்க வேண்டிய பொருள்களில் பெருந்தொகையானவை அவருடைய வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததென பொலிசார் கண்டு பிடித்து, அவரையும் கைது, செய்து கொண்டு போய் விட்டார்கள் என்ற செய்தி அவருக்கு எட்டியிருந்தது. இது அவ்வளவு நல்ல செய்தி இல்லைதான்!

''யாராவது குத்திக் கொடுத்திருப்பானுகள்... அரசாங்கச் சாமான்தானே... இந்தக் கஜானாவில் கிளாக்கரும் கொஞ்சம் கொண்டு போயிருப்பார்...''

என்று அப்துல் சத்தார் தன் மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டுவிட்டார். என்றாலும் இந்தப் பாழாய்ப் போனமனம் எதையாவது எண்ணி அரித்துக் கொண்டுதான் இருக்கும்.

ஏஜியேயும், பொலிஸ் இன்ஸ்பெக்டரும் அவரோடு நல்ல பழக்கந்தான். எம்பி ஐயாவோடு இவர் நல்ல நெருக்கம் என்பதால் இவர்கள் எப்போதும் ''தலைவர், தலைவர்'' என்று வாய் ஓயாமல் அழைப்பார்கள். எந்தவிதமான ஊர் விவகாரம் என்றாலும் ஏஜியே இவரைக் கூப்பிட்டு ஆலோசனை நடத்தாமல் விடமாட்டார். எம்பியும் இவரைக் கலந்தாலோசிக்கும் படி ஏஜியேயிடம் கூறியிருப்பார். புயல் வந்த பிறகு, அப்துல் சத்தார் தலைவர் இல்லாமல் 'ஏஜியே' க்கு ஒன்றும் ஓடாது போலிருந்தது... ஆனால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென இந்தச் செய்தி வந்ததிலிருந்து அவருக்கு நிம்மதி இல்லாமல் போய்விட்டது.

அப்துல் சத்தார் அப்படியொன்றும் பெரிய மோசடி எதுவும் செய்துவிடவில்லை!

புயல் வந்தது... 'இன்னும் இன்னும்,

புயல் வரும், வெள்ளம் வரும்...

இனக்கலவரம் வரும்...

அழிவுகளும் வரும்... எல்லாம் வரும், மனிதன் இருக்கும் வரை! இவற்றினாலெல்லாம் என்னென்ன காரியங்கள் நடக்கும் என்று யாரால் சொல்ல முடியும்?

எல்லாம் நடக்கும்!'

இது அவருடைய சமாதானந்தான்.

அப்துல் சத்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக எம்பி ஐயாவின் தயவோடு நியமனம் பெற்றதிலிருந்து மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், வருமானத்தைக் கூட்டுவதற்காகவும் எவ்வளவோ பாடுபட்டுவிட்டார்.

அரசாங்கக் கடன் பெற்று, வங்கிகள் மூலமாக, இயந்திர வள்ளங்களையும், நவீன மீன்பிடி வலைகளையும் தருவித்து, அங்கத்தவர்களுக்குக் கொடுத்து, அதன் மூலம் அவர்கள் உழைத்து முன்னேற வேண்டும் என முயற்சி செய்திருக்கிறார்.

அவருடைய பெரும் முயற்சியாலும், கடும் உழைப்பாலுமே இந்தச் சங்கம் இப்பகுதியிலேயே, சிறந்ததொரு சங்கமாகப் பெயர் பெற்றது. அரும்பாடுபட்டு உழைக்கும் அவர் சங்கத்திலிருந்து எதையும் பெற்றுக் கொள்வதில்லை!

முன்னங்கையில் ஈயக்குண்டு வலையைக் கொசுவிப் போட்டுக்கொண்டு, ஆற்றிலே வீசுவதற்கு ஒறுவையைத் தொடுத்துக் கொண்டு போன காட்சியை இன்னும் அவர் மறந்துவிடவில்லை. இன்று அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் மற்றவர்களும் தன்னையொரு பெரிய மனிதனாகக் கௌரவிப்பதற்கு, இந்தத் தொழில்தான் காரணம் என்பதால், அவர் மீனவர்களை ஒன்று சேர்த்து, சங்கம் அமைத்து அவர்களின் உயர்வுக்கு உழைத்தார்.

அவருடைய உழைப்புக்குக் கூலியாக எல்லாரும் அவரை மதித்தார்கள். அந்தக் கௌரவத்தையே மூலதனமாகக் கொண்டு அவர் செல்வத்தைச் சேர்த்துக் கொண்டார். 'தேன் தொட்டவன் கை நக்காமல் விடுவதில்லை' என்ற தத்துவத்தில் விடாப்பிடியான நம்பிக்கை கொண்டவர் அவர். இந்த உண்மையைத் தெரிந்தவர்கள் யாரும் யாரிடமும் விண்டு சொல்லமாட்டார்கள்.

அப்துல் சத்தார் பொதுத் தேர்தலிலும் பாடுபட்டு ஐயாவை எம்பியாக்கியதாலும், அவர் சக்தியுள்ள மனிதராகிவிட்டார். அதனால்தான் அவர் இந்தப் புயல் வந்ததோடு, சங்கம் என்ற கடையையும் தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த உடைமைகளில் ஒன்றாக ஆக்கிக் கொள்ளும் திராணி பெற்றிருந்தார்.

அவர் அப்படியொன்றும் பிரமாதமாகச் செய்துவிடவில்லை என்றுதான் இதுவரை எண்ணிக் கொள்கிறார்.

பெரும் புயல் 'ஊங்' கென்ற பேரிரைச்சலுடன் சுழன்றடித்தது.

பெரும் பெரும் மரங்களையும், வீட்டுக் கூரைகளையும் குடைசாய்த்துவிட்டது.

ஏழைகளையும், பணக்காரர்களையும் ஒன்றாக்கிவிட்டது என்று சொன்னார்கள்.

உண்மையில் அப்படித்தான். சின்னஞ் சிறுகுடிசைகளிலும், திண்ணைகளிலும் குடியிருந்தவர்கள், புயலுக்குப் பின் தங்கள் குடிசைகளைப் பெருப்பித்துக் கொண்டதோடு தகரக் கூரைகளும் போட்டுக் கொண்டார்கள். கூரைவீட்டுக்காரரோ குடிசைகளுக்காக அலைந்தார்கள். இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்த பிறகு அப்துல் சத்தாருக்குப் புதிய யோசனையொன்று உதயமாகியது. கூரை பறந்தும், சுவர் இடிந்தும் விழுந்த பிறகு, மீனவர் கூட்டுறவுச் சங்கம் கட்டிடமின்றி எப்படி இயங்கப் போகிறது?

புயலுக்குச் சிறிது நாட்களுக்கு முன்பு கொழும்பிலிருந்து கொண்டுவந்த புதிய மீன்பிடி வலைகளையெல்லாம் இரவோடிரவாக வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார். இது அவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமே தெரிந்த விஷயமாக இருந்தது.

அடுத்த நாட்காலையில், முதல் வேலையாக சங்கக் கட்டிடம் உடைந்ததால், அங்கே வைக்கப்பட்டிருந்த அனைத்துப் பொருட்களும் களவாடப்பட்டுவிட்டன என்று பொலிசில் ஒரு முறைப்பாடு செய்தார். கொஞ்ச நாளாகத் தனக்குள் திருப்தியாக இருந்தார்.

ஆனால் இப்போது அது, அவரின் வயிற்றைக் கலக்கும் பெரிய விஷயமாகிவிட்டது!

இராச சுந்தரம் கிளாக்கருக்குப் பிணையும் கொடுக்காமல், விளக்க மறியலில் வைத்துவிட்டார்கள் என்றவுடன், தன்னுடைய வீட்டில் வைத்திருந்த வலைகள் அனைத்தையும் வேறு எங்கேயாவது மறைத்துவிட எண்ணினார். அன்றிரவு அவர் தனது மருமகனின் 'வேனை' எடுத்துக் கொண்டு வந்தார். யாருக்கும் தெரியாமல் வலைகளை வேனில் ஏற்றினார். எங்கேயோ புறப்பட்டார்.

''குத்திக் கொடுத்து கூத்துப்பார்க்கும் அறுவானுகள் சும்மா இருந்தால்தானே! எவனோ கண்ணழிஞ்சுபோவானுகளுக்குத் தெரிஞ்சிபோயிட்டுது''

வேன் வீட்டை விட்டுப் புறப்பட்ட சமயம் பார்த்து வழிமறிக்க வந்தது பொலிசு வண்டி. அப்துல் சத்தார் இனி என்னசெய்வார்?

இந்தப் புயலுக்குப் பின்னும் இனி என்ன நடக்குமோ? அவருக்கு அது தெரியாது!

*1979 ஜனவரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதிய காலை மலர்கிறது

ஆசுபத்திரியில் வாப்பாவைப் படுக்க வைத்திருந்த கட்டிலின் அருகில் நின்றிருந்த என்னை டாக்டர் அழைப்பதாகச் சொல்லிவிட்டு ஒரு நேர்சு சென்றாள். காரணம் என்ன வென்று தெரியாத குழப்ப நிலையில், நான் டாக்டரின் அறையில் நுழைந்தேன்.

''வாரும்!'' என்று என்னை அழைத்த டாக்டர் சுட்டிக்காட்டிய இருக்கையில் அமர்ந்தேன்.

''நீர் படித்த பிள்ளை. உம்மிடம் சொல்வதில் தவறில்லை. உம்முடைய தந்தைக்கு நோய் முற்றிவிட்டது. இனி யாராலும் காப்பாற்ற முடியாது. ஒரு வைத்தியன் நோயாளியைப் பற்றி முடிவாகச் சொல்லிவிடுவதில்லை. ஆனால் நீங்கள் குடும்பமாக இருந்து இரண்டு மாத காலமாக உங்கள் தகப்பனாருக்குச் செய்யும் சேவையைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமாக இருக்கிறது. இன்னும் உங்கள் பணத்தை வீணே செலவு செய்ய வேண்டும் என்று நான் விரும்பவில்லை. உமது தந்தையை வீட்டுக்கு அழைத்துச் சென்று அன்போடு கவனித்துக் கொள்ளுங்கள். இன்னும் சில நாட்களே அவர் உயிரோடு இருப்பார்...!'' என்று வெகு நிதானமாகச் சொல்லிய டாக்டர் என் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

எனக்குத் தலை சுழல்வது போல் இருந்தது. ''இந்த வார்த்தைகளைக் கேட்பதற்குத்தானா இவ்வளவு கஷ்டப்பட்டோம்...!'' என்று குமைந்தேன். நான் பேசுவதற்குச் சக்தியின்றி இருந்தேன். கண்கள் கலங்கியிருக்க வேண்டும். மனது சில்லிட்டு விட்டது.

''நீர் விசயத்தைப் புரிந்து கொள்வீர் என்றல்லவா உம்மிடம் திறந்து சொன்னேன். வாழ்கை என்பது இவ்வளவுதான். நீரும் நானும் ஏன் உலகில் உள்ள அனைவரும் ஒரு நாள் மரணிக்க வேண்டிய கட்டாயத்தில் தான் இருக்கின்றோம். உம்முடைய தந்தையை சில நாள் வாழவைக்கலாம் என்று நான் ஆசைப்பட்டேன். முடியவில்லை. சில மருந்துகள் தருகிறேன் அவற்றை உரிய நேரத்திற்கு கொடுக்கலாம். இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை வந்து நிலைமையை என்னிடம் சொல்லும். சரிதானே! தைரியமாக இரும். நீர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களையும் தைரியப்படுத்த வேணும்... விளங்கிறதா?''

நான் தலையை ஆட்டிவிட்டு எழுந்தேன். அன்றே ஆஸ்பத்திரியை விட்டு வாப்பாவை வீட்டுக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன்.

''ஹஜ்ஜுப் பெருநாளைக்கு, இன்னும் சில நாட்கள்தானே இருக்கு...

அதனால வாப்பாவை வீட்டுக்குக் கொண்டு போய்க் கொஞ்ச நாளைக்கு வைத்திருந்துவிட்டு, திரும்பவும் கொண்டுவரும்படி டாக்டர் சொல்கிறார்... வாப்பாவுக்கும் கொஞ்சம்மாற்றமாக இருக்குமாம்....'' என்று கவலையோடிருக்கும் உம்மாவிடமும், எனது சகோதரர்களிடமும் துணிந்து பொய் சொன்னேன்.

அன்று பின்னேரமே வாப்பாவை அந்தத் தனியார் வைத்தியசாலையில் இருந்து, வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தோம். வாப்பாவும் சிறிது உற்சாகத்துடன் காணப்பட்டார்.

வீட்டுக்குக் கொண்டு வந்த சில நாட்களுக்குள்ளாகவே வாப்பாவின் மனோ நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ''ஹஜ் பெருநாள் எப்போது...?'' என்று வாய் ஓயாமல் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார். ஹஜ்ஜுப் பெருநாளைப் பற்றி அவர் கேட்கும் போதெல்லாம் எனக்குள் ஏதோ ஒரு குற்ற உணர்வுதான் தோன்றிற்று...

வாப்பா இந்த வருஷம் ஹஜ்ஜுக்குப் போக எண்ணியிருந்தார். அவருடைய எண்ணத்தை இறைவன் நிறைவேற்ற நாட்டம் கொள்ள வில்லை... என்று எண்ணும் போது என்னுள் வருத்தம் தோய்கிறது. அவருடைய நோய்க்கும் ஹஜ் நிறைவேறச் சந்தர்ப்பம் கிடைக்காமற் போனதற்கும் நான் தான் காரணமோ எனப்பயப்படுகிறேன். இறைவன் நாடியிருந்தால் யாரும் காரணமாக இருக்க முடியாது என்ற ஆறுதலும் கூடவே என்னுள் எழுந்து கொள்கிறது...

வாப்பாவுக்கு ஹஜ்ஜுக்குப் போகவேண்டுமென்பது வெகுநாளைய ஆசை. அதற்காகக் கொஞ்சம் கொஞ்சமாகப் பணமும் சேர்த்து வந்தார். யார் யாரிடமோ ஆலோசனைகளும் உதவிகளும் கேட்டுக் கொண்டிருந்தார். மக்காப் பிரயாணம் பற்றியும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதில் உள்ள சங்கடங்கள் பற்றியும் ஹாஜி மாரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

பிரயாண ஏற்பாடுகளை நான் விரைவாகக் கவனிக்க வேண்டுமெனச் சொல்லியிருந்தார். பிரயாணக் கடவுச்சீட்டு முதலியவற்றை எடுத்துக் கொண்டு ஹஜ் பிரயாண ஏற்பாட்டுக் குழுவினரைச் சந்திக்கக் காத்துக் கொண்டிருந்த வேளையிலேதான் வாப்பாவுக்குத் திடீரென நோய் ஏற்பட்டது.

ஒரு நாள் கதவு நிலையைப் பிடித்தபடி குனியவோ நிமிரவோ முடியாமல் நெஞ்சுக்குள் வலிக்கிறது எனத் துடித்துக் கொண்டிருந்தார். நாங்கள் எல்லோரும் வாப்பாவோடு துடித்துக் கொண்டோம். உடனடியாக வாப்பாவை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றோம்.

நோய் கடுமையாகிக் கொண்டிருந்த போதிலும் ஹஜ்ஜுக்குப் போகவேண்டும் என்ற எண்ணம் மட்டும் வாப்பாவை விட்டு நீங்கவில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்செல்லச் செல்ல அவருக்கு நோயைப் பற்றி எந்த அக்கறையும் இருக்கவில்லை. நெஞ்சு வலி குறைகின்றபோது மக்காப் பிரயாணம் பற்றியே என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். நானும் அவரைத் திருப்திப்படுத்துவதற்காக எல்லா வேலைகளையும் கவனித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டு வந்தேன். அவர் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டு வந்ததால் ஒரு நாள் நான்,

"உங்களுக்கு நோயும் கடுமையாக இருக்கிறது. இந்த வருஷம் உங்களால் ஹஜ்ஜுக்குப் போக முடியுமென்று நான் நினைக்கவில்லை..." என்று சொல்லிவிட்டேன். அப்போது அவருக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவே இல்லை.

"உனக்கு என்னை ஹஜ்ஜுக்கு அனுப்பச் சம்மதமில்லை. உன்னால் அந்த வேலையைக் கவனிக்க முடியாவிட்டால் சொல்லிவிடு... நான் வேற யாரையும் கொண்டு பார்க்கிறன்..." என்று அவர் சொல்லிவிட்டார்.

அப்போதும் கூட அவருடைய நம்பிக்கையை நான் மனதாரப் பாராட்டினேன்...

நாளாக, ஆக வாப்பாவின் உடல் நிலை மோசமாகிக் கொண்டு வந்தது. அவரால் எழுந்து நடமாட முடியவில்லை. அவரது காலைக் கடன்களை நிறைவேற்ற நாங்கள் யாராவது உதவ வேண்டியிருந்தது. ஆள்மாறி ஆள் நாங்கள் ஒவ்வொருவராக அவருக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் அவர் அருகில் இருக்கும் போதெல்லாம் மக்காவுக்குப் போவது பற்றிய பேச்சுத்தான் நிகழும். ஹஜ்ஜுக்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றி நான் அவருக்கு அடிக்கடி சொல்ல வேண்டியிருந்தது. அவருடைய உடல் நிலை இடம் கொடுக்காத போதிலும் அவர் உள்ளத்தாலும் உணர்வாலும் மக்காவை நோக்கிப் பிரயாணமாகிக் கொண்டிருந்தார். அவருடைய நிலையில் அது ஒன்றே அவருடைய குறிக்கோளாக இருந்தது. அவருடைய நோயைப் பற்றிய முழு விபரமும் அவருக்குத் தெரிந்திருக்க வில்லை. அதன் கடும் தாக்கத்தைக் கூட அவர் மறந்து மக்காப் பிரயாணம் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அவருடைய தெம்பும் உற்சாகமும் எங்களிடத்தில் இல்லை. நோய் எங்களையே வாட்டி வதைத்தது.

கவலையோடு வாப்பாவின் அருகில் அமர்ந்து கொண்டு நான் எதையாவது வாசிப்பேன். சில நேரத்தில் அவருக்காகவும் உரத்து வாசிப்பேன்.

தனியார் வைத்திய சாலையானதால் நாங்கள் குடும்பமாகவே அங்கு குடியிருந்தோம். எமது தாயார், தமையன் மார் இருவர், நான்...

எங்களுக்கான சமையலும் அங்கேயே நடந்தது. இப்படிக் காலம் கடந்தது. ஆனால் நிலைமையில் எவ்வித அபிவிருத்தியுமில்லை.

இப்போது வாப்பாவை ஆசுபத்திரியிலிருந்து வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டோம். இரு தினங்களாக சந்தோஷமாக இருந்த அவர், இன்று ஹஜ்ஜுப் பெருநாள் தினம்... மிக மிகச் சோர்ந்துவிட்டார் திடீரென...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி அவர் பிழைப்பார் என்பது நிச்சயமல்ல...

வாப்பாவின் அந்திம காலம் நெருங்கிவிட்டது.

நேற்றிரவு அவர் இருந்த நிலையிலும் இப்போது காணப்படுகின்ற நிலையிலும் பெருத்த மாற்றம் ஒன்று தென்படுகிறது. அவருக்கு ஏற்பட்ட நோய் முற்றாக மாறிவிட்டது போலிருந்தது. மிகவும் இயல்பாகவே உறங்குபவர் போல படுத்துக் கிடந்தார்! கண்கள் மூடிய நிலை மிகவும் ஆழமான தூக்கத்தைக் காட்டியது. அடிக்கடி தொண்டைக் குழியிலிருந்து மூச்சொன்று கிளம்பி வெளியேறிக் கொண்டிருந்தது. வாப்பாவின் படுக்கைகை சுற்றி யார் யாரோ உறவினர்கள்... சகோதர சகோதரிகள்... கால்மாட்டில் எனது தாயார் கவலையோடு குந்திக் கொண்டிருந்தார்.

எனது மைத்துனர் முறையான ஒருவர் வாப்பாவின் தலைமாட்டில் இருந்து புனிதக் குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார். எல்லாம் ஆயத்தம்...

''நீயும் குர்ஆன் ஓதுமகன்'' என்று எனது தாயார் கூறவே நானும் குர்ஆனை எடுத்துக் கொண்டு தலைமாட்டில் அமர்ந்தேன். நான் குர்ஆனைப் பிரித்து முதல் வசனத்தை ஓதியிருப்பேன்; எனது சத்தத்தை வாப்பா இனங்கண்டிருக்க வேண்டும். வாப்பாவின் தலை எனது மடியை நோக்கி வருவதையும் கையினால் அவர் என்னுடைய தொடைகளைப் பிடித்து தலைக்கு அணைவாக அவற்றை எடுத்துக் கொள்ள முயல்வதையும் உணர்ந்து வாப்பாவின் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன். ஒரு சுகமான தூக்கம் அவரை ஆட்கொண்டது. நான் குர்ஆனை ஓதினேன்.

கண்கள் தொடர, வாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

மனம் வசமிழந்து எங்கோ சென்று கொண்டிருந்தது.

முடிவு காலம் நெருங்கி விட்டதை அறிந்த உறவினரின் கூட்டம் நிரம்பிக் கொண்டிருந்தது. எதையோ எதிர்பார்த்து அது எப்போது நிகழப்போகின்றது என அவர்கள் காத்திருப்பது புலனாகியது.

வாப்பாவின் இன்றைய நிலைமையில் இனிச் சொல்வதற்கோ செய்வதற்கோ ஒன்றுமில்லை என்று நான் எண்ணிக் கொண்டேன்.

நான் வாப்பாவை அடிக்கடி கவனித்துக் கொள்கிறேன். மாறுதல் இல்லை. நானும் கூட யாரையோ எதிர்பார்க்கும் நிலைமைக்கு மாறிவிட்டேன். யாரோ வரவிருப்பதாக ஏதோ ஒரு பிரமை...

வாப்பாவின் கால் மாட்டில் சுவரோரமாக நின்றிருந்த இளைய சகோதரி சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளுக்குப் பின்னால் நின்றிருந்த மற்றச் சகோதரியும் விசும்பினாள். தம்பி முட்டிவரும் சலிப்பை அடக்கிக் கொள்வதற்காக எங்கோ பார்த்துக் கெண்டிருந்தான். மற்றச் சகோதரர்கள் வீட்டுக்கு வருபவர்களுக்கு அமர்வதற்குப் பாய் எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தனர். உம்மாவும் பெண்கள் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு கதவு நிலையைப் பிடித்தபடி நின்றார். ஏறக்குறைய முப்பது வருடகால இல்வாழ்க்கையில் இணைந்திருந்த அவரின் பிரிவு உம்மாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரத்தைக் கொண்டுவருகிறது என்று எண்ணிக் கொண்டேன்.

குடும்பத்தில் வாப்பாவுக்கு எவ்விதப் பொறுப்புகளும் இல்லை. எல்லோருக்கும் எல்லாம் இருக்கிறது. ஆனாலும் இவ்வளவு விரைவாகப் போகும் அளவுக்கு அவருடைய உடல்வாகு இருக்கவில்லை. திடகாத்திரமாக இருந்த அவர் வெய்யில், மழை என்று பாராது எங்களுக்காக உழைத்தார். கடுமையான உழைப்பு அவருக்கேற்பட்டிருந்த நோயை வெளிக்காட்ட வில்லை.

ஆசுபத்திரியை விட்டு வந்த பிறகு, ஒரு முறை மருந்தெடுத்து வந்தேன். மறுமுறை சென்ற போது அவருடைய உடல் நிலை பற்றி டாக்டர் கேட்டார். மாற்றம் எதுவும் இல்லை என்றும் சிறிது சந்தோஷமாக இருப்பதாகவும் சொன்னேன். அவர் ஆச்சரியப் பட்டுப் போனார். அவருடைய முகத்தில் ஏதோ கவலை குடிகொண்டது.

"உண்மையில் உம்முடைய தந்தைக்கு நோயைப் பற்றிய கவலை குறைவு. அதனால் தான் இந்த நோய் ஏற்பட்டும் நீண்ட நாட்களாக உயிர் வாழ்கிறார்" என்று கூறினார்.

ஆசுபத்திரியில் அவரை நாங்கள் கொண்டுவைத்த ஆரம்ப நாட்களில் நடந்த ஒரு சம்பவத்தை விபரித்த அவர் சந்தோஷப்பட்டார். எனக்கும் கூட சிறிது ஆறுதலாக இருந்தது.

உண்மையில் வாப்பா ஓர் உல்லாசப் பிரியர். அவர் எதைப் பற்றியும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. எந்தக் கவலையும் அவரிடத்தில் நீடித்திருந்ததும் இல்லை. அவர் கவலைகளை மறப்பதற்கு எப்படிக் கற்றுக் கொண்டாரோ தெரியவில்லை.

ஆனால் மக்காப் பிரயாணம் போகவேண்டும் என்ற விசயத்தில் மட்டும் அவர் கவலை மிகக் கொண்டிருந்தார். அந்தக் கவலைதான் அவருடைய முடிவை விரைவாக ஆக்கிக் கொண்டிருந்தது என்று நான் எண்ணினேன்.

முதலில் அவரை ஆசுபத்திரியில் தனியாகவே வைத்துவிட்டு நாங்கள் வந்துவிட்டோம். நோயின் ஆரம்ப காலமாதலால் ஆள் தேவையில்லை என்று டாக்டர் சொல்லிவிட்டார். அதனால் எங்களில் யாரும் கூடவே இருக்கவில்லை.

ஒரு நாள்... பூரணை தினம்.

அன்று சந்திர கிரகணம் ஏற்பட்டிருந்தது... இரவு பத்து மணிக்கு மேலே இருக்கும் என்று டாக்டர் சொன்னார்.

அன்று பின்னேரம் வாப்பாவுக்கு நோய் கொஞ்சம் கடுமையாக இருந்ததால் அவரைக் கவனித்துக் கொள்ளுமாறு நேர்சிடம் சொல்லிவிட்டுச் சென்றிருந்தார். வாப்பாவைப் பார்ப்பதற்காக டாக்டர் இரவு ஆசுபத்திரிக்கு வந்தார். அப்போது வாப்பா கூடவே சில நோயாளிகளையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்து முற்றத்திலே நின்று கொண்டு சந்திர கிரகணத்தை வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தாராம்.

"இதென்ன கூட்டம்...?" என்று விசாரித்த போது "நாங்கள் சந்திர கிரகணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறோம் டாக்டர்" என்று வாப்பா டாக்டரைப் பார்த்துச் சொன்னாராம். தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல், "எல்லோரும் உள்ளே போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்" என்று டாக்டர் அதட்டிவிட்டு தாதிகளை அழைத்துக் கண்டித்துவிட்டுச் சென்றதாகச் சொன்னார். உண்மையில் அவருக்கிருந்த நிலைமையில் மயக்கம் ஏற்பட்டிருந்தால் மிகவும் ஆபத்தாக ஆகிவிட்டிருக்கும் என்று கூறினார் டாக்டர். அதன்பிறகு நாங்கள் வாப்பாவுடன் கூடவே இருப்பதென முடிவு செய்தோம்.

நோயின் கடுமையிலும் அவர் வேடிக்கைப் பிரியராக இருந்தது எனக்கு அதிசயமாக இருந்தது.

அதன் பிறகு நிலைமை முற்றிலும் மாறுதல் அடைந்துவிட்டது. முன்பு போல அவர் நினைத்த நேரத்தில் அவரால் நடமாட முடியவில்லை. அந்த நிலைமையிலும் மக்காவுக்குப் போவது பற்றியே அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஹஜ்ஜுக்குப் போக முடியாமல் போய்விடுமோ என்ற கவலை அவரைக் கடைசி நேரத்தில் வாட்டிவதைக்கத் தொடங்கியது.

நான் எவ்விதச் சமாதானமும் கூறமுடியாத நிலையிலிருந்தேன். அது அவருக்கு நிறைவேறவில்லை. எனக்கு வருத்தமாக இருந்தது...

ஏதோ நினைவில் மிதந்து கொண்டிருந்த என்னை மடியில் படுத்துக் கொண்டிருந்த வாப்பாவின் அசைவு திடுக்கிடச் செய்தது.

வாப்பா எனது மடியிலிருந்து கீழே நழுவுவது தெரிகிறது. அவர் மறுபக்கமாகப் புரண்டு படுக்க முனைகிறார். நான் அவருடைய தலையைத் தூக்கி தலையணையில் வைக்கிறேன்.

பெரிய பெரிய மூச்சுக்களாய் இழுத்துக் கொண்டிருந்த சுவாசம் சற்றே அடங்கியிருந்தது.

வாப்பா இயல்பாகவே மல்லாந்து படுத்துக் கொள்கிறார்.

கீழே விலாப்புறத்தில் கிடந்த இரு கைகளையும் எடுத்து மார்பிலே கோர்த்துக் கொள்கிறார். நான் அவருடைய அசைவுகள் ஒவ்வொன்றையும் அவதானித்தவனாக குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தேன். சட்டென அவருடைய கைகளைப் பிரித்து பழையபடியே கீழே விடுவது தெரிகிறது. யார் இதைச் செய்தார்கள் என நான் அண்ணார்ந்து பார்த்தேன். எனது கடைசித் தங்கைதான் இப்படிச் செய்துவிட்டு நிற்கிறாள்.

நெஞ்சிலே கையைச் சேர்த்துக் கட்டிக் கொண்டால்...

அவளுக்கு பயமேற்பட்டிருக்க வேண்டும். அது ,தக்பீர், நிலைதானே. தக்பீர் நிலைக்கு கைகள் வந்துவிட்டால் முடிவு நெருங்கிவிட்டது என்று அர்த்தமா? நான் கைகளைத் தூக்கி மார்பிலே சேர்த்து விடுகிறேன். தங்கச்சியின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் என் கைகளை நனைக்கிறது.

அவள் எங்களில் கடைக்குட்டி. பதினாறு வயதிலேயே அவளுக்குத் திருமணத்தை முடித்து வைக்க வேண்டுமென வாப்பா அவசரப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சின்னப் பிள்ளைதானே!'' என்று நாங்கள் சொல்லிப்பார்த்தோம். தன்னுடைய கண்மூடுமுன்னே அவளுடைய திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்று அவர் முடிவாகச் சொல்லிவிட்டார். நாங்கள் அடங்கிப் போனோம்.

அவளுக்கும் நல்லதொரு வாழ்க்கை கிடைத்துவிட்டது.

இந்த எண்ணச் சுழிகளினூடே என்னுள் திடீரென ஒரு பரபரப்பு நிகழ்கிறது.

வாப்பாவைச் சட்டென அவதானிக்கிறேன்.

வாசலில் நின்றிருந்த கோழிச் சேவல் ஒன்று அழகாகக் குரல் எடுத்துக் கூவியது. அப்படி அது அடிக்கடி கூவிக் கொண்டிருக்க அது அதிகாலை வேளையல்ல. அது ஏன் இப்படிக் கூவுகிறது? என்று எண்ணிக் கொள்கிறேன். 'மலக்குகளைக் கண்டால் கோழிச் சேவல் கூவும்' என்று யாரோ வயதானவர் கூறியது எனக்குக் கேட்டது. நான் குர்ஆனைச் சட்டென மூடினேன்.

'வாப்பாவுக்கு ஒரு புதிய காலை மலர்கிறது' என்று எண்ணிக் கொண்டேன். அதற்குக் கட்டியம் கூறவே அந்தக் கோழி கூவுகிறதென்று எண்ணியவாறு வாப்பாவைப் பார்க்கிறேன். அவருடைய வாய் எதையோ முணு முணுக்கிறது என்பதை வாய் அசைவிலிருந்து புரிகிறேன். நானும் யாரையோ எதிர்பார்த்து என்னுள் 'ஸலாம்' சொல்கிறேன். குளிர் காற்றொன்று சில்லென்று வீசுகிறது. யாரோ வீட்டுக்குள் சடுதியாக நுழைந்துவிட்ட பிரமை. யாரென்று தெரியவில்லை.

ஒரு கணம் எங்கும் நிசப்தம்... அந்த நிசப்த வேளையில் எனக்குள் மூச்சுத் திணறுகிறது.

வாப்பாவைக் கவனிக்கிறேன்....

ஒரு சிறிய அசைவு... அந்தச் சிறிய அசைவில் அவருடைய இறுதி மூச்சு... 'அதோ பிரிகிறது' என்று துடித்துக் கொண்டு மூக்கில் கைவைக்கிறேன். ஆசுவாசமான நிலை... சிறிது திறந்திருந்த கண்களை இறுதியாக கசக்கி மூடிவிடுகிறேன். எனக்குள் ஓர் எல்லையில்லாத அமைதி. மனது இலேசாகிவிட்டது.

''ஒரு சீலைத் துண்டு எடுங்க'' என்று நான் சொல்கிறேன்.

எல்லோரும் பரபரப்படைகிறார்கள்.

''என்ன? '' என்று ஆச்சரியமான பலரது குரல்கள் என் செவியில் விழுகின்றன.

''இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்... உன்னிடத்திலிருந்தே வந்தோம்... உன்னிடத்திலேயே திரும்புகிறோம்...!'' என்று என் வாய் முணுமுணுக்கிறது.

யார் யாரோ விசும்புகிறார்கள்...

என்கண்களையும் நான் துடைத்துக் கொள்கிறேன்.

*19800824*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்மா

உன்னை நினைக்கையில் என் உள்ளம் உருகுகிறது. கண்களில் இருந்து கண்ணீர் வழிகின்றது.

இரக்கம் இல்லாத உன் நெஞ்சில் என்னுடைய இணைப்பேது? ஈரமில்லாத உன் கண்களிலே நீருமுண்டா? கல்நெஞ்சா? என்று குமுறிடும் உன் குரல் எனது செவிப்பறையைத் தகர்க்கின்றது...

உம்மா...

காலம் கடந்து 'கபுறு' பீடத்தின் ஞானோதயம் இப்போது பழுத்திருக்கின்றது. துன்பமும் துயரமும் தணியவைத்த ஞானப்பழம் இது.

இன்னும் சில நாட்களில் அழுகி முடை நாற்றம் வீசப் போகின்றது.

நீ இப்போது எனக்கு கைக்கு எட்டாத கனியாகி விட்டாய். எனது இனிய கனியைப் பேணிச் சுவைக்க முடியாத மூடன் நான் அன்று.

கையிலே நெய்யை வைத்துக்கொண்டு தெருவெல்லாம் வெண்ணெய் தேடி அலைந்த துரதிஷ்டன்.

நான், உன் ஊனத்தில் விளைந்தவன்...

உன் உந்தியிலே வேரூன்றியது எனதுயிர்.

உன் உந்தியிலே கருக்கொண்டது எனது புத்தி. இவை, எதுவுமே உனக்காக எவ்வித சாந்தியும் செய்யவில்லை இதுவரை! பணம், பெண், பொருள், புகழ் எனும் மாயம் விளைத்த மூடக் குருட்டாட்டத்தில் மனம் மாறிய 'மனுஷன்' நான்.

அப்போதெல்லாம்...

வாழ்க்கை என்றும் நிலையானது. அழகு எப்போதும் அழியாதது என்று எண்ணியவனாய், ஆராதித்து உன் மருமகளின் காலடியில் வீழ்ந்து கிடந்தேன். என் இனிய கனவுப் பூக்கள் என பிள்ளைகளில் மொய்த்திருந்தேன். உலகமும் அதன் இனிமைகளும் செல்வமும், சுவனமும், சுகமும் என எண்ணி விட்டேன். உன்னைப்பற்றி எண்ணும் மனம் ஏனக்கு இருக்கவில்லை...!

உம்மா...

நான் பெற்றுள்ள அனுபவம் என்கிற ஆயிரம் அவமரியாதைகள்.

எனக்கு இந்த ஜென்மத்துக்குப் போதும்... போதும்... உண்மையில் நேற்று விதைத்துவிட்ட விதை இன்று முளைத்துப் பயிராகி விளைந்துவிட்டது.

அன்று காட்டிய அட்டகாசம் இன்று பலன் தந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சாணியிலிருந்த கௌரவம் 'இவ்வளவுதான்!' எனக் கீழிறங்கிவிட்டது.

உன்னை அவமதித்து நடந்த நான் இன்று எப்படி இருக்கிறேன் தெரியுமா?

ஆஹா!

இன்று நீ என்னைப் பார்க்க நேர்ந்தால், நிச்சயமாய் உனது ஆத்மா சாந்தியடையும்.

இல்லை!

இது கல்லாகிவிட்ட என் நெஞ்சின் சாட்சியமே!

நீயோ தாய்! தாய் மனம் பித்து... கரைந்துவிடும். என் நிலையை இப்போது நீ கண்டாயானால்...

உம்மா கரைந்துவிடுவாய்.

உன் நினைவு வருகையில் என் கண்களில் இருந்து கண்ணீர் வருகிறது...

எனக்கு ஞாபகம் வருகிறது. ஞாபகமாவது இருக்கிறது. என்னுடைய ஆத்மாவில் ஊடுருவி என்னைக் கொன்று கொண்டிருக்கிறது.

ஒருமுறை, அந்த ஒருமுறை மட்டுமல்ல...

எந்த முறையுமே எனது தாயின் விசயத்தில் மனிதனாக இருக்கவில்லையே நான்.

அன்று எங்கேயோ சென்றுவிட்டு எனது வீட்டுக்கு வந்திருந்தேன். வந்ததும் வராததுமான அவ்வேளையில், நீயோ என் முன்னால் காட்சி தருகிறாய். கிழிந்த பாயொன்றில், அழுக்கும் தூசும் படிந்த ஆடையும், கூனிக்குறுகிய உடலுமாய், வெற்றிலைக் காவி ஏறிய பற்கள் முன் நீண்டிருக்க வாசலிலேயே குந்திக்கொண்டிருந்தாய். உன்னைக் கண்டாலே எனக்கு எப்போதும் பிடிப்பதில்லை. அந்தக் கோலத்திலே உன்னை வாசலிலே கண்டவுடன் எனக்கு எரிச்சல் பற்றியது. உனது வயதான தோற்றம்... எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. நீ எனக்குச் சுமை போலத் தென்பட்டாய். சொர்க்கமும் சுகமும் அவள் ; எப்போதும் என்னருகில் தேனாய் செவிவழி பாயும் அவளினிய குரல்... மந்திரம் தோய்ந்த தேன் துளிகள் என எண்ணி மயங்கியிருந்தேன்.

"வர வர, உங்க உம்மாவின் தொல்லை பொறுக்கமுடியல்லை. நாலு பெரிய மனுஷர் வர்ர இடத்தில குந்திக் கொண்டு, வெத்தில எச்சில துப்பிக்கிட்டிருக்கிறா..." என்று அவள் என்னை வரவேற்றாள்.

அந்த மாயக்காரியின் வார்த்தைகள் அப்போது தேன்துளிகளாய் இருக்கவில்லை. வீசியெறிந்த நெருப்புத் துண்டங்களாக எரிந்தன.

அடுத்த கணமே உன் அருகில் நான் நின்றேன்.

"உனக்கு வேற வேல இல்லையா, இங்க வந்து வாசல்ல குந்திக்கொண்டு எச்சிலை துப்பிக்கொண்டு இருக்கிறாய்?... எழும்பு... போ...போ...!" என்று கத்தினேன். ஒரு நாயை அப்படி விரட்டியிருந்தால் நிச்சயமாக அது என்னைக் கடித்துக் குதறியிருக்கும். தாயை விரட்டி ஓட்டுகிறோம் என்ற நினைப்பே இல்லை எனக்கு.

"ஏண்டா மகனே! என்னை. இப்படி ஏசி விரட்டுகிறாய். போகச் சொன்னால் போய்விடுவேனே!" என்று கூறிய பின்பும் அமைதியாக அங்கேயே நீ இருந்தாய்.

"உனக்கு என்ன சொன்னாலும் விளங்காது. இங்க வரவேணாம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தரம் சொல்றது! எழும்பு..."

என்று நான் கூறியபடி குனிந்து உன் கைப்பட்டையைப் பிடித்து, தூக்கிவிடுகிறேன்.

எனக்கு எனது பிடிவாதம்தான் பெரிது. உன் தொய்ந்து போன உடலில் எனது வலுவான கைபட்டதும் வலியேற்பட்டிருக்க வேண்டும்.

உனக்கு வந்ததே கோபம். எங்கிருந்து வந்ததோ அந்த அசுரபலம். உம்மா நீ என்னைத் தள்ளிவிட்டாய். நான் நிலை தடுமாறி விடுகிறேன்.

"கிழத்துக்கு என்ன விஷம்" என்று கூறியபடி மருமகள் வரிந்து கட்டிக்கொண்டு வருகிறாள்.

"வாயைப் பொத்து..." என்று அவளை அதட்டினேன். உன்மீது கொண்ட கோபம் இடம்பெயர்ந்தது.

"நீங்களும் உங்க உம்மாவும்..." என்று ஏதோ கூறியவாறு குழறிக் கொண்டு அவள் உள்ளே சென்றுவிட்டாள். எனக்குப் பொறுக்க முடியுமா அது?

மறுபடியும் கோபம் உன்மீது திரும்பியது.

"என்னைத் தள்ளிப்போட்டாய் என்ன?" என்று உன்னைப் பார்த்துக் குரைக்கிறேன்.

"தள்ளித்தான் போட்டன். என்னை என்ன செய்யப் போகிறாய்?" என்று நீ சொன்னாய்.

உன் குரலில் சிறிது கடுமை இருந்தது.

"வாயைப் பொத்திக் கொண்டு போ வெளியே" என்று என்னை பத்து மாதம் சுமந்த உன் மணி வயிற்றில் எட்டி உதைத்துவிட்டேன் பாவி.

"என்ட அல்லாஹ்வே" என்று முனகியபடி நீ சாய்ந்து விட்டாய். "உம்மாவை என்ன வாப்பா செய்திட்டீங்க..." என்று கூக்குரலிட்டவாறு எனது மூத்த மகன் ஓடிவந்து உன்னைத் தாங்குகிறான்.

"டேய் நீ தொடாதே!" என்று உறுமிவிட்டு நான் அவளைப் பார்க்கப்போய் விட்டேன். நீ தட்டுத்தடுமாறி முக்கி முனகிக் கொண்டு எழுந்து போகிறாய்...

நீ போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் என் மகன்.

ஒரு நாள்,

அவனுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. அப்போது அவனுக்குப் பிதற்றல் ஏற்பட்டுவிட்டது. அவன் அரற்றினான்.

"வாப்பா, வாப்பா,வாப்பாட உம்மா விழப்போறாங்க..." என்று துடித்தான். அப்போது கூட எனக்கு அந்தப் பாசம் வரவில்லை.

"அவன்ட முகத்தில இனிமேல் முழிக்க மாட்டேன்" என்று வைராக்கியம் கொண்ட உன்னை கடைசியாக வெறும் உடம்பாகத்தான் பார்த்தேன்.

உனது மகன்: கார், பெரிய வீடு, தோட்டம், துரவு எனப் பணப்பெருக்கத்தாலும் பள்ளிவாசல் தர்மகர்த்தா, சமாதான நீதவான் என்ற பதவிகளுடனும் பெரிய மனிதனாக உலகிலே உலவிக் கொண்டிருந்தான்.

நான் சான்றோனில்லை உம்மா...

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் சான்றோனில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அநாதையாக இந்த உலகைவிட்டே போய்விட்டாய். உலகை ஏமாற்றும் வித்தையில் நான் தேர்ந்தவன். வேசம் போடுகிறேன். உன்னை நல்லடக்கம் செய்யும் சடங்கில் நான் பங்கு கொண்டு, நல்ல மனுஷனாய் உலவ செய்தியறிந்து ஓடோடி வருகிறேன்.

என் தங்கச்சி வீட்டில் உனது உடல் வளர்த்திக் கிடக்கிறது. என்னைக் கண்டதும் என் தங்கையின் துக்கம் தோய்ந்த முகம் சினந்து சீறுகிறது. அவளுடைய நியாயம் சரியானதுதான்.

"உன்னை யார் வரச்சொன்னது" என்று கேட்கிறாள். எனக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

ஊரில் நான் பெரிய மனுஷன். அவளை மௌனமாகப் பார்த்தேன். சோகமாகச் சிரித்தேன். எனது வேஷம் யாரையோ மயக்கிவிட்டது.

"என்ன பிள்ளை உன்ட கதை. மையத்தைப் பார்க்க வாறவங்களைத் தடுக்கிறது" என்கிறார்கள்.

"மையத்தில் கூட மகனை முழிக்க விடவேணாம் எண்டு உம்மா சொல்லியிருக்கிறா..." என்று கூறிய என் தங்கை குமுறுகிறாள்.

எனக்கு அப்போது மனம் கலங்க வில்லை. வீறாப்புதான் தலைக்கேறியிருந்தது.

"என்னைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை..." என்று கடுகடுத்தவாறு உள்ளே நுழைகிறேன்.

கட்டையாகிவிட்ட உனது உடலைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பைவிட, ஊரார் இந்தக் காட்சியைப் பார்க்க வேண்டும் என்பதுதான் எனது ஆசையாக இருந்தது. வேணுமென்றே பதறிக் கொள்கிறேன்.

தங்கச்சி என்னைத் தடுக்க, நான் திமிற, யாரோ அவளைப் பிடித்துக் கொள்ள... ஒரே களேபரம்... ஆயினும் யாரையும் நான் சட்டை செய்வேனா?

சந்தனக் குச்சிகள் நீண்டு, புகையைக் கக்கிக் கொண்டிருந்தன. சாம்பிராணிச் சட்டியிலிருந்து எழுந்த புகை உன்னைச் சூழ்ந்து கிடந்து மணத்தது. கிழக்கு மேற்காக வைத்த பலகையில், வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு உனது உடல் கிடத்தப்பட்டிருந்தது.

பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த சாம்பிராணித் தூளில் ஒரு சிட்டிகை எடுத்து, நெருப்புச் சட்டியிலிட்டு அதுபுகையத் தொடங்க வெளியே பார்க்கின்றேன். எனக்கு வெற்றியென்பது தெரிய வேண்டும். எனது வெற்றிக் களிப்பில் வெறிபிடிக்கும். உன்னை மூடியிருந்த வெள்ளைத் துணியை விலக்கி, உன் முகத்தைப் பார்க்கின்றேன்.

உம்மா! எவ்வளவு அமைதியாக நீ அன்று துயில் கொண்டிருந்தாய். உனது முகத்தில் எவ்விதக் கலக்கமோ, சலனமோ இல்லை. அப்போதுதான் எனக்கோர் அதிர்ச்சி. என் மனத்திலே ஒரு பயம். அதுவும் ஒரு கணம்... ஒரேயொரு கணம்... அது மறைந்துவிட்டது. மெல்லவே புடவையை இழுத்து உனது முகத்தை மூடப்போன வேளையில் "மூடாதீங்க" என்று குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தபடி உன் அருமை மருமகள் என்னருகில் நின்றிருந்தாளே!

அப்படியே விட்டுவிட்டு நான் நகர்ந்துவிட்டேன். அவளோடு என் மூத்தமகனும் நின்றிருந்தான். அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் வருவதுபோல எனக்குத் தோன்றியது.

உம்மா இது நடந்து எவ்வளவு காலம் சென்றுவிட்டது. அன்றைய நிலையில் உன் மகன் இன்று இல்லை.

அவன் இப்போது நரை, திரை கண்டு கிழடாகிவிட்டான். அவனிடத்தில் பதவியோ, பட்டமோ இல்லை. அவனது மூத்தமகன் பெரிய என்ஜினியர். இளையவன் எங்கோ வேறு ஒரு நாட்டில் வேலை செய்கிறான். அவனது இரு பெண்பிள்ளைகளும் கல்யாணம் முடித்து பிள்ளை குட்டிக்காரராகி விட்டனர்.

இவர்களையெல்லாம் பெற்றவள் எனது மனைவி. உனது மகனைப் பேயனாக மாற்றியவள். உனது மருமகள் எப்போதோ போய்விட்டாள்.

உனது மகன் இப்போது ஒன்றுமேசெய்ய இயலாதவனாகிவிட்டான். அவனால் யாரையும் கோபிக்க முடியாது. எவரையும் எதிர்க்க முடியாது. வெற்றிக்களிப்பில் வெறியாட்டம் ஆடமுடியாது. பழைய ஆணவம் அடங்கிவிட்டது.

அவன் இப்போது படுத்த படுக்கையில் நிரந்தரமாகவே இயலாதவனாகவும் கிடக்கிறான். அவன் ஒரு நோயாளி... சாதாரண நோயாளியல்ல. உன்னை எந்தக் காலால் உதைத்தானோ அந்தக் காலைக் கொண்டு நடக்க இயலாதவானாகவும் உன்னை எந்த நாவினால் ஏசினானோ அந்த நாவைக் கொண்டு பேச முடியாதவனாகவும் தவிக்கும் நோயாளி. பாரிசவாதம் பிடித்த நோயாளி... அவனுக்கு இது வேணும்!

உம்மா, இப்போது உனது பேரன் வீட்டிலே நான் கிடக்கிறேன். உன் பேரன் என்னை வீட்டைவிட்டுத் துரத்தவில்லை. துரத்த மாட்டான்.

"வரவரபெரிய கஷ்டமாகிப் போய்விட்டது. போகவேண்டிய இடத்திற்குப் போகாமல் இழுத்து இழுத்துக் கிடக்கிறான்" என்று யாரிடமோ அவன் கூறியது எனக்குக்கேட்டது. அவன் இன்னும் சொல்வான்... சொல்லட்டும் நானும் எழுந்து நடமாட முடியாதவனாக எனது காலை மாலைக் கடமைகளைப் படுத்த படுக்கையாக நிறைவேற்றிவிடுகிறேன்.

இப்போது எனக்கு எனது பேரன்தான் துணையாக இருக்கிறான். "பாவம்..." என்றும் என்னைப்பார்த்து ஏதேதோ சொல்கிறான். என் மகனைப்பார்த்துக் கதைக்கவேண்டுமென்று எனக்கு எவ்வளவோ ஆசை. எதை எதையோ சொல்ல வேண்டுமென எனதுள்ளம் துடிக்கிறது. அவனுக்கு எனது மனோநிலையை எடுத்துச் செரல்ல வேண்டுமென எண்ணுகிறேன். வார்த்தைகள் என் மனத்தளவிலேயே உறுத்தி நிற்கின்றன. வாயினால் வரமுடியாமல் தவித்துப் போகின்றன. என் மகன் என்னருகில் வரவே மாட்டான்...!

உம்மா...!

*19840129*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் தண்ணீர்

வரம்பு மூட்டில் குந்தியிருந்த இஸ்மாலெவ்வை வானத்தில் திடீரெனத் தோன்றிய 'மூசாப்'பினால் தூண்டப்பட்டவராக உற்சாகம் அடைந்தார். நெற்றிக்குமேலே இடது கைவிரல்களை குவித்துப்பிடித்து சூரியனைப்பார்த்தார். எங்கிருந்தோ திரண்டு வந்திருந்த கறுப்பு மேகக்கூட்டம், சூரியனை மறைத்துப் பூச்சாண்டி காட்டிக்கொண்டிருந்தது. கடந்த இரண்டு மாதங்களாக வானம் இவ்வாறுதான் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. எப்போதாவது ஒரு நாள் வானத்தின் மேகங்கள் திரண்டுவந்து மழையைப் பொழியச் செய்யாதா? என்ற ஆசை அவருக்கு.

சூரியனைச் சூழ்ந்திருந்த மேகங்கள் விரைவாக மேற்குத்திசை நோக்கிப்பறந்து செல்ல சூரியனுடைய ஒளி பளிச்சென்று அவருடைய கண்களில் குத்தியது. கண்களைப் படபடவென வெட்டித்திறந்து கண்களில் முட்டிய கண்ணீரை வெளியேற்றி குனிந்து கண்களைக் கசக்கிக் கொண்டார். கலங்கிய கண்களில் கையிலிருந்த கரிசல் மண் பட்டுக் கரிக்கவும் செய்தது.

வாய்க்கால் வரண்டுவிட்டது. வயல் வெளியெங்கணும் பூமி, பாளம் பாளமாக வெடித்துக் கிடந்தது. இருமாதப் பயிராயிருந்த வேளாண்மைக் 'குஞ்சு'கள் வாடிவதங்கி நீருக்காக ஏங்கிச் சுருண்டுவிட்டன. பார்ப்பதற்கு இனிமையான காட்சியில்லை இது.

வாகனேரிக்குளத்திலிருந்த தண்ணீரும் படிப்படியே குறைந்துவிட்டது. இனி 'விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்க முடியாது' என்று அதிகாரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்துவிட்டார்கள். மீதியாய் இருக்கும் தண்ணீர் ஏழு மைல்களுக்கப்பால் இருக்கும் பாசிக்குடாவில் உள்ள உல்லாச ஹோட்டல்களுக்கும் கடதாசி ஆலைக்கும் மாத்திரமே போதுமானது என்று கூறிவிட்டார்கள். இனி மழைபெய்தால்தான் தண்ணீர்.

வழக்கமாக மழை இல்லாத காலத்தில் வாகனேரிக்குளத்திற்கு தண்ணீர் ஓடிவரும் மாதுறு ஓயாக் கிளையை மறித்து அணைபோட்டுவிட்டதால் இவ்வருஷம் மேலாற்று வெள்ள நீர் ஒரு சொட்டுக் கூட குளத்திற்கு வரவில்லை. ஏதோவாய்க்கால் வெட்டுவதற்காக மாதுறு ஓயாத் திட்ட அதிகாரிகள் இந்த அணையைப் போட்டிருந்தார்கள்.

வர்னமும் பொய்த்துவிட்டது. மாதம் மும்மாரி பொழிந்த காலமும் இனிவருமோ என்னவோ?

தினமும் அதிகாலையில் எழுந்து தோளிலே மண்வெட்டியைச் சுமந்து கொண்டு ஒரு கையிலே சோற்று முடிச்சும் வெற்றிலைக் குட்டானையும் எடுத்துக் கொண்டு வயலுக்கு வந்து இன்று மழைபெய்யாதா, நாளை தண்ணீர் வராதா? என்று காத்திருந்து ஏங்கி ஏமாந்து மாலையாகியதும் மங்கிய வெளிச்சத்தில் மனச் சோர்வுடன் வீட்டுக்கு மீள்வது அவருடைய வழக்கம். இன்று வழமைக்கு மாறாகவே அவர் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டார். ஏதோ ஒருவகையான ஆத்திர உணர்வு அவருடைய மனதை அரித்துக் கொண்டிருந்தது. இருட்டும் வரை வயலுக்குள் காத்திருப்பதில் என்ன பிரயோசனத்தை அடைய முடியும் என அவரது மனம் கேட்டது. நாள் ஒரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளரவேண்டிய பயிர்கள் வாடிவதங்கி நாளாக ஆகச் சுருண்டுவிட்டன. இன்னும் சில நாட்களில் அவற்றில் உள்ள பச்சைத் தன்மையும் கெட்டு வைக்கோலாகிவிடும். அப்படியென்றால் இனி அவை பிழைக்கவே முடியாதோ?

உச்சி நிலையத்தைத் தாண்டி சூரியன் மேற்கே விரைந்து கொண்டிருந்த அந்த வேளையிலேதான் அவர் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். வெய்யிலின் கொடுமையோ சகிக்கமுடியவில்லை. வீட்டில் எவ்வித வேலையும் இல்லைதான். அவ்வளவு அவசரமாகப் போகவேண்டியதுமில்லை. வேறு எங்கு போவது என்றும் புரியவில்லை. மனசும் உடலும் களைத்துவிட்ட நிலை. கால்கள் தளர்ந்துகொண்டிருந்தன.

அவர் மெதுவாக வேலியோரத்தில் நின்றிருந்த ஆலமரத்தின் நிழலை நோக்கி நடந்தார். சற்றுக் களைப்பாற விரும்பினார். அதன் அடிப்பாகத்தில் ஓடிய வேரொன்றில் வசதியாக அமர்ந்துகொண்டார். வெற்றிலைக் குட்டானை விரித்து உள்ளேயிருந்த வெற்றிலைபாக்கு முதலியவற்றை வெளியிலே எடுத்துவைத்தார். ஒரு பாக்கை எடுத்து, பாக்குவெட்டியிலே வைத்து நறுக்கத் தொடங்கினார்.

உடல் ஆலமரத்தின் வேரில் அமர்ந்து கிடந்த போதிலும் உள்ளம் எங்கிருந்தது என்று அவரால் நிதானிக்க முடியவில்லை. அவருடை சிந்தனை வயலைச் சுற்றிச் சுழலலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வயலுக்குப் பாய்ச்ச தண்ணியில்ல. வேளாண்மையெல்லாம் செத்துப் போகுது. ஏழையெளிய விவசாயிகளின் வாழ்க்கை நாசமாகப் போகுது. அரசாங்கமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கு. இலக்ஷன் காலத்திலே ,உங்கட பகுதிக்கு மாதுறு ஓயாத் தண்ணீர் வரும். வளம் கொழிக்கும், என்று சொன்னாங்க. ஆனால், மாதுறு ஓயாத் தண்ணி வாகனேரிக்குளத்துக்கு வருமாஎண்டு சந்தேகம் தான். அதைக் கேட்க யார் இருக்காங்க. அதுதான் போகட்டும். விவசாயத்துக்கு தண்ணி தட்டுப்பாடான இந்த நேரத்தில எங்கேயோ இருந்துவாற வெள்ளக்காறனக் குளிப்பாட்ட பாசிக்குடாவுக்கு வாகனேரி தண்ணி போகுது. இதுவரையும் பெக்டறிக்கு மட்டும்தான் தண்ணி கொண்டுபோனாங்க... குளம் விவசாயத்துக்கா இல்ல, உல்லாசப் பிரயாணிகளுக்கா, ஒண்டுமாய்த் தெரியல்ல...

"போன வருஷமும் கால வேளாண்மைச் செய்கை இப்படித்தான் போயிட்டுது. கல்முனையாட்கள் கல்வளைக் கண்டத்து நூறு ஏக்கர் காணியைக் குத்தகைக்கு எடுத்துச் செய்தாங்க. யாரோ எம்பியிட கடிதத்த எடுத்து வந்து கொடுத்து ஒரு சொட்டுத் தண்ணியும் ஒத்தத்துருசி வாய்க்கால்ல ஓடாம, அவங்கட வயலுக்கு ஓட வைச்சாங்க. வேளாண்மையை வெட்டி மூடை மூடையாக ஊருக்க நெல் ஏத்திக் கொண்டு கல்முனையாட்கள் போக ஊரார்கள் வாயில் கைவைத்து அதிசயப்பட்டுக் கொண்டு நிண்டாங்க. இவங்களால என்ன செய்ய இயலும்? கல்முனை முதலாளி மாருக்கிட்ட ஏராளமான பணம்... பணத்தை என்ன செய்யிறதெண்டு தெரியாம அவங்கட ஊர்ப்பகுதியை விட்டுப்போட்டு இங்கால வந்து இரண்டுமூண்டு ஏக்கர் வேளாண்மை செய்தவன்ட வயல்களையெல்லாம் அறாவிலை கொடுத்து வாங்கி செலவளித்து வேளாண்மை செய்யத் தொடங்கிட்டாங்க. பெரிய பெரிய போடிமாரெல்லாம் கல்முனையாட்களிட்ட கடன்காரராகிட்டாங்களாம். சின்னப் போடிமார் முல்லைக்கார வேலைக்கு போயிட்டானுகள். ஏழை எளியதுகள் இவங்கட பணத்தக் கண்டு ஆசைப்பட்டு இருக்கிற இல்லிடத்தை அவங்களுக்கு கொடுத்துப் போட்டு காடேறிவிட்டுதுகள். இப்படியொரு அநியாயம் இங்கே...

"போன வருஷத்தில கொஞ்சம் மழை பெய்ஞ்சுது. ஒத்தசத்த சிலர்ர வேளாண்மை பிழைச்சுது. இந்த வருஷம் அறவே மழையில்லாமப் போயிட்டுது. எப்படித்தான் மனிசன் பிழைக்கப் போறானோ? யாரப்பு...!" என எண்ணிக் கொண்டே பெருமூச்சு விட்டவராக, வெட்டிய பாக்கை வாயில் போட்டுவிட்டு நிமிர்ந்தார் அவர்.

"என்ன மச்சான் உரத்த யோசனையோட குந்தியிருக்கீங்க..." என்று கேட்டுக் கொண்டே அவரை நோக்கி வந்தார், ஆதம்கன்னி. தோளிலே சுமந்துவந்த வாடிச்சாமான் சாக்கை கீழே இறக்கி வைத்துவிட்டு இஸ்மாலெவ்வைக்கு முன்னால் குந்தினார்.

"ஒண்டுமில்ல மச்சான் நம்மட கஷ்ட காலத்தை எண்ணித்தான் யோசனைபண்ணிக்கிட்டு இருக்கன்" என்று பதில் கூறிய இஸ்மாலெவ்வை, வெற்றிலைக் குட்டானை ஆதம் கன்னியிடம் தள்ளிவைத்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெத்திலை போடுங்க" என்று சொன்னார்.

ஆதம்கன்னியும் இஸ்மாலெவ்வையும் பழைய காலத்து மனிதர்கள். 'முடவாத்தியாரி'டம் இரண்டாம் வகுப்புவரை படித்து விட்டு, கொச்சிக்காலைக்குத் தண்ணீர் இறைக்க கூலியாகப் போனார்கள். கொஞ்சம் வளர்ந்த பிறகு சொந்தமாகக் காடுவெட்டி, சேனை செய்து, ஓரளவுக்கு வசதியை ஏற்படுத்தினார்கள். காணி வாங்கி, வயலும் செய்யத் தொடங்கினார்கள். இன்று ஒவ்வொருவரும் பெரிய பெரிய குடும்பங்களுக்குத் தலைவர்களாகி வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகி விட்டனர்.

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே ஆதம்கன்னி பேசத் தொடங்கினார்.

"என்னதான் நாம யோசின பண்ணினாலும் நடக்கப்போற ஒண்டுமில்ல மச்சான். பாருங்க விவசாயிகள்ற பயிரெல்லாம் தண்ணியில்லாம அழியுது. குளத்தில இருக்கிற தண்ணி எங்கயோ போகுது... ம்..." என்று கேட்டுவிட்டு, வெற்றிலைச் சாற்றை தள்ளி உமிழ்ந்துவிடுவதற்காக எழுந்து போய்விட்டு வந்தமர்ந்தார்.

"இதுக்கு ஏதாச்சும் செய்யனும் மச்சான். சும்மா பாத்துக் கொண்டு இருந்தா இப்படித்தான் நாம நாசமாகப் போவம். எல்லாரும் ஒண்டு சேர்ந்து இந்த அநியாயங்களுக்கு ஏதாவது நியாயம் கிடைக்கச் செய்யணும்" என்று எதையோ மனதிலே வைத்துக் கொண்டு பட்டும் படாமலும் பேசினார் இஸ்மாலெவ்வை.

"ஒண்டு சேர்ரதுக்கு முன்னால நமக்கிட்ட இருக்கிற குரோதத்தை ஒழிக்கணுமே. உங்களுக்குத் தெரியுமா சங்கதி? நேத்து ராவு நம்மட அச்சுப் போடிக்கும் அசனாப் போடிக்கும் பெரிய குழுப்பம். ஆளையாள் வெட்டித்தின்னப் போறானுகள். மாந்திற ஆத்தில இருந்த பாழியில கிடந்த தண்ணியை அச்சிப் போடி வயலுக்கு 'வாட்டப் பம்ப்' போட்டு அடிச்சி எடுத்து வைக்க, இராவோடு ராவாக அசனாப் போடிர முல்லைக்காரன் போய் அவன்ட வயலுக்கு வெட்டியெடுத்தானாம். காலத்தால வந்து பாத்த அச்சிப் போடி, முல்லைக்காரனுக்குச் சரியான அடியடிச்சுப் போட்டானாம். முல்லைக்காரனுக்கு 'யாது'மில்லாம பெரிய ஆஸ்பத்திரிக்கு ஏத்திப் போட்டானுகள். இப்ப என்னடா என்டா..."

"ஓம்... ஓம்... மச்சான் இதைக்கேட்டு நமக்கு வழிசெய்ய இங்கே ஆரு இருக்கா..." என்று தன் மனோ நிலையை அறிந்து பேசும் ஆதம்கன்னியை ஆதரித்து அவர் கூறினார்.

"போன வருஷத்தோட என்னட பாடு முடிஞ்சுது. ஐந்தேக்கர் கால போகம் விதைச்சன். அது தண்ணியில்லாம செத்துச் போச்சு. சம்மூன் முதலாளிக்கிட்ட வீடு வளவ எழுதி வைச்சுப் போட்டுத்தான் ஐயாயிரம் ரூபாக் கடனெடுத்து வேளாண்மை செய்தன். ஒரு கொத்து நெல்லும் வீட்ட கொண்டு போக முடியல்ல. இருபது அவணம் நெல்லு. இல்லாட்டி பத்தாயிரம் ரூபாக் காசி தரணும் எண்டு சம்மூன் கேட்டுத் தொந்தரவு செய்ய, எனக்கு என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யிறதெண்டு தெரியாம யோசின பண்ணிக்கிட்டு இருந்தன். நம்மட முஸ்தபா வட்டவிதானைதான் சொன்னாரு, கல்முனையானுக்கிட்ட ஒத்திக்கு வயல் எழுதி வெச்சிப்போட்டு பத்தாயிரம் வாங்கி வீடு வளவ மூண்டு போடு. சம்மூன் சரியான வட்டிக்காரன். வீடு வளவ விட்டு எழுப்பிப் போடுவான், நான் எல்லாம் ஒழுங்குபடுத்துவன் என்று சொன்னாரு, நானும் ஓம்பட்டு காச வாங்கிக் கொடுத்து ஒரு மாதிரி வீடு வளவ மீட்டுப் போட்டன். காணியை கல்முனையான் செய்யிறான். எத்தனை வருஷமெண்டாலும் காசிக்கு வட்டியில்ல. நம்மட வயலுக்கு ஆயமும் இல்ல... ஆனா... பத்தாயிரம் நாம சம்பாதித்து எப்ப வயல மூண்டு சொந்தமாகச் செய்யிறது. பேசாம கல்முனையானுக்கே வயல வித்துப் போட்டு அவன் தாற மிச்சத்தில வீட்டில பெருமூச்சு விடுற குமரைக் கரையேத்துவம் எண்டு யோசிக்கிறன் மச்சான்... என்ன எண்ட யோசினை நல்லம்தானே?" என்று கேட்டார் ஆதம்கன்னி.

"வேற என்ன செய்யலாம். நானும் அப்படித்தான் செய்யணும். இருந்த முதலெல்லாம் இந்த வருஷக் காலப் போகத்தோடசரி, வயல ஆயத்துக்கோ, இல்லாட்டி ஒத்தியோ கொடுத்துப் போட்டு பேசாம ஆரிட்டையாச்சும் முல்லைக்காரனாகப் போகப் போறன்." என்று இஸ்மாலெவ்வையும் ஆமோதித்தார்.

"நாம கூலிக்கு போனாலும் நம்மட 'முசீபத்து' எல்லாரையும் போட்டு ஆட்டும். மச்சான். இப்ப பாருங்க நான் கல்முனையானுக்கிட்ட முல்லைக் காரனாகப்போனன். வயல்ல தண்ணியில்ல... மழையுமில்லை... எல்லாம் தீயுது. நாம எப்படிப் பிழைக்கிற...? அச்சிப்போடியை அடிச்சு நொறுக்குவன் எண்டு அசனாவரு வாய்பாறித் திரியிரானாம்... இது என்ன நியாயம்?" என்று கேட்டார் ஆதம் கன்னி.

"இனி எல்லா 'பலா'யும் வரத் தொடங்கும். நியாயத்தைத் தேடனும் மச்சான்..." என்று கூறினார் இஸ்மாலெவ்வை.

"ஓம் மச்சான்... நியாயத்தை தேடத்தான் வேணும். நியாயத்தைத் தேடுறதுக்கு முன்னால் நாம நியாயமாக நடக்கணும்... ம்... சரி சரி பொழுது போகுது; நான் வரட்டா மச்சான்." என்று எழுந்தார் ஆதம் கன்னி. சாமான் சாக்கை மீண்டும் தோளில் சுமந்துகொண்டு நடக்கவும் தொடங்கினார்.

"போயிட்டு வாங்க மச்சான். நானும் பொழுது கொஞ்சம் சாய்ஞ்ச உடன புறப்படுறன்" என்று வழியனுப்பினார் இஸ்மாலெவ்வை.

ஆதம்கன்னியை வழி அனுப்பிவிட்டு, ஏதோ யோசனையில் ஆழ்ந்த இஸ்மாலெவ்வை சற்று நேரத்துக் கெல்லாம் தன்னை அறியாமலே அயர்ந்து விட்டார்.

'தண்ணீர் தண்ணீர்' என்று சதா யோசித்துக் கொண்டிருந்த அவருக்கு, எங்கயோ குளம் ஒன்று உடைந்து பெரு வெள்ளம் அடித்து வருவது போல ஒரு கனவு தென்பட திடீரெனக் கண் விழித்துப்பார்த்தார். அங்கே தண்ணீருமில்லை, வெள்ளமுமில்லை... ஆனால் வாகனேரியிலிருந்து வாழைச்சேனைக் கடதாசி ஆலைக்கும் பாசிக்குடா ஹோட்டலுக்கும் தண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போகும் பெரிய குழாயை வைத்து மூடிய மூடியொன்று தான் அவருக்குப் பட்டது. அவருக்கு அதனைக் கண்டதும் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

அவர் ஏதோ தீர்மானித்தவராக, எழுந்து நின்று மண்வெட்டியை தோளிலே வைத்துக் கொண்டு அந்தக் குழாய் வந்த, திக்கிலே நடக்கலானார்.

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. அவர் குறிவைத்த இடம் தூரத்திலே மங்கலாகத் தெரிந்தது. ஆனால் அங்கே யாரோ நிற்பதும் அவருக்குப் புலப்பட்டது. பரபரப்போடு அவ்விடத்தை அடைந்த அவர், அங்கு நின்ற ஒருவனிடம் என்ன நடந்தது என விசாரித்தார்.

"யாரோ பெக்டறிக்கு தண்ணிபோற குழாயை வெடிவைத்து உடைச்சுப் போட்டானுகள். அதைச்சரிக்கட்டுறாங்க..."

இஸ்மாலெவ்வை திகைத்துவிட்டார். அவருடைய கால்களுக்குக் கீழே பூமி நழுவிப்போய்க் கொண்டிருப்பதாக உணர்ந்தார், அவர்...

*19840902*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பூமியில்

ஜோர்தான் நதியின் மேற்குக் கரையோரம்,
ஜெரூசலம், அல் அக்ஸாப் புனித பூமி..
புதிதாகவே இஸ்ரேலியர்கள் ஆக்கிரமித்துக் கொண்ட பிரதேசம்..

அங்குமிங்குமாக, பரட்டையாக நிற்கும் ஈச்ச மரங்களுக்கிடையில் வறுத்தெடுத்த செம்மணல் பரப்பில், இஸ்ரேலியர்களின் புதிய குடியேற்றங்களுக்கான தொடர்ச்சியான கட்டிடங்கள்...

மற்றொரு பக்கத்தில், தமது சொந்த இல்லங்களை, அட்டூழியக்காரர்களினால் இழந்துவிட்டு அதே புனித பூமியில், அகதிகளான மக்களின் குடியிருப்புக் கூடாரங்கள், முட்கம்பி வேலியினால் சுற்றிவளைக்கப்பட்டு,அடைபட்டுக்கிடந்தன.

அகதிகள் முகாமைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு இஸ்ரேலியப் படைவீரர்கள் சிலர், முகாமுக்கு வெளியே, பிரதான வீதியில் நின்று காவலில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் நடமாட்டத்தைத் தவிர, வீதி பொதுவாக வெறிச்சிட்டுக் கிடந்தது. எங்கும் அமைதியான சூழ் நிலை .இந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு, திடீரென ஒரு சத்தம்... படை வீரர்கள் காத்து நின்ற இடத்தில் வெடித்த குண்டு, முகாமையே அதிரடித்தது. யாரோ ஓர் இளைஞன் விட்டெறிந்த குண்டு, படை வீரன் ஒருவனின் உயிரைக் குடித்துவிட்டது.

பிரதான வீதி அல்லோல கல்லோலப்பட்டது.

குண்டை விட்டெறிந்த இளைஞன் கூடாரப் பக்கமாகத் தலைதெறிக்க ஓடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான்.

அவனைத் துரத்திக் கொண்டு பின்தொடர்ந்தார்கள். அவனும் ஓட, அவர்களும் துரத்த எங்கும் ஒரே பரபரப்பு.

எங்கு போவது என்று தெரியாமல் ஓடிக் கொண்டிருந்த இளைஞன், திடீரென ஒரு கூடாரத்துக்குள் பாய்ந்தான். பாய்ந்த வேகத்தில் கால் இடறிக் கீழே விழுந்துவிட்டான். விழுந்த வேகத்தில் எழுந்துவிட முடியவில்லை அவனால். மூச்சு இரைக்க இரைக்க அவன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

தனது கூடாரத்தில், ஏதோ ஒரு யோசனையில், குந்திக் கொண்டிருந்த அந்தக் கூடாரத்துச் சொந்தக் காரியான பெண்மணி, தனக்கு முன்னே திடீரென வந்து வீழ்ந்து கிடக்கும் இளைஞனின் தோற்றத்தைக் கண்டவுடன் திடுக்கிட்டுப் போனாள். வெளியிலே குண்டு வெடித்து, கேட்ட பேரோசையை அவளால் கேட்க முடியவில்லை. ஆனால் வெளியில் ஏதோ நடந்திருக்க வேண்டும் என ஊகித்துக்கொண்டாள்.

களைப்பால் இடறி வீழ்ந்து, மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் அந்த இளைஞனைத் தூக்கி விடுவதற்காக, அவள் எழுந்து வந்தாள். அவனோ பேச முடியாமல் அவதிப் பட்டுக்கொண்டு வாசல் பக்கம் கையை நீட்டி சைகையாகக் காட்டினான்.

அவள் எதையோ விளங்கிக் கொண்டவளாக, வெளியே எட்டிப் பார்த்தாள்.

அங்கே, அவளுடைய கூடாரத்தை நோக்கி துப்பாக்கி ஏந்திய படி இராணுவ வீரர்கள் ஓடிவருவதைக் கண்டு கொண்டாள்.

இவன், அவர்களுக்கு எதையோ செய்துவிட்டு ஓடி வந்திருக்கிறான் என்று விளங்கிக் கொள்ள அவளுக்கு நேரம் தேவைப்படவில்லை. அவள் பரபரப்புடன் இயங்கினாள்.

கீழே விழுந்து கிடந்த அவனைத் தூக்கி நிறுத்தி, அவனுடைய மேற் சட்டையைக் கழற்றி எடுத்துக்கொண்டு. அவனைப் பரபரவென இழுத்துக் கொண்டு கூடாரத்தின் மூலைக்கு ஓடினாள். மூலையில் பழந் துணிகள் கிடந்த இடத்தில் அவனைத் தள்ளிவிட்டு, அவனை அங்கு கிடந்த தட்டுமுட்டுச் சாமான்களைக் கொண்டு மறைத்தாள்.

ஒரு கணப் பொழுது, அவளுடைய மூளை தீவிரமாக வேலை செய்தது. கூடாரத்தின் பின்பக்கமாக வெளியில் தன் பார்வையைச் செலுத்தினாள்.

அங்கே அவளுடைய மகன் கீழே குந்திக் கொண்டு, சிறு கற்களைப் 'பொறுக்கி' விளையாடிக் கொண்டிருந்தான்.

ஓடிச் சென்று அவனை இழுத்து வந்தாள் அவள், அவனுடைய சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு தன் கையிலே இருந்த, இளைஞனின் சட்டையைத் தன் மகனுக்கு மாட்டிவிட்டு, கூடாரத்தின் முன்னே தள்ளி விட்டாள். கீழே விழுந்து அவனுக்கு வாயில் அடிபட்டு, இரத்தம் பீறிட்டது. அவன் தன் வாயைத் தன் கையால் துடைத்துக் கொண்டு எழுந்து நின்று, தன் தாயைப் பரிதாபத்துடன் பார்த்தான்.

"உம்மா" மெதுவாக அவனுடைய குரல் முனங்கிற்று;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாய் செய்யக் கூடிய வேலை இல்லைதான் இது. அவள் வெளியில் எங்கோ வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

வெளியிலே, இராணுவ வீரர்களின் தட, தடவென்ற பூட்ஸ் ஒலி மிகவும் அண்மித்துக் கேட்டது.

அவளுடைய மகனின் முகம் பேயறைந்தது போல் வெளிறத் தொடங்கிற்று.

இராணுவ வீரர்கள், அவளுடைய மகனை அடித்து நொறுக்கி இழுத்துக் கொண்டு போக, தட்டு முட்டுப் பொருட்களுக்கிடையே ஒடுங்கிக்கிடந்த முன்னைய இளைஞன் தன்னை சுதாரித்துக் கொண்டு எழுந்தான்.

''தாயே என்ன வேலை செய்துவிட்டீர்கள்!!'' என்று அவன் அவளின் தோளை உலுக்கி விட்டபடி கேட்டான். அவள் எங்கேயே வெறித்துப் பார்த்தபடி கண்ணீர் வழிய அசையாது நின்றிருந்தாள்.

''அம்மா! அவர்களின் மீது குண்டெறிந்து அவர்களில் ஒருவனைக் கொன்று விட்டு... ஓடிவந்த என்னை அந்த அற்பர்களின் கையில் அகப்பட்டுவிடாமல் காப்பாற்றிவிட்டீர்கள். ஆனால் உங்கள் அன்பு மகனை பலிகொடுத்துவிட்டீர்களே தாயே!'' என்று அவன் அவளை உலுக்கிக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தான்.

''மகனே! மகனே!'' என்று அவள் தலையில் பலமாக அடித்துக் கொண்டாள்.

''உம்மா?'' என்று அவளைத் தேற்ற முனைந்தான் அவன். அவளுடைய கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

''மகனே, எனது மகன் ஒரு மூடன். அவன் தன் தந்தையை உயிரோடு எரித்த படுபாவிகளை அழிப்பதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை. சுரணையற்று இந்தக் கூடாரத்திலேயே முடங்கிக்கிடந்தான். அவனைவிட, இந்தப் புனித பூமியின் விடுதலைக்காகப் போராடும் உன்னைப் போன்ற உண்மை வீரனே இந்த மண்ணுக்குத் தேவை!''

''உம்மா...!'' அவன் உணர்ச்சி வசப்பட்டுப் போனான்: என்றுமே அழாத அவனுடைய கண்கள் நீரைச் சொரிந்தன.

*1984 டிசெம்பர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒய்வு

இன்று வெள்ளிக்கிழமை.

நித்திரை விட்டு எழும்பும் போதே இன்று வெள்ளிக்கிழமை என்ற நினைவு வந்தது. கூடவே கோயிலுக்கு முன்பாகக் குந்திக் கொண்டிருக்கும் அந்த கிழவியின் உருவமும் மனதில் தோன்றியது.

வறுமையோ, வயதோ காரணமாக அவள் மெலிந்து காணப்பட்டாள். ஒட்டியுலர்ந்த உடலில் கந்தல் துணியைப் போர்த்தியபடி அவள் உட்கார்ந்திருப்பாள். நரைத்த முடியும் சுருங்கிப் போன கன்னங்களுக்குமிடையில் சிறுத்துப் போன கண்களால் தெருவில் போவோரையும், கோவிலுக்கு வருவோரையும் கூர்ந்து பார்ப்பாள். கையை நீட்டி "என்னவும் தாங்க மக்கள்!" என்று தீனக்குரல் எழுப்புவாள். பல்லில்லாத வாய் நிறைய வெற்றிலைக் குதம்பல் இருக்கும். அது கடைவாயில் வழிந்து கிடக்கும். காண்போரை பரிதாபப்படச்செய்யும் கோலம்தான் ! ஆனால் அநேகம் பேர் அவளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவர்களுக்கு நேரமிருக்க வேண்டுமே!

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவள் அங்கு வருவது வழக்கம். கோவிலுக்குப் பக்தர்கள் வருகிறார்களோ இல்லையோ, அவளுடைய வருகை நிச்சயமாக இருந்தது. கடவுளைப் பற்றி அவளுக்குக் கவலையில்லை. பக்தர்களின் பச்சாதாபம் தன்னில் விழ வேண்டுமென்று அவள் விரும்பினாள்!

ஜெமீல் காரியாலயத்துக்கு அந்த வழியேதான் தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்கொண்டிருந்தார். எப்போதாவது ஒருநாள் அந்தக் கிழவியின் தீனக்குரல் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கும். அப்போது அவருக்கு அன்று வெள்ளிக்கிழமை என்ற நினைவு வரும். பையைத் துழாவி கையில் அகப்பட்டதைஎடுத்துக் கிழவியின் முன்னால் விரித்துக் கிடக்கும் பழந் துணியில் போடுவார். அவர் சில்லறை போடும் வரை வேறு யாரும் போட்டதற்கான அறிகுறியே இராது.

இன்று விழித்துக்கொண்ட போதே அவர் கலண்டரைப் பார்த்தார். இன்று வெள்ளிக்கிழமை மாத்திரமல்ல. அது ஒரு முக்கியமான தினமுமாக இருந்தது. அன்றைய திகதியைச் சுற்றி வட்டம் வரைந்திருந்தார். அதைப்பற்றி அவர் யோசித்தார். அந்த யோசனையினூடே கிழவியைப் பற்றிய ஞாபகமே அவரைச் சுற்றி வட்டமிட்டது. கிழவிக்கு வழக்கமாகக் கொடுப்பதை விடக் கொஞ்சம் அதிகமாகவே போடவேண்டுமென எண்ணிக் கொண்டார். கட்டிலை விட்டெழும்பி முதல் வேலையாக அங்குமிங்கும் வைத்திருந்த சில்லறைக் காசுகளை சேர்த்தெடுத்தார்.

காரியாலயத்துக்குப் போவதற்கு இன்னும் நேரமிருக்கிறது. எவ்வளவு நேரத்தோடு போனாலும் காரியாலய நேரம் வந்தவுடன்தானே திறப்பார்கள்!

இருள் பிரிந்து கிழக்கு வானம் வெளுத்துக்கொண்டிருக்கும் போதே நித்திரை கலைந்துவிடும். அவசரமான வேலையொன்றுமில்லைதான். அது அவருடைய வழக்கமாக இருந்தது. நித்திரைக்குப் போகு முன் விழுங்கிய மாத்திரைகளின் சக்தி குறைந்துவிட்டால் சிலவேளைகளில் நடுச் சாமத்திலும் விழிப்பு ஏற்பட்டுவிடும்! மூன்று வருடங்களுக்கு முன் படுக்கையில் திடீரென ஏற்பட்ட இருதயக் கோளாறு, தொடர்ந்து மருந்து சாப்பிட வைத்துவிட்டது. ஓய்வும் அமைதியும் தேவையென வைத்தியர் கூறினார். அவர் கூறியது என்னவோ சரி. ஆனால் மனதுக்கு எதைக் கூறி சாந்தப்படுத்தலாம்?

பதினேழு வருடகாலமாக இந்த வாழ்க்கையில் தனிமையும் சிந்தனையுமே தொழிலாகிவிட்டது.

ஊரோடு மனைவி மக்களோடு வாழ்ந்தது ஒரு சில வருடங்களே. படித்தால் அறிவு பெருகுமென்றார்கள் அதிகம் படிப்பதனால் கஷ்டமும் பெருகிவிடுகிறது. சாதாரண ஆசிரியனாகவே இருந்திருந்தால், ஊரிலேயே கடமை செய்திருக்கலாம். கொஞ்சம் கூடப் படித்தனால், - பதவியுயர்வை நாடியதனால், குடும்பத்தையும், மகிழ்ச்சியையும் பிரிய வேண்டியதாயிற்று.

ஜெமீல் இப்படித்தான் தனது மகிழ்ச்சியையும் இன்பத்தையும் இழந்தார். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியனாக இருந்த போது எவ்விதக் குறையும் இருக்கவில்லைதான். ஆங்கில இலக்கியத்தில் ஏற்பட்ட விருப்பம் பட்டம்பெறத் தூண்டியது. பல்கலைக்கழகம் போனார். ஆங்கில மொழியில் சிறப்புப் பட்டம் பெற்றதனால், அவருடைய சேவை, பாடசாலைகளை விட ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் கலாசாலைகளுக்குத்தேவைப்பட்டது. வடக்கு, கிழக்கு, தெற்கு என மாற்றினார்கள். இளமையும் உடல் வலுவும் இருந்த போது அலுப்பு ஏற்படவில்லை. தவிரவும் அவருடைய மாணவர்களின் ஆர்வமும் அவருக்கு உற்சாகம் ஊட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையும் துடிப்புமுள்ள மாணவருடன் உரையாடுவது, அவர்களுடன் சேர்ந்திருப்பது எல்லாம் இளமை உணர்வைத் தூண்டிக் கொண்டிருந்தது.

அந்த வாழ்க்கையில் அப்படியொரு சுகமிருந்தது.

ஆனால் இங்கு கல்விக் காரியாலயத்திலோ இளமையைப் பற்றி எண்ணவே விடமாட்டார்கள். இளமையோடு இங்கு வருகின்ற வாலிபனும் விரைவில் கிழவனாகிவிடுவான்! காரியாலயக் கோவைகளும், ஆசிரியர்களின் அவலங்களும், அவர்களை அலைக்கழிக்கும் அரசியல் வாதிகளும் ஆக ஒருபுறம், கல்விக்காக ஏங்கித் தவிக்கும் மாணவ சமுதாயம் ஒரு புறமாக- இவர்களையெல்லாம் இணைக்கும் அதிகாரிகளின் நிலைமைதான் படுமோசம்!

காரியாலயம் நாடித் தினமும் ஆசிரியர்கள் வந்துகொண்டிருப்பார்கள். அவர்களின் முறைப்பாடுகளைக் கேட்பதும் அதற்குத் தீர்வு காண்பதுமே பெரியவேலையாக இருக்கும். சம்பளம் ஒழுங்காகக் கிடைக்காமல் இருக்கும் அல்லது இடமாற்றம் பெறவேண்டியிருக்கும் அவர்களுக்கு!

ஏழெட்டு வருடங்களாக யானைக் காட்டுப் பிரதேசத்தில் தன்னந் தனியனாக இருந்து கஷ்டப்படுவதாக ஓர் ஆசிரியன் தனது துயரமான கதையைக் கண்ணீருடன் கூறுவான். அவனுக்காக அனுதாபப்பட்டு, வசதியான இடத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இன்னொரு ஆசிரியனை மாற்றிப் போகச் சொன்னால், அவன் ஒன்றில் இரத்தக் கொதிப்பு நோய் என்றும் தனிமையில் இருக்கக் கூடாதென்றும் கூறும் வைத்தியச் சான்றிதழுடன் வருவான். அல்லது எம்.பி.யின் கடிதத்துடன் வருவான்! எல்லாக் கதைகளிலும் உண்மை இருக்கவும் கூடும். யாருக்கு நீதி செலுத்தலாம்? இவர்களைப் பார்த்தால், சின்னஞ்சிறார்கள் எதிர்காலத்தை இழந்து தற்குறிகளாகப் போவார்கள்.

காரியாலய நடைமுறைகளும் அவ்வளவு மகிழ்ச்சிகரமாக இராது. நிருவாக உத்தியோகத்தர் தொடங்கி சிற்றூழியர் வரை ஒவ்வொருவருக்கும் ஏதாவது பிரச்சினைகள் இருக்கும். பெரியவர்களும் சிறியவர்களும் ஏதாவது சின்னத்தனம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். கல்வி சம்பந்தமான உத்தியோகத்தர்களும் 'என்னைவிட அவனை முந்தவிடக் கூடாது' என்று அரசியல்வாதிகளின் பின்னால் அலைந்துகொண்டிருப்பார்கள்.

இத்தகைய சோதனையான வாழ்க்கையிலிருந்து மீள வேண்டுமென ஜெமீல் விரும்பினார்.

வீட்டைவிட்டுத் தூரத்திலிருந்ததனால் குடும்பத் தொல்லைகள் அவருக்குத் தெரியவில்லை. மனைவி கெட்டிக்காரி. வீட்டுத் தேவைகளை அவரின்றியே நிறைவேற்றிப் பழக்கப்பட்டுவிட்டாள். எல்லாக் காரியங்களையும் கவனித்ததோடு, அவளும் ஆசிரியத் தொழில் செய்து வந்தாள்.

இவ்வளவு காலமும் அவள் குடும்பச் சுமையை சுமந்தது போதும். கடைசி நேரத்திலாவது அவளுக்கு உதவி செய்யலாம் என்று எண்ணி இடமாற்றம் கேட்டால் இப்போதைக்கு அது சாத்தியமில்லைப் போல் தெரிந்தது.

ஊருக்குப் போவதென்றால் இடமாற்றம் கிடைக்கவேண்டும் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகமே வேண்டாமென்று உதறிவிட்டுப் போகவேண்டும். இரண்டாவது வழிதான் அவருக்குத் திறந்து கிடந்தது. சுவரில் தொங்கிய கலண்டரில் வட்டம் வரைந்த திகதி இன்று வந்துவிட்டது. அது சரியாகவும் இருக்கும். வாழ்க்கையின் விவகாரங்களையெல்லாம் யோசித்துப் பார்க்கும் போது அதைத் தவிர வேறு வழியில்லை.

இன்றைய நாளையும் கிழவியையும் பற்றி யோசித்துக் கொண்டிருந்தவருக்கு நினைவுகள் எங்கெல்லாமோ போய் மீண்டுவிட்டது.

கைப் பையை எடுத்துக்கொண்டு அவர் அறையை விட்டு வெளியே வந்தார். புறாக் கூடு போன்ற அந்த அறையை விட்டு வெளியேறுவது மகிழ்ச்சியானதுதான்!

அறைக்கு முன்பாக இருந்த மதிலுக்கு அப்பால் முதலில் தென்பட்டது அடுத்த வீட்டுக் கழிவறை. முகத்தைச் சுழித்துக்கொண்டு நடந்தார். வேலியோரத்து மாமரத்திலிருந்த காகமொன்று பதறிப் பதறி ஓலமிட்டது. என்ன செய்தியோ என மனம் ஏங்கிட அவர் நடந்தார். இதெல்லாம் அவருக்கு நம்பிக்கையில்லைதான். ஆனால் வாழ்க்கையில் நம்புவதெல்லாமா நடக்கிறது?

கிழவிக்குப் போட வேணுமென எடுத்த சில்லறையை கையில் எடுத்துக் கொண்டு, பாதையின் ஓரமாக கம்பீரமாக நடந்தார். இந்த வயதிலும் ஓர் இளம் இராணுவ வீரனின் கம்பீரமான தோற்றமும் நடையும் தெருவில் போவோர் வருவோரால் கௌரவப்படுத்தப்பட்டது.

தூரத்தில் கோவிலின் கோபுரம் தென்பட்டது. கிழவி குந்தியிருக்கும் இடத்தை அவர் பார்த்தார். அந்த இடம் வெற்றிடமாக இருந்தது. அவருடைய மனம் துணுக்குற்றது. 'கிழவி எங்கே, எங்கே' என மனம் கேட்டபடி துடித்தது. கால்கள் முன்னோக்கி நடந்தனவே தவிர, உள்ளம் அவ்விடத்தைவிட்டு நகரவேயில்லை.

கிழவி அங்கே வரவில்லை !

கிழவியை யாரென்று அவருக்குத் தெரியாது; அவளுடைய இருப்பிடமும் தெரியாது! அவர் பரபரப்படைந்தவராக அவ்விடத்தைவிட்டு விரைந்தார்.

இன்று காரியாலயம் வேளைக்கே திறந்திருந்தது. வரவைப் பதிந்துவிட்டு அவர் தனது மேசைக்குச் சென்றார். கையில் வைத்திருந்த சில்லறையை மேசை மீது போட்டார். அவை மேசை எங்கும் சிதறி விழுந்தன.

இன்றைக்கென்று கிழவியை நினைத்து அந்த நாணயக் குற்றிகளைத் தேடிக்கொண்டு வந்தார். கிழவி எங்கே போனாளோ? அவளுக்குச் சுகமில்லையோ? அல்லது...? யாருக்குத் தெரியும்.?

மனதில் ஏதோவொரு பாரம் அழுத்திற்று.

தனது கைப்பையைத் திறந்து, அதில் வைத்திருந்த காகிதங்களை எடுத்து, அதில் ஒவ்வொரு பிரதியிலும் முதல் வேலையாக தனது ஒப்பத்தையிட்டார்.

இன்று ஏதோ ஒரு வகையில் முக்கியமான நாள்தான் என எண்ணிக்கொண்டார். அதில் அவருக்கு ஒரு திருப்தி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பத்தையிட்டுவிட்டு நிமிர்ந்த போது, அவருடைய சகாவான சலாம் அங்கே வந்து வாழ்த்துக் கூறிக் கொண்டிருந்தார். அவரும் பதில் வாழ்த்துச் சொன்னார்.

''இது என்ன சில்லறைக் காசுகள் காலையிலே !'' என்று கேட்டார் சலாம்.

''இவை செல்லாக் காசுகள் !'' என்று விரக்தியுடன் கூறினார் ஜெமீல்.

''பார்த்தால் அப்படித் தெரியவில்லை!''

''பயன்படாவிட்டால் செல்லாக்காசுதானே!''

''ஏன் அப்படி?'' என்று வினாவினார் சலாம்.

''அது பெரிய கதை!'' என்று கிழவியின் கதையைக் கூறினார் ஜமீல். சலாத்திற்கு அதில் சுவாரஸ்யமிருப்பதாகத் தெரியவில்லை.

''இதைப் பாருங்கள் சலாம்'' எனக் கூறியபடி காகிதக் கற்றைகளை நீட்டினார் அவர்.

அதை வாசித்த சலாத்தின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. வாய் பிளந்துவிட்டது.

அது, மொழிச் சட்டத்தின் துணையோடு இளைப்பாறக் கோரும் கடிதம்.

''இது ரிற்றயமென்ட் நோட்டீஸ்''

''யேஸ்'' - அப்படிச் சொன்ன போதே மனப்பாரம் இறங்கிவிட்டது போலிருந்தது.

*19871004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறும் மனங்கள்

காலம் எவ்வளவு விரைவாகக் கரைந்துவிட்டது. இரண்டு வருடங்கள்...

கதீஜா வருவதாகவும் விமான நிலையத்துக்கு வந்து தன்னை அழைத்துச் செல்ல வேண்டுமெனவும் அவள் தன் கணவன் மீராசாஹிபுக்கு கடிதம் எழுதி இருந்தாள்.

அவளுடைய கடிதம் கிடைத்த நாளிலிலிருந்து மீரா சாஹிபும் பிள்ளைகளும் நாட்களை எண்ணி எண்ணிக் களைத்துவிட்டார்கள்.

"உம்மா எப்போ வருவா?" என்று சின்னவன் - அவனுக்கு வயது ஐந்தாகிறது - கதீஜா வெளிநாடு போகும்போது மூன்று வயது முடிந்து 'மழலை' மொழி பேசத் தொடங்கியிருந்தான் - எப்போதும் கேட்டபடி இருந்தான்.

"பேசாமல் இருடா உம்மா வந்திடுவா" என்று பெரிய மனுஷித் தோரணையில் மூத்தவள் சுபைதா - அவளுக்கு வயது 12தான் ஆகிறது - அதட்டுவாள். கதீஜா போனபின் வீட்டுத் தலைவிக்குரிய பீடத்தை அலங்கரிப்பவள் அவள். இந்த இரண்டு வருடங்களில் எவ்வளவோ பொறுப்புணர்ச்சி அவளிடத்தில் வளர்ந்துவிட்டது.

"உம்மா எனக்குப் புதுச்சட்டை, சென்ட், மணிக்கூடு எல்லாம் வாங்கிவருவா" என்று தம்பியிடமும் தனக்கு இளையவளான தங்கை பாஹிறாவிடமும் சொல்லி மகிழ்வாள்.

"எனக்கும் தான்!" என்று பாஹிறாவும் சிணுங்குவாள்.

"வாப்பாக்கிட்டச் சொல்லி எனக்கும் வாங்கணும்..." என்று கூறிக்கொண்டு மகன் ஓடிப்போவான் மீராசாஹிபிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒருவரை ஒருவர் சீண்டிக்கொண்டும் பேசிச் சிரித்துக்கொண்டும் கனவு கண்டுகொண்டிருக்கும் குழந்தைகளோடு அவனும் குழந்தையாகவே வாழ்ந்தான். மனைவியின் கடைசி வார்த்தைகளைக் கண்ணியப்படுத்தி அவளது வேண்டுகோளை நிறைவேற்றுவதாக அவர்களைக் கண்ணும் கருத்துமாக வளர்த்துவந்தான். குழந்தைகள் கண் கலங்கி விடாது பார்த்தான்.

அந்தக் குடும்பம் குழந்தைகளுடன் மகிழ்ச்சி நிறைந்ததாகத்தான் இருந்தது. பற்றாக்குறை இருந்தபோதிலும் அவனது உழைப்பு கணிசமான அளவு குடும்பத்தைக் காப்பாற்றியது.

ஆனால் அவள்தான் பிடிவாதமாக இருந்தாள். தான் வெளிநாடு சென்று உழைக்க வேண்டுமென்றும் குழந்தைகளுக்கு உதவ வேண்டுமென்றும் கூறினாள்.

அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து, அடுத்த தெருவிலிருந்து, பக்கத்து ஊரிலிருந்து எத்தனையோ பெண்கள் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார்கள். அவர்கள் உழைத்துப் பணம் அனுப்ப, கணவன்மார் வீடுகட்டுகிறார்கள், தொழில் செய்கிறார்கள், வாழ்க்கையில் விமோசனம் அடைகிறார்கள்.

வரும்போது கை நிறையப் பணம் கொண்டு வருகிறார்கள். பெரிய பெரிய சூட்கேஸ் பெட்டிகளில் வண்ண வண்ண உடுப்புகள், பிள்ளைகள் மனநிறைவோடு விளையாடுவதற்கான விளையாட்டுப் பொருட்கள், நறுமணச் செண்டுகள், குதிக்கால் உயர சப்பாத்துகள், ரேடியோக்கள், டேப் ரெக்கோடர்கள் என்று எத்தனை எத்தனை !

''இவையெல்லாம் உங்களால் வாங்க முடியுமா?'' என்று கதீஜா மீராசாஹிபிடம் கேட்டாள்.

"எனது உழைப்பில் எப்படி வாங்க முடியும்?" என்று தனக்குத் தானே அவன் கேட்டுக்கொண்டான்.

அக்கம் பக்கத்துப் பிள்ளைகள் வண்ண வண்ணமாக உடுத்து வரும்போது பலவிதமான விளையாட்டுப் பொருட்களை வைத்து விளையாடும் போது எனது பிள்ளைகளுக்கு ஆசை வராதா? எனது இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் நல்ல வீடில்லையே? நான் வெளியே போனால், உழைத்து வீடு கட்டிக் கொடுப்பேனே ! என்று அவள் தனக்குப் பட்டதை நியாயப் படுத்துவதற்காகக் கூறினாள். அவளுடைய ஆசை அப்படியிருந்தது.

பெண், குடும்பத்தைவிட்டு, குழந்தைகளைவிட்டு, உழைப்பதற்கு வெளிநாடு செல்ல வேண்டுமா? கிடைத்ததைக் கொண்டு திருப்திப்பட்டுக்கொண்டு வீட்டோடு அவளால் வாழமுடியாதா? தாயில்லாத குழந்தைகளின் வாழ்வு மலருமா? என்றெல்லாம் சிந்தித்தான் மீராசாஹிபு.

ஆனால், அவள் அவனது எண்ணங்கள், சிந்தனைக்கு மாறாக இருந்தாள். அவனுக்குத் தெரியாமலே, கடவுச்சீட்டு முடித்தாள். அவளைத் தடுத்து நிறுத்த அவனால் முடியவில்லை. அவளைத் தடுத்து நிறுத்த முயன்றால், அவள் அவனுக்குத் தெரியாமலும், பயணமாகக் கூடும். அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றத் துணையாக இருந்தால்தான் அவனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை காப்பாற்றப்படும் என்று அவன் நினைத்தான். எல்லா நியாயங்களும் அவளுக்குச் சாதகமாக இருந்தன.

அவள் எல்லோரையும் போல ஆசைகளின் பிறப்பிடம். பெண்ணாக இவ்வுலகில் பிறந்துவிட்ட அவளது குணத்தை அவனால் மாற்ற முடியவில்லை.அவனது உபதேசங்களைப் புரிந்துகொள்வதற்கு அவளது ஆசை தடையாக இருந்தது. அவன் வாழ்க்கையைப் புரிந்துகொண்ட அளவுக்கு அவளுக்குச் சொல்லத் தெரியாமல் இருந்தான். அவனும் கடைசியில் அவளுடைய ஆசையை நிறைவேற்ற முடிவு செய்தான்.

அவள் போயே போய்விட்டாள்...

இன்று இரண்டு வருடங்களின் பின்பு, அவன் அவள் வரும் விமானத்தை எதிர்பார்த்து தனது மூன்று குழந்தைகளுடன், நடு இரவில், நடுங்கும் குளிரையும் பொருட்படுத்தாது விமான நிலையக் கம்பி வேலித் தடுப்புகளுக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கிறான்.

குழந்தைகளுடன் குழந்தையாக நின்று, தளத்தில் வந்து இறங்கும் விமானங்களையும், புறப்பட்டுச் செல்லும் விமானங்களையும் சுட்டிக் காட்டி, காண்பித்து மகிழ்கிறான். விமானங்களைப் பார்ப்பதை விட அவள் இரண்டு வருடங்களின் பின் வருகிறாளே என்ற எண்ணம் மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது.

"உம்மா இன்னும் வரலியா?" என்று கேட்கும் இளையவனுக்கு "கொஞ்சம் பொறு மகன், உம்மா வந்திடுவா...!" என்று அவன் ஆறுதல் சொன்னான்.

இப்படியொரு நாளில்தான் அவளை அவன் வழியனுப்புவதற்காக இந்த விமான நிலையத்துக்கு அவளுடன் வந்தான்.

அன்று விமான நிலையத்துக்கு வரும்போது அவள் எப்படியெல்லாம் அழுதாள். பிள்ளைகளைப் பிரிவது, அவனை விட்டுப் பிரிவதெல்லாம் அவளுக்கு எவ்வளவு துயரத்தை அளித்தன.

அவனது அருகில் நின்றிருந்த அவளது மேனி நடுங்கியதை அப்போது அவன் உணர்ந்தான். வெளிநாடு போகவேண்டுமென்று பிடிவாதமாக இருந்தவள் புறப்பட்டு வந்த பின்பு இவ்வளவு பலவீனப்பட்டுப் போனாளே அவன் அவளுக்காகக் கவலைப்பட்டு அனுதாபம் கொண்டான்.

"பயப்படாமல் போய் வா!" என்று அவன் அவளுக்குத் தைரியமூட்ட வேண்டி ஏற்பட்டது.

"என் பிள்ளைகளைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்வீங்களா?" என்று எத்தனை தடவைகள் கேட்டாள். ஒவ்வொரு தடவையும், "நன்றாகப் பார்த்துக்கொள்வேன்" என்று வாக்குறுதி அளித்தான்.

"என்ன பார்த்துக் கொள்வீங்களா? என் சின்னவன் உம்மா இல்லாமல் நித்திரை கொள்வானோ?" என்று ஏங்கினாள்.

"எல்லாத்தையும் நான் கவனித்துக் கொள்வேன்!" என்று சொல்லி அவளுடைய கண்களில் இருந்து வழிந்த கண்ணீரையும் துடைத்துவிட்டான்.

"விமானம் புறப்பட இருப்பதால் அவளை உள்ளே அனுப்ப வேண்டும்" என்று ஏஜன்சிக்காரன் வந்து சொன்னதும், அவள் அவனைக் கட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக்கொண்டு கதறினாள். அவன் அவளது பிரயாணப் பையை எடுத்து அவளிடம் கொடுத்து, முதுகைத் தடவி, கண்ணீரைத் துடைத்து, அவளை அழைத்துச் சென்று வாசல்வரை போய், அனுப்பிவிட்டு, அவளிடமிருந்து, விடுபட்டு வந்து நின்றான். அவள் சுங்க அதிகாரிகளின் மேசை, குடிவரவு அகல்வு அதிகாரிகள் மேசை என்று பயத்துடன் சென்று காரியங்களை முடித்துக்கொண்டு போவதை கண்களில் முட்டிய கண்ணீருடன் அவன் பார்த்துக்கொண்டு நின்றான்.

கொஞ்ச நேரத்தில், அவள் அவன் கண்களிலிருந்து மறைந்துவிட்டாள்...

அது போலவே...

இரண்டு வருடங்கள் எப்படியோ ஓடிவிட்டன...

"அந்தா சவூதியிலிருந்து வரும் பிளேன்!" என்று யாரோ சத்தமிட்டது அவன் செவிகளில் விழுந்தது. அப்போது அவனது உடல் எங்கணும் ஓடிய அந்த உணர்ச்சி.... விவரிக்க முடியாத பேருணர்ச்சிதான்!

விமானம் நிலையத்துக்கு மேலாக வட்டமிட்ட பின்பு தரை இறங்கியது. பிரமாண்டமான அந்த விமானத்திலிருந்து பிரயாணிகள் இறங்கிவரத் தொடங்கினர். இறங்கிவருவோர் யார்யாரென அடையாளங்காண முடியவில்லை. கதீஜாவைத் தெரிந்துகொள்வது இலகுவாக இருக்கவில்லை. தூரத்தே தெரிந்த உருவங்கள் ஒவ்வொன்றும் அவனுக்கும், பிள்ளைகளுக்கும் அவளைப் போலவே தென்பட்டன. அந்த விமானத்திலிருந்து கடைசிப் பிரயாணி இறங்கும் வரை அவர்கள் அங்கு நின்றுவிட்டு அங்கிருந்து நகர்ந்து சென்ற கூட்டத்துடன் விமான நிலைய வாசலுக்குச் சென்றார்கள்.

பிரயாணிகள் ஒவ்வொருவராகப் பலவிதப் பொட்டலங்கள், பெட்டிகளுடன் வெளியே வந்துகொண்டிருந்தனர். வண்ணச் சிட்டுக்களாகப் பெண்கள் கூட்டமும் வந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் அவள் வருகிறாளா என்று அவன் பார்த்துக்கொண்டிருந்தான்.

அந்தப் பெண்களின் அலங்காரமான உடைகள், உல்லாசமான பேச்சுக்கள் இவற்றால் எல்லாம் கவரப்பட்டுப்போன அவன், கதீஜா இப்படி வரமாட்டாள் என்று எண்ணிக் கொண்டான். அவள் வெளியே வந்தால் தன்னால் சட்டடென அவளை அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்று நினைத்தான்.

நீண்ட நேரமாக அவள் வெளியே வரவில்லை. பிள்ளைகளும் அலுத்துவிட்டார்கள்.

"வாப்பா உம்மா வரல்லியா?" என்று பாஹிறா கேட்டாள். அவளுக்குப் பதில் சொல்லாமலே அவன் வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அந்தா உம்மா!" என்று சப்தமிட்டாள் சுபைதா. அவள் எப்படி அந்தக் கூட்டத்தில் வந்த அவளை அடையாளம் கண்டாள்!

இரண்டு சூட்கேஸ் பெட்டிகளுடனும், தோளிலும் கைகளிலுமாக பைகளுடனும் நின்று அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பெண்ணா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி உப்பிய உடம்பு கதீஜாவுக்கு எப்படி வந்தது? எவ்வளவு நாகரிகமாக உடுத்திருக்கிறாள்? தலைமுடி கொண்டை போடாமல் பின்னால் விரிந்து பறக்கிறது. உதடு முழுவதும் சிவப்பு...

அவளேதான்...!

"சுபைதா மகள்!" என்று சப்தமிட்டுக்கொண்டே அவள் அவர்களை நோக்கி வந்தாள்.

கன்னம் குழியச் சிரித்த அவளது முகம் எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கின்றது? என்று அவன் வியந்தான். அவளுடைய புதிய அழகைக் கண்டபோது அவன் பேசமுடியாமல் பிரமித்துவிட்டான்.

"வாப்பா இது!" என்று தயங்கினான் மகன்.

"நான்தாண்டா உம்மா வாடா எண்ட தங்கம்!" என்று வாரியணைத்து முத்தமிட்டாள் அவள். பையன் மிரண்டு போனான்.

"உள்ள கஷ்டம்ஸில் எல்லாத்தையும் பிரித்து உதறிப் போட்டானுகள். எல்லாச் சாமான்களையும் எடுத்து வரச் சுணங்கிவிட்டது" என்று அவள் மழலையாகப் பேசினாள்.

அவள் காண்பித்த பொருட்களை அவனும் பிள்ளைகளுமாக எடுத்துக் கொள்ள அவள் விமான நிலைய சிப்பந்திக்குப் பணம் கொடுத்துவிட்டு ஊருக்குப் புறப்பட காரொன்றை வாடகைக்குப் பேசினாள். அந்த வாடகைக் காரில் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

சிலநாட்களாக வீடு கலகலத்தது. அவளைப் பார்க்கவென்று வந்த உறவினர்கள், அக்கம் பக்கத்துப் பெண்கள் என்று பலபேர் அவளிடம் என்னென்னவோ கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் அவள் அலுக்காமல் பதில் சொன்னாள். எல்லாவற்றையும் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டு அவன் மூலையில் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

அவள் வந்து ஒரு மாதமாகியது. ஒரு நாள் அவள் அவனிடம் சொன்னாள்.

"எனக்கு ஒரு மாதம் லீவு தந்துதான் 'பொஸ்' என்னை அனுப்பினாரு; டிக்கட்டும் தந்திருக்கிறாங்க... நான் போகணும்...!" என்று.

"என்ன?" என்று அவன் அப்போதுதான் வாயைத் திறந்தான். அவன் தலையிலே இடி விழுந்ததோ...?

அப்போது அவள் என்ன சொல்கிறாள் என்று அவனுக்கு விளங்கவில்லை. அவள் இனியும் ஏன் போக வேண்டும் என்று புரியாமல் தவித்தான் அவன். அவள் அனுப்பிய பணத்தில் ஒரு புதிய வீடு கட்டியாகிவிட்டது. பிள்ளைகளுக்கு விதம் விதமான பொருட்களை அவள் வாங்கி வந்திருக்கிறாள்!

"இன்னும் என்ன வேணும்?"

அவனும் உழைக்கிறான். அவள் கொண்டுவந்த பணம், அவனது உழைப்பும் குடும்பத்தை நடத்தப் போதுமானது!

"நீ ஏன் போகவேணும்? நம்மிடம் இருப்பதைக்கொண்டு நாம் வாழமுடியும் தானே?" என்று கேட்டான்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அங்கே ஒவ்வொருத்தியும் ஏழெட்டு வருடங்களாக இருந்து உழைத்து வருகிறார்கள். நான் போனால் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் அனுப்புவேன்!" என்றாள் அவள்.

"அந்தப் பணம் யாருக்குத் தேவை? இங்கே இந்தப் பிள்ளைகளைப் பார்ப்பது யார்?"

"இந்த இரண்டு வருஷங்களும் நீங்கள் பார்க்கவில்லையா? உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் ஒரு வேலைக்காரியை வைத்துக்கொள்ளுங்கள் அல்லது வேலைக்குப் போகாமல் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள். எல்லாத்துக்கும் உழைத்து நான் பணம் அனுப்புவேன்!" என்று ஏதேதோ சொன்னாள்.

"இந்த இரண்டு ஆண்டுகளும் நான் பட்ட கஷ்டங்கள் போதும்! பிள்ளைகளை நீயே பொறுப்பெடு" என்று ஆத்திரப்பட்டுச் சொன்னான் அவன்.

"நான் ஏன் பொறுப்பெடுக்க வேணும்?, நான் காசு அனுப்புவேன். வேலைக்காரியை வைத்துக்கொள்ளுங்கள். நான் கட்டாயம் போகத்தான் வேணும். இந்த ஊரிலிருந்து என்ன சுகத்தைக் காண முடியும்? உங்களுக்கு வாழ்க்கைப்பட்ட காலம் முழுவதும் கஷ்டத்தைத்தான் அனுபவித்தேன். இந்த இரண்டு வருடமும் எவ்வளவு நிம்மதி! வேலை, வேலைக்குத்தக்க சம்பளம், ஓய்வு, நமக்குத் தேவையான பொருட்களை வாங்கி அனுபவிக்க முடிந்தது!" என்றாள். கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தாள். பிறகு சொன்னாள் "நான் போகத்தான் வேணும்!"

"உனக்கு இன்னும் ஆசை அடங்கவில்லையா? அங்கே என்ன சுகத்தைத்தான் காணப்போகிறாய்!" என்று கேட்டான் அவன்.

"என்னவோ? எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. பொஸ் என்னை எதிர்பார்ப்பார். அவருடைய பிள்ளைகள் என்னைக் காணாமல் சாப்பிடவே மாட்டார்கள்!" என்றாள்.

"உன்னுடைய பொஸ்ஸைப் பற்றியும், அவருடைய பிள்ளைகளைப் பற்றியும் கவலைப்படும் நீ, உன் பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படவில்லையே?" என்று கேட்டான் அவன்.

"நான் பிளேன் டிக்கட்டோடு வந்துவிட்டேன். அவர்கள் என்னை எதிர்பார்ப்பார்கள். டிக்கெட்டை புக் பண்ண கொழும்புக்குப் போகவேணும்!" என்று பிடிவாதமாகச் சொன்னாள் அவள்.

"அப்படியா" என்று கேட்டவன், பின்னர் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தான்.

முதல் முறை வெளிநாடு செல்லப்புறப்பட்ட போது பிள்ளைகளைப் பற்றி எவ்வளவு கவலைப்பட்டாள் இவள். இப்போது அவளது மனம் எவ்வளவு மாறிவிட்டது.

இனி அவள் எப்போது போவாள் அல்லது எப்போது திரும்பி வருவாள் என்று அவன் ஏன் கேட்க வேண்டும்! அவள் திரும்பி வந்தாலும் வருவாள். வராமலும் விடக்கூடும்.

*19881016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கேயும் ஒரு மனிதன்

சின்னத்தம்பியின் மரண ஊர்வலம் கண்ணுக் கெட்டிய தொலைதூரம் மனிதர்களால் நிரம்பி, நீண்டிருந்தது. வீதியே தெரியாதவாறு மூடியிருந்தது. எங்கு நோக்கினும். சனம், சனத்திரள்...

எங்கள் கிராமத்தின் வரலாற்றிலே இப்படியொரு கூட்டத்தை ஒரு மரணஊர்வலத்திலே இதுவரை யாரும் கண்டதே இல்லை. எல்லார் முகத்திலும் துக்கம் மண்டிட்டிருந்தது. சிலர் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தனர்.

சின்னத்தம்பியின் மையித் பள்ளிவாசலை அடைந்து, தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும் ஊர்வலம் முடிந்த பாடில்லை.

பலருக்கு மையித் தொழுகை கிடைக்கவில்லை.

இத்தனைக்கும் சின்னத்தம்பி ஊரிலுள்ள பெரிய மனிதர்களைச் சேர்ந்தவனல்ல... சாதாரண மனிதன்!

நேற்றுவரை அவனை யாரும் மதித்ததில்லை. அவனைப் புத்திக்குறைவானவன் என்றே எல்லோரும் எண்ணியிருந்தார்கள். சின்னத்தம்பி என்றே அவன் அழைக்கப்பட்டான். அவனுடைய பெயர் இப்றாஹீம்... அவன் இன்று பெரிய மனிதனாம். மரியாதைக்கு உரியவனாம்.

நாளை அவனை யாரும் மறந்துவிடக்கூடும்.

இடையிடையே வெண்மையும் கறுப்புமான அடர்ந்த தாடி; தலையிலே வெள்ளைத் தொப்பி; நீட்டக்கைச் சேட்டுடன் உடம்பைப் போர்த்திய சால்வை, இவையாவும் அவனுடைய திரட்சியான உடலுக்கு ஓர் அலாதியான கம்பீரத்தைக் கொடுத்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் செய்யாத தொழில் எதுவுமில்லையென்று கூறலாம்.

அவன் முதலில் 'ரைவிங்' பழகி, கார் ஓட்டினான்; மரக்கறிக் கடை வைத்திருந்தான். பின்னர் இறைச்சிக்கடை; அதற்குப் பிறகு காடு திருத்தி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டான். இதிலெல்லாம் திருப்திப்படாமல், சவூதிக்கும் சென்று வந்தான்.

'சின்னத்தம்பி' என்று பெயர் சொல்லி அழைத்தால்,

"ஏன் சின்னத்தம்பி ஹாஜி என்று சொன்னால் குறைந்து விடுமா?" என்று கேட்பான்.

"யாருக்குத் தெரியும் நீங்கள் ஹாஜி என்று?" என்று கேட்டால்,

"நான் மக்காவில் இருந்து இரண்டு வருடங்கள் வேலை செய்தேன்; மக்காவில் இருந்து கொண்டு யாராவது ஹஜ் செய்யாமல் விடுவார்களா?" என்பான், சின்னத்தம்பி ஹாஜி.

அவனுக்கு எதிலும் தான் முன்னுக்கு நிற்க வேண்டும் என்பதில் ஆர்வம் அதிகம். இறைச்சிக் கடையில் தன்னிடமே இறைச்சி வாங்க வரவேண்டுமென்று ஆட்களைக் கூப்பிடுவான். காடு வெட்டிப் பயிர் செய்த போது மற்றவர்களை ஒன்று சேர்த்து சங்கமும் அமைத்தான்.

அரசியல் கூட்டம் என்றால் அவனுக்கு அவல். தேர்தல் பிரசாரகர்களில் அவனும் ஒருவனாக இருப்பான். மேடையில் அவனும் பேசுவான். அவன் பேசுவது பலருக்கு விளங்காது. எல்லாரையும் சிரிக்க வைப்பான்.

அவன் கோமாளியல்ல...

இவன் இப்பொழுது மக்களது அனுதாபத்தைப் பெற்று, அவர்களின் உள்ளங்களில் குடிகொண்டுவிட்ட பெரிய மனிதன்! சின்னத்தம்பி, பெரும் அழிவிலிருந்து ஊர் மக்களைக் காப்பாற்றிய பெரும் தியாகி. தன்னைப் பலி கொடுத்து அவன் மற்றவர்களைப் பாதுகாத்தான் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

நேற்றிரவு அவன் மஃரிப் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வீட்டுக்குப் போகும் போது அவனை மறைந்திருந்த விடுதலைப் போராளிகள் பிடித்துக்கொள்ள அவனும் அவர்களுடன் இழுபறிப்பட்டு போராடினான். இறுதியில் அவர்கள் சுட்டுக்கொன்றுவிட்டு ஓடிவிட்டார்கள். அவனை உயிரோடு பிடித்துக்கொண்டு போக இரண்டு மூன்று நாட்களாக அவர்கள் அலைந்து திரிந்தார்களாம். சின்னத்தம்பியைத் தேடுகிறார்கள் என்று அவனிடம் கூறப்பட்ட போதும் அவன் அதனை இலட்சியம் செய்யவில்லை.

"அவர்களுக்கும் எனக்கும் எந்த வேலையுமில்லை!" என்று அடித்துச் சொன்னான்.

"இல்லை, நீங்கள் தானாம் ஆமிக்காரரை ஊருக்குள் அழைத்து வந்தது!" என்று சொல்லப்பட்டது.

"நானா கூட்டிவந்தேன். அவர்கள் எப்படியும் ஊருக்குள் வந்திருப்பார்கள். நான் போய் உண்மையைச் சொல்லி இருக்காவிட்டால், அவர்கள் நின்ற இடத்திலிருந்து ஊருக்குள் ஷெல் அடித்துப் பலரைக் கொன்றுவிட்டு உள்ளே வந்திருப்பார்கள். அவர்கள் அடித்த ஷெல் பள்ளிவாசல் கட்டிடத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகூடக் கட்டிடத்தையும் உடைத்துவிட்டதே, தெரியாதா?" என்று அவன் சொன்னது உண்மை. ஆனால் அந்தக் காலிகள் அவனைக் கொன்று தமது ஆற்றாமையை வெளிப்படுத்தினார்கள்...

இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலே பேரழிவைக் கொண்டுவந்துவிட்டது. இனக் குரோதத்தையும் விதைத்துவிட்டுச் சென்றது. இந்தியஅமைதிப் படை கண்மூடித்தனமாக நடந்து கொண்டது.

ஜனாதிபதித் தேர்தல்முடிந்ததும் அமைதிப் படை வெளியேற, அந்த இடத்தை விடுதலைப் புலிகள் பெற்றுக் கொண்டார்கள். ஆட்சியாளரும் புலிகளும் கைகோர்த்துக் கொண்டார்கள். ஆனால் அந்தக் கொண்டாட்டமெல்லாம் சில நாளில் முடிவுற்றது. புலிகளுக்கும் அரசுக்கும் விரோதம் விரைவிலேயே மூண்டது. புலிகள் தங்களது வழக்கமான கைங்கரியத்தில் ஈடுபட்டார்கள்.

புலிகளைத் தேடி அரச படை புறப்பட்டது. புணானை முகாம் விழுந்தது. ஆறாம் கட்டை முகாம் அழிந்தது. அரச படையின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. சிலநாளில் அவர்கள் ஓட்டமாவடி பாலத்தின் அக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

கும்புறு மூலையில் அடிபட்டுக் கொண்டிருந்த அவர்களது பட்டாளத்தை மீட்கவேண்டியிருந்தது.

முதல் நாள் பாலத்தின் அக்கரையிலிருந்து அவர்கள் பீரங்கி வேட்டுத் தீர்த்தார்கள்.

விடுதலைப் புலிகள் படையினரை எதிர்கொண்டு அழிக்கப்போவதாக மக்களிடம் சூளுரைத்தார்கள். பாலத்தின் இக்கரையில் ஊருக்குள் இருந்தவாறே எல்லா முஸ்தீபுகளும் நடந்தன.

அன்றிரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு ஊரைக் கலக்கிய அதிர் வேட்டுக்கள் இரண்டு மணித்தியாலங்களாக கேட்டன.

ஊர் அல்லோல கல்லோலப் பட்டது. மக்கள் பீதியால் ஒடுங்கிக் கிடந்தார்கள். விடிந்தால் போதும் என்றிருந்தது.

விடிந்ததும் மக்கள் தெருவிலே கூடிய போது பிரதான வீதியிலிருந்த பல கடைகள் உடைக்கப்பட்டு, கொள்ளையிடப்பட்டிருப்பதைக் கண்டார்கள். இரவு தீர்த்த வேட்டுக்கள் யாவும் மக்களை வீதிக்கு வராமல் செய்து இந்த 'நல்ல காரியத்தை' நடத்தி முடிப்பதற்காகத்தான் என்று புரிந்தது.

பாலத்தின் அக்கரையில் நின்றிருந்த ஆமிக்காரர் 'இரவு நடந்த அமளி துமளியைக் கொண்டு' புலிகள் இக்கரையில் இருப்பதாக எண்ணி ஊர்ப் பக்கமாக ஷெல் அடிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஒன்று... இரண்டு... மூன்று... என்று இடைவிட்டு ஷெல் ஊரை நோக்கி வந்தது. தற்காப்பு முறை எதுவும் தெரியாத மக்கள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தனர். சிறுவர்களும் குழந்தைகளும் அவலக் குரல் எழுப்பினர். ஆமிக்காரரிடம் அவர்கள் எதிர்பார்க்கும் எதிர்ப்பு மறுபக்கத்தில் இல்லை என்பதைத் தெரிவிக்க யாரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி ஸ"பஹு"த் தொழுகையை முடித்துவிட்டு ஓட்டமாவடிச் சந்திக்கு வந்தான். இந்த அவல நிலையைக் கண்டு மனம் வெதும்பினான். ஆமிக் காரரிடம் போய் இங்குள்ள நிலவரத்தைக் கூறலாம் எனப் பலரையும் அழைத்தான். யாரும் விரும்பவில்லை.

போர்த்தியிருந்த வெள்ளைச் சால்வையை உருவியெடுத்து வலது கையிலே பிடித்துக் கொண்டு அவன் ஆமிக்காரரை நோக்கி நடந்தான். அவனை யாராலும் தடுக்க முடியவில்லை. சந்தியில் நின்றிருந்த சனக்கும்பல் பார்த்துக்கொண்டிருக்க அவன் இடைவெளியையும் கடந்து பாலத்துள் நுழைந்துவிட்டான். "என்ன ஆகுமோ?" என மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்த மக்களை நோக்கி அவன் மீண்டும் வந்து சால்வையை அசைத்து அவர்களைக் கூப்பிட்டான். சிலர் அவனுடைய அழைப்பை ஏற்று முன்னுக்குச் சென்றார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஆமிக்காரர் பின்னால் வர சின்னத்தம்பியும் மற்றவர்களும் வெற்றிநடை போட்டு ஊரை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அன்று நிகழவிருந்த பெரிய அனர்த்தம் ஒன்று சின்னத்தம்பியினால் தடுக்கப்பட்டதை அறிந்த ஊரார், தமக்குள்ளேயும் ஒரு பெரிய மனிதன் இருப்பதைக் கண்டார்கள்!

*1990*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள் வேலிகள்

"என்னடா மன? ...என்ன எங்க போகச் சொல்றாய்,

எனக்கு குடல் நடுங்குது. வயிற்றுக்குள்ளயும் ஒரு மாதிரியாக இருக்குது. வயிறும் கலங்குது..."

"பெத்தா பெத்தா கெதியா எழும்புகா. உண்ட புடவசாமான் இருந்தா எடுத்துக்கிட்டு எல்லாரோடயும் ஓடுகா..."

ஆரோ இப்படிச் சத்தம் போட்டுக் கொண்டு ஒழுங்கயால ஓடுறாப்போல இருக்கு...

ஏனாம் நான் எல்லாரோடயும் ஓடனும்? எங்கதான் ஓடுறதாம்? இதென்னடா நாயனே, எங்களுக்குப் பிடித்த கஸ்டம்! இப்ப கொஞ்சக்காலமாக இதானே தொல்லையாகக் கிடக்கு, எனக்கு கையும் வருதில்ல... கால்லயும் சவியில்ல...

அடமன எண்ட குடில உட்டிட்டு என்னை எங்கடா போகச் சொல்றாய்? நான் எண்ட பாட்டுக்குக் கதைக்கிறன் பதில் செல்ல ஆளில்ல...

"ஆ... இதென்ன கூக்குரல்?"

பிள்ளைகள் ஒப்பாரி வைக்கிற சத்தம்?

சனமெல்லாம் ஓடுறாப்போல கேட்குது. எங்கதான் ஓடுறான்களோ? நாம மட்டும் இருந்துதான் என்ன செய்யப்போறம்?

எண்ட அல்லாவே, திரும்பவும் இதென்ன சத்தம்? காதும் அடைச்சுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுது. பூமியும் அதிர்ந்து நடுங்குது.

"பயங்கரவாதி குண்டு எறியிறான். ஊடுகளையெல்லாம் நெருப்பு வைச்சுக் கொளுத்துறான். எல்லாரும் ஓடுங்க..."

எங்கயோ யாரோ போடுற சத்தம் கேட்குது. நானும் எங்கயாச்சும் போகத்தான் வேணும். எல்லாரும் ஓடக்குள்ள... என்ன செய்யிற?

இந்தத் தேங்காய்ச் சங்கத்துக் குளனிக்குள்ள நாங்கள் வந்து எவ்வளவு காலம்? இந்த மாதிரி ஒரு நாளும் நடக்கல்ல. விதானையாரும் வந்து எழும்பிடனும் எண்டு சொன்னாருதான். யாரோ கந்தோராலயும் ஆரோ வந்து எழும்பச் சொன்னதுதான். எழும்பாட்டி ஊடுவாசல்களையெல்லாம் நெருப்பு வைப்பம் எண்டும் சொன்னதுதான். ஆனா நாங்க தமிழாக்களும், முஸ்லிமாக்களும் சரி எழும்பல்ல. அதனால அவங்களால ஒண்டும் செய்ய ஏலாமப் போச்சுது. ஆனா இது...

இந்தப் பூமி சும்மா புறம் போக்காகக் கிடக்குதெண்டு தான் நாங்க குடியிருக்க வந்தம். எங்க ஆச்சியப்பன் காலத்தில தமிழாக்களும் முஸ்லிம் ஆக்களும் சேர்ந்து தேங்காய்ச் சங்கம் உண்டாக்கி சங்கத்துக்காக வாங்கின பூமியிது. இதில எங்களுக்கெல்லாம் உரிமையிருக்கு... குந்தியிருக்க ஒரு துண்டுப் பூமியுமில்லாத நாங்க புறம் போக்காகக் கிடந்த, நாக மரமும், சுரவணிய மரமும் பற்றைக் காடுமாகக் கிடந்த இந்தப் பூமிய ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு துண்டுப் பூமியப் பிடித்து வெளிசாக்கி, வேலியடைச்சு, குடில் வைச்சு, தென்னம் புள்ள வைச்சு மாமரம் நாட்டி, குடி இருக்கக்குள்ள எண்ட பேரனும் எனக்கெண்டு ஒரு துண்டுக்காணியைப் பிடித்து இந்தக் குடிலைக் கட்டித்தந்தான். 'எலிப் பொந்தெண்டாலும் தனிப்பொந்து' இது எனக்கு. பிச்சை எடுத்து வாறத்த நிம்மதியாக அவிச்சுத் திண்டன், இப்ப எண்ட வாயில மண்ண அள்ளிப் போடப் போறானுகளாம்....

நாங்க முஸ்லிம் குடும்பம் முப்பத்தெட்டு, றோட்ட சேர்ந்தாப் போல இருக்கம். பின்னால தமிழ் வெட்டையோட சேர்ந்த பகுதியில தமிழ் குடும்பங்கள் இருக்குதுகள். இவ்வளவு காலத்திற்கு எங்களுக்குள்ள எந்தப் பிரச்சினையும் வந்ததில்ல... சந்தோஷமாகத்தான் இருக்கம்...

ஆரையோ கடத்திக் கொலை செஞ்சி போட்டான்களாம். மன்னாரில பள்ளிவாசலுக்கு தொழப் போயிட்டு வந்த ரண்டு பேரைச் சுட்டுப்போட்டான்களாம். இதுக்காக அக்கறைப்பத்தில அர்த்தாலோ என்னவாம். எனக்கு என்னெண்டு தெரியா. கடைகளையெல்லாம் பூட்டுறதாம், பஸ் ஓடாதாம்.

எங்கட ஊரிலயும், முஸ்லிம் பகுதிக்குள்ள வாடகைக்கு இருந்த தமிழாக்களையெல்லாம் குடியெழும்பச் சொல்லி ராவோடராவா எங்கட ஆக்கள் எல்லாம் கூட்டம் போட்டுச் சொன்னதாம். இதுக்குப் பொறவு அந்தா...

கறுவாக்கேணிப் பொடியனுகள் முறாவோடைக்குளனிக்குள்ள பூந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராவில ஊடுகளுக்கு நெருப்பு வைச்சுப் போட்டானுகள்... அந்தக் கண்டி நானாவை வீட்டுக் குள்ளய வைச்சு நெருப்பு வைச்சதாம், எங்கட பிள்ளையளுக்கெல்லாம் சரியான கோவம்... இப்படி இருக்கக்குள்ள...

வாழைச்சேனைப் பள்ளிவாசல் சந்தைக்கு நெருப்பு வைச்சதாம் எண்டு, எங்கட பிள்ளைகள் தமிழ் வெட்டைக்குள்ள பூந்து ரோட்டோரத்தில இருந்த வீடுகளில ஓடு, ஜன்னல் கதவுகளை உடைச்சு ஊட்டுச் சாமான்களுக்கு நெருப்பு வைச்சு, அவங்கட ஆடு, கோழிகளையெல்லாம் எடுத்துக்கிட்டு வந்து... இப்படி எல்லாப் பக்கத்திலேயும் அநியாயம்...

இதெல்லாம் கேள்விப்பட கேள்விப்பட எனக்கெண்டா குடல் நடுக்கமாத்தான் இருந்தது.

இப்ப இந்தச் சங்கத்துக் குளனிக்குள்ளயும் கோதாரி வந்துட்டுது. நிம்மதியாக இருந்த எங்களையெல்லாம் கலைக்க வந்துட்டானுகள் சனத்துக்காகத்தான் இவங்களெல்லாம் பாடுபடறதாம். ஆனா சனங்களைச் சாவவைத்துப் போட்டு யாருக்காக... இந்த நாசமாப்போவானுகள் குண்டு எறிஞ்சு ஆட்களை அடிச்சு நொறுக்கி, ஊடுகளுக்கு நெருப்பு வைச்சுக்கிட்டு வாறானுகள் போல...

இப்ப எங்க போற...?

எல்லாரும் பிறைந்துறைச்சேனைப் பள்ளிக்கூடத்திற்கு ஓடிப்போறாங்களாம். எனக்கிட்ட ஒரு ஓலைப்பாய், ஒரு புடவை இதுகள் நான் தொழுகுறதுக்கா வைச்சுக் கிட்டு இருக்கிற சாமான்கள், பிச்சையெடுத்து ஊண்டியல்ல போட்ட சில்லறைக் காசுகள்... எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு ஓடிப்போகனும்... ம்ஹ்...

எண்ட குடிலயும் எரிச்சுப் போடுவானுகளோ?

இந்தப் பள்ளிக் கூடத்துக்குள்ள எப்படி எல்லாச் சனங்களும் கிடக்கிற?

எங்க பார்த்தாலும் குஞ்சும் குருமானும்... ஓரே நாத்தம்... அதுக்குள்ள ஆம்புள, பொம்புள எண்டு பேதமில்ல... குமருகளும் பொடியனுகளும் ஆடுற ஆட்டம்...

ராப்பட்டா ஒரே இருட்டு, எல்லாருக்கும் என்ன நடக்கப்ப போகுதோ எண்டு பயம்... மனசிலயும் இருட்டு...

இருந்து இருந்தாப் போல இந்த நண்டு சொண்டெல்லாம் பசிக்குதெண்டு கத்தும்கள்... என்ன செய்யலாம்... எங்க போறதாம்...

நன்மைக்கிரங்கினதுகள் - ஆரோ - இந்தச் சனங்களுக்கெண்டு உடுதுணியும், சாப்பாட்டுச் சாமான்களும் அனுப்பினதாம். எல்லாத்துக்கும் முந்திக்கனும். இல்லாட்டிக் கிடைக்காது.

எப்பதான் எண்ட குடிலோட போவன் எண்டு இருக்கு, எனக்கு. அங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிட்டன் எண்டா எனக்கு நிம்மதியாக இருக்கும். பிச்சை எடுத்தாகிலும் கிடைக்கிறத வைச்சுக்கிட்டு, காலத்தை, கனாயத்தை ஓட்டலாம்...

எவ்வளவோ நாளைக்குப் புறவு,

சண்டையெல்லாம் ஓஞ்சுட்டுதாம். அவரவர்ர ஊட்டோட போகச் சொல்லிப் போட்டான்களாம்...

எங்கட சனம் அரைவாசிக்கு மேல, இந்த அகதிச் சனங்களோட இருக்க ஏலாதெண்டு சொந்தக்காரர்ர ஊடுகளுக்குப் போயிட்டுதுகள்.

"பெத்தா நீங்க போறதில்லையா? பள்ளிக்கூடம் வைக்கப் போறான்களாம்." எண்டு ஒரு பொடியன் கேட்கிறான்.

"ஏண்டா மன எனக்கு ஆசையில்லையா, எண்ட குடிலோட போறதுக்கு? எண்டு நான் கேட்கிறன். இவ்வளவு நாளும் ஒரு கரைச்சலும் இல்லாம வயித்துப்பாடு நடந்தது. ஆரு போனாலும் எனக்கு நேரத்துக்குச் சாப்பாடு கிடைச்சுது."

"உண்ட குடில் எங்ககா" எண்டு அவன் கேட்கிறான்.

"அந்த தேங்காய்ச் சங்கத்துக் குளனிக்குள்ள மகன்..." எண்டு சொன்னன்.

"உனக்குத் தெரியாதாகா... அங்க எல்லார்ர ஊட்டயும் நெருப்பு வைச்சுப் போட்டானுகள்." எண்டு அவன் சொன்னதுதான் எண்ட காதில விழுந்தது. எண்ட தலையில ஆரோ நெருப்பு வைச்ச மாதிரி இருந்தது...

எண்ட குடிலுக்கு என்ன நடந்தது எண்டு பார்க்க எனக்கு ஆசையாயிருந்தது. எழும்பி நடக்கிறன். பிறைந்துறைச்சேனை நூரியாப் பள்ளிவாசலைக் கடந்து, கிறவல் றோட்டயும் கடந்து தார்-மெயின் றோட்டுக்கு வந்து நடந்து போனா...

"எங்ககா போறாய்?" எண்டு ஒரு சின்னப்பையன் கேட்கிறான். இவங்களுக்கெல்லாம் பதில் சொல்லணும்.

"தேங்காச் சங்கத்துக் குளனிக்க"

"அங்க எல்லாம் இப்ப போக ஏலாகா..." அவன் என்னோடய வந்து சொல்றான்.

"ஏண்டா மன"

"குளனி வளவ பொடியனுகள் முள்வேலி போட்டு அடைச்சுப் போட்டானுகள். ஆரும் அதுக்குள்ள போனாச் சுடுவானுகளாம்."

"எண்ட குடில்...?"

"அங்க குடிலுமில்ல ஊடுமில்ல..."

*1991 ஜூலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவம்

மத்தியான வெய்யில் உக்கிரமா இருந்தது. கால் நடையாகவே ஊர் சுற்றியதால், மிகுந்த களைப்பு ஏற்பட்டு விட்டது.

ஷம்சுதீன் மாஸ்டர் அந்த ஓட்டலுக்குள் நுழைந்தார்.

பசி வயிற்றுள் முறுமுறுத்தது.

பகற் சாப்பாட்டிற்கு ஓடர் கொடுத்துவிட்டு அவர் அமர்ந்தார்.

ஊர் பொது வேலை என்று இறங்கி விட்டால், ஏறாத இடங்களுக்கெல்லாம் ஏற வேண்டும். பேசத் தேவையில்லாதவர்களையும் கண்டு பேச வேண்டும். எல்லாம் ஒரே அலைச்சல்தான் என்று எண்ணிக்கொண்டார்.

பென்சன் பெற்ற பிறகு, ஊரோடு இருக்க வேண்டி வந்துவிட்டது. பள்ளிவாசல், பள்ளிக்கூடம் என்று பொது ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காக அவர் உழைக்க வேண்டுமென பொறுப்புகளைச் சுமத்திவிட்டார்கள். பாடசாலைகளைத் தரமுயர்த்துவது சம்மந்தமாகவே அவர் 'எம்.பீ' யைக் காண வந்தார்.

அவர் அமர்ந்திருந்த மேசைக்குச் சரியாக மேலே, உத்தரத்தில் தொங்கிய மின் விசிறி சிறு கடகடப்புடன் இரைந்துகொண்டு காற்றை அள்ளி வந்து வீசிற்று. அத்துடன் குசினிக்குள்ளிருந்து வந்த புகையையும் சேர்த்துக் கொண்டு சுருண்டது. அதனால் கண்களில் சிறிது எரிச்சலும் மூண்டது. அவர் கண்ணாடியைக் கழற்றி கண்களைக் சசக்கி விட்டார்.

பரிசாரகன் அவருக்கு முன்னால் உணவுப் பண்டங்களை நிரப்பி வைத்தான். குருமா, பொரியல், வறுவல், கறி எல்லாம் வகை வகையாக அவை காட்சிப் பெட்டிக்குள் அலங்காரத்துக்காக எப்போதோ குடியேறியவை. அவர் தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பமான கறியுடன் சாப்பிடத் தொடங்கினார்.

அந்த ஓட்டல் அவ்வளவு பெரிதாகவோ, நவீனமானதாகவோ இல்லை. ஆனால் வாடிக்கையாளர்களுக்குக் குறைவில்லை. எல்லாம் ஏகத்தடபுடலாக இருந்தது.

ஷம்சுதீன் மாஸ்டர் தன் காரியத்தில் கண்ணாயிருந்து, சாப்பாட்டை முடித்துக் கொண்டார். கணக்கு 'பில்' வரச்சுணங்கும் போலிருந்தது. கடதாசித் துண்டினால் கையைத்துடைத்துக் கொண்டே, காசாளர் இருக்குமிடம் சென்றார்.

கணக்குத் தீர்த்துக் கொள்ள அவர் பண நோட்டை அவர் முன் நீட்டினார்.

"உங்கள் சாப்பாட்டிற்கும் சேர்த்து பணம் வந்து விட்டது" என்று கூறினார் காசாளர்.

"யார் தந்தது?" என்று அவர் கேள்விக் குறியோடு நோக்கினார். காசாளரின் பார்வை சென்ற திக்கில் இவருடைய பார்வையும் சென்றது.

அவருக்குப் பக்கத்தில், அரும்பு மீசையுடன் அழகிய தோற்றமுள்ள ஒரு வாலிபன் நின்றிருந்தான். அவன் அவரைப் பார்த்துச் சிரித்தான். அவருக்கு அவனுடைய முகம் சரியாக அடையாளம் தெரியவில்லை.

"சேர் நான் கொடுத்துவிட்டேன்!" என்றான் அவன். அவருக்குச் சங்கடமாக இருந்தது. இவனை யாரென்று தெரியவில்லையே. 'நீர் யார் தம்பி' என்று எப்படிக்கேட்பது?

நெற்றி சுருங்கியது. எனினும் புன்னகைத்துக் கொண்டார்.

அவருக்குப் பின்னாலும் வேறு ஆட்கள் வந்து நின்றனர். அவர்களுக்கு வழிவிட்டு, இருவரும் ஓட்டல் வாசலுக்கு வந்தனர்.

"எனக்கு உங்களைத் தெரியவில்லையே தம்பி!" என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.

"நீங்கள் ஓட்டலுக்குள் வந்தபோதே நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் மிகவும் களைப்பாக வந்தீர்கள், வந்ததும் சாப்பிடத் தொடங்கிவிட்டீர்கள். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொண்டிருந்தேன்... நான் தான்..." என்று அவன் தன்பெயரைச் சொல்லவில்லை. அவனுடைய குரலையும் பேசும் போது அவனுடைய முகபாவனையையும் இதற்கு முன்பு அவர் அறிவார். அவனுடைய பழைய முகம் அப்படியே அவர் முன்தோன்றியது.

"அவனா இவன்?"

"ஜ.:.பர்!" என்று அவர் கூறினார்.

"ஓ! நானேதான்" என்றான் அவன்.

ஷம்சுதீன் மாஸ்டரின் முகத்தில் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. "அடேய்!" என்று அவர் அவனைக் கட்டித்தழுவினார். 'ஜ.:.பர்' என்று அவர் வாய் முணுமுணுத்தது. இவரும் ஓட்டலை விட்டிறங்கி நடக்கத் தொடங்கினர்.

வீதியின் பரபரப்பு அவர்களுக்குத் தெரிவதாக இல்லை.

அப்போது அவன் இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷம்சுதீன் மாஸ்டர் அவனுடைய பாடசாலைக்குப் புதிதாக வந்திருந்தார். ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, மாணவர்களின் அபிமானத்துக்குரிய ஆசிரியராகவும் அவர் மாறிவிட்டார்.

அது ஒரு கிராமப் பாடசாலை. இரண்டாம் வகுப்பிலேயே நூறு மாணவர்கள். இடநெருக்கடியினால் மாணவர்கள் நெருக்கமாக உட்கார்ந்திருந்தனர். போதியளவு ஆசிரியர்கள் இல்லை. எல்லாவற்றையும் சமாளித்துப் பாடபோதனை செய்ய வேண்டியிருந்தது.

ஷம்சுதீன் மாஸ்டர் கடுமையாகவே உழைத்தார். சிறிது நேரமும் ஓய்வெடுக்காமலே வாசிப்பு, பேச்சு, எழுத்து, கணக்கு என்று பாடம் நடக்கும். அவருடைய வகுப்பு மாணவர்கள் அவர்மீது மிகுந்த பற்று வைத்திருந்தனர்.

அன்று அவர், கரும்பலகையில் கணக்கு எழுதிக் கொண்டிருந்தார். மாணவர் அமைதியாக இருந்து தமது பயிற்சிக் கொப்பியில் அவர் எழுதியவற்றைப் பிரதி பண்ணினர்.

கொஞ்ச நேரத்தில் வகுப்பில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. அவருடைய கவனத்தைக் குலைக்கும் ஏதோ ஒரு சம்பவம் வகுப்பில் நடந்துவிட்டது.

ஒரு மாணவனை இன்னொரு மாணவன் அடித்துவிட்டான்.

அழுகுரல் கேட்டது.

"என்னது?" என்று கேட்டுக் கொண்டே அவர் தனது பார்வையை வகுப்பில் நுழைத்தார்.

"இவன் எனக்கு அடித்துப் போட்டான்!" என்று அழுத பையன் ஜ்ஃபர் இருந்த திசையில் சுட்டிக்காட்டினான்.

"இங்கே வா!" என்று அவர் ஜ்ஃபரைத்தான் அழைத்தார். அவன் ஏதோ சொல்ல முயன்றான். ஆனால் அவனுடைய கையில் அடிவிழுந்துவிட்டது.

அவன் துடிதுடித்துக் கொண்டு தன் மேசையை நோக்கி ஓடினான். வலது கையை இடது கையால் மூடிக்கொண்டு அமர்ந்தபடி விசும்பினான்.

"அவன் அடிக்கவில்லை சேர்!" என்று அழுத பையன் கூறினான். அப்போதுதான் தான் ஒரு விசாரணையும் செய்யாமல் ஒரு நிரபராதியைத் தண்டித்துவிட்டதை அவர் உணர்ந்தார்.

"யார் அடித்தது?" என்று அதட்டினார்.

அவன் ஜ்ஃபருக்குப் பக்கத்திலிருந்த இன்னொருவனைக் காட்டினான். இப்போது அவர் விசாரித்தார்.

ஜ்ஃபருக்கு தான் அடித்ததற்கு காரணம் என்ன என்று அவர் தன்னையே கேட்டுக் கொண்டார். தான் அவசரப்பட்டுவிட்டதை உணர்ந்தார். மூன்று பாடவேளை தொடராகப் படிப்பித்ததனால் ஏற்பட்ட சோர்வு, எரிச்சலை ஏற்படுத்திவிட்டது. பாவம் ஜ்ஃபர்! அவருடைய உள்ளம் வருத்தமுற்றது.

ஜ்ஃபர் இப்போதும் அழுதுகொண்டிருந்தான். தலையைக் குனிந்தபடி கையைப் பொத்திக் கொண்டிருந்ததால் அவனுடைய உடல் சிறிது குலுங்கிக் கொண்டிருந்தது. அவன் விசும்புகிறான். அடி பலமோ?

அவர் எழுந்து சென்று அவனருகில் நின்றார். அவனிடம் மன்னிப்புக் கோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனை அவருடைய முகத்தில் இருந்தது. அவனுடைய இடது கையை வலது கையிலிருந்து எடுத்துவிட்டார். வெள்ளை வெளேரென்றிருந்த அந்தப் பிஞ்சுக் கரத்தில் அவருடைய பிரம்பு தடம்புரண்டு ஓடியிருந்தது. இரத்தம் சுண்டியிருந்தது. ஓர் ஆறு அங்குல நீளத்திற்கு நீலமும் சிவப்பும் கலந்து ஒரு 'புழு' வொன்று தடித்துக் கிடந்தது.

ஷம்சுதீன் மாஸ்டரின் உள்ளத்தில் ஒரு முள் தைத்துக் கொண்டது. அந்த முள் தைத்த வேதனையால் அவருடைய கண்கள் கலங்கின.

ஜ∴பர் அவரை அண்ணார்ந்து பார்த்தான். அவனுடைய கண்கள் பொலபொலத்தன. 'நான் எதுவும் அறியாதவன்' அவர் அசந்துபோய் தன் கதிரையைச் சென்றடைந்து அமர்ந்தார்.

வகுப்புமாணவர்கள் எதுவும் நடைபெறாத மாதிரி கணக்குச் செய்யத் தொடங்கியிருந்தனர்.

ஷம்சுதீன் மாஸ்டர் மாணவர்களுக்குத் தெரியாமலே கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அடுத்த நாள் காலையில் அவருக்குப் பாடசாலைக்கு வரவே மனமில்லை. அன்றிரவெல்லாம் அவருக்குத் தூக்கமில்லை. அவனுக்குத் தவறான முறையில் தண்டனை வழங்கி விட்டதை எண்ணியெண்ணி மனமுடைந்து போனார்.

அவன் தன்னுடைய பெற்றோருக்குச் சொல்லியிருப்பான். அவர்கள் அவனுடைய கையில் இருந்த இரத்தத் தழும்பைப் பார்த்துவிட்டு, கொதித்துப் போவார்கள்! தன்னைக் காட்டிலிருந்து தவறி வந்துவிட்ட ஏதோ ஒன்று என்றுதான் எண்ணுவார்கள்... அல்லது... என்ன செய்வார்களோ?

எனினும் அவருக்கு விடிந்ததும் இருப்புக் கொள்ளவில்லை. எப்படியும் ஜ∴பரைக் கண்டு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தார்.

அன்று வெகுநேரத்தோடு அவர் பாடசாலைக்கு வந்தார். ஒரு திருடனைப் போல வகுப்பறையில் நுழைந்து, அவர் மாணவர்களை நோட்டமிட்டார். அவர்களுள் ஜ∴பரை அவருடைய கண்கள் தேடின.

அவன் புத்தாடை அணிந்து காட்சிதந்தான். அவர் தன்னைப் பார்த்ததும் எழுந்து நின்று புன்னகைத்தான். அவருக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. அவர் அவனருகில் சென்றார். அவனுடைய கையைப் பிடித்துப் பார்த்தார். அந்தத் தழும்பு இன்னும் மாறாதிருந்தது.

"சுடுசாம்பல் ஒத்தணம் போட்டேன் சேர், நோவு மாறிவிட்டது!" என்றான்.

எவ்வளவு பெரிய மனம்.

"உன்னுடைய உம்மா வாப்பாவுக்குத் தெரியாதா?" என்று அவர் கேட்டார்.

"இல்ல..." என்று அவன் சொன்னான்.

அவனை அப்படியே தூக்கி மேலே போட்டுப் பிடித்து விளையாட வேண்டுமென அவருடைய கை பரபரத்தது. அவர் அதனை அடக்கிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தழும்பைத் தடவிவிட்டார். 'இனி நான் ஆசிரியர் தொழிலில் இருக்கும் வரை பிரம்பைத் தொடவே மாட்டேன்.' என்று அவர் மனம் சூளுரைத்துக் கொண்டது.

திரும்பிச் சென்று அலுமாரியில் வைத்திருந்த பிரம்பை எடுத்து... அப்படியே உடைத்து... அதனைச் சுவருக்கு வெளியே வீசியெறிந்தார்... யாரும் பார்க்கவில்லை...

அன்று அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அவரது அபிமான மாணவர்களுள் ஒருவனாக அவனும் வளர்ந்தான்.

அந்தப் பாடசாலையில் அவர் தொடர்ந்து கற்பித்த போது, அவனும் அவனுடைய நண்பர்களும் அவரிடம் படித்தார்கள்.

இன்று இவனைக்காணும் போது அவருக்கு அந்த நிகழ்ச்சிகள் மனதில் நிழலாகப் படர்ந்தன.

"இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர் தம்பி?" மிக நீண்ட நாட்களின் பின் அவர் அவனைச் சந்திக்கிறார். அவர் ஓய்வு பெற்று ஐந்து வருடங்கள் சென்றுவிட்டன. அவரைப் போன்ற பென்ஷன் வாத்தியார்கள் சமூகத்திற்கு எதற்கு உதவுவார்கள்?

"நான் அட்வகேட்டாக இருக்கிறேன். கொழும்பில் பிறக்டிஸ் பண்ணுகிறேன் சேர்" என்று அவன் பெருமிதத்துடன் கூறினான்.

"அப்படியா சந்தோஷம்!" என்றார் அவர். அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து நடந்தனர்.

*19911117*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையும் தாயும் பிள்ளைகளும்

அடுத்த அறையிலிருந்து கலீரெனச் சிரிக்கும் ஒலி கேட்டது.

மகளும் மருமகனும் அந்த அறையில் இருக்கிறார்கள். அது அவர்களுடைய படுக்கையறை. புதிதாகத் திருமணம் செய்து கொண்டவர்கள். சிரிப்பதற்கும், பேசுவதற்கும் அவர்களுக்கு நிறையவே விசயங்கள் இருக்கும்.

எனக்கு நித்திரை கண்ணை அழுத்தி, மூடிக் கொண்டிருந்தது. மனதிலுள்ள பாரம் அனைத்தும் உடலில் இறங்கி நித்திரையைக் குழப்பி, ஒவ்வொரு மணித்துளிகளையும், வெளிப்புறத்தில் இடம்பெறும் ஊசலாட்டங்களையும் கணக்கிடும் அவதி எனக்கு இப்போதெல்லாம் இல்லை.

அதனால் படுக்கையில் விழுந்ததும், மனசு இலேசாகி, நித்திரை ஆட்கொண்டுவிடும். ஆனாலும் உடல் இப்படிப் பழகிப் போனாலும், ஒரு சிறிய அசைவினால் ஏற்படும் ஒலியும், மனசை விரைவாக விழிக்கச் செய்துவிடுகின்றது.

நான் எப்போது, எப்படித் தூங்கிப் போனேன் என்று நிதானிக்க முடியவில்லை. திடீரெனக் கண்விழித்த போது, அடுத்த அறையிலிருந்து விசும்பல் ஒலி கேட்டது.

சிறுவிசும்பலாக ஒலித்த அழுகை வரவரக்கூடிக் கொண்டிருந்தது. மகள்தான் அழுகிறாள் என்பது தெரிந்தது. 'சிரிப்பும் கதையுமாக இருந்தவர்கள்தானே!' என்று எண்ணினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலவென்று சிரிப்பதும், அந்தச் சிரிப்பின் முடிவில் சிணுங்கிக் கொள்வதும் அவளது வழக்கம். சிணுக்கந்தானோ என்று முதலில் நினைத்தேன். அது சிணுக்கமல்ல... அந்த ஒலி அழுகைதான்... இந்த அழுகைதான் என்னை எழுப்பிவிட்டது போலும்?

''என்ன... என்னபிள்ளை?'' என்று என்னையும் மீறிய குரலில் கேட்டேன். அப்படிக் கேட்டதில் எனக்கு வெட்கமாகவும் இருந்தது... சிலவேளை... அவர்களுக்கிடையில் ஏதாவது பிரச்சினையோ...?

''வயிற்றுவலியெண்டு துடிக்கிறா!'' என்று கதவைத்திறந்து கொண்டு வந்த மருமகன்தான் சொன்னார்.

''கொஞ்சமும் பொறுமையில்லை. இவ்வளவு சத்தம் போடவேணுமா?'' என்று கேட்டுக் கொண்டே, மகளின் அறையினுள் எட்டிப்பார்த்தேன். அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு எனது செல்ல மகள் சுருண்டுகிடந்தாள்.

மெல்லத் தோளில் கையை வைத்துத் தூக்கிவிட முயன்றேன்.

தூக்க வேண்டாம் என்பதுபோல, தலையைப் பலமாக அசைத்து, உரத்து அழலானாள். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நான் செயலிழந்து விடுவதுண்டு.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்த வீட்டில் இருக்கும் எனது சகோதரியை அழைத்துவர ஓடினேன்.

நேரம் சரியாகத் தெரியவில்லை. ஊர் அமைதியில் ஒடுங்கிப் போய்க் கிடந்தது. அக்கம்பக்கத்து வீடுகளிலிருந்து எவ்வித சத்தமும் கேட்கவில்லை. எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்கள்...

ஒருவாறு எனது சகோதரியை எழுப்பி விடயத்தைச் சொல்லி அழைத்து வந்தேன். ஏதோ கை மருந்துகளைக் கொடுத்து அழுகையை நிறுத்தி வைத்தாள்.

எனக்கு ஆறுதலாக இருந்தது.

மகளும் வயிற்றுவலி நீங்கிவிட, அப்படியே கட்டிலில் படுத்து உறங்கிப் போனாள்.

''எதற்கும் விடியட்டும், பார்ப்போம்!'' என்று கூறிவிட்டுச் சகோதரி சென்றுவிட்டாள்.

''நீங்களும் நித்திரை கொள்ளுங்கள்'' என்று மருமகனிடம் சொல்லிவிட்டு, நான் எனது அறையினுள் நுழைந்து கொண்டேன்.

எனக்கு அதற்குப் பிறகு நித்திரை வரவேயில்லை. இப்படித்தான் இவள்... இவளைப் பற்றி நினைக்கும் போது எனக்கு மனவேதனையாகத்தான் இருக்கும்!

இவள் ஒரு நோயாளி...

வெளிப்பார்வைக்கு கலகலப்பாகவும், அழகாகவும் இருப்பாள். திடீரென நெஞ்சு வலியென்றும், கைகால் சோர்வென்றும் கூறி அவதிப்படுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது வயிற்றுவலி வேறு...

இவள் நோயாளியாகியதற்கு, எனது குடும்ப வாழ்க்கைதான் காரணம்.

கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான பிரச்சினை தோன்றிவிட்டால், அது குடும்பத்திலுள்ள மூத்த பிள்ளையைத்தான் தாக்குகிறது. எனது பிள்ளைகள் நால்வரும் உலக நடப்பைப் புரிந்துகொள்ளும் வயதை அடைந்தவர்கள். எனது வாழ்க்கையில் ஏற்பட்ட சகல மாற்றங்களும் அவர்களையும் ஏதோ ஒரு வகையில் உசுப்பிக் கொண்டிருந்தது.

அப்போது அவள் ஒரு பெண்கள் கல்லூரியில் உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் அந்த வகுப்பில் படிக்கத் தொடங்கிய காலத்திலேயே எனது வாழ்க்கையில் புயல் வீசத் தொடங்கியிருந்தது.

பார்ப்பதற்கு அழகாக, பச்சைப் பசேல் எனத் தளிர்த்து தென்றலில் அசைந்தாடி காட்சி தந்து கொண்டிருந்த பூங்கொடியில் புழுவிழுந்து, இலைகளையும், கொடிகளையும் அரித்துக் கொண்டிருந்தது. இலைகளும் கொடியும் போதாதென வேரையும் ஊடறுத்து அந்தப் புழு சென்றுவிட்டது. கொடி எப்படி உருப்படியாகும்?

எனது வாழ்கையிலும், பொறாமை, எரிச்சல் எனும் புழுக்கள் விழுந்து வேரையும் அறுக்கத் தொடங்கிவிட்டன. இந்த நிலத்தில் ஊன்றி நிற்பதற்கு என்னாலேயே முடியாமற் போகும் போது, எனது பிள்ளைகள் எம்மாத்திரம்?

ஆனால் வாழ்கையைப் பஞ்சு மெத்தையில் படுத்துப் புரளும் சுகமானதாகக் கருதாமல், முட்படுக்கையாக ஏற்று நான் துணிந்துவிட்டேன்.

இந்தத் துணிவை எனது பிள்ளைகளிடத்திலும் வளர்க்க வேண்டும். இதற்கு வழிகாணுவதென்பது எனக்குச் சிரமமாகவே தென்பட்டது.

எனது கவலைகள் குடும்பத்தில் மூத்த பிள்ளையாக இருந்த இவளைத்தாக்கிவிட்டது.

விடுதியில் தங்கியிருந்த இவள், சில சமயம் பாடசாலைக்கே போவதில்லையென்றும், சோர்ந்து போய்க் கவலைப்பட்டுக் கிடக்கிறாள் என்றும் விடுதியாசிரியை என்னிடம் கூறுவாள். அவளுடைய சோர்வுகளுக்கும் கவலைகளுக்கும், எனது வீட்டு நடப்புகள் தான் காரணம் என்று தெரிந்த போதிலும், நான் எதையும் காட்டிக் கொள்வதில்லை. மகள் அதைப் பற்றி விசாரித்தால், தட்டிக் கழித்துவிடுவேன்.

அவளுக்கு ஆறுதல் கூறி விடைபெறுவேன். அனாலும், அவளது கவலைகள் அவளது இளம் இதயத்தைத் தாக்கிவிட்டன. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டி ஏற்பட்டது. "மனக்கவலைதான் அவளைப் பாதிக்கும் வியாதி" என்று டாக்டர் கூறி, அவளைக் கவலைப்படச் செய்ய வேண்டாம் என என்னிடம் ஆலோசனை கூறினார்.

அவளது கவலையைத் தீர்க்க நான் மருந்து தேடினேன்... வைத்திய சாலையில் கிடைக்காத மருந்து, அது...?

எத்தனை கனவுகளுடன் எனது பிள்ளையை வளர்த்து வந்தேன். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்து, சமூகத்தில் உயரிய இடத்தைப் பெறவேண்டும் என எண்ணினேன்.

உலகத்தில் பெண்ணாகப் பிறந்த ஜென்மங்கள் யாவும் கஷ்டப்படத்தான் வேண்டியிருக்கிறது. பெண்களுக்கு உலகத்தில் அனுதாபமும் கூடுதல்தான்... ஆனால் அந்த அனுதாபங்கள் யாவும், மனித வாழ்க்கையை நிதானமாகப் பார்ப்பதில்லை!

இங்கு இருபது வருடகால வாழ்க்கை முடிவுறும் தறுவாய்க்கு வந்திருக்கிறது

வீடு போர்க்களமாக மாறியது. இருவரும் ஓயாது சண்டை பிடிப்பவர்களாக மாறினர். பாடசாலை விடுமுறையில் வரும் மகளுக்கு இந்தச் சண்டை எதற்காக என்று ஆரம்பத்தில் விளங்கியிருக்கவில்லை. ஆனால் அவளும் வாழ்க்கையின் வாசலை எட்டிப்பார்க்கும் வயதை அடைந்தவளானதால், படிப்படியே புரிந்துகொள்ளலானாள்.

'பசி'பிடித்த மனிதன் எந்த எச்சிலையும் கூசாமல் தொடுவான். அர்த்தம் புரியாமல் இருந்த அவளுக்கு அர்த்தங்கள் தாமாகவே தெரியத் தொடங்கின.

கணவனும் மனைவியும் விட்டுக் கொடுப்பதாயில்லை. தமக்குப் பிறந்த பிள்ளைகளைக்கூட எண்ணிப்பார்க்க முடியாதவர்களாகி விட்டார்கள்.

போதை தலைக்கேறியவன், தன் கடைவாயிலிருந்து வழியும் எச்சிலை நாய் நக்கி விடுவதையே பேரின்பமாகக் காண்பான்.

பிள்ளைகளின் கவலை யாருக்கு வேண்டும்?

எனது மூத்த மகள் கவலைப்பட்டு, கவலைப்பட்டு தனது படிப்பையே கோட்டைவிடும் நிலைக்குட்பட்டாள்.

வீட்டில் இரகசியமாக இடம்பெற்றவை அனைத்தும் தெருவுக்கும் எட்டிவிட்டது. எனது மகள் படித்த பாடசாலை ஆசிரியைகளும் எங்களது இல்வாழ்க்கையைப் பற்றி அவளிடம் கேட்கத் தொடங்கியிருந்தனர். எப்படியோ பரீட்சை எழுதி முடித்துவிட்டு அவள் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

இதற்கிடையில் நாங்கள் இருவரும், ஆளையாள் குற்றஞ் சுமத்தி, குற்றவாளி யார் என்று யாரும் தெரிந்து கொள்ள முடியாதவாறு ஒரு வாழ்க்கையைச் சிதறச் செய்து சீரழித்து விட்டோம்.

நான் மட்டும் நடுத்தெருவில் நின்று தவித்தேன்.

என்னுடைய பிள்ளைகளும் என்னோடு சேர்ந்து கொண்டார்கள். இருக்க இல்லிடமும் கூட எங்களுக்கு இல்லை. நல்ல காலம், எனது வயோதிபத் தாய் எனக்கும் பிள்ளைகளுக்கும் உதவிசெய்தாள். இந்த ஜென்மத்தில் எந்தத் தாயும் இப்படியொரு உதவியை எங்களுக்குச் செய்ய முடியாது.

எனது பிள்ளைகளில் இரண்டாவது ஆண்; அவன் சின்ன வயசிலேயே எங்களை விட்டுப் பிரிந்து வாழ்ந்தவன். விடுதி வாழ்க்கையில் பழக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனானதால், அவனுக்குப் பெற்றோரில் யார் மீதும் ஆழமான அக்கறையில்லை, அல்ல ; என்னைப் போல விஷயங்களை உள்வாங்கி, மனதில் அடைத்துக் கொண்டு தனிமையில் வெந்து கொள்கிறானோ?

அவனைச் சரியாகக் கண்டுகொள்ளவே முடியாது. ஏதாவது சந்தர்ப்பத்தில் அவனோடு பேசும் போது இந்த விவகாரங்கள் வெளிப்பட்டுவிட்டால் அவனுடைய கண்கள் சிவந்து ஓர் ஆக்ரோஷபாவம் அவனில் தோன்றுவதைக் கண்டிருக்கிறேன். அவனைப் பொறுத்தவரை இவையெல்லம் இரண்டாம் பட்சமானவை என அவற்றைத் தவிர்த்துக் கொள்வான்.

மற்றவர்கள் இருவரும் இளையவர்கள். பெண்ணும் ஆணும்; உலகம் புரியத்தான் செய்கிறது...

எப்போதும் பெண்ணுக்குப் பரிவு காட்டும் சமூகம், இந்த நான்கு உயிர்களின் விடயத்தில் கண்ணை மூடிக் கொண்டுவிட்டது. என்னைப் பொறுத்தவரையில்! நான் தனியாகவே உழைத்து இவர்களை மனிதர்களாக வளர்க்கப் பாடுபட்டேன்.

மூத்தவள் என்னோடு இருந்ததனால், மன ஆறுதல் பெற்றாள். அவளுடைய நெஞ்சுவலிக்கு நீண்டகால வைத்தியம் தேவைப்பட்டது. அதையும் செய்தேன்.

அவளுக்குத் திருமணம் செய்து வைத்தால் எனக்கும் சிறிது பாரம் குறையும் என்று எண்ணினேன். மாப்பிள்ளை தேடிச் சென்ற போது தான் என் வாழ்க்கையைப் பற்றி என்மீது எவ்வளவு பழி இருக்கிறது என்று எனக்குத் தெரிந்தது.

கணவனும் மனைவியும் ஒன்றாக இருந்து மகளுக்கு மாப்பிள்ளை தேடிக் கொடுப்பதே பெரிய பிரச்சினையாக இருக்கும் போது ,தனியாக இருக்கும் என்னால் இதைச் செய்விப்பது மிகவும் கஷ்டமானதாகவே இருந்தது.

மாப்பிள்ளை கேட்டுச் செல்லுமிடமெல்லாம், என்னைத்தான் குற்றவாளியாகக் கண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட குடும்பத்திலா நாங்கள் பெண் எடுப்பது என்று முகத்தில் அறைந்து கேட்டார்கள்.

எல்லாவற்றையும் சமாளித்து, ஒரு மருமகனைத் தேடிப்பிடித்தேன்.

இப்போது எனது மகளும் மருமகனும் தமது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கையில் அவர்கள் காணும் இன்பந்தான் எனது இன்பமாக நான் காணத்தொடங்கியிருக்கிறேன்.

ஆனால், எனது மகள் நோயாளி... அவள் சிறிது குணங்கினாலும் எனக்கு நெஞ்சு வலிக்கிறது.

எத்தனை இளமைக் கனவுகளுடன் அவர்கள் தமது வாழ்க்கையைத் தொடங்கியிருப்பார்கள்...

நான் திருமணஞ் செய்து கொண்ட அந்தக் காலத்து நினைவுகள் எனக்கு அடிக்கடி வரும். எனது மாமியார் எனக்கு அந்தக் காலத்தில் எவ்வளவு அக்கறையுடன் சீர் செய்திருப்பாள்? அவற்றை என்னால் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊர் வழக்கப்படி நாங்கள் இருவரும் மாமி வீட்டில்தான் இருந்தோம். எனது மாமியார் எனக்கு விருப்பமான உணவுகளை செய்து தருவாள். அந்தக் காலம் எவ்வளவு மகிழ்ச்சிகரமாக இருந்தது.

அதைப் போல எனது மகளுக்கும் மருமகனுக்கும் நான் எவ்வளவோ செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவேன். ஆனால் அதற்கு வழியில்லையே என்று எண்ணும் போது எனது உள்ளத்தில் கவலைகள் கிளர்ந்து எழும்.

என்ன செய்யலாம்? எனது மருமகனின் அதி ஷ்டம் இவ்வளவுதான்!

எனெனில், எனது மருமகனின் மாமியார் இப்போது, யாரோ ஒரு பொய்யனுக்காக, ஏமாற்றுக் காரனுக்காக, பணி செய்யும் இல்லத்தரசியாகவல்லவா இருப்பாள்.

*19920503*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சிறுகதைகள் | வெளிவந்த சஞ்சிகை/பத்திரிகை | திகதி |
|---|---|---|
| அடித்த கரங்கள் | இளம்பிறை | 1967 |
| உப்புக் கரித்தது | இளம்பிறை | |
| நிறங்கள் | இன்ஸான் | 1968-04-12 |
| பிறழ்வு | இன்ஸான் | 1968-05-31 |
| சின்ன மீனும் பெரிய மீனும் | தெரியாது* | 1968 ஒக்டோபர் |
| வெறி | சிந்தாமணி | 1969 |
| முக்காடு | சிந்தாமணி | 1969 ஏப்ரல் |
| ஓ! அதனாலென்ன...? | வானொலி மஞ்சரி | 1970-03-01 |
| புன்னகை | வானொலி மஞ்சரி | |
| கணை | வானொலி மஞ்சரி | |
| போராட்டம் | மணிவிளக்கு | 1971 |
| மணக் கோலம்! | மணிவிளக்கு | 1971 நவம்பர் |
| மனிதன் வந்தான் | வீரகேசரி | 1975-11-09 |
| மதியம் தப்புகிறது | வீரகேசரி | 1976-05-09 |
| ஒரு குடிசை அழிகிறது | கலங்கரை | 1977 |
| இந்தப் புயலுக்குப் பின்னும் | தெரியாது* | 1979 ஜனவரி |
| ஒரு புதிய காலை மலர்கிறது | வீரகேசரி | 1980-08-24 |
| உம்மா | வீரகேசரி | 1984-01-29 |
| தண்ணீர் தண்ணீர் | வீரகேசரி | 1984-09-02 |
| புனித பூமியில் | அஷ்ஷுறா | 1984 டிசம்பர் |
| ஓய்வு | வீரகேசரி | 1987-10-04 |
| மாறும் மனங்கள் | வீரகேசரி | 1988-10-16 |
| இங்கேயும் ஒரு மனிதன் | பிரசுரமாகாதது | 1990 |
| முள்வேலிகள் | பாமிஸ் மாசிகை | 1991 ஜூலை |
| மாணவம் | வீரகேசரி | 1991-11-17 |
| தந்தையும் தாயும் பிள்ளைகளும் | வீரகேசரி | 1992-05-03 |

* பிரசுரமானது பற்றி எவ்வித குறிப்பும் இருக்கவில்லை. மூலப்பிரதியில் இருந்தே இக்கதை சேர்த்துக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மனிதனிடத்தில் குடி கொண்டிருக்கும் நீசத்தனம் என்னை வெறுப்படையச் செய்திருக்கிறது. பொய், ஏமாற்றுதல், கபடம், வஞ்சகம் என்பவற்றை என்னால் சகிக்க முடியாது. எப்போதும் உத்தமனாகவே வாழ வேண்டும் என விரும்புகிறேன். அப்படி வாழ முடியாது என்பதும் எனக்குத் தெரியும். அதற்காக எல்லாரும் போகும் வழியிலேயே செல்ல வேண்டும் என்று நான் எண்ணவில்லை. அப்படி நானும் நீங்களும் எண்ணி நடந்தால், உண்மையான மனிதனை, ஒரு சான்றோனை -இந்த உலகம் காண முடியாது போகும், இது எனக்காக மட்டும், என்னைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அதனால் எனக்கு நான் தனி வழி அமைத்து நடக்கின்றேன். வெளியுலக விஷயங்கள் எனது உள்ளத்தை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. விஷயங்களை நான் அப்படியே நடக்கும் என்று ஒத்துக் கொள்கிறேன், அல்லது விட்டு விடுகிறேன். இது எல்லாராலும் சாத்தியமானதா?

உலகத்தின் உண்மை வடிவம் என்ன என்பதை நமது முன்னோர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய வழியைப் பார்த்து நாமும் நடந்து சென்றால் வெற்றியடையலாமா என்று பார்ப்பது நமது கடமையாகின்றது.

நவீன யுகத்தில் வாழும் நாம், நமக்கு உதவி செய்யும் கருவிகளைப் பெரிதும் நம்புகிறோம். இக்கருவிகளும் கூட, தன்னை உருவாக்கியவனையும், தன்னையும் ஒரு சேர அழிக்கும் தன்மை வாய்ந்தன. அவற்றிற்கு வழி காட்டும் சக்தி எதுவும் கிடையாது.

இந்த உலகத்தில் மனிதர்களாக நாம் வாழப் பழக வேண்டியது அவசியமாகின்றது. மனிதத்துவம், மனித நேயம் என்பனவற்றை வளர்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அநீதியை எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேண்டும்.

ஆதிக்க உணர்வை அழிக்க வேண்டும்.

வறுமையை ஒழிக்க வேண்டும்.

அறிவை மலரச் செய்ய வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் எழுத்துப் பயன்படுமானால் அந்தப் பங்களிப்பு எனக்குத்திருப்தியை ஏற்படுத்தும்.

— வை. அஹ்மத் —



உயிர்ப்பைத் தேடும் வேர்கள்

ISBN 955-8351-00-8

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org